உ

பரமபதிதுணை.

ஸ்ரீகண்ணபிரானது புதல்வியாகிய

# சுந்தரிகலியாண

# அம்மானை

இராமநாதபுரம், வித்துவான்

வாலசுப்பிரமணியபிள்ளையவர்களாலும்,

முதுகுளத்தூர் அருணாசலம்பிள்ளையவர்கள்

குமாரர்

சுப்பிரமணியபிள்ளையவர்களாலும்

இயற்றியதை

உத்தங்குடி

## பொன்னுச்சாமிபிள்ளை

அவர்களால்

பரிசோதித்து

மதுரை, புதுமண்டபம், புஸ்தகஷாப்,

இ. ராம.

## குருசாமிக்கோனார்

அவர்களால்

தமது

ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

ரிஜிஸ்டர் காப்பிரைட்

1906.

தென்பானவர்க்குத் திடந்தரவும்வேனுமையு...
மாயன்மகள்சுந்தரியை வல்விசையனீன்ற...
சேயமிகுவாளபிமன் நீநிலத்தில்மாலையிட்ட
கதையதனையம்புவியோர் கண்டுமனமகிழ
சிதையாமற்செந்தமிழால் செப்புவன்கேளம்மானை

விருத்தம்

குமராசரணங் குருவேசரணம்
விமலாசரணம் வேதாசரணம்
உமையேதிருவே உந்தாள்சரணம்
சமையஞ்சமையந்தருவீர்தமிழே.

அம்மானை.

மாதவத்திலேசிறந்தோர் வாழ்த்திப்புகழ்ந்தேற்றும்
வேதவியாசருற்று மெய்யாகவிப்புவியில்
ஓதியதோர்பாரதங்கேட் டுன்னிச்செயமுனிவர்
ஆதிமொழிபி லவருரைத்தபாரதத்தில்
சொல்லுங்கதையிற் சுபமங்கலக்கதையாய்
வல்லமைசேர்வில்விசையன் மைந்தனபிமன்னனென்போர்
சிந்தைமகிழ்வாய்த் திருமணமுஞ்செய்துகொண்ட
சுந்தரியாள்சோபனத்தைத் தொல்லுலகோர்தானறிய

பாயிரம்

ஞாலம்புகழ்சேது நல்முகவையூர்வாழும்
வாலசுப்பிரமணியன் வாக்காலுரைத்ததமிழ்
செவ்வையிலாது சிதைந்துபலவிடத்தில்
வெவ்வேறாய்த்தானிருந்து விளங்கியதைஓரொழுங்கா
மறைசேர்முதுகுளத்தூர் வாழுமருணாசலவேள்
நிறைமாதவத்துதித்தோன் நிதமுங்குமானிரு
பொற்பதத்தைப்போற்றி புகலுகின்றசுப்பிரமணியன்
அற்புதமாமென்றே அவனியுள்ளோர்கொண்டாட
சிற்றறிவால்யானுமுன்னஞ் செப்பியதாலுஞ்சேர்த்து
கற்றறிவோர்கொள்ளக் கழறினேனம்மானை

உ

பரமபதிதுணை

ஸ்ரீ கண்ணபிரானது புதல்வியாகிய

# சுந்தரிகலியாண அம்மானை.

காப்பு.

வடகிரிமேற்கதை வரைந்தசெல்வனை
படவரவணிந்தவன் பணிந்தசோதியை
குடநிகர்வயிற்றனைக் குமரிபாலனை
கடகரிமுகத்தனைக் கனிந்துபோற்றுவாம்.

அம்மானை

திருமகளாஞ்சுந்தரியைத் திரலவீமன்மாலையிட்ட
மருவிலாமாசரிதை மாலையாய்ச்சாற்றுதற்கு
மூலப்பொருளே முதற்பொருளேமுச்சுடரே
வாலக்கணபதியே வாக்கருளவேணுமையா
சுந்தரியாள்சோபனத்தைத் தொல்லுலகில்யான்பாட
கந்தனேயெப்பொழுதும் கருணைசெய்யவேணுமையா
மங்களஞ்சேர்சுந்தரியை வாள்வீமன்மாலையிட்ட
இங்கிதஞ்சேருங்கதையை யின்பமுடன்யான்பாட
வெள்ளைக்கலையாளே விமலிசரஸ்வதியே
உள்ளத்திருந்தே உதவிசெய்யவேணுமம்மா
கருணைபெறுஞ்சுந்தரிக்கு கல்யாணமானகதை
அருமையுடனம்மானை யடியேனும்பாடுதற்கு
குருவேசரணங் குகனேசரணமையா
கருமேகமேனியுள்ள கண்ணனேகாத்தருள்வாய்
ஆருமறியாத அருட்பாரதக்கதையை
மேருவினில்கோம்பால் விரைந்தெழுதும்பிள்ளையாரே
உன்பாதம்போற்றி உரைக்கின்றேனம்மானை

## கதையின்வரலாறு

பெரியோரே கிருபைமனதில்வைத்து
விராஜ னைகுருகுலத்தில்
ர்க்கும் நூற்றுவர்க்கும் பன்னுபகைசேர்ந்ததினாற்
ற்றபாவி வணங்காமுடிவேந்தன்
ப்பஞ்சவரைத் துரத்தினான்கானகத்தில்
மாட்டாமல் வனம்போனார்பஞ்சவர்கள்
விட்டருங்கானகந்தனிலே
மைவனுவாகத் திரிந்தார்வனவாசம்

### விருத்தம்

பாதகன்துரியன்பஞ்ச பாண்டவரானபேரை
பேதகச்சூதால்வென்று பெருவனந்தன்னிலோட்டி
பூதலந்தன்னையாண்டு பொய்கையில்நஞ்சையிட்டு
சேதமாயினரென்றெண்ணி செருக்குடன்வளரும்நாளில்

### அம்மானை

னம்போனாரைவரென்று மனமகிழ்ந்து நூற்றுவரும்
பானபுத்தியில்லா கபடனரவக்கொடியோன்
ண்டாட்டமாகக் கொலுப்பெருக்கித்தானிருந்து
ண்டாட்டமானபழி சிந்தைதனிலேநினைந்து
நடுவிலுற்ற சகுனிதனையேபார்த்து
காரியங்களொன்று துடங்கியிருக்குறேன்.
னிதுராசொல் கார்க்குமசுவத்தாமா
துரோணாயென் வார்த்தைதனைக்கேட்டருளும்

### விருத்தம்

வண்டார்வனவாசங்குடி வாழ்வுற்றனரைவர்
தண்டாமரைமுகமால்மகள் தனையேகலியாணம்
கொண்டாடியென்மகனுக்கது கூடும்படியாக
உண்டானதைநிசமாகவும் ஓதும்பெரியோரே

## கலியாண ஆலோசனைசெய்தல்

அம்மானை

மாயன்றவத்துதித்து வளருகின்றசுந்தரியை
நேயமுடன்முன்னாள் நிசுவிசையன்புத்திரர்க்கு
சென்றுகலியாணஞ் செய்வதெனப்பஞ்சவர்கள்
அன்றுசொல்லிப்பேசினதை யாமுமிநிறுத்திவைத்து
நம்முடையபுத்திரனி ராசனிலக்கணர்க்கு
செம்மையாயிந்தச் செகமெலாந்தானறிய
மங்கலமுஞ்செயய மனதிலிருப்பதினால்
உங்களுடையபுத்தி யோசனையுஞ்சொல்லுமென்றான்
கன்னன்சகுனியிது காரியமேநல்லதென்றான்
மன்னன்விதுரன் மனதுசகியாமல்

## விதுரன் ஞாயமுகூறுதல்

வணங்காமுடியோனே வார்த்தையொன்றுகேட்டருள்வாய்
இணங்காதவார்த்தைகளை யியம்புவரோயிச்சபையில்
பஞ்சவரைச்சூதால் பகையாக்கிக்கானகத்தில்
வஞ்சித்தேயோட்டிவிட்டாய் மாண்டாரோமாளலையோ
பெருக்கமாய்நீயவரைப் பிரபலமுஞ்செய்யாமல்
இருக்கவிடங்கூடவில்லை யென்றேயோட்டிவிட்டாய்
காரணத்தையுன்றன் கருத்தில்நினையாமல்
மாரணத்தைக்கோரி வகைதப்புச்செய்வர்களோ
காடுறைந்தாரொன்று கனதப்புச்செய்வர்களோ
கேடுறைந்தபுத்தி கொடுவிலையுமெண்ணாதே
உயிரிருந்தாலவர் உடனேவருவார்கள்
வயிரமவர்கட்கு வருங்காணிதினாலே
முன்னாளில்ப்பேசி மொழிந்தபடியல்லாது
இன்னாளில்வேறே பிசைகேடுசெய்யாதே
பாத்தன்மகன்றனக்கும் பச்சைமால்தன்மகட்கும்
நேத்தியாய்க்கல்யாணம் நீமுடித்துப்பார்த்தாக்கால்
ஊருக்குஞ்சம்மதியாமுற்ற வர்க்குஞ்சம்மதியாம்
ஆருக்குஞ்சம்மதியா மவருக்குஞ்சம்மதியாம்
காயத்தைநிச்சயமாய்க் கருத்தில்மிகநினைந்து

ஞாயத்தைத்தள்ளி நடுக்கேடுசெய்யாதே
எனக்குத்தெரிந்தமட்டு மெடுத்துரைத்தேனிப்போது
உனக்குத்தெரிந்தமட்டும் யோசினைபப்பாருமென
இந்தவசனமெடுத் துரைத்தான்விதுரன்
அந்தவசனமெல்லா மரவக்கொடிபோன்றன்

## திரியோதனன் சொல்லுதல்

காதிலேகேட்டுக் கண்கள் மிகச்சிவந்து
தீதுறுபாவி திரியோதனனுரைப்பான்
வாரும்விதுரா நின் மகிமையிங்கேசொல்லாதே
ஆருமறியாவளப்பு வினைநான்கேட்கவில்லை
உம்மாலேயானு முலகாளவேோபோோன்
தெமமாடிபோபோநீ சேருகின் றவீட்டினிலே
திருத்தமாயென்றன் சிறியதகப்பனென்று
பொறுத்தேனதினுல் பிழைத்தாய்நீபோகவென
வாய்க்கொழுப்பினுலே வணங்காமுடியோனும்
தீப்பிடிக்கச்சொன்னவந்தச் செய்தியெல்லாந்தான்கேட்டு
நல்லமரியாதை நமக்குவரலாச்சுதென்று
சொல்லாமல்ப்போனுன் துடிவிதுரன் தன்மனைக்கு
ஏன்காண்துரோணரே நீரோதுமுரையாமல்
தூங்காமல்த்தூங்கிச் சுழன்றவகைசொல்லுமய்யா

## துரோணர் ஞாயங்கூறுதல்

என்றுதுரியனியம்பத் துரோணருமே
ஒன்றும்பலியாது யோசனையும்பற்றாது
ஆகாதுகல்லாமல் அடித்துவந்தவீண்பழிப்பு
வேகாதுபோபோநீ வேடிக்கைபேசாதே
உலகளந்தான்பஞ்சவர்கட் குறவாகவேயிருக்கப்
பலபலவாயோசனைகள் பண்ணினதிலென்னவுண்டு
வில்விசையன்கேட்டால் விடுவானெருபகழி
...ல்லும்பிளக்குமவன் கைச்சுருக்கும்நீயறிவாய்
...ாளால்பீமன்வருவானெருநொடியில்
...ழாகப்போமுன் படையும்பவுசுகளும்

எதுக்குமே தானிளப்ப மாயோசனைகள்
வாதுக்குச்செய்யவந்தாய் மன்னுமறந்துவிடு
உள்ளபடியேயுரைத்தார் துரோணருமே
கள்ளமனத்தன் கபடனனியாயன்
ஆசாரிதன்னை அடமாகவேபார்த்து
வாசாலமாகவழுத் தினீரிச்சபையில்
பாத்தனுடனில்லும் படையும்பவுசகரும்
பூத்தானமோவுமக்குப் போங்காணவனோடே
என்னபெருமையிது பெருமையல்லாது
பின்னையொருபெருமைப் பேசத்தெரியாது
ஆனதினாலுன்னையளப்பு மிகக்கேள்க்கவில்லை
போனதினாலென்னவுண்டு போம்போமனைதனக்கே
என்றுமன்னன்சொன்னா னெழுந்திருந்தாசாரி
ஒன்றுமுறையாமலுட னெழுந்துபோகலுற்றார்

## துரியோதனன் கர்ணனையுஞ் சகுனியையும் யோசனைகேள்குதல்

வார்த்தைதெரியாத வணங்காமுடிவேந்தன்
காத்திருக்கும்நேசனுங் கன்னனையுந்தான்பார்த்து
மாமன்சகுனியெனும் மன்னனையுந்தான்பார்த்து
தாமோதரன்மகளைத் தாலிகட்டலெக்கணர்க்கு
நல்லஉபாயம்நமக்கறியச் சொல்லுமென்றான்
அல்லல்விளைக்கவென்றே ஆனசகுனியுந்தான்
மனதில்நினைந்துகொண்டு மன்னனுக்குத்தானுரைப்பான்
கனதையுள்ளபுத்திபெற்ற காவலனேகேளுமினி
பஞ்சவர்கள்போனார்கள் பாரவனந்தனிலே
நஞ்சுநீர்தான்குடித்து நல்லவுயிர்மாண்டுவிட்டார்
மாண்டவசனமதை மாயவனுங்கேட்டிருப்பான்
தாண்டிநாம்கேட்டால்ச் சுந்தரியையீய்ந்திடுவான்
இந்தஅளப்பிருக்க யேன்மலைக்கிறீரெனவே
தந்திரமாய்ச்சொல்லவுமே சம்மதித்தான்கர்னனுமே
அன்பாயச்சகுனிசொன்ன ஆலோசனைகளெல்லாம்
தென்னன்துரியோன் திருச்செவியிலேகேட்டு

தனதுபண்ணிச்சொன்ன சகுனி தனையேபார்த்து
மனதுகளிகூர்ந்து மறுவசனமேதுரைப்பான்

## விருத்தம்

உற்றதோர்சகுனியுனாத்ததேதநலம்
மற்றவர்பேச்செல்லாம்மசகமாத்திரம்
இத்தலம்புகழநின் றெவர்க்குமேன்மையாய்
அத்தியைக்காத்த அரியிடஞ்செல்லென்றான்

## அம்மானை

உபாயமறிந்தேவுனாத்தி ரேயிச்சபையில்
சிபாகியுடன்படிக்கை செப்பினார்மற்றவர்கள்
ஆகையால்நீருமந்த ஆயனிடந்தனிலே
போகவிதுசமயம் போனாலும்நீர்சகுனி
தந்திரமாய்ப்பேசிச் சமத்தினிலக்கணர்க்கு
சுந்தரியைமாலையிடச் சோபனமுந்தான்பேசி
வாருங்காணென்னுடைய மாமாசகுனிமன்னா
பாருங்காணும்முடைய பராக்கிரமமுள்ளதெல்லாம்
சம்மதிக்கச்செய்திங்கு தான்வருவீரென் றுமன்னன்
வம்பாயனுப்பி மகிழ்ந்திருந்தானம்மானை

## சகுனி பெண்கேட்க துவாரகைக்குச்செல்லுதல்

நல்லதென் றுதான்சகுனி நாரணன்பாற்செல்லவென் று
வல்லமைகள்பேசி மகிழ்வாய்ரதமேறி
கள்ளமனத்தோன் கபடுசெய்யவேணுமென் று
உள்ளபரிசனங்க ளுடன்கூடித்தான்வரவும்
நாடுநகர்கடந்தான் நற்கானகம்புகுந்தான்
காடுகடந்தான் கடியமலையுங்கடந்தான்
ஆறுங்குளமும் அடவிகளும்தான்கடந்தான்
தேருந்தெருவும் சிங்காரவீதிகளும்
வண்ணமுள்ளமாயன் வாழுந்துவாரகையில்

2

என்னறியகிருஷ்ண ரிருக்குமணிமேடைகளும்
கண்டான்மகிழ்ந்தான் கண்ணனரன்மனையைக்
கொண்டாடினன்மகிழ்ந்தான் கோபாலர்தன்மனையில்
வாசலிலேதான்சகுனி வந்திரங்கித்துதுவரை
நேசமிகுமாயனிடம் நீங்கள்போய்ச்சொல்லுமென்றான்
சகுனிவந்தானெனவே தாமோதரனிடத்தில்
மகிமையாய்ச்சொன்னார்கள் வாசல்நின்றதுதுவர்கள்
ஆனலவனை அன்ழைத்திங்கே வாருமென்றார்
சேனுபதிகள் சீக்கிரத்திலோடிவந்து
கன்றால்விளாவெறிந்த கண்ணனகமகிழ்ந்து
மன்னுசகுனி உமைவரச்சொன்னாரென்றிடவே
சென்றான்சகுனியுந்தன் சென்னியின்மேல்க்கைகூப்பி
நின்றான்தொழுதான் நெடுமாலும்வாருமென்றார்
வந்தவகைநமக்கு வளமாகச்சொல்லுமென்றார்
நந்தகோபாலாகேள் நான்வந்தகாரியந்தான்
பெருமைபடைத்த பெரியதிரியோதனன்றன்
அருமைமகன்லெக்கணர்க்கு ஆன்திருக்கல்யாணம்
சிந்தைமகிழச் சிறப்பாய்முடிப்பதற்கு
சந்தோஷவார்த்தையுமைத் தான்கேட்டுவாருமென்று
அனுப்பிவைத்தாரும்மிடத்தி லாயனேகேட்டருள்வீர்
சனுப்பெறலாம்வேண்டியநற் சம்பாத்தியம்பெறலாம்
மறைந்தாரேயைவர் வனவாசம்சென்றிடத்தில்
இறந்தாரேயைவ ரினிமேல்வருவதில்லை
ஆருந்தான்கானகத்தில் ஐவரையுங்காணவில்லை
பூருவத்துப்பேச்சைப் புலம்பினலென்னவுண்டு
பெண்ணைக்கொப்பதிலும் பேலியேதான்கொடுப்பார்
கண்ணரேயுங்கள் கருத்தறியேனென்றுரைத்தான்
அப்போதுமாயன் அளகுபெறுலெட்சுமியை
செப்பமாய்த்தானழைக்கச் சீக்கிரத்திலோடிவந்தாள்
வந்தவளைப்பார்த்தந்த மாயனெடுத்துரைப்பார்
சுந்தரியைப்பெண்பேசி துரியோனனுப்பிவைத்தான்
வந்தசகுனிசொல்லும் வாய்மொழியைக்கேளுமென்றார்
இந்தவுரைகேட்டெடுத் துரைப்பான்றுற்சகுனி

## சகுனி பாண்டவர்களை தூசித்துச் சொல்லுதல்.

பண்டுரைத்தவாறேயப் பார்த்தமகன்றனக்கு
கண்டுமொழியான கன்னியந்தச்சுந்தரியை
கொடுக்கமனதிலெண்ணிக் கூறுவீராமாகில்
நடுக்காட்டில்பஞ்சவர்கள் நஞ்சுநீர்தானருந்தி
செத்தார்பிழைத்தாரோ செய்திதெரியவில்லை
இருக்கயிடமுமில்லை யிருந்துண்ணச்சோறுமில்லை
வருத்தமுடன்சுபத்திரையு மகனுந்தனியாக
எத்தேசம்போனாரோ யெங்குற்றாரோவறியோம்
பத்திப்பிடித்தவர்க்குப் பைந்தொடியையீந்தாலும்
அன்னமரிந்து அவர்களுக்கேயானக்கால்
சின்னஞ்சிறுகுழந்தை சிறுமைமிகப்படுமே
அப்பெரியவேழைகளுக் கார்பெண்கொடுப்பார்கள்
செப்பமுடனுங்கள் பெண்ணுஞ்சிறப்பாயிருக்கவென்றே
என்னியான்வந்து சொன்னேனின்னமொன்றுகேட்டருள்வீர்
கண்ணிலான்பெற்றெடுத்தொன் காசினியையாளுமந்த
மன்மகனுக்கேகொடுத்தால் வாழ்வாள்பதிவாக
வின்னம்வருதிதுதான் மேன்பாடெனவுரைத்தான்
ஒய்யாரமான உல்லாசச்சுந்தரியை
வையம்புகழரசன் மைந்தனிலக்கணர்க்கு
கொடுத்தால்க்குறைவுளதோ கூறுமென்றாள்லெட்சுமியும்
அடுத்தேகுடிகெடுக்க ஆயனுமேசம்மதித்து

## மாயவன் பெண் கொடுக்கிறேனென்று சம்மதித்தல்

அன்னாளில்பார்த்தன்மகன பீமனுக்குத்தாரமென்று
முன்னாளில்பேசி மொழிந்தபடிசெய்யவென்றால்
நாடாண்டபஞ்சவர்கள் நல்லதொருசின்மைவிட்டு
காடாண்டுசெத்தார்கள் கரையேறமாட்டாமல்
ஆகையினால்நாமு மரவக்கொடியோனும்
சேகரமாய்க்கூடிச் சிறப்பாயிருக்கவென்று
நினைத்தபடிக்கிப்போது நீர்தானும்வந்தீரே
மனதிலொருதாழ்வுகளை வைக்கவேநீர்வேண்டாங்காண்

பருவத்தில்கல்யாணம் பண்ணுமலெத்தனைநாள்
நிருவகிக்கப்போமோ நெருப்பைமுடிந்திடவும்
ஆராலேகூடுமையா அழகுமிகுலெக்கணர்க்கு
சீரானகல்யாணஞ் செய்திடுவோமன்னவனே
தேன்மொழியாள்சுந்தரிக்குத் தென்னவனேநீர்பரிசம்
தானெடுத்துவிட்டுத் தருகாமலேமுகூர்த்தம்
ஓலையெழுதியுடனே யனுப்பிவைவையும்
சீலமுடனின்னமுநாம் செப்புகிறோங்கேளுமினி
இன்பமுள்ளமைத்துனனு மேந்தல்துரியோதனனை
ரெம்பரெம்பக்கேட்டமென்று நீர்போயுரைத்திடுங்காண்
வரிசைகொடுத்தனுப்பு மன்னுசகுனியென்றே
பிரியமுடனுரைத்தும் பேசினது தப்பாமல்
செய்யக்கடனுமக்கு திரமென்றுரைத்துவிட்டார்
மெய்யென்றுதான்சகுனி விமலன்திருமாளிகையில்
அன்னமிகவருந்தி ஆனைபரிசேனையுடன்
மன்னன்திருமால் மலர்ப்பாதந்தெண்டனிட்டு

## சகுனி அஸ்தினபுரம் வருகுதல்

நடந்தாரோகானகத்தில் நல்மலையுமாறுகளும்
கடந்தாரேபட்டணத்தைக் கண்டுமனமகிழ்ந்து
அரவக்கொடியுடைய அண்ணல்கொலுமண்டபத்தில்
பிரியமுடன்கண்டிரங்கிப் பேய்ச்சகுனிவந்தளவில்
வந்தசகுனிதனை வாவென்றுபசரித்து
அந்தஅளப்பு அமைந்ததோசொல்லுமென்றான்
எந்தவ்க்கியு மென்கொருபாரமல்ல
நந்தகோபால னரசிங்கரூபனிடம்
போனேன்பெருமாள் புலன்களையும்நான்பார்த்தேன்
மானுமழகுமிகுமங்கை யெனுஞ்சுந்தரியை
பட்டத்தலைவன் பவுசுமிகுலெக்கணர்க்கு
கட்டிக்கொடுப்பனென்று கைபோட்டுச்சொன்னார்காண்
உமக்குமவர்க்குமுறவு ரொம்பவேணுமென்றும்
நமக்குத்தெரிந்தமட்டும் நாமுரைத்தோமன்னவனே
காரியத்தைப்பாருங் கலியாணநாள்முகூர்த்தம்

ஆரியரைக்கேட்டே அனுப்பிவிடும்நற்பரிசம்
என்றுசகுனி யெடுத்துரைத்தானிவ்வசனம்
அன்றுமகிழ்ந்தே துரியன்அறைகுவானம்மானை

## விருத்தம்

அளப்பினிலதிகமென்று னறிவிலாச்சகுனி தன்னைக்
கிளப்புவித்திருதராட்டி தனுமிவன்கெட்டியென்றான்
துளைத்திடுங்கொரூரபாணந் தொடுத்திடுந்துரோணர்புத்தி
இளப்பமென்றுரைத்தான் பொல்லாதெக்களிப்பாலேமன்னன்

## அம்மானை

புத்திதனில்மிச்சமெனப் புகல்சகுனியல்லாது
மற்றவர்கள்புத்தி மடைமைதானென்றுமிகு
வசைகள்தனைப்பேசி வணங்காமுடியோனும்
திசைகளறியவினிச் செய்கிறோம்பாருமென்று
மறையோர்களையழைத்து மணமுகூர்த்தங்கண்டெழுத
இறையோனுரைத்திடவே இலக்கணர்க்குஞ்சுந்தரிக்கும்
சோதிடசாஸ்த்திரத்தில் சொல்லும்வகைப்படியே
சாதகங்கள்பார்த்ததிலே தாலிப்பொருத்தமுதல்
பத்தும்பொருந்தவில்லைப் பார்த்துமந்தமறையோர்
உற்றதுநாமஞ்சொன்னாலும் உரகக்கொடியோனும்
சத்துருவாய்த்தானினைந்து தண்டிக்கச்சொல்லிடுவான்
புத்தியில்லாவேந்தன்மனம் பொருந்தும்படியாக
சொல்லுவதேஞாயமெனச் சுருதியுணர்மாமறையோர்
எல்லவருங்கூடி யங்கீராறுமாதமதில்
தேதிபதினெட்டில்த் திருப்பூட்டலாமெனவே
மாதவர்கள்சொல்ல மகிழ்ந்துஅரவக்கொடியோன்
என்றுபரிச மெடுத்துவிடலாமெனவே
இன்றனுப்பநல்லதினம் மென்னவேபொக்கிசத்தின்
கதவுதிறந்து கனபணிதியுள்ளதெல்லாம்
மதகரிமேலேற்றியந்த மாயனிடம்போகவிட்டான்
சுற்றத்தார்க்கெல்லாமச் சோபனங்கள்சொல்லிவிட்டான்
மற்றுமுள்ளதேசத்து மன்னருக்குஞ்சொல்லிவிட்டான்

துரோணர்விதுரன்முதல் சூழ்ந்தபடைமன்னருக்கு
திராணிதெரியத் திறமாய்முரசறைந்தான்

## பீஷ்மர் துரியனுக்கு புத்திகூறல்

காங்கையருமிந்தக் கலியானநாள்க்கேட்டு
தாங்கப்பயலேநீ துஷ்டனெனும்நெட்ரோ
நாராயணன்பேச்சை ஞாயமென்றுநம்புவரோ
சூராதிசூரரெல்லாஞ் சொல்லிச்சிரிப்பார்கள்
மாண்டார்களென்று மகிழாதேயைவருந்தான்
ஆண்டவனார்தஞ்சம் மவர்கட்க்கிருப்பதினால்
சாவதுமில்லையிப்போ தானேவருவார்கள்
காவலனேநீயெடுத்த காரியமும்போய்விடுங்காண்
தலைகுனிந்துநில்லாதே சபையோர்சிரித்திடுவார்
மலைவிழவும்குமட்டி மன்னவனே தாங்கிடுமோ
ஓதிபெருத்தால்த் தூணுக்குதவுமோமன்னவனே
மதிதான்தெரியவென்று வார்த்தைசொன்னார்காங்கையரும்
காங்கையர்சொல்தான்கேட்டுக் காவலனுமேதுரைப்பான்
போங்காணும்பாட்டா புத்தியுமக்கேதுமில்லை
நெஞ்சாரவென்சொத்தை தின்றுண்டுதானிருந்தும்
பஞ்சவரையென்றனுக்குப் பாராட்டிச்சொன்னீரே
ஆர்வந்தாலென்னயிப்போ தார்க்கும்பயமோதான்
போர்வந்தாலும்புரிந்து புதல்வனுக்குக்கல்யாணம்
கொற்றவன்நானினைந்த குணத்தின்படிமுடிப்பேன்
மற்றவர்கள்பேச்சை வணங்கிநான்கேட்பதில்லை
திருத்தமாய்ச்சொன்னான் திரியோதனப்பெருமாள்
உருக்கமுள்ளகாங்கையரு மொன்றுமுறையாதிருந்தார்

## விகர்ணன்துரியனுக்கு புத்தி கூறல்

நூற்றுவரிலேயிளையோன் நன்னெறியிலேயுயர்ந்தோன்
சாற்றுந்தருமநெறி சாஸ்திரமெல்லாமறிந்தோன்
தோராவடிவழகித் துரோபதையைத்துகிலுரிய
போராதென்வுரைத்தும் புத்திசொன்னயோக்கியவான்
விகர்ணனெழுந்திருந்து வேந்தன்றனைநோக்கி

பகவானுக்கேற்காப் பகைதேடிக்கொள்ளுகிறீர்
பெரியோர்மொழிதடுத்துப் பேசுகிறீர்வாயடங்க
கரியோன்கபடமதை கண்டறியவல்லவரார்
மாமன்சகுனி வார்த்தைதனைக்கேட்பதினால்
சேமமுறுதனது சேனைபடையத்தனையும்
நாசமாய்ப்போவதன்றி நாடெங்கனுஞ்சிறிப்பார்
வாசமிகுவாள்வீமன் வருவான்தவறாது
காரியத்திலொன்றுங் கைகூடமாட்டாது
வீரியத்திலொன்றும் விளங்காதெனவுரைத்தான்
அவ்வுரைகேட்டேதுரியன் ஆங்காரமாயெழுந்து
இவ்வுரைதான்சொல்வதர்க்கோ வெழுந்தாய்சிறுபயலே
அன்னாளிற்பஞ்சவர்கள் அடிமையாய்ப்போனவரை
பின்னாள்துரோபதையால் மீட்டுவ்வகைசெய்ததுடன்
இன்னாளுமென்வார்த்தைக் கெதிர்வார்த்தைசொல்லுவையோ
உன்னாலேயென்னபய னுன்னுயிரைவாங்கிடுவேன்
இரணியனுக்கேபிரக லாதன்பிறந்ததுபோல்
திரணமிகும்வாலிக்குச் சிறுவனெனுஞ்சுக்ரீபன்
அசுரகுலராவணனை அவன்றம்பிவிபூஷணனும்
பிசகுபண்ணிக்கொன்றகதை பேசவுநான்கேட்டிருப்பேன்
அப்படிப்போலென்றனுக்கே ஆகினாய்தம்பியரே
இப்போதுனைக்கொல்ல யிதுசமயமல்லவென்று
பொறுத்தேன்பயலே பிழைத்தாயெனப்புகன்றான்
வருங்காரியமறியா வணங்காமுடியோனும்
இந்தமகிமைசொல்லி யிருந்தான்காணம்மானை
அந்தமுள்ளசெம்பொன்மத யானையின்மேற்போனதெல்லாம்
கொண்டுபோய்வைத்தார்கள் கோபாலர்தன்னிடத்தில்

## மாயவனிடம் பரிசங்கொடுக்குதல்

கண்டுதான்மாயன் கருத்தில்மிகநினைந்து
நல்லஅதிசயமும் நாம்பார்க்கலாமெனவே
வல்லவனார்தன்மனதில் வகைகளெல்லாமுள்ளடக்கி
வந்தபசும்பொன்னும் வயிரமுத்துத்தாவடமும்
இந்தமட்டுந்தானோ யிதுவோபரிசமென்றார்

கொட்டுங்கள்நீங்களிந்தக் கோபாலப்பெட்டியிலே
கட்டுங்கோபின்னாலே காரியத்திலேயறிவோம்
பரிசமதுசம்மதித்தோம் பாங்கானகல்யாணம்
துரிசாய்நடக்கவென்று சொல்லுந்துரியோதனர்க்கு
முகூர்த்தமிட்டேவோலை முடித்துமஞ்சள்காப்புமிட்டு
சுகிர்த்துரெம்பப்பேசியந்தத் துய்யநெடுமாலனுப்பி
தங்கள்வகைதனிலே சாதியுரன்முறைக்கும்
மங்களமுஞ்சொன்னார்காண் மாநிலமெல்லாமறிய
ஆனையின்மேல்மும்முரசு அடித்தார்கள்பட்டணத்தில்
சேனைதளங்களுக்குத் தெரியமுரசடித்தார்
முரசடித்தசேதியெல்லாம் மூவுலகோர்தான்கேட்டு
உரசுபிறக்கவல்லோ வொருமித்தாரேம்பெருமாள்
எம்பெருமாள்சித்தமதை யெவரறியப்போறார்காண்
வம்புசெய்யவேணுமென்று மனதில்நினைத்தார்காண்
இந்தவினைதோணாமல் லெக்கணர்க்குகல்யாணம்
சுந்தரியைமாலையிடத் துணிந்தானரவுயர்த்தோன்
வருங்காரியமுரைக்கும் மந்திரிமார்சொற்கேளான்
குரங்காயிருதலையிற் கொள்ளியெரும்பாக்கிவிட்டான்
காலம்வரும்போது கருத்துமழிந்துவிடும்
கோலமிதுவாகுமென்றார் குவலையத்தோரம்மானை
மாயன்முகூர்த்தமிட்டவா ரெல்லாஞ்சுந்தரியை

## தாதிகள் சுந்தரியிடம் முகூர்த்தந் தெரிவிக்குதல்

தாய்போல்வளர்த்தெடுத்த சங்குவளையாள்கேட்டு
ஓடியரமனைக்குள் உத்தமியாள்சுந்தரியைத்
தேடினாள்கண்டாள்முன் தெண்டனிட்டேயேதுசொல்வாள்
கண்ணேமணியேயென் கற்பகமேஅற்புதமே
பெண்ணேபெருந்திருவே பிரியமுள்ளசுந்தரியே
தீதானசொல்லையென்றன் செவியிலேகேட்டுவந்தேன்
வாதானகாரியத்தை மனங்கொதிக்கக்கேட்டுவந்தேன்
பற்றாதசொல்லையிப்போ பாவிநான்கேட்டுவந்தேன்
சுத்தமில்லாவார்த்தைதனைச் சுந்தரியேகேட்டுவந்தேன்
சோதிக்கமாயவனும் சொன்னதுவோவென்றுரைத்தாள்

நீதிமிகுசுந்தரியாள் நினைவிற்கிலேசம்வைத்து
செங்கமலத்தாதியரே செய்தியென்னசொல்லுமென்றாள்
அங்குநடந்ததென்ன யானறியச்சொல்லுமென்றாள்
சொல்லுமென்றுகேட்டவெங்கள் சுந்தரிப்பெண்ணேகேளும்
கல்நெஞ்சனான கபடனரவக்கொடியோன்
மைந்தனிலக்கணர்க்கு மாலைபுன்னைச்சூட்டவென்று
சந்தோஷமாகச் சபைகூடித்தானிருந்தார்
அரவக்கொடியோனும் அனுப்பிவித்தான்நற்பரிசம்
திரமானமாயனுமே சேர்ந்துமனஞ்சம்மதித்து
பைங்குனிமாசம் பதினெட்டாந்தேதியென்று
எங்குந்தெரிய இயல்பாய்முரசறைந்து
சோபனங்கள்சொல்லித் தூலைதூரம்போகவிட்டார்
ஆபரணமாகவுந்தன் அரண்மனையிற்சிங்காரம்
பட்டணமுஞ்சிங்காரம் பண்ணுமென்றுசொல்லிவிட்டார்
மட்டுநாள்தானு மிருக்குதன்னைமாலையிட
எம்பெருமானுத்தாரம் இன்றைக்கேயாச்சுதம்மா
தென்புதிசவார்த்தை செப்பினார்தாதியரும்

## சுந்தரி கலியாணசமாச்சாரங்கேட்டு புலம்புதல்

சொன்னதொருவார்த்தைகளைச் சுந்தரியுந்தான்கேட்டு
என்னவினைநமக்கிங் கிப்போதுவந்ததுகாண்
ஆதினாள்பேச்சுகளை ஆயன்மறந்தாரோ
நீதிமறந்தாரோ நினைவுதப்பிப்போனாரோ
பஞ்சவர்கள்மேலிருந்த பட்சம்மறந்தாரோ
வஞ்சகன்சொல்லை மனதில்நினைந்தாரோ
நாடுவிட்டுக்கானகத்தில் நல்லவரைத்தான்விரட்ட
கூடவிருந்தே குடிகேடுசெய்தாரோ
பார்த்தன்மகன்றனக்குப் பாரியென்றுநானிருக்க
வார்த்தைபிசகுபண்ண மாயன்நினைந்தாரோ
அத்தனேயென்றுசொல்லி யருங்கானிற்பஞ்சவர்கள்
செத்தார்களென்று திரியோதனன்பாவி
தனக்குச்செயகாலந் தானாச்சுதென்றுசொல்லி
வினைக்கோமனந்துணிந்தான் விருதாவில்மாயனுக்கு

பரிசங்கொடுத்தானே பாரளந்தமாயனுக்கு
வரிசைவந்ததென்றந்த மாயன்மகிழ்ந்தாரோ
பொருளும்பணமும் புலையன்படைக்கலையோ
நிரையும்பணங்காசும் நீசன்படைக்கலையோ
புலிதான்பசித்தாக்கால் புல்லைப்பொசித்திடுமோ
எலிதானும்பூனைக் கெதிராடிநின்றிடுமோ
சந்தனத்தைத்தேய்த்தாலுந் தன்மணமுங்குன்றிடுமோ
வெந்துருகிநின்றதங்கம் மேனிகுறைந்திடுமோ
பந்தயமாய்ச்சொல்லுகின்ற பஞ்சாங்கம்போனாலும்
அந்தநட்சேத்திரங்கள் அவைதானும்போய்விடுமோ
ஒருவனுடபொருளை ஒருவனெடுப்பானோ
கருவிலமைவுதன்னைக் கையால்மறைப்பாரோ
கோபாலன்புத்தியற்றால் குருக்கேதடுப்பாரோ
மாபாவிபேச்சுகளை மாயனறியாரோ
என்செய்வேனிப்போதிங் கேதுசெய்வேனீஸ்பரரே
முன்செய்ததீவினையோ மூதாக்கள்சொற்படியோ
அலைபிற்றுரும்பானே னாருமில்லாப்பேரானேன்
இலைகளுதிர்ந்த யினியமரமானேன்
ஆற்றில்கரைத்தபுளி யானேனேனீஸ்பரனே
கூற்றுவனுமானாரே கோபாலரெந்தனுக்கு
தாயில்லாப்பிள்ளை தட்டளிந்தவாரதுபோல்
பாய்மரத்தைக்காணாப் பருங்காகமானேனே
வலையிலகப்பட்டதொரு மான்போலுமானேனே
உலையில்மெழுகானேன் ஒருவர்துணையில்லாமல்
பாரில்மழையில்லாத பயிர்போலுமானேனே
ஆரைவெருப்பேனென் ஐயோவெனவழுதாள்
குத்திவிழுந்தழுதாள் கோவென்றபயமிட்டாள்
கத்தினாள்சுந்தரியுங் கண்ணீருமாறோட
இந்தவிதமாகவுமே யேக்கமுற்றாள்சுந்தரியும்
சிந்தைகலங்காமற் செவ்வேயமனந்தேறி
ஆயன்மனதை யறிவோமெனவெழுந்து
நேயமுடன்சுந்தரியும் நெடுமாலிடத்தில்வந்தாள்

## சுந்தரி கிருஷ்ணனிடம் ஞாயம்கேட்குதல்

### விருத்தம்

வந்துதானவள்மாயவன் மலரடிவணங்கி
எந்தையேயெனைத் தனஞ்செயனின்றமைந்தனுக்கு
சொந்தமாகியபாரியென் றுரைத்தசொல்தவிழ்த்து
இந்தநாளிலேயிலக்கணர்க் கென்றதையிசைப்பாய்.

### அம்மானை

மாதழகிசுந்தரியும் வந்துதிருமாயனிடம்
பாதந்தொழுது பகருவாளம்மானை
என்னையொருவருக்கென் றீந்திருக்கவின்னாளில்
பின்னையொருவருக்குப்பேசிடவுங்காரணமேன்
பொருத்தமிட்டமாப்பிளைதான் பூவுலகில்மாண்டாலும்
மறுத்தொருவர்க்கேமணந்தான் வையகத்திற்செய்வர்களோ
சாதிதனிலீனர் தான்செய்வாரல்லாது
மாதவனேநீருமெனை மற்றொருவர்க்கீய்ந்திடவும்
ஆகுமோசும்மாயிவ் வனியாயம்போய்விடுமோ
சாகுவேன்தப்பாதென் தந்தையேநீருமுன்னாள்
சாதித்தபேச்சையின்று தப்பவிடலாமோ
ஆதித்தன்தெற்குவடக் காணுலுமேலேழு
கடல்சுவறினாலுமொரு கலிகாலமானாலும்
சடலமதைவெட்டிபதிற் றங்குயிர்தான்போனாலும்
மலைமீதிற்செந்தாமரைதானும் பூத்தாலும்.
நிலைதவிரலாமோ நெடுமாலேயென்றுரைத்து
வெஞ்சமரிற்றோற்காத வீரரெனுமைவர்களும்
கொஞ்சுங்கிளிமொழியாள் கோதைதுரோபதையும்
வேண்டியுந்தன்பாதம் மிகவேவிதந்தொழுது
ஆண்டவரேயுன்றன் அடைக்கலமாய்த்தானிருக்க
அடைக்கலத்தை விட்டுவிட்டாலவனியுளோரேசாரோ
இடைச்சிமுலையுண்ட யிளப்பமல்லோபேசுகிறீர்
ஐயாசரணமிப்போ அடியாளைக்காக்கவென்று
மையார்ந்தகன்னியெனும் மாதழகிசுந்தரியும்
அழுதாள்தொழுதாள்பின் ஐயோஅபயமென்றாள்
பழுதுவாராதென் னுடைய பாக்கியமேயென்மகளே

## கிருஷ்ணன் சுந்தரிக்கு ஞாயங் கூறுதல் அம்மானை.

வேண்டாமழுகைதனை விட்டுவிடுமென்மகளே
மாண்டாலுனைக்காண வாய்க்குமோவென்றுசொல்லி
பெண்ணரசேயென்று பிரியமுடன்சுந்தரிதன்
கண்ணீர்துடைத்தமர்த்திக் கார்வண்ணனேதுரைப்பார்
நாடுதனைவிட்டார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
காடுதனிற்சென்றார்கள் கவலைபெரிதாகி
பாஞ்சாலிதானுமந்தப் பஞ்சவரைநம்பியல்லோ
தேஞ்சாளொருமுழத்து சேலைதுணியில்லாமல்
இலைபறித்துத்தின்றார்கள் இருப்பிடமுமில்லாமல்
நிலைவிட்டுப்போனார்கள் நிற்கநிழலில்லாமல்
அன்னவெறியெடுத்தே அவதிமிகப்பட்டார்கள்
சொன்னமொழிகேளாமற் துட்டரெனும்பஞ்சவர்கள்
அவதிபொறுக்க முடியாமலொருபொய்கையிலே
பவுருசமாய்நீரருந்திப் பட்டுவிட்டார்கண்டாயே
போனவர்கள்பேச்சைப் புலம்பினாலென்னவுண்டு
மாநிலத்தில்யாவருக்கும் வாழ்வுபெரிதல்லாமல்
காரணத்தைப்பார்க்க கணக்குண்டோவென்மகளே
வாரணத்தோல்போர்த்த மகாதேவர்புத்திரனார்
தொந்திக்கணபதிக்குச் சோபனங்கள்செய்யவென்று
சிந்தித்தாரப்போ சிறந்தவிநாயகனார்
நமக்கேற்றபெண்களிந்த நாட்டினிலேயில்லையென்று
தமக்கேற்றபெண்தேடிச் சந்திக்கரைதனிலே
ஆற்றங்கரைதனிலே ஆருமற்றபொட்டலிலே
காத்தேயுருக்காந்தார் கண்டவரும்போனவரும்
கொடுப்பாரவர்கள் தலைக்குட்டால்மிச்சமுண்டோ
எடுப்பாருமுண்டோ தலையில்விதிதனக்கு
வல்லமைகள்பேசி மானிலத்தில்யாவர்களும்
சொல்படிகேளாதவற்குத் துன்பம்வருமென்மகளே
மானேகேளன்றனறு மாமிசுபத்திரையும்
தானேயவளீன்ற தம்பியபிமனுடன்
தூங்கித்திரிகிறார் சொல்விசையமாபுரத்தில்.

வாங்கிக்குடிக்குறான் வாள்விசையன்புத்திரனும்
ஆகையினாலேதான் ஆரணங்கேயுன்றனையும்
சேகரமாய்வாழுந் திரியோதனப்பெருமான்
திரவியத்திலேமிகுந்த திரியோதனப்பெருமாள்
அரவக்கொடியோன் அருளுமந்தலெக்கணர்க்கு
கட்டிக்கொடுத்துன்னைக் கண்ணாரப்பார்ப்பமென்று
மட்டிலாஆசையென்றன் மனதிலிருந்ததினால்
மன்னன்சகுனிக்கு வலக்கைகொடுத்தமென்றார்
சொன்னமொழிகேட்டுச் சுந்தரியுமேதுசொல்வாள்

## சுந்தரி கிருஷ்ணனுக்கு புத்தி கூறுதல்

பேச்சிமுலையுண்டருளும் பெரியபெருமாளே
காச்சியபாலுண்டருளுங் காயாம்புமேனியரே
உறிவெண்ணைதான்திருடி யுண்டாயுலகறிய
உரலோடுகட்டுண் டுதைகள்மிகப்பட்டனையே
மாமியுடன்கூடி மருவிவிளையாடினையே
மாமன்றனைவதைத்தாய் மாடாடுமேய்த்துவந்தாய்
கோவதையைமேய்த்துக் குழலூதிநின்றனையே
ஆவலுடன்பேய்முலைப்பா லருந்தியுயிர்வாங்கினையே
பாவமெனவென்னைப் பரனேநீதான்வளர்ந்த
கேவலமோஆயர்குலக் கெருவிதமோலெக்கணர்க்கு
என்னைக்கொடுக்க விசைந்ததுவுமல்லாமல்
உன்னைச்சாரசந்தன் உதைக்கஅவனைச்செயித்து
காத்தபஞ்சபாண்டவரைக் கருத்தில்நினையாமல்
வார்த்தையிழிவாயுரைத்தாய் வையகத்தோரேசரோ
வாழ்வுசதமாக மகிழ்ந்தேயுரைத்தீரே
தாழ்வுசதமென்பதையுந் தானறிந்துபார்க்கலையோ
உடலுமுயிரும்பொருளும் ஒன்றுஞ்சதமலவே
கிட்டுந்திரவியமுஞ் செல்வஞ்சதமலவே
தண்டிகையும்பொக்கிஷமுந் தானுஞ்சதமலவே
தெண்டிரைசூழ்பூமியுடன் செங்கோல்சதமலவே
ஆடைபணிகளதுவுஞ்சதமலவே
மாடமுதல்மாளிகையும் மற்றுஞ்சதமலவே

தாயார்சதமலவே தகப்பன்சதமலவே
நீயார்நானென்னும் நினைவுஞ்சதமலவே
பெண்டீருந்தானும்வரும் பிள்ளைசதமலவே
அண்டாதகோபமது ஆர்க்குஞ்சதமலவே
நீர்மேற்குமிழியென நிச்சயமில்லாதவுடல்
தூரில்லாப்பொந்துமரஞ் சுத்தமில்லாப்பொய்க்கூடு
காற்றைப்பிடித்தடைத்த கசுமாலப்பாண்டமிது
ஊத்தைச்சடலமிது ஒன்பதுவாய்ப்பீத்தல்வெளி
பொய்யானமின்னலிது பொருத்தமில்லாவாழ்வுதனை
அய்யாவேநீரு மறியாதகாரியமோ
உலகிலனேக முயிர்கள்பிறந்ததிலே
துலையாதவேழுவகைத் தோற்றமதிலேபெரிது
இனிதாய்மனித சென்மமென்றேயுரைப்பார்கள்
மனிதரென்றஜென்மம் வகையாயெடுப்பதிலும்
கூன்குருடுசப்பாணி குணக்கேடுதானீங்கி
ஆண்ஜென்னமானு லருதாம்புவிதனிலே
புவியிற்செனனம் பொருந்தியெடுத்தாலும்
தவியாதஞானம் வந்தால்த்தானேபெரிதாகும்
பெரிதானகாரியத்தைப் பெரியோரெடுப்பார்கள்
சிறிதானகாரியத்தைத் தீண்டுவாரோநல்லோர்கள்
முன்னாளில்கர்மம் முழுதுமேசெய்ததினால்
இன்னாளில்ப்பெண்ணா யெடுத்தேன்செனனமது
தீராதகர்மவினைதீர்வதெப்போ வென்றிருந்தேன்
ஆராத்துயரிலமிழ்த்தினீர் மாயவரே
சத்தியமும்போய்விடுமோ சடலமிறந்தாலும்
பத்தினியாளென்றசொல்லேப் பாரில்ப்பெரிதாகும்
என்னையொருவருக்கே யியம்பிவிட்டீர்முன்னாளில்
பின்னுமொருவருக்குப் பேசுவதுஞாயமல்ல
சின்னம்வருமுமக்குத் திருட்டுவித்தைசெய்வதினால்
என்னுயிரைமாய்த்திடுவே னென்றுசொன்னாள்சுந்தரியாள்

## கிருஷ்ணன் சுந்தரிக்கி புத்தி கூறுதல்

மாதுநல்லாள்சொன்னதெல்லாம் மாயவனுந்தான்கேட்டு
ஏதுகாணிந்தமொழி யிளம்பருவச்சுந்தரிக்கு

மனது தனைப்பார்த்தால் மகாதவத்தோர்க்கீடாகும்
கனதையுள்ளபுத்திதனைக் கண்டோமிவளிடத்தில்
தாழ்விலாச்சுந்தரிக்குச் சற்குணமுண்டானதினால்
வாளபிமனேபுருஷன் மற்றொருவரர்காது
என்றெண்ணிமாய னிருதயத்திலுள்ளடக்கி
நன்றுகாண்வேடிக்கை நாம்பார்க்கலாமெனவே
சுந்தரியைப்பார்த்திரங்கிச் சொல்லுவார்மாயவரும்
என்றனுயிர்மகளே யினியதொருநாயகமே
பவுசுங்கனமுமுள்ள பாக்கியமுந்தானிழந்து
தவசியாய்ப்போகவுன்றன் தலையிலெழுதிவிட்டான்
நம்மிடமேற்குற்றமில்லை நாயகமேயுன்தாயார்
சம்மதித்துச்சொன்னதினால்ச் சரியென்றுரைத்தோமென்றார்

## சுந்தரி தாயாரிடம்சொல்வது

திருமால்மொழிகேட்டுச் சீக்கிரத்தில்சுந்தரியும்
தருகாமலோடித் தாயானலெட்சுமியை
கண்டாள்பணிந்தாள்தன் கண்ணீரைச்சோரவிட்டாள்
வண்டாடுங்கூந்தல்தனை வாகாயவிழ்த்துவிட்டாள்
கிலேசம்பெரிதாகிக் கிட்டநின்றாள்சுந்தரியும்
சலாபங்கொளித்தவர்க்குச் சந்தோசமானதுபோல்
வாரியெடுத்து மகளைமிகவணைத்து
காரிகையேநானீன்ற கண்ணேயென்கண்மணியே
பெண்ணேமுகூர்த்தமிட்டுப் பேசியிருக்கையிலே
கண்ணீர்ததும்பவுந்தன் காரியமேதென்றுரைத்தாள்
நேர்த்தியாய்த்தான்முகூர்த்தம் நிச்சயித்தத்தாயாரை
பார்த்துநல்லசுந்தரியும் பகருவாளம்மானை
தாயேநீவார்த்தைதனைப் தப்பிவிடலாமோ
ஆயேயரவமதை யஞ்சாமல்த்தீண்டுவரோ
புலியும்பசுவும்பொருந்திபிருப்பதுண்டோ
எலியுமொருபாம்பு மிணங்கியிருப்பதுண்டோ
தங்கமுடனிரும்பு தான்சேர்ந்துருகிடுமோ
கங்குள்ச்சிவப்புமணிக் காந்திதனக்கீடாமோ
பணங்காசுதானுமிந்தப் பாரிற்பெரிசானாலும்

இணங்காதகாரியங்க ளேற்குமோவையகத்தில்
போதாக்குறங் குகையில்ப் பூமாலைதான்கொடுத்தால்
ஆதரவாய்வாசமது அறியுமோவென்தாயே
கிளியருமையக்தக் கிளிவளர்த்தார்க்கல்லாது
தெளிவாயதைத்தின்னும் சிறுபூனைக்கண்டிடுமோ
இந்தவுவமைகளை யெடுத்துரைத்தாள்சுந்தரியும்
அந்தமொழிகேட் டருகிருந்தலெட்சுமியும்

## லெட்சுமி சுந்தரிக்கு புத்திகூறுதல்

தாயவளிபிற்ருயார்சொல்த் தட்டிநடந்தவர்கள்
ஆர்தானும்வாழ்ந்தா ரறியாயோசுந்தரியே
தாபந்தமில்லாமல்த் தங்கையரேநீவாழ்ந்தால்
நான்வந்தொருவேளை நல்லதண்ணீர்தான்குடிப்பேன்
வாழ்ந்திருக்கவேணுமென்று மாதாபிதாநினைப்பார்
தாழ்ந்திருக்கநீநினைத்தால் தங்கையரேயென்னசொல்வேன்
ஆனாலுமென்மகளே ஆயருடசொற்படிக்கு
தானேமுடியுமல்லால் தப்பாருமிங்குமுண்டோ
உன்தகப்பன்சொல்லுமின்ற உத்தரவேயல்லாது
என்றனக்குவேறே யிடமுண்டோவென்றுமவள்
வாயாரச்சொல்லிடவே மனதுநொந்துசுந்தரியும்
நியானசொல்லையிப்போ செப்பினீர்மாதாவே
ஞாயமதைத்தள்ளி நட்பார்களோவையகத்தில்
ஆபரும்நீ படாத்துகளைச்செய்யுகிறீர்
என்றுமிகக்கூறி யேந்திழையுமன்னேரம்
நின்றுமிகவழுது நெடுமூச்சுத்தானுமிட்டு
சூதானகர்மவினை துடர்ந்ததுவோவென்தாயே
மாதாவேநீயும் மனவெறுப்புச்செய்தாயே
வினைவசத்தைதயாராலும் வெல்லமுடியாது
மனதுக்கிசைந்தபடி மாழுவதேநிச்சயங்காண்
இருந்துமென்னகோட்டை யெடுத்ததும்வையகத்தில்
பிறந்தாரிறந்துவிட்ட பேர்களேயல்லாமல்
ஆரார்தான்வைத்திருந்தா ராசையெனும்பொய்க்கூட்டை
வெறுப்புநினைந்துகொண்டு மிக்கவொருசுந்தரியும்

மாளிகைக்குப்போய்வாறேன் மாதாவேயும்முடைய
தாளேசரணமென்று தான்வந்தாள்சுந்தரியும்

## தாதியிடத்தில் சுந்தரிசொல்லுதல்

வளர்த்தெடுத்தசங்குவளை மாதினிடம்போய்ச்சேர்ந்து
எழுத்துவிதியோ எனைவளர்த்தசங்குவளை
தாயாரேகேளுமென்று தாயுரைத்தநேர்த்தியெல்லாம்
வாயாரச்சொல்லிவழுத்துவாளம்மானை
இனிமேற்புவியி லிருக்கவுமேயாகாது
அனியாயச்சொற்கேட்டு அரைச்சணமுநானிருக்கேன்
தன்மரணமானுக்கால் தோஷம்வருமென்பார்கள்
நன்மரணமென்றனுக்கு நன்றுபுரைத்திடுவாய்
பாசாணந்தன்னைப் பாலில்க்கலந்தேதான்
கூசாமலென்றனுக்குக் குடித்திடவுந்தந்திடுங்கள்
படுத்துமுறங்கையிலே பண்பாய்ப்பெரியகல்லை
எடுத்துமேநீங்கள்விரைந் தென்றலையிற்போட்டிடுங்கள்
மலைமீதெனையேற்றி மாளவுருட்டிடுங்கள்
நிலைபாக்கினாறுகண்டு நிமிஷத்திற்றள்ளிடுங்கள்
கத்தியினாலேயென் கழுத்தையறுத்திடுங்கள்
வெற்றிலையும்சுண்ணம்பும் வேண்டிக்கொடுத்திடுங்கள்
ஆழக்குளிதோண்டியெனைத் தாளப்புதைத்திடுங்கள்
மாளச்சுருக்கிட்டெனை மாளிகையில்தூக்கிடுங்கோ
அக்கினியைத்தான்வளர்த்தே அதிலென்னைத்தள்ளிடுங்கோ
தக்கமில்லையுங்களுக்குத் தர்மமேயுண்டாகும்
சேயானசுந்தரியுஞ் செப்பினளிவ்வார்த்தை
தாயொத்தசங்குவளைத் தாதிசொல்வாளம்மானை

## தாதி கனவுகண்டதை சுந்தரிக்குச்சொல்லுதல்

### விருத்தம்

என்னுடமகளேகேளாய் யிரவில்நான் றுயின்றபோது
சொன்னசொற்பொய்யாகாது சொற்பனங்கண்டேனம்மா
மன்னன்வாள்வீமராஜன் வந்துதன் றுணைவரோடே
உன்னையும்மாலைசூட்டியுவந்துவாழ்ந்திருக்கக்கண்டேன்.

ஆதலாலரவுயர்ந்தோ னவன்படைமாளக்கண்டேன்
சாதகனிலக்கணர்க்கு தலைதனைச்சிரைக்கக்கண்டேன்
சூதினல்வனத்திற்போன துரோபதையுடனேஐவர்
மாதவனருள்பெற்றிந்த வையகம்ஆளக்கண்டேன்.

அம்மானை.

தேனேகரும்பே தெவிட்டாத தெள்ளமுதே
மானேகுயிலே மயிலேமரகதமே
அன்னநடையாளே அருந்ததிபோற்பத்தினியே
கன்னியிளங்கமுகே காரிகையேநாயகமே
பழுதொன்றுமில்லாத பார்த்தன்மருமகளே
அழுதுபுலம்புவதே னவிதனைமாய்ப்பதுமேன்
தூண்டாமணிவிளக்கே சுகுர்தகுணமுள்ளவளே
நீண்டோன்திருமகளே நெருப்பில்விளக்காரியமேன்
கண்டேனென்சொற்பனமென் கண்ணேமிகக்கேளும்
கொண்டானரவக் கொடியோனிலக்கணர்க்கு
மணமுகூர்த்தமிட்டே மணவறையின்பந்தலிலே
குணமாகயெல்லோருங் கூடியிருக்கையிலே
விசையன்மகனை விந்தைபெருவாள்வீமன்
அஞ்சயாதகண்ட னபீமன்கைவாளாலே
துங்கமுடியனைபுஞ் சூழ்ந்தபடைமன்னரையும்
பங்கப்படுத்திமணப் பந்தலிலெலக்கணனை
அஞ்சுகுடிமிவைத்து அளகாய்தலைசிரைத்து
செஞ்சொல்விராவான் சிரப்பானபந்தலிலே
செங்கையொடுசெங்கை சேர்த்திருக்கக்கட்டிவைத்து
மங்களமாய்வந்த மாப்பிளையாம்லெக்கணன்றன்
தலையில்விளக்கேற்றி சகலருமேதானறிய
கலைதெரியும்மாசக் கட்டழகன்வாளபிமன்
மாதேயுனையும் மணவறையின்பந்தலிலே
ஆதரவாய்மாலையிட ஆயனுமேநீர்வார்க்க
கானகத்திற்போன கனமுள்ளபஞ்சவர்கள்
மானிலத்தையாண்டு மகிழ்ந்திருக்கக்கண்டேனென்
கண்டேன்கனவும் கடுகளவும்பொய்யாது
தண்டாமரைத்திருவே சஞ்சலத்தைவிட்டுவிடும்

உனக்காகவேறு னுபாயமொன்றுசொல்லுகிறேன்
மனக்கவலைவேண்டா மகளேயினிக்கேளும
வளமாய்நடந்த வயணமெல்லாந்தானெழுதி
அளகாயபீமனுக்கு அனுப்பிவிடுமென்தாயே
வயணமிதுவரிந்தால் வருவாரொருநொடியில்
பயணம்பிரப்பட்டா னுன்பாவந்துலைந்திடுங்காண்
வாள்வீமருன்னை மாலையிட்டுக்கொள்வார்காண்
தாள்வுவாராது சந்தோசமாயிருப்பீர்
சங்குவளைத்தாதி தான்மொழிந்தவார்த்தையெல்லாம்
மங்களமாய்க்கேட்டு மனமகிழ்ந்துசுந்தரியும்
பழுதில்லைநீயுரைத்த படியேவயணமெல்லாம்
எழுதியனுப்புகிறேன் என்றந்தச்சுந்தரியும்

## சுந்தரி வாள்வீமனுக்கு நிருபம் எழுதினது

ஓலையெடுத்து வொப்பரவாய்த்தான்வாரி
வாலைக்கணபதியை மனதில்நினைந்துகொண்டு
சீலமுள்ளசுந்தரியாள் தேர்விசையன்புத்திரர்க்கு
ஓலையெழுதும்வகை யுரைப்பேன்கேளம்மானை

### விருத்தம்

அன்பாய்சுவாமியவர்களுக்கிங் கடியாளானசுந்தரியாள்
தென்பாய்த்தெண்டனிட்டெழுதுஞ்செய்தியாகும்விண்ணப்பம்
இன்பாயுமக்கேபாரியென வியம்பியதுபோல்யானிருக்க
வண்பாய்வணங்காமுடியோனு மாயனுறவுமகிழ்ந்தானே.

வணங்காமுடியோனிலக்கணர்க்கு மாலையிடவேவேணுமென்று
பணங்காசதனைத்தானுயர்த்திப் பரிசங்கொடுத்தானதைவாங்கி
குணங்காணெனவேமாயவனுங் கொடுப்பேனென்னச்சம்மதித்து
மணங்கான்பிறக்கும்பங்கூனி மாசமுகூர்த்தம்வைத்தானே

### சந்தம் வேறு

ஆனதினாலரவுயர்த்தோன்சேனைதன்னை
அதமாக்கினூற்றொருவர்தம்மைக்கட்டி
ஈனமுறலெக்கணனைசிட்சைசெய்தே
யோர்க்கைப்புடனவன்றலைபிற்றீபமேற்றி

வானவர்கள்மலர்மாரிபெய்யவென்னை
மணமாலைசூட்டநீவாராவிட்டால்
ஞானபராஅக்கினியில்வீழ்வேனென்று
நான்சபதம்வைத்துவிட்டேனம்புவீரே.

அம்மானை

திருமேவுவாழ்விம தென்னவனேநின்பாதம்
உருமையுடன்சுந்தரியாள் வுவந்துபணிந்தேயோலை
எழுதும்வகைகேட்டருள்வீ ரென்னுடையநாயகரே
பழுதுடையசொல்லுடையான் பாவிஅரவக்கொடியோன்
தன்மகனுக்கேயென்னையுந் தான்கேட்கமாயவரும்
பொன்னுசைகொண்டுப் பொருந்திமுகூர்த்தமிட்ட
செய்தியான்கேட்டதின்பின் சிந்தைகலங்குதிப்போ
ஐவரில்லாவேளை அனியாயஞ்செய்வதினால்
மன்னவரேவாளெடுத்து வந்துமணப்பந்தலிலே
தென்னவரைவென்று திசையறியக்கட்டிவைத்தே
என்னைமணமாலையிட விதுவேசமையமென்றும்
என்மனதிலுள்ளபடி யெழுதினேனிவ்வோலை
ஆகையினாலேஅரைச்சணத்தில் வந்திடுவீர்
தாகமெனக்குமென்றன் சாமிநீரல்லாது
வேறேஒருவரையும் விரும்பேன்மனந்தனிலே
ஊரேபெரிது அல்லா லொருவர்பெரிதலவே
எல்லோருங்கூடி யிசைந்தாரேயாமாகில்
செல்லாதுயாருருத்தி செய்வதென்னஒன்றுமில்லை
பெரியோர்கள்பேச்சைப் பேதைநான்தள்ளிவிட்டால்
மரியாதைதப்பிவிடும் மானிலமெலாஞ்சுடுங்காண்
கருணைத்திலென்றனைநீர் தாலிதனைக்கட்டாயேல்
மரணத்தையான்முடிப்பேன் வாள்விசையன்புத்திரனே
செந்தாளிவனெனவே செய்திதனைநீர்கேட்பீர்
அந்நாள்க்கிலேசமுமக் காவதென்னஒன்றுமில்லை
ஓலையெழுத்தூய்ந்து தான்மாண்டுநான்போரேன்
உலகமதிலுமக்கு ஒருபெண்கிடையாதோ
அருமைதெரிந்த அபிமன்னராசாவே
பெருமையுமக்குவந்தால் வேண்டியென்னஒன்றுமில்லை

நம்பியிருந்தவளை நட்டாற்றில்த்தள்ளாமல்
தெம்புடனேவந்து சேர்வீர்திடமாக
மணமுடிக்குமுன்னமிங்கு வந்துநீர்சேராட்டால்
பிணமெடுக்கும்வேளையிலே பின்வந்துநிற்பீர்காண்
அப்படிக்கில்லாமல் அடியாள்மேலன்புவைத்து
எப்படியுங்கல்யாணம் யென்னைநீர்செய்யுமென்றே
ஈசரரியஇமையவருந் தானரிய
வாசமுள்ளமாயன் மலர்ப்பாதந்தானரிய
பாரிலந்தபஞ்சவர்கள் பாஞ்சாலிதானரிய
நீருமரிய நிசமானசொல்லிதுகாண்
சித்தத்துக்கேத்தபடி செய்வீரொன்பாக்கியந்தான்
உத்தமரேகாருமென ஓலைதனில்வக்கணையாய்
விண்ணப்பஞ்செய்து விரசாகவேயெழுதி
வண்ணச்சுருளை வலமாகவேசுருட்டி
முத்திரையும்வைத்து சிறுமோதிரத்தினால்அழுத்தி
சுத்துமுற்றும்பார்த்து சுந்தரியாள்அப்போது
ஆரிடத்திலேகுடுத்து அனுப்புவோமென்றுசொல்லி
காரிகையாள்சுந்தரியுங் கலங்கிப்பரதவித்து
வாயுபகவானை மனதில்நினைந்திடவே

## வாய்வுபகவானிடம் சுந்தரி ஓலையனுப்புதல்

தாயிரங்கிக்கன்றைத் தான்தேடிவாரதுபோல்
யெந்தனுடபேரரசே யெங்கள்குலமணியே
உந்தன்மனதுக்குகந்தபடி யான்கேட்பேன்
பாருமென்றுவாயு பகவானுமோடிவந்தார்
வாருமெனது மாமனார் தந்தையரே
நடந்தவயணமெல்லாம் நன்றாய்த்தெரிந்திருப்பீர்
உடந்தையெனவிருந்த உத்தமதாருவாள்விம
மன்னவர்க்குச்செய்தி வகைவிபரமாய்த்தெரிய
சொன்னபடியெல்லாம்நீர் சொல்லியிந்தஓலைதனை
குடுத்துஅவரையிங்கு கூட்டிவந்தீராமாகில்
எடுத்துநிருத்தஉமக் கென்றாலேபென்னமுண்டு
வேலையொத்தகண்ணாள் மிகவணங்கிச்சொன்னவுடன்

ஓலைதனைத்தாரும் ஒருநாளிகைதனிலே
தெரியப்படுத்துகிறேன் செல்வனையுங்கூட்டிவந்து
வரிசையாய்நானுமிப்போ மணமுடித்துவைப்பேனென்று
வாங்கினான்ஓலைதனை வாயுபகவானும்
தாங்கிநடவாமல்த் தாண்டியேதானடந்தான்
நடந்தான்மலைகளையும் நல்லவனுந்திரமும்
கடந்தான்வெகுதூரம் கங்கைநதியுந்தாண்டி
திசைநோக்கிச்சென்றான் செல்விபுடஓலைகொண்டு

## வாள்வீமன் வேட்டையாடுதல்

விசையன்மகனப்போது வேட்டைதானாடவென்று
வீரமுள்ளசேனைதளம் வெள்ளமெனவேநடக்க
தீரருடன்வந்து சிங்கங்கரடிபுலி
வேங்கைகரிமான்முதலாய் வெட்டிவரும்போது
ஆங்காரமாக அங்கொருமான்தானோட
மானோடப்பின்தொடர்ந்த மன்னவ்ரெகுராமனைப்போல்
தானோடினான்பரிமேல் தன்சேனைநின்றதுவே
வெகுதூரஞ்செல்லுகையில் வேந்தனந்தமான்மீதில்
வெகுகோபமாக விட்டானொருபகழி
பட்டுவிழுந்ததுகாண் பார்மீதுமானதுவும்
கட்டுக்கடங்காக்கடும் பரியைவிட்டிறங்கி
தாகம்பெரிதாகிச் சங்கரனேதஞ்சமென்று
வாகனெனும்வாள்வீமன் வந்துமரத்தடியில்
வீற்றிருக்கும்போது வேகமாய்த்தானும்வந்த
காத்ததுவும்பார்த்துக் கருத்தில்நினைந்திடுங்காண்
இவ்வேளைதன்னில் யிச்சேதிநாமுரைத்தால்
செவ்வையாய்வாளால்ச் சிரசைத்துணித்திடுவான்
யென்னசெய்வோம்நாமினிமே லேனிந்தஓலைதனை
அன்னநடைச்சுந்தரிப்பெண் ணவளிடத்திற்வாங்கிவந்தோம்
ஓடவுமொட்டானெனவே உள்ளம்மிகப்பதறி
வாடியேகாத்து வரும்விதிநில்லாதெனவே
தன்மனதுதேறித் தருகாமலேயோடி
தென்னன்மடியில்ப்போட்டுச் சீக்கிரத்தில்காத்ததுவும்

ஓலையெடுக்குமுன்னே யுற்றவளிநாற்காதம்
பாலைவனத்தில்ப் பதரியேசென்றதுவே

## வாள்வீமன் ஓலையைப்பார்த்து யோசித்தல்

அப்போதுவாள்வீமன் ஆரோலையோவெனவே
செப்பமுடனெடுத்து சிந்தைதனிலேதான்
அய்யமார்தானும் அனுப்பிவித்தஓலையோதான்
ஒய்யாரமாக வுருண்டுவரக்காரியமேன்
ஆரலியம்போன ஐவர்வரவிட்டாரோ
மரபைக்கெடுத்துயிந்த மானிலமெல்லாமாளும்
அரவக்கொடியோ னனுப்பிவிட்டவோலையிதோ
தாயகமாயைவரையுந் தான்கார்க்கவந்தருளும்
மாயன்மகிழ்வாய் வரவிட்டவோலையிதோ
எனக்குப்பொருத்தமிட்ட யென்பிராணநாயகியாள்
தனக்குமனச்சலிப்பாய்த் தானெழுதும்வோலையிதோ
ஆரோலையென்று அரியவேமுத்திரையைத்
தாராளமாகத் தான்பார்த்தான்வாள்வீமன்
சுந்தரியாள்கையெழுத்துஞ் சுண்டுவிரல்மோதிரத்தால்
அந்தமுள்ளமுத்திரைபோட் டனுப்பிவிருப்பதையும்
கண்டான்மனது கனபிரியமாய்மகிழ்ந்து
கொண்டாடிவேந்தன் குணமாச்சுருளெடுத்து
வாசித்துப்பார்த்தான் வகைவிபரமாயோலை
வாசகத்தைக்கண்டுமன்னன் மதியாதெல்லாமதித்து
கோபாக்கினியாகி குருடன்மக்கள்நூற்றுவரை
ஆபாசமாக்கி யளித்துவிடவேணுமென்று
இருக்குந்தருவாயி லிவனுடையசேனைதளம்
அரசனடிபற்றி அவர்கள்வந்துசேர்ந்திடவும்
சேகரமாகச் சென்றான்விசையபுரம்
ஜெகராசர்போற்றத் தீரன்மனையில்வந்து
தாகந்தெளிந்து தார்புனையும்வாள்வீமன்
நாகமதில்ப்பள்ளிகொள்ளும் நாரணனார்தங்கையரை
வந்துபணிந்தோலைதனை மாதாவிடங்கொடுத்தான்
சுந்தரமாது சுமித்திரையாளேதுசொல்வாள்
வடித்தசெழுந்தேனே மகனேயிவ்வோலைதனை

படிக்கெனக்குச்சொல்லுமப்பா பாலகனேயென்றுரைத்தாள்
தயிரியமாய்ச்சொன்னதொரு தாயார்செவிகேள்க்க
வயணமாய்ப்பார்த்து வாசித்தானேலைதனை

## சுபத்திரை ஓலையினுடைய சமாச்சாரந் தெரிந்து மாயவனை தூசித்தல்

வாசித்தவோலையுள்ள வக்கணையெல்லாங்கேட்டு
தூசித்தாள்மாயனையுஞ் சுமித்திரையாளம்மானை
கூடப்பிறந்துயெனைக் கொல்லவந்தகூற்றுவனே
மாடுகன்றுமேய்த்த மதுயிதுவோமாயனுக்கு
வணங்காமுடியோனும் மச்சினனுமானானே
பணங்காசுவாங்கினதால் பஞ்சந்தெளிந்திடுமோ
தூரத்திருப்பவரைச் சொல்லுவதுஞாயமல்ல
சீருத்தலெட்சிமியைச் சென்றுகண்டுநான்வாரேன்
பேதலிக்கவேண்டாமென் பிள்ளாய்மலைபாதே
ஆதரித்ததெய்வம்நம்மை யகலாதேயென்மகனே
ஐவர்வனம்போனரென் றழுகாதேயென்மகனே
தெய்வப்பிலன்நமக்குத் திரமாயிருப்பதினால்
மங்கையெனும்சுந்தரியை மாலையிடுவாய்மகனே
பங்கமில்லையென்று பயணமெனவுரைத்தாள்
உரைத்திட்டதாயாரை உடனேநமஸ்கரித்து
கரைத்திட்டான்கண்ணீரைக் கட்டழகன்வாள்வீமன்

## அபிமன்னன் தாயாருக்கு ஞாயஞ் சொல்லுதல்

தவத்தாலெனையீன்ற தாயாரேநீர்போனால்
பவத்தால்வினைநினைத்த பாவிஅரவக்கொடியோன்
வந்திருந்தானகிலவன் மைத்துனனுமென்றியெண்ணி
இந்தமொழியவனோ டெவ்வளவுஞ்சொல்லாதே
விடுதிதனில்ச்செல்லாதே வீம்புவுரையாதே
கெடுதியவனோடொருசொல் கெஞ்சியுரையாதே
வண்ணப்பசுமேய்க்கும் மாயனையுங்கண்டாலும்
அண்ணனென்றுயெண்ணி யருமையாய்ப்பேசாதே

பச்சைநெடுமாலுக்குப் பாரியெனும்லெட்சுமியை
மச்சினியாளென்று மகிழ்ந்துறவுசெய்யாதே
கன்னன்சகுனி தனைக் கண்ணாலும்பாராதே
பின்னுமொருவரிடம் பேசாதேயென்தாயே
விதுர்னன்விகர்னனையு மிருதயவாய்ப்பேசிடுவீர்
சதுர்பெருகுந்துரோணர் தமக்கும்பிதாமகர்க்கும்
சிறுவனுமதுபிள்ளை தெண்டனிட்டானென்றுசொல்லும்
பருவமிருமாது பத்தினியாள்சுந்தரியை
தனித்திருத்திப்பேசிமிகச் சந்தோசவார்த்தைசொல்லும்
மனத்துயரமில்லாமல் மங்களமாய்வார்த்தைசொல்லும்
பெருமாளுடன்மற்றப் பேர்கள்வணுச்செய்தாலும்
வருவானபீமனுனை மாலையிடவென்றுசொல்லும்
இத்தனையுஞ்சொல்லுமந்த யேந்திழையாளேக்கமுற்றால்
சத்தியமாய்ச்சொல்லியிங்கே தான்வாரும்மாதாவே
இந்தவசன மெடுத்துரைத்தான்வாள்வீமன்
அந்தவுரைக்கெல்லாம் ஆமென்றுசம்மதித்து

## சுபத்திரை துவ்ராரகைக்குச் செல்லுதல்

தண்டிகைபிலேறித் தாதியர்கள்சூழ்ந்துவர
கண்டுஅபீமன் கழல்தொழுதுநின்றபின்பு
சுருக்காய்வழிநடந்தாள் சுபத்திரையாளம்மானை
பெருக்கானஆருகளும் பெரியமலைப்பூங்காவும்
கானகமுந்தான்கடந்து கண்டாள்துவாரகையை
மானகராமென்று வந்தாள்நகர்தனிலே
வீதிகடந்து விஸ்தாரமானதொரு
ஆதியரண்மனையை அவள்நோக்கிப்போகையிலே
தோகையெனுஞ்சுந்தரியாள் துதியவளோடிவந்து
பாகுமொழியாள்தன் பாதம்பணிந்துகொண்டு
பெண்ணுக்குப்பெண்ணழகி பெருமாளுடமகளாம்
வண்ணக்கிளிமொழியாள் வாழுமரண்மனைக்கு
வாருமென்றுசொல்லி வழிகூட்டித்தானடந்தாள்
சீருயரும்வீதிச் சிங்காரமும்பார்த்து

அங்கங்கரண்மனையி லலங்காரமும்பார்த்து
மங்களமாமென்று மங்கையருமாடவரும்
சந்தோசம்பேசுவதும் சற்பக்கொடியோன்முதலோர்
வந்திருக்கவிடுதி வளமாயமைப்பதையும்
பார்த்தாள்மனதில் பஞ்சவரைத்தானினைந்தாள்
வேர்த்தாள்தன்மேனி விசனமுற்றாள்மூச்செரிந்தாள்
பஞ்சவரைத்தான்வெருத்துப் பாரளந்தமாயவரும்
கொஞ்சப்பயலரவக் கொடியோனுடனுரவாய்
இத்தனையுஞ்செய்யுகிரா ரென்பெருமாளென்றுயெண்ணி
மெத்தவிசனமதால் வெகுண்டுமனதுள்ளடக்கி
போனாள்பெருமாள்புதல்வி யரண்மனைக்கு
தானும்சுபத்திரையாள் தண்டிகைவிட்டேயிரங்கி
வருவதறிந்து மாதுநல்லாள்சுந்தரியும்
துருசாயெழுந்துத் துயரமெல்லாந்தான்போக்கி
பூரித்துடம்பு புழகிதமாய்த்தான்மகிழ்ந்து
வாரிச்சுருட்டி மகிழ்ந்துமிகஓடிவந்து

## சுந்தரிமாமியாளிடம் தன்னுடைய வருத்தமெல்லாந் தெரிவித்தல்

மாமியார்பாதம் மலர்தூவித்தெண்டனிட்டாள்
தாமிசமில்லாமலெனைத் தற்க்கார்க்கவந்தருளும்
என்கொளுநன்மாதாவே யெனக்கிசைந்தமாமியரே
உன்னிருபொற்பாதமல ருயர்தலைமேல்க்கொண்டேனென்
வருத்தந்தவிர்க்கவந்த மாமியரேநீர்கேளும்
பொருத்தமிலாலெக்கணர்க்குப் பொருந்தவென்றுயெல்லோரும்
மாயன்சகுனிகர்னன் வணங்காமுடிவேந்தன்
ஞாயநெறிதவரி நடத்தவென்றுசம்மதமாய்
எல்லோருங்கூடி யிலக்கணர்க்குமாலையிட
நல்லமுகூர்த்தமிட்ட நடுக்கேடுயென்னசொல்வேன்
ஆசையாயும்முடனே அடியாளுடதாயும்
பேசியிருந்தசொல்லைப் பேதலிக்கவிட்டாரே
ஐவரிரந்தாரென் ரரவக்கொடியோனும்
கைவதுவாய்லெக்கணர்க்குக் கலியாணந்தான்முடிக்க

பச்சைமால்தன்னையுமே பணத்தாலுரவுபண்ணி
நிச்சயமாய்த்தான்முகூர்த்தம் நேமித்திருக்கிறார்
தந்திரமாயிவ்வசனந் தாதிசொல்லநான்கேட்டு
உந்தன்மகன்றனக்கு ஓலையெழுதிவிட்டேன்
ஓலைவயணமெல்ல முமக்கேதெரிந்திருக்கும்
மாலைபிட்டாலுன்சேய்க்கி மாலைபிடுமில்லாட்டால்
மாய்க்குகிறேனென்னுயிரை மாண்டபின்புயெந்தனுக்கு
தீய்க்கடனும்நீர்க்கடனுஞ் செய்துமுடித்துவிடும்
ஆசைமருமகட்கு அவ்வளவுவேண்டாமோ
தேசமதிலில்லாத் தீவினைகள்செய்தாலும்
சற்றேயழுது தலைமுழுகவேண்டாமோ
அத்தையேயென்று அழுதாளேசுந்தரியும்

சுபத்திரை சுந்தரிக்கு புத்தி கூறுதல்

பழுதுவராதென்னுடையப் பந்தானச்செல்வியரே
அழுதுபுலம்பாதே ஐவர்மருமகளே
மானேநீசாவதல்லால் மற்றவர்கள்சாகாரோ
தேனேபுலகமெல்லாஞ் செத்துப்பிழைப்பதல்லால்
இருப்பாரொருவரில்லை யெத்தனைநாள்சென்றாலும்
கருப்பாய்ந்தவேளையல்லால் கற்பனைவேருண்டாமோ
சின்னம்வராமலெந்தன் செல்வனுக்கேஉந்தனைநான்
அன்னமேமாலைபிட்டு அழகாகவேதானும்
கண்ணாலேபார்க்கயெந்தன் கருத்திலிருக்குதம்மா
பெண்ணரசேநீயொன்றும் பேசாதேயென்மகனும்
உனக்குறுதியானதொரு உண்மைதனைச்சொல்லுமென்று
எனக்குவளியனுப்பி யிங்குவரவிட்டான்காண்
பாலகனையுண்ட பரமசிவன்றுணரிய
மாலையிடவருவான் வாள்வீமனென்றுசொல்லி
மாமிசுபத்திரையும் மருமகளுக்கேயுரைத்து
தாமிதமில்லாமல்த் தான்வருவானென்றுசொல்லி
நடந்தாள்சுபத்திரையும் நமஸ்கரித்தாள்சுந்தரியும்
கடந்தேவரும்போது கண்டாளேலெட்சிமியும்
வந்தீரோவந்தீரோ மதினியரேயென்றுரைத்தாள்
சந்தோசம்சந்தோசந் தான்வந்தேனென்றுசொன்னாள்

## லெட்சுமி சுபத்திரையைப்பார்த்துச் சொல்லுதல்

விட்டுக்குவந்து விருந்துண்டுபோகாமல்
காட்டுக்குள்ளே திரியுங் கள்ளரைப்போல்போவதென்ன
வந்தவர்கள் தன்னை வாருமென்றுசொல்லலையோ
சுந்தரியாள்மாத்திரமுஞ் சொந்தமோஉங்களுக்கு
வரிசைவரவிட்டதையும் மறந்துவிட்டுப்போனேமோ
பரிசமனுப்பினதைப் பாராமல்ப்போனோமா
கூரும்பரிசம் கொடுத்துவரவிட்டீரோ
ஆருமறியாம லபகேடுசெய்தோமோ
மாதமொருவிசைதான் வந்துபெண்ணைக்கேட்டீரோ
காதவழிநடந்து காலோய்ந்துபோனீரோ
அதிகமாயுங்களுட அண்ணரரண்மனைக்கு
பொதிபொதியாய்நீங்கள் பிடித்துவரவிட்டீரோ
அண்ணனுடதேவிக் களந்தளந்துவிட்டீரோ
பெண்ணைக்கொடுப்பமென்று பிரட்டுருட்டுத்தான்பேசி
தின்றுகெடுத்தோமா சீரளித்துப்போட்டோமா
நன்றிமறந்தோமா நாத்தியரேகேளுமினி
மாயவரும்நானுமுங்கள் வாசல்வரும்வேளையெல்லாம்
ஆயிரம்நூறு யழிந்துதோவுங்களுக்கு
உற்றவர்போல்நீங்க ளூரவாயிருந்ததல்லால்
வெற்றிலைமேல்ச்சுண்ணும்பு வேண்டியறியோமே
வருவோர்திருநாளில் வந்தாலுன்வீடுதனில்
ஒருநாள்தரித்திருந்து உண்டோமோஉன்வீட்டில்
தெரிசனைகள்பார்க்கவுந்தான் சிற்றூரில்வந்தாலும்
அரிசிகொண்டுவந்து ஞக்கியுண்டதல்லாது
பின்னேதுமுண்டோவுன் பெருமையெனவேதான்
முன்னாகநின்று மொழிந்தாளேலெட்சுமியும்
தாமோதரன்றேவி தானுரைத்தசெய்தியெல்லாம்
சோமோதயமுகத்தாள் சுபத்திரையுந்தான்கேட்டு
மட்டற்றகோபமெல்லாம் மனதில்மிகவுண்டாகி
வெட்டச்சினந்தவர்போல் வேகித்துக்கண்சிவந்து
தீராதகோபமெல்லாஞ் சிந்தைதனிலுண்டாகி

காரார்குழலாள் கனிவைமனதுள்ளடக்கி
துணிந்துவெறுப்பாயுரைத்த தோகையரைத்தான்பார்த்து
தனிந்துசுபத்திரையும் தானேதுரைக்கலுற்றாள்

## சுபத்திரை லேட்சுமியைப்பார்த்து சொல்லுதல்

அன்பானபெண்ணரசே அண்ணனுக்குவாளவந்த
தென்பானபெண்ணே சிவந்தெழுந்தமேனியரே
கரும்பேகனியேசெங் கமலமுகத்தாளே
அரும்பாதகங்கள்செய்தீ ராளுலுமுன்னாளில்
விரும்பியிருபேரும் விட்டுப்பிரியாமல்
இருந்தோமிருவர்களு மெண்ணினதும்பேசினதும்
மரந்தோவுரைக்குகிரீர் வார்த்தைதனைக்கேட்டருளும்
அரந்தான்பெரிதெனவே ஆரணங்கேநீர்நினையும்
தனக்குருமையெண்ணித் தானிருந்துவாளுகையில்
மனதில்க்கிலேசமதாய் மலடிருந்தோமன்னாளில்
பிள்ளைபிறக்கவென்று பேருலகில்நாமிருவர்
வெள்ளிக்கிழமை விரதமிகவிருந்து
புத்திரனும்வேணுமென்று பொருந்தியிருக்கையிலே
மெத்தமனமகிழ்ந்து விரதமிருக்கையிலே
சந்திரனைமாமுடியில் தரித்தசிவன்றன்செயலால்
சந்தோசமாயிருவர் தண்ணீரெடுக்கவென்று
வந்தோம்நதிக்கரையில் மதினியரேநாமிருவர்
அந்தநதியிற்குளித்து ஆனந்தமேபெருக
தீர்த்தங்களாடிச் சிவனைமிகப்பணிந்து
வார்த்தைசொல்லிக்கொண்டதொரு வயணமறிவீரே
தற்பரமாய்நின்றசிவ சங்கரனார்தன்னருளால்
கெற்பநமக்குண்டாச்சு கிலேசமகன்றதினால்
என்வயிற்றிலாண்குழந்தை யென்றுபிறந்தாலும்
உன்வயத்தில்பெண்குழந்தை யுடனேபிறந்தாலும்
வாகாயிருவருக்கும் மாலையிட்டுப்பார்ப்பமென்று
ஆகர்சம்பூமிகங்கை யரியவேசாட்சிவைத்து
வந்தோமேநாமிருவர் வாகாய்ச்செலமெடுக்க
பந்தானமானதொரு பாக்கியமேவீடுதனில்

இருக்கும்பொழுதில்முன்னு ளியம்பினதும்பொய்யாமல்
பெருக்கமாய்நாமிருவர் பிள்ளைகளைப்பெற்றெடுத்தோம்
பெற்றீர்கான்லெட்சுமியே பெண்குழந்தைநீர்தாமும்
உற்றஆண்பிள்ளையைநான் உமக்குமுன்னேபெற்றெடுத்தேன்
அருமையுடன்பெற்றபிள்ளைக்-கபிமன்னென்றுபேருமிட்டேன்
பெருமையாய்நீபெற்ற பிள்ளைபெயர்சுந்தரியும்
பேரிட்டபீமன் பெண்ஜாதியாகுமென்று
நீரிட்டுலகறிய நிலக்காப்புத்தானுமிட்டு
தருமர்சகோதரனார் தம்பிமகன்தேவியென்று
திருமஞ்சனமாட்டிச் சிறந்தஅணியாடையிட்டோம்
ஊருமறியாதோ உலகமறியாதோ
ஆருமறியாரோசொல் லாயனறியாரோ
உத்தாருரமுன்றியா ருட்டனேயறியாரோ
சத்தாகிலுமறிவு தானில்லையோலட்சுமியே
காயாதபாலையுண்ட கார்வண்ணர்மச்சினர்க்கு
தாயாதிக்காரனைப்போல் சற்பனைகள்செய்தாரோ
விதியாலுமைவர் வெளியேறினார்வனத்தில்
அதினாலுனைப்பிரிந்து அகன்றுவிட்டேன்பெண்ணரசே

## சுபத்திரை தன் வறுமைகளை சொல்லுதல்

நாடுவிட்டுபஞ்சவர்கள் நற்கானகம்போனார்
கூடுவிட்டுப்போன குளவிதனைப்போலானேன்
வாதுரைக்கமாட்டாமல் மன்னரைவர்போனபின்பு
ஆதரிக்கயிங்கொரு ஆதாரமில்லாமல்
போனேனடியாள் பிள்ளைதனையிடுக்கி
தானேவிசையபுரம் தன்னிலேசென்றனுகி
இருந்தேனுடல்மெலிந்தே னில்லிடமுமில்லாமல்
விருந்தாடியுண்டறியேன் வேட்டகத்தில்போயறியேன்
பேராகனீன்ற பிள்ளைக்குமெந்தனுக்கும்
ஆராகிலுமொருவ ரனுப்பிவிடநான்காணேன்
தேடக்கிடையாத செல்வனுக்குமெந்தனுக்கும்
கூடப்பிறந்தஅண்ணன் கொடுத்தனுப்பநான்காணேன்
போதாதகாலம்வந்து போனவருக்காதரவாய்

ஏதாகிலும்நீ யெடுத்தனுப்பனான்காணேன்
தவசியாய்ப்போனவர்க்குத் தானுதவிசெய்யாட்டால்
பவுசுமேலாய்சலிப்புப் பண்ணுவரோலட்சுமியே
எங்களுக்குக்காலம்வந்து இரந்துகுடிக்கையிலே
உங்களுக்குநாங்க ளுதவிசெய்வதெப்படிகாண்
வளியாய்மகிமைய தாய் வாழ்ந்திருக்கும்நல்லோர்கள்
எளியோர்தனையு மெதிரிட்டுப்பேசுவரோ
கூலிக்கரிசிநெல்லு குத்தியுண்ணுமேளே தனை
கேலிக்கோபேசுகிறாய்க் கிருபையுள்ளலெட்சுமியே
சிரக்கமுடிசூட்டியிந்தத் தேசமெல்லாம்ஆண்டதொரு
அரக்கனுடவாழ்வு மலைந்துகெட்டுப்போகலையோ
உக்கிரமாயிந்த உலகமெல்லாந் தானறிய
தக்கனுடதவசு தலைகுலைந்துபோகலையோ
பேரானஅண்டமெல்லாம் பிரபலமாயாண்டிருந்த
சூராதிசூரனுமே துலைந்திருண்டுபோகலையோ
வண்ணமுள்ளபூமியிந்த மண்டலத்தையாண்டவர்கள்
எண்ணமுடியாது யெத்தனையோ ஞனரியேன்
நளனென்றொருவனிந்த ராட்சியத்தையாளையிலே
இளமைதனில்ச்சனிய னிவனைத்துயர்ந்ததினால்
பெண்பிள்ளைசெங்கோல் பெருமைதனைத்தானிழந்து
வண்டுறையுங்கானகத்தில் வருந்திவெகுகாலம்
அலைந்தான்மெலிந்தா னருமைதனைக்குலைந்தான்
ஜெலந்தான்கிடையாமல்த் தேகமெல்லாந்தாலுலர்ந்தான்
துருசுபண்ணித்தான்பிடித்த துயர்சனியன்தன்னாலே
வருஷம்பதினாலும் வனவாசமேதிரிந்தான்
அப்போசனிய னவனைவிட்டுத்தான்விலக
எப்போதும்போலே யிருந்தான்முடிசூட்டி
விளைப்பயனையாராலும் வெல்லமுடியாது
நினைப்பவராார்சொல்லுமிந்த நீநிலத்திலுள்ளவர்கள்
வாள்வுசிலகால்ம் மாநிலத்திலுள்ளவற்குத்
தாள்வுசிலகாலந் தான்வருங்காண்லெட்சுமியே
தள்ளுமிழமைசெல்வஞ் சரீரம்நிசமில்லையென்று
வள்ளுவனார்சொன்ன வயணமறியீரோ

ஆனாலுமிந்த அனியாயவாள்வைநம்பி
ஏனோமதிமயக்க மீசனுட்கட்டளைகாண்
ஆக்கைப்பொடிப்பொடியா யானாலுநல்லோர்கள்
வாக்குரெண்டுபேசவுந்தான் மாட்டார்கள்வையகத்தில்
வெரிச்சந்தனமணியு மின்னேமுன்னாள்தனிலே
அரிச்சந்திரனென்றொருவ னுண்டான்புவியடங்கும்
நீதியுடையமன்ன நிசத்தையரியவென்று
சோதினைக்கிவந்தாராஞ் சொற்பெரியராஜரிசி
அரசனிடமாகவந்து ஆனகவுசிகனும்
திரவியமுஞ்செங்கோலுந் தெத்தமெனவேவாங்கி
காவலவன்தன்மேல்க் கடலைமிகவுண்டுபண்ணி
தேவதைகள்செய்யுகின்ற சீரளிவுக்குள்ளாகி
பொய்யுரைக்கமாட்டாமல்ப் புலையனுக்குமாளாகி
தையலையும்பிள்ளையையுந் தானேவிலைப்படுத்தி
கடனானசெம்பொன் கவுசியர்க்குமேயீய்ந்து
நெடுநாளிருக்கவுந்தா னினைத்திருந்தான்சத்தியத்தை
வாக்குரெண்டுபேசாத மன்னவனைத்தான்மகிழ்ந்து
பாக்கியமுஞ்செங்கோலும் பருதிமதியுள்ளளவும்
வைத்தார்முடிசூட்டி வானவருமீஸ்பரரும்
பெற்றானவன்கீர்த்தி பெருமையிதுலெட்சுமியே
நீதானுரைத்தமொழி நீதிதப்பிப்போகாமல்
வாதானநூற்றுவர்கள் வஞ்சகத்தைக்கேளாமல்
நன்மைநிசமென்றுயெண்ணி நாயகமேஉன்மகளை
என்மகன்வாள்விமனுக்கு யிப்போதேகல்யாணம்
செய்துமுடிப்பாயுன் சித்தமகிழ்ந்திடவே
கைதவரவிட்டால்க் காசினியோர்தான்சிரிப்பார்
துலக்கமாயிவ்வசனஞ் சொன்னாள்சுபத்திரையும்
இலக்கணமெல்லாமிந்த லெட்சுமியுந்தான்கேட்டு
வார்த்தைபடிக்கவந்த மதினியாரேநீர்கேளும்
நூற்றுவரைப்பார்க்கவுந்தான் நன்மையோஉங்கள்குலம்
அந்தநாள்ப்பேசினதுக் கபராதமுண்டானால்
இந்தநாள்வாங்கவென யிங்கெளுந்துவந்தீரோ
வீட்டுக்குவிடு வேலைசெய்யுமுந்தனக்கு

நாட்டுப்பெண்ணாளவென்று நன்றாய்நினைத்தாயே
மருமகளை வைத்து வரிசையுடன்வாழவென்று
உருமையுடன்பெண்கேட்க வோடிவந்தாயிப்போது

## லெட்சுமியும் சுபத்திரையும் சண்டையிடுதல்

பிளைக்கமதியற்றவளே போடிசுபத்திரையே
அளைக்கவில்லையுன்னையுந்தா னளப்புமிகக்கேட்கவில்லை
புலையனுக்குஆசனந்தான் பொருக்குமோபோடியென்றாள்
தலைவாசலைக்கடக்கத் தானேவிரட்டுமென்றாள்
வார்த்தையிஞ்சிச்சொன்ன மாயனுடதேவியரைப்
பார்த்தனுடதேவியரும் பதரிமனங்கலங்கி
அமையாதகோபமெனக் காக்கிவைத்தீரிப்போது
தமையனுடதேவியென்று தானேயிதுவரையும்
பொருத்தேனினிமேல்ப் பொருக்கவெவரால்முடியும்
பெருத்தாலுதிமரங்கள் பிலமிருந்ததுண்டோ
என்றேயதட்டி யெதிர்வரவும்லெட்சுமிதான்
அன்றேமயிர்பிடித்து யடித்தாள்சுபத்திரையை
அடித்தபொழுதே யவளுமிவள்சிகையை
பிடித்தாளிருபேரும் பிரண்டுருண்டுகீள்விழுந்தார்
விழுந்ததொருமாமிதனை மெல்லிநல்லாள்சுந்தரியும்
அளுந்தாதவளையெடுத் தச்சணமேதாயார்தன்
முதுகுதனிலேற்றி முகத்திலரைந்தாள்முனிந்து
இதுபுதுமையென்று யெல்லோருந்தான்சிரித்தார்
மைசேர்க்குங்கன்னி வடிவழகிலெட்சுமியை
கைதூக்கிவிட்டாள் காண்டீபன்தேவியரும்
காண்டீபன்தேவிதனைக் கண்ணாலும்பாராமல்
தாண்டியரண்மனைக்குள் தான்போனாள்லெட்சுமியும்
மானம்பதுகுடுத்த மருமகளேசுந்தரியே
நானுமிதோபோய்வாறேன் நாளைத்திரும்புகிறேன்
இருமென்றனுப்பி யெழுந்தேசுபத்திரையும்
அருவியெனக்கண்ணீர்விட் டவள்சபதம்சொல்வாளே

## சுபத்திரை சபதங்கூறுதல்

### விருத்தம்

நந்தகோபாலன்றேவி நம்மையும்பளித்ததாலே
தந்திரமாகவென்சேய் தனக்கெந்தவிதத்தினாலும்

சுந்தரி தன்னைமாலே சூட்டிடவல்லேனாகில்
விந்தைசேர்லெட்சுமிக்கு விலைப்படுமாளாவேனே.

அம்மானை.

சுந்தரியைத்தானனுப்பி சுபத்திரையுமப்போது
நந்தகோபாலனெனும் நாராயணன்றேவி
என்னைப்பளித்தவளு மேசின தால்நாடரிய
மன்னவரெல்லாமகிழ மைந்தனுக்குசுந்தரியை
மாலைதரிப்பேன் மணவரையின்பந்தலிலே
தாலமதிற்துரியோன் தன்படைகள்வந்தாலும்
வெல்வானெனதுமகன் விளம்பியசொல்பொய்யாது
அல்லவென்றால்லெட்சுமிக்கு யாளடிமையாவேனன்
என்றுமிகுகோபமுட னியம்பிச்சுபத்திரையும்
கன்றிமிகவாடிக் கலங்கினாள்லெட்சுமியும்
பார்த்துநின்றபேர்களெல்லாம் பார்த்திபன்றேவியரை
வார்த்தைநயஞ்சொல்லி வணங்கினார்சுந்தரியும்
ஓடிவந்துதான்வணங்கி உத்தமியேநின்சபதம்
பாடினாற்பொய்த்திடுமோ பார்த்தவர்க்குத்தோனுதோ
ஏதுக்குக்கோப மினிமேல்நடக்கும்வகை
சாதுரியமாகத் தானடத்துமென்றுசொன்ன
சுந்தரியைத்தானனுப்பிச் சுபத்திரையுமப்போது
விந்தையாய்ச்சொல்லி விரைந்தெழுந்தாளம்மானை

விருத்தம்

அன்றுவாள்விசையன்றேவி அப்பவேசபதங்கூற
நின்றிட்டதிருமால்தேவி நிமிஷத்திலோடிவந்து
இன்றுயான்செய்தகோபம் யாவையும்பொருப்பாயென்ன
என்றவள்காதில்கேட்டு ஏகியேநடந்திட்டாளே

இதுவுமது

கோபமடங்கிவளிநடந்து குவடுநதிகள்காணாத
தாபமிகுந்தமனத்தோர்கள் தண்ணீர்தடுந்தண்மையதாய்
ரூபமிகுந்தஅபிமாவென் னுயிரேமகனேயெனத்தேடி
சோபமடங்கும்படியாய்வந் தொருசொல்மகனைக்கண்டாளே.

## சுபத்திரை தன் விசையநகர் வருதல்

வந்தாள்வழிகூடி வனங்கள்மிகக்கடந்து
செந்தாமரைப்பூத்த செங்கழுநீரோடைகளும்
தேருந்தெருவுஞ் சிங்காரவீதிகளும்
ஆறுங்குளமும் அடவிகளுந்தான்கடந்து
சத்திரமுஞ்சாலைகளும் தாவளமுந்தான்தாண்டி
மெத்தவெளிகடந்து விசையபுரநகரம்
கண்டேநகர்புகுந்தாள் காரிகையாள்மாளிகையில்
தண்டிகைவிட்டேயிரங்கி சலிப்பெல்லாந்தான்மாற்றி
அரண்மனைக்குள்ளேபுகுந்து ஆசனத்தின்மீதிருந்து
திரமானயோசனைகள் சிந்தித்துவீற்றிருந்தாள்
மாதாவெழுந்தருளி வந்தசொல்லைவாள்வீமன்
காதாரக்கேட்டுக் கடுகியேயோடிவந்து
தாயேசரணமென்று தான்பணிந்தான்வாள்வீமன்
சேயேநான்பெற்றெடுத்த செல்வமேயென்றுசொல்லி
கையாலெடுத்தணைத்து கட்டழகாயென்மகனே
அய்யாமணியேயென் னரசேயெனவுரைத்தாள்
அரசென்றெனைபளித்த ஆட்சியரேயென்தாயே
திரமாகப்போனதுவுந் திரும்பியிங்கேவந்ததுவும்
எள்ளளவுநீர்தா னிசகுபிசகில்லாமல்
உள்ளபடியா யுரையுமென்றான்வாழ்வீமன்
மகனுரைத்தசொற்கேட்டு மாதாசுபத்திரையும்
சுகமானசேதியெல்லாஞ் சொன்னாள்படிப்படியாய்

## அபிமன்னன் தாயாருக்குத் திடஞ்சொல்லுதல்

வகைவிபரமானசொல்லை வாள்வீமன்தான்கேட்டு
பகலவனைக்கண்ட பனிபோலநாற்றுவரை
தரையில்விளவடித்து தாமோதரன்மகளை
சிறைபிடித்துநான்வருவேன் சிவனார்கிருபையினால்
விபரமுடனவர்க்கு வெற்றிசொல்லிவந்தபடி
சபதமுடிக்குகிறேன் தாயேசலியாதே
புலிவயத்திலேபிறந்தும் பூனைபோலாகிடுமோ
வலியநமக்குவந்துவாய்த்தது தென்றால்ச்சண்டைதனை

விட்டுவிடுவேனோ மெய்கலங்கிநிற்பேனோ
கட்டுகிறேன்தாலியந்தக் கலியாணவாசலிலே
இவ்வார்த்தையெல்லாமெடுத் துரைத்தான்வாள்வீமன்
அவ்வார்த்தைகேட்டுஅகமகிழ்ந்துதாயாரும்
வீத்திருந்தாள்நன்றாய் விசையனுடதேவியரும்
தோத்திரமுஞ்சொல்லித் துதித்திருந்தான்வாள்வீமன்
இந்தப்படியாக யிவரிங்கிருக்கையிலே
அந்தக்குடிகெடுக்க அருள்கொண்டகோபாலன்

## முகூர்த்தத்திற்கு துவாரகையை அலங்காரஞ் செய்தல்

ஆகமுடன்சோபனத்துக் கலங்காரஞ்செய்யவென்று
தாகமுடன்சொன்னார்காண் தாமோதரப்பெருமாள்
உத்தாரங்கேட்டு யுருதியுள்ளமந்திரிகள்
சுத்தானபட்டணத்தை சோடினைகள்செய்யலுற்றார்
வீதிகள்தோறும்விதமாய்க்குருஞ்சிகட்டி
சோதியின்பமாகத் தோரணங்கள்தான்தூக்கி
மணவரையின்முன்னே மரகதத்தால்க்கால்நிருத்தி
இணையாய்வயிரம் யிசைந்தவளை தான்போட்டு
மாணிக்கத்தாலெங்ஞும் வளமாய்கொடுங்கையிட்டு
ஆணிப்பொன்னாலே அழுத்தினற்பொற்றகட்டை
துய்யதறளமுத்தைத் தூக்கினார்பந்தலிலே
வையகமெல்லாம்பெருங்காண் மணச்சவுக்கைசிங்காரம்
அண்ணாந்துபார்த்து அவரவர்கள்பற்காட்ட
கண்ணாடிகொண்டுவந்து கட்டினார்பந்தலிலே
பதுமைநிரைத்தார்கள் பந்தலிலேவிந்தையதாய்
சதிர்பெருக்கவென்று சமுக்காளந்தான்விரித்தார்
கோலமிட்டார்பட்டணத்தில் குச்சுகளும்மச்சுகளும்
வேலையிட்டபந்தலிலே மேலிட்டார்பொற்சரிகை
வாழைகமுகுகளை மணவரையிலேநிரைத்தார்
தாழைமலர்மல்லிகைப்பூ சரஞ்சரமாய்கட்டிவைத்தார்
ஆனைகுதிரைகளை யலங்காரஞ்செய்துவைத்தார்
சேனைதளங்களையும் திரண்டிருக்கச்செய்துவைத்தார்
முத்தாலேதண்டிகைகள் முஸ்தீபுசெய்துவைத்தார்

சுத்தாலவட்டஞ் சுருட்டிகுடைசெய்துவைத்தார்
பேரிகைடம்மானம் பிசகாமறசேர்த்துவைத்தார்
கூறியதோர்நாகசின்னங் கொம்புதயார்செயதுவைத்தார்
பூசியதோர்மஞ்சள்ப் புளகமதிலேமயங்கத்
தாசிகளை நூறுலெட்சந் தானேவரவழைத்தார்
இன்னம்வெகுவிதமா யிசைத்துமணவரையை
சொன்னார்பெருமாள் சமுகமதில்மந்திரிகள்
மந்திரிகள்செய்ததெல்லாம் மாயவனுந்தான்பார்த்து
இந்திரன்வந்தாலு மிதற்காசைகொள்வான்காண்
கனமானநூற்றுவர்க்குக் கட்டிவைத்தமாளிகைகள்
வனவாசம்போனவர்க்கு வாய்க்குங்காணென்பார்கள்

## கிருஷ்ணபகவான் துரியனுக்கு ஓலை அனுப்புதல்

### விருத்தம்

அரியோன்மனதுகளிகூர்ந்து அளகாய்நாளைக்கலியாணம்
திரியோதனரேவாருமென்று சிறப்பாயோலையனுப்பியபின்
பரிவாயோலைதனையவிள்த்துப் பார்த்தேவணங்காமுடிமன்னன்
குருவாந்துரோணர்தனக்குரைத்துக் கூட்டிவரவுஞ்சொன்னானே

### வேறுசந்தம்

சொன்னபொழுதவ்வுரைகேட்டுத்
துரோணர்தன்னை அழைத்துவரக்
கன்னன்சகுனி அரவயத்தோன்
கண்டேவணங்கித்தெண்டனிட்டு
முன்னேஉமக்குநானுரைத்த
முகூர்த்தமதாக்குநாளையென்தன்
பின்னேமறுசொல்பேசாமல்ப்
பேணிவருவீர்பெரியோரே

### அம்மானை

காளைமுகில்வண்ணனுமே கலியாணஓலைதனில்
நாளைவரவென்று நலமாய்வரைந்தெழுதி
தூதனிடங்கொடுத்து சுறுக்காகஓலைதன்னை

ஆதாவாய்ச்சென்று அரவக்கொடியோனிடத்தில்
வரைந்தசுருள்கொடுத்து மருவசனந்தான்கேட்டு
விரைந்துவரச்சொல்லி விடுத்தார்காண்தூதுவனை
ஓலைதனைவாங்கி யுருதியுள்ளதூதுவனும்
ஆலயமதான அஸ்தினபுரந்தனிலே
வந்துதான்தூதுவனும் வணங்காமுடியோனை
சந்தோசவேளைகண்டு தானரிந்துஓலைகொண்டு
கொடுத்துமருவுசனம் கூறினாரம்மானை
அடுத்துநின்றமந்திரியை அரவக்கொடியோன்பார்த்து
மாயனுடஓலைதனை வாசித்துமன்னவனும்
தாயகமாக சதிர்பெருக்கியேயிருந்து
துரோணர்முகம்பார்த்துச் சொல்லுவான்மன்னவனும்
பிரானெனவேநான் பெற்றயிலக்கணர்க்கு
நாருபணனுடைய நல்லமகள்சுந்தரியை
பேருய்ப்பரிசமிட்டுப் பேசியிருந்ததினால்
நாளைவரவென்று நாரணனார்ஓலைவிட்டார்
வேளைபிதாவென்று விளம்பினனம்மானை
விளம்பினதைக்கேட்டு வேதியனுந்தக்கபடி
அளப்பினிமேல்க்கேள்ப்பதென்ன அரவக்கொடியோனே

## துரோணர் நூரியனுக்கு புத்திகூறுதல்

ஆரணியந்தன்னிலேதான் ஐவரையும்போகவிட்டு
தாரணியையாளுவது தர்மமோமன்னவனே
பேராசைகொண்டு பித்தற்கிருய்கல்யாணம்
ஆராலேகூடுமைபா ஐவரிருக்கையிலே
சுற்றங்கொதிக்கவுந்தான் சோபனங்கள்செய்வாரோ
மற்றவர்கள்தங்கள்மனது தனக்கொவ்விடுமோ
கர்மமுனக்குவரும் கானகத்திலேதிரியும்
தர்மனறிந்தால்த் தலைவெடித்துப்போகாயோ
பாஞ்சாலிதன்னையுநீ பண்ணிவைத்தபாவமெல்லாம்
தான்சாகவேமருந்து தான்குடித்தாய்மன்னவனே
செங்கோலிலாசைவைத்துத் தீண்டியையவர்கேட்டாரோ
பங்காகநாட்டைப் பகுந்துதரச்சொன்னாரோ
புவனமதிலேதும் பொல்லாங்குசெய்தாரோ

அவர்கள்தனித்தனியே யதிகாரஞ்செய்தாரோ
வதுக்கவர்களை நீ யிவ்வேசம்பண்ணிவைத்தாய்
பாதிப்பிரையணியும் பரமனுக்குமேராதே
மிகுந்துபொசித்தாக்கால் மிச்சமென்னபூவுலகில்
பகுந்துபொசித்தாக்கால் பசிபோமேபாளருவாய்
வசிபாகுலத்துடையயோர் மனதுநொந்துவுன்னிடத்தில்
பசித்திருக்கவுண்பதெல்லாம் பாவமல்லோமன்னவனே
இரத்தக்கலப்பாக யிருந்தவரைக்கானகத்தில்
துரத்திவிட்டுஉண்பதெல்லாம் தோசமல்லோமன்னவனே
பசித்தார்பொழுதும்போம் பாலுடனேயன்னமதை
பொசித்தார்பொழுதும்போம் புலனறிவாய்மன்னவனே
சாதகமதாகவுமே தம்பியென்றுமண்ணனென்றும்
பேதகமில்லாமலேநீ பெருமையுடன்வாளாமல்
ஓயாதஆசையுமக் குண்டானதாகையினால்
தாயாதிக்காரனிங்கு தானாகாதென்றுசொல்லி
மூட்டிவினையை முழுதுமேசூதுசெய்து
காட்டில்விரட்டிவிட்டாய் காய்கிழங்குதின்னுமென்று
சத்தியத்தையைவர் தவறிநடவாமல்
பத்திவைத்துப்போனார்கள் பாரவனந்தனிலே
கர்த்தாவேதஞ்சமென்று கானகத்தில் போனவர்மேல்
சற்றுகிலுமுனக்கு தயவுகுணமில்லாமல்
விசையன்மகன்றனக்கு வேண்டிமுன்னாள்சொன்னபெண்ணை
பிசகுபண்ணவேணுமென்று பெருமாளுடன்பேசி
கோனையிலக்கணர்க்கு கொள்ளவென்றாயிப்போது
நாளைப்பயணம் நடவுமென்றாய்மன்னவனே
சாமத்துரோகமுனைத் தான்சூழ்ந்திருப்பதினால்
நேமித்தகல்யாணம் நிறைவேறப்போரதில்லை
பாற்கடலில்ப்பள்ளிகொள்ளும் பச்சைமாலுள்ளமட்டும்
தீர்க்கமுடனைவரையுஞ் செயித்திடவும்போரதில்லை
பேரானஈசன் பிரமன்முதல்வந்தாலும்
ஆராலுங்கூடாது ஐவரையுந்தான்செயிக்க
நெடுமால்தன்பேச்சுகளை நிசமென்றுநம்பாதே
தடுமாறிப்போகுமடா தம்பிதுரியோதனனே

கைச்சுருக்குக்காரன் கனத்ததொருவாள்வீமன்
வைத்திருக்குறான்பெரிய வாள்கொண்டவனெதிர்த்தால்
என்னாலுமுன்னாலு மெவராலுங்கூடாது
சொன்னேனினிமேலுன் துர்ப்புத்திக்கேத்தபடி
என்றுவெகுபுத்தியெடுத் துரைத்தார்துரோணருமே
அன்றுசொன்னதெல்லா மரவக்கொடியோன்கேட்டு

## சூரியன் துரோணரை சினந்துரைத்தல்

நற்குணமாய்நானுமொரு நன்மைசெய்யப்போகையிலே
துற்குறியாய்ப்பேச்சுகளைச் சொல்வரோஆசாரி
சேவுகமோநீரெனக்குத் தெண்டிக்கக்கர்த்தாவோ
ஏவுகின்றகாரியத்துக் கெழுந்திருக்கவேணுமல்லால்
ஆலோசனைகள்சொல்ல அதிகாரந்தந்தோமோ
மேலானபுத்திகளை வேண்டியுரையாதென்
சொற்கேட்டுநீர்நடவுந் துரோணரேயில்லாட்டால்
பற்காட்டநீர்நடவும் பஞ்சவர்கள்தன்னிடத்தில்
உண்டமதமோகா னுமக்குமொருயோசினையோ
பண்டுதானும்முடைய பாச்சல்பரிச்சமெல்லாம்
இனிமேல்பலியாது யெழுந்திரியுமென்றேதான்
அனியாயஞ்செய்யுமரவக் கொடியோனுரைத்தான்
உரைத்தமொழிசெவியி லூடுருவியாசாரி
துரைத்தனத்துக்காகாத் துன்மார்க்கனென்றுசொல்லி
நன்மைபெரிதெனவே நடந்தார்துரோணருமே
தின்மைநினைந்த திரியோதனன்பார்த்து
போதாதிவரைவிடப் போகாதெனநினைந்து
சூதானநெஞ்சன் துரோணர்முன்னேவந்துநின்று
குருவேசரணமென்று கும்பிட்டுயேதுசொல்வான்
மருவசனம்வேண்டாமென் வார்த்தைபொருத்தருளும்
சுகுர்தபலன்வருங்காண் சுவாமியான்பெற்றெடுத்த
மகனைக்கரையேத்த வரவேணுமென்னுடனே
பெற்றபிள்ளைசெய்த பிழையைப்பொருத்தருளும்
குற்றமென்னஅய்யாநான் கோவித்துக்கொண்டதனால்
சிறியேனறியாமல்த் தீவினைகள்செய்தாலும்
பெரியோர்பொருப்பரெனப் பேசுவாரென்குருவே

வாருமென்றுசொல்லியப்போ மன்னன்வணங்கலுற்றான்
காருமென்றமன்னவக் கண்ணரைவேபார்த்து

## துரோணர் துரியனை வெருத்துக்கூறுதல்

செப்புவார்துரோணர் திரியோதனன்றனக்கு
தப்பிதமிலாமலேநீர் தான்சோபனமுடிக்க
நம்மைவரச்சொல்வதினல் நாமேவருகுகிறோம்
உம்முடையவல்லமையு முலகளந்தார்தன்னுரவும்
கதித்தபுகளுடைய கர்னன்சவுரியமும்
குதிக்குஞ்சகுனிக் குரளியுடமேலளப்பும்
தம்பிமார்தன்னுடனே தவ்வுகின்றவல்லமையும்
கம்பிளியிலேசரியாய்க் காத்திருப்போர்க்கைச்சுருக்கும்
உனக்குறவாய்வந்திருக்கு முற்றமன்னர்தன்பெலமும்
எனக்குனக்கென்றேயுரைக்கும் இராஜாக்கள்தன்பெலமும்
மூர்க்கமுள்ளசேனை முருக்குந்திருக்குகளும்
பார்க்கலாங்கலியாணப் பந்தலிலேயென்றுரைத்தார்
உரைத்தார்துரோணரதுக் கோமென்றுமன்னவனும்
சிரித்தானவன்மனதில்ச் சினத்தைமிகவடக்கி
இப்போதெழுந்தருளு மென்குருவேயென்றுரைத்தான்
அப்போதுரோணருமே ஆமென்றுதானடந்தார்

## துரியோதனன் முதலானோர் கலியாணத்திற்கு துவாரகைக்கு புறப்படுதல்

நடந்தார்துரோணருமே நல்லரதமேரி
தொடந்தாரவர்கூடச் சூராதிவீரரெல்லாம்
திக்கெல்லாங்கொண்டாடுஞ் சிறுவீஷ்டுமர்நடந்தார்
அக்கினியாய்த்தானெரிக்கும் அசுவத்தாமாநடந்தார்
கையில்த்தனுவெடுத்துக் கர்னன்மிகநடந்தான்
பொய்வஞ்சகச்சூது புகல்சகுனியும்நடந்தான்
சவுரியங்கள்தான்பேசிச்சயிந்தவனுந்தானடந்தான்
பவுருசமதாகபாரமன்னரும்நடந்தார்
விசையன்மகன்கைபார்க்கவிதுரனுமேதாடனந்தார்
பிசகுசொல்லாகாங்கையரும்பிரியமுடனேநடந்தார்

சிங்களவர்கன்னடியர் தெலுங்கருடனேநடந்தார்
கொங்குமலையாளர் குடகருமேதானடந்தார்
பதினெட்டு அக்ரோணி படைமன்னர்தானடந்தார்
குதிரைத்தளங்களெல்லாங் கொக்கரித்துத்தானடந்தார்
எதிரிட்டவரைவெட்டு மிராசாக்கள்தானடந்தார்
அதிரதருங்குச்சரரும் அலங்காரமாய்நடந்தார்
இருப்புலக்கை கைப்பிடித்து மிராசாக்கள்தானடந்தார்
நெருப்புகளைப்போல்முளிக்கும் நெட்டோர்தானடந்தார்
வெங்கலத்தேர்க்காரரெல்லாம் வெற்றிசொல்லியேநடந்தார்
பங்கிகளைத்தின்னுகின்ற பட்டாணிமார்நடந்தார்
பச்சைமரகதங்கள் பதித்தரதமேறி
இச்சைகொண்டமாப்பிள்ளைபோ லிலக்கணனுந்தானடந்தார்
திரியோதனனரதத்தில் சிங்காரமாய்நடந்தார்
இத்தனையும்செய்யும்வஞ்ச னேந்தல்தனையின்றேனும்
சுத்தமில்லாப்பெண்டுபிள்ளை சூழவேதானடந்தார்
மணக்கோலஞ்செய்யவென்று வந்தபடையத்தனையும்
பிணக்கோலமாக்கயெமன் பின்னேதுடர்ந்துவந்தான்
படிக்குங்கலியாணப் பந்தலிலேரத்தவெள்ளம்
குடிக்கவென்றுபேய்கள்முன்னே கூத்தாடிச்சென்றதுவே
இந்தவிதமாக யெழுந்துபடை சூழ்ந்துவர
வந்தான்துரியன் மனமகிட்சியாகவேதான்

## துரியோதனன் துற்சகுனங்காணுதல்.

வணங்காமுடியோனும் வருகின்றபாதையிலே
இணங்காச்சகுணமதை யென்சொல்வேனம்மானை
குரைத்தலைப்பேய்கள்வந்து கூகூவென்றேயளரும்
நரைத்தலைப்பேய்தன்னுடனே நரிகள்வந்துஊளையிடும்
காகந்தடுக்கக் கருநாய்களூளையிட
கூகையலரிடவுங் குருமுயல்கள் தான்வரவும்
பாம்பானதுவோடிப் படத்தையெடுத்தாடிடவும்
ஆம்படையானில்லா தணங்குயெதிர்வந்திடவும்
நீர்க்கமில்லாளெண்ணெய்கொண்டு செக்கானெதிர்வரவும்
கூக்குரலாய்சத்தங் குளரியழுதிடவும்

பாப்பானெதிரில்வந்து பஞ்சாங்கஞ்சொல்லிடவும்
சாப்பாடில்லாமல் தவசியெதிர்வந்திடவும்
நெருப்பெடுத்துப்பேதை நேராகவந்திடவும்
குருக்காகப்பூனை குட்டியுடனேடிடவும்
ஆகாச்சகுண மனேகமெல்லாங் கண்டுமன்னன்
போதாக்கவலையெல்லாம் புந்திதனிலேயடக்கி
நடந்தானிலக்கணர்க்கு நல்லமணமுடிக்க
விடம்போல்மனங்கொதித்து விகர்னனுமங்கேதுசொல்வான்

## துரியனுக்கு விகர்ணன் புத்திகூறுதல்.

அண்ணாதுரியாகே ளரசருக்கெல்லாமரசே
மண்ணாளும்வேந்தே மறையோர்மரபுதித்த
குருவாந்துரோணர் கூறியதுங்கேழ்க்கவில்லை
சிறியதந்தையாம்விதுரன் செப்பியதுங்கேள்க்கவில்லை
மூதாதையாருரைத்த மொழியுந்தடுத்துவிட்டாய்
ஏதோவரியே னிணங்காச்சகுணமெல்லாம்
ஆனதுவும்நீர்தா னறிந்தீரேயிப்பொழுது
மானபராயிந்த மங்களத்தைத்தானிருத்தும்
நடந்துவரும்படையும் நல்லோர்களுஞ்சிரிக்க
துடர்ந்துவரும்படைகள் சோம்பிமுகம்வாட
அருத்துக்குமிப்பான் அருச்சுனனார் தன்மகனும்
கருத்துக்கிசைந்தபெண்மர் கண்டகினைப்பொய்யாது
மெய்யாய்நான்சொல்லுவதை வேந்தனேகேளுமினி
செய்யாதகாரியத்தை செய்கிறாய்மன்னவனே
சொன்னாலுங்கோபச் சுடர்போலவிழுகிறாய்
மன்னாசகுனி மாமாவால் நம்குடிதான்
தட்டளியக்காலந் தலைமேலேவந்ததினால்
துட்டன்சொற்கேட்டுத் துடிக்கிறாய்மன்னவனே
பேராசையைநிறுத்தும் பெருவிதமுண்டாகுமென
சீராய்விகர்னன் செப்புமொழியைக்கேட்டு
தன்மனதுக்குள்ளடக்கி தார்வேந்தனேதுசொல்வான்
யென்னதான்வந்தாலும் யெத்தனைபேர்சொன்னாலும்
நான்கேட்கப்போரதில்லை ஞாயமுனைக்கேள்க்கவில்லை
வீணாகப்பேசாமல் விகர்னா நடவுமென்று

நாணுமல்சேனைகளை நடத்திவெளிநடந்தான்
தானுகச்சேனை தளங்கள்வழிநடந்து
போனார்மலையோரம் பூதம்போல்ராவானும்

## இராவான் படுத்திருப்பதைப்பார்த்து துரியன்படைகள் பயப்படுதல்.

மலையோரொழுகாக்கி மற்றோர்மலையதனை
தலகணையாய்ப்போட்டு சாய்ந்துகொண்டுஇராவானும்
பனைமரத்தைத்தான்பிடுங்கி பல்விளக்கிக்கொண்டிருந்தான்
வினையமரியாமல் வேந்தன்முதலானோர்
அந்தவெளியா யவர்களெல்லோருஞ்சேர்ந்து
வந்தார்கள்கால்நனைய மாட்டாதியங்கிநின்று
இப்பெரியபூதமதை யெங்கும்நாங்கண்டதுண்டோ
செப்புவீர்பிர்மா செகத்தில்படைத்துவைத்த
கற்பினையுமிப்படியோ கண்கலங்குமென்றுரைத்தார்
வெற்புநிகர்தோளான் விடநாகங்கொண்டவனும்
கண்டுகலங்கியவன் கர்னனிடமேயுரைத்தான்
மண்டலீகரெல்லாம் மயங்கிஅங்கு நின்றுகொண்டார்
பார்த்தான்துரியன் பரும்பூதக்கால்நனைந்தே
ஆர்த்தபெரும்படையை அனுப்புமென்றான்மன்னவனும்
அவ்வார்த்தைகேட்டு அங்கரர்கோனேதுரைப்பான்
இவ்வார்த்தைசொல்லுவரோ யேந்தலேநானிருக்க
பார்க்கிறேனிந்தப் பரும்பூதங்கால்வாங்க
ஆர்க்கிறேனென்று அங்கரர்கோனேதுரைப்பான்
பாரமலைபோலப் படுத்திருக்குமன்னவனே
நேரமல்லோஆகுதுகாண் நீர்கால்மடக்குமென்றான்
ஆரடாநீயுமிப்போ ததட்டிக்கால்வாங்குமென
வீரடாபேசுகிறாய் வேந்தேவழியிலையோ

## இராவானுங் கர்னன்முதலானோருஞ் சண்டைபோடுதல்.

போடாவென்கால்நனைந்து போகாட்டால்சண்டைசெய்ய
வாடாவெனராவான் வளுத்தினனம்மானை
அங்கரர்கோன்தான்வெகுண்டு அனலம்புதானெடுத்து

சிங்கமெனக்கெற்சித்து சிலையில்வைத்துயேவிட்டான்
விட்ட அனல்க்கணையும் வெகுண்டுவருங்கொடுமை
அட்டதிக்கிலுள்ளவரும் ஆகாசவானவரும்
கண்டுபதரிக் கலங்கினாரவ்வேளை
வண்டனெனும்ராவான் மயங்காதொருகரத்தால்
எட்டிப்பிடித்து யெரிகணையைத்தானொருக்கி
விட்டெறிந்துபோட்டு வெகுகோபந்தானாகி
சுழல்பாணந்தானெடுத்துச் சூரனந்தக்கர்னனையும்
விழப்பண்ணவேணுமென வில்வளைத்துநாணொலித்து
தொடுத்துவிட்டானப்போ சுழல்பாணந்தானெழுந்து
கடுமையுடன்வந்து அந்தக் கர்னனையுந்தேருடனே
எழுப்பியே ஆகாசத் தேகினான்காணம்மானை
கழுப்போலவேசூரியன் கண்டிருந்தானம்மானை
வானவருந்திக்கிலுள்ள மன்னவருந்தான்பார்த்து
மானபரன்கர்னனுக்கு மரணநாளின்றோடே
சரியாச்சோவென்று தயங்கின்றுபார்த்தார்கள்
எரிப்பாயத்துரோணர் இருந்துமதைச்சகிக்க
மாட்டாமல்வில்வளைத்து மணிமந்திரமுச்சரித்து
தேட்டாளனைத்திருப்ப சிந்தைதவைத்து ஓர்கணையைப்
போட்டாரதுபோய்ப் புரவலனைத்தேருடனே
வாட்டாமலேதிருப்பி வந்ததுகாண்பூமியிலே
அப்போதுகர்னன் அலங்கோலமாயிருந்து
தப்பிப்பிழைத்தமெனத் தானெழுந்து ஆசாரி
பாதந்தனைத்தொழுது பார்த்திபனங்கேதுரைப்பான்
ஆதரித்ததெய்வமுனை யல்லாதுவேறுமுண்டோ
நாதனேயென்றுபின்னும் நமஸ்கரித்தானம்மானை
இன்றுவிடுவேனோ யிவனுயிரைவாங்குகிறேன்
என்றுஅங்கர்கோமா னெடுத்துரைக்கஆசாரி

## துரோணர் கர்னனுக்குப் புத்திகூறுதல்.

ஆகாதுஉன்னா லவனுயிரை வாங்கிவிட
வேகாதுசும்மா விருதாவில்ப்பேசாதே
பஞ்சவரிலேவிசையன் பாலன்போல்த்தோனுவதால்

அஞ்சானொருவருக்கும் அதாகூரனென்றறியும்
நாம்போகும்கல்யாணம் நன்றாயவனறிந்தால்
சோம்பாதொருநொடியில் துலைத்திடுவானம்மையெல்லாம்
என்றாலுமுன்றாலும் யெவரூலும்வெல்லரிது
மன்னவெனவே வளுத்தினுரைப்போது
அனல்போலவேகொதித்து அராவானுமேதுரைப்பான்
சினமோடெதிர்த்த சேவகனேநீதானும்
அருண்டொடுங்கிமன தஞ்சியேநிற்பதென்ன
திரண்டுவந்தசேனையெல்லாஞ் சேரமயங்குவதேன்
சொல்லடாவென்றான் துற்சாதனன்வெகுண்டு
வல்லபங்கள்பேசி வாளெடுத்துவிட்டெறிந்தான்
வீசியவாளையொடித்து வில்லாலடித்திடவே
தோசியவ்னரிந்து துடிதுடித்துஓடலுற்றான்
சிரித்தந்தராவானும் செப்புவானம்மானை
வெருவியேஓடுவரோ வீரமிகுமன்னவர்கள்
வந்தபெரும்படையின் மன்னவரேநீங்களும்பார்
இந்தட்சணமுரைப்பீ ரில்லாட்டாலுங்களையென்
காலாலுதைத்துக் கசக்கிடுவேனென்றுரைத்தான்

## இராவானை சகுனிமுதலானோர் வேண்டித் துவரரகைக்கு செல்லுதல்

ஏலாப்பயல்சகுனி யெடுத்துரைப்பானம்மானை
நல்லவரேகேளுமினி நாகக்கொடிவேந்தன்
செல்வரேதுவாரகையில்த் திருவிளாபார்க்கவென்றே
போராரெனவுரைத்தான் புத்திபுள்ளராவானும்
தீராதகோபமுடன் செப்புவானம்மானை
சூதினால்பஞ்சவரைத் துரத்தினான்கானகத்தில்
மாதுதுரோபதையை மயிர்பிடித்துராஜசபை
தன்னில்த்துகிலுரிந்தச் சண்டாளப்பாவிகளை
சென்னிவிளக்கொல்வனெனச் செப்பிவசையும்பேசி
பின்னுமவன்சகித்துப் பேசுவானம்மானை
யென்தந்தைமார்க ளிட்டசபதப்படியே

சொல்லவல்லோவேனுமவர் கூறுமொழி தப்பாமல்
அல்லவென்றுசொல்வதெனக் கழகிலையென்றேயுரைத்துக்
காவலரேயெந்தன் காலின்கீழே நுழைந்து
போவதுவேஞாயம் போங்கள்பிழைத்தீர்கலென்றான்
அவ்வார்த்தைசொல்லுமுன்னே அரவக்கொடியோன்முதலோர்
செவ்வையாய்க்கால்நுழைந்து சென்றார்களம்மானை
துரோணரசுவத்தாமன் சொல்பெரியவீஷ்டுமரும்
விரோதம்நினையா விதுரனையுமேராவான்
கண்டுதெண்டனிட்டுக் கரங்குவித்துப்போங்களெனக்
கொண்டாடிவிட்டான்காண் கொற்றவனுமம்மானை
எல்லாருமொன்றாகி யின்றுபிழைத்தோமெனவே
நில்லாமற்சென்றார் நெடுமால்பதிநோக்கி
பாளையமுந்தாமும் படைமன்னர்தன்னுடனே
காளமுகில்மேனியனார் கன்னருடதன்பதியும்
காதவளித்தூரங் காணுமெனமன்னவனும்
ஆதரவாய்ச்சோலைதனி லடித்தார்கள்கூடாரம்
கூடாரந்தானடித்துக் கொற்றவனும்வீற்றிருந்தான்
வாடாமல்ச்சேனைதளம் வந்திருந்தாரம்மானை
இருந்துமிளைப்பாறி யெல்லொருந்தானறிய
வருந்திவினைவிளக்கும் மன்னவனுமன்னேரம்
சயிந்தவனைப்பார்த்து தானேதுரைக்கலுற்றான்
துயர்துவரவேண்டுஞ் சுருக்காகயின்னேரம்
திரமாயெனையீன்ற திருதராட்டிதனுடனே
உரைமுறைகள்பெண்டு பிள்ளையுற்றசனமெல்லோரும்
கூட்டிப்போயின்னேரங் கோபாலர்தானறிய
வீட்டிலிருங்காணும் விடிந்துஒருநாளிகைக்குள்
வருவோமெனவே வயணமெல்லாம்நன்றாக
பெருமாளிடத்தில்ப் பிரியமுடன்சொல்லுமென்று
உத்தாரமிட்டானுரைத் தமொழிதப்பாமல்
பெத்தார்பிறந்தார்கள் பின்னையுமுண்டானவரை
தேரின்மேலேற்றிவெகு சிங்காரமாகவுமே
ஊரில்ச்சனங்கள்மெய்க்க உற்றசயிந்தவனும்

## சயிந்தவன் முதலானோர் கிருஷ்ணரிடம் போய்த் தெரிவித்தல்

சுகமாகவந்தார்கள் துய்யமால்பட்டணத்தில்
அகலாதமாயவனு ரண்மையிற்போய்க்கண்டுகொண்டார்
இந்தப்பெருமைகொண்டு யிங்குவந்தபேரையெல்லாம்
அந்தப்புரந்தனிலே அளகாயனுப்பிவித்து
தன்னிடமாய்வந்த சயிந்தவனைத்தான்பார்த்து
மன்னனெங்கேமற்றுமுள்ள மற்றரசர்தானுமெங்கே
என்றருளிக்கேட்டா ரென்பெருமான்கோபாலர்
நின்றுசயிந்தவனும் நெடுமால்தனைப்பார்த்து
சூராதிசூரன் துஷ்டருக்குமார்பாணி
வீராதிவீரன் விருதுபெற்றகெம்பீரன்
மண்டலத்தையாளும் வணங்காமுடிவேந்தன்
தெண்டிரையில்க்கிர்த்திபெற்ற திரியோதனப்பெருமாள்
பார்த்தனையும்வீமனையும் பகற்பொழுதிலேயுயிரை
மாத்திவிடவல்ல வணங்காமுடிவேந்தன்
தாரணியோர்மெச்சும் சதுரங்கசேனையுடன்
நாரணரேகேளுமுங்கள் நல்லபூங்காவனத்தில்
தென்பாகவந்து அங்கே சேர்ந்தார்கள்வந்தசெய்தி
அன்பாயுமக்கறிய வனுப்பினாரெந்தனையும்
வணக்கமுடனே மகிழ்ந்துசயிந்தவனும்
இணக்கமுடனிவ்வார்த்தை யியம்பினனம்மானை

## விருத்தம்.

சிந்தைமகிழ்பூங்காவனத்தில் திரியோதரனுஞ்சேனையுடன்
வந்தவயணஞ்சயிந்தவனும் மகிழ்ந்தேதவுரைக்கமால்கேட்டு
இந்தவினையைத்தவிர்ப்பதற்கு யிதுதான்சமயமெனவெழுந்து
சொந்தமருகன்றனைத்தேடிச் சுருக்காய்நடக்கத்துணிந்தாரே.

## அம்மானை.

இருங்காண்சயிந்தவனே யினிமேற்கலியாணம்
வருங்காரியம்பார்க்க வாரோமரைச்சணத்தில்
அரவக்கொடியோனை அழைத்துவரநாம்வாரோம்
ஒருவர்க்கிதுவசனம் உரையாதேயென்றுசொல்லி

## கிருஷ்ணன் மறையவர்வேடமெடுத்து வாள்வீமனிடம் செல்லுதல்.

மாதவனுந்தானடந்தார் மறையவனைப்போல்வேஷம்
பேதகமில்லாமலொரு பீற்றக்கலையுடுத்தி
பஞ்சாங்கங்கைதனிலே பாவனையாய்த்தானெடுத்து
அஞ்சாருமுன்குடுமி அளகானபொன்னூலும்
தளன்றவயசதுபோல் தடியுமொருகையூன்றி
குளன்றுநடந்தார் கோமானகர்நோக்கி
மெள்ளநடந்தார் விசையபுரநகரில்
தள்ளிநடந்துமிகத் தானேவருகையிலே
விற்பிடித்தகையான் விசையனுடபுத்திரனும்
தெற்பக்குளத்தருகில் சிறந்தமணிமண்டபத்தில்
வலுத்தவர்கள்செய்யுகின்ற வஞ்சனையெல்லாம்நினைத்து
சலித்திருக்கும்வேளைதனில் தான்வந்தார்வேதியரும்
ஆர்காணுமிங்குவுமக் காசிருவாதமென்றார்
நீர்தான்சலித்திருக்கும் நினைவுகளைச்சொல்லுமென்றார்
சொல்லுமென்றவேதியரே சோதிடமும்நீரறிந்தால்
வல்லமையாய்ச்சொல்லுமையா மனதில்நினைத்ததெல்லாம்
நினைத்தகருமமதை நீரறிந்துசொன்னக்கால்
மனையிலமுதுபடி வாங்கிவந்துநான்தாரேன்
நல்லமொழிசொல்லுமென்றான் நாராயணன்மருகன்
கல்லையுருவாக்கிவைத்த கார்வண்ணர்தான்கேட்டு

## அபிமன்னனுக்கு மறையோன் சோதிட பொருத்தஞ்சொல்லுதல்.

பஞ்சாங்கந்தன்னையுமே பார்த்துத்தரைதனிலே
அஞ்சாறுகோடு அதிசயமாய்த்தான்கீறி
மேஷம்ரிஷபமென்று விரலைமடக்கியெண்ணி
இராசியும்லக்கணமும் நன்றாய்மிகப்பார்த்து
கற்கடகஞ்சிங்கங் கன்னிக்கேயல்லாது
மற்கடகத்திற்கு வாய்க்குமோமன்னவனே
மன்னனேசொல்லுகிறேன் மனதில்நினைத்ததெல்லாம்
என்னவென்றுகேட்டீரினிக்கேளுஞ்சாஸ்திரத்தை

காணுதுகாணுந்தன் கருத்தில்நினைத்தவகை
பேணியேயுந்தனுக்குப் பேசியிருந்தபெண்ணை
இடராகவுங்களுக்கு யெதிரிஒருமன்னவனும்
துடர்வாய்ப்பகன்றனக்குச் சோபனமுஞ்செய்யவென்று
பேசினார்காணுமந்தப் பெண்ணைப்பயின்றவன்பால்
இராசிதானென்றவனும் நலமாகச்சம்மதித்து
பரிசமதுவாங்கியிந்த பங்கூனிமாஸ்தையிலே
வரிசைபதினெட்டாகும் வாகானதேதியிலே
வெள்ளிக்கிழமை விடிந்தேழுநாழிகைக்குள்
கள்ளக்கலியாணம் கருதிமுடிப்பதற்கு
மாப்பிள்ளையைக்கூட்டி வந்தேபூங்காவனத்தில்
தாப்பதிலேசெய்துமிகத் தானேயிருக்கிறார்
அனியாயமாக அவர்நினைத்தகாரியத்தில்
சனியன்பிடிக்குகிறான் தாலிகட்டமாட்டான்காண்
பெண்டாட்டியாளப் பொருத்தமில்லைமாப்பிள்ளைக்கு
கண்டாசைப்பட்டதல்லால் காரியமுங்கிட்டாது
மலைபோலபடைபெருக்கி வந்திருந்தமாப்பிள்ளையும்
தலைகிழ்விழுந்தாலுந் தாலிகட்டமாட்டான்காண்
விகற்பமில்லைப்பெண்ணதனை வேண்டியேபெற்றெடுத்த
தகப்பன்மனதுசற்றே சம்மதியில்லாததினால்
கற்புக்கருந்ததியாள் கன்னியெனும்பெண்தனக்கு
அற்பநினைவுசற்று மவள்தனக்கில்லாததினால்
தன்மாமிபிள்ளை தனக்கேபுருடனென்றும்
அன்பாகநெஞ்சி லவளுக்கிருப்பதினால்
அவள்தான்நினைத்தபடி யாகுமேயல்லாது
இவராலொருகரும மேலாதுமன்னவனே
உமக்குவியாழமது உச்சமிருக்குதென்று
நமக்குத்தெரிந்தபடி நவின்றோம்காண்மன்னவனே
நாளுடனேலக்கனமும் நன்றாயிருக்குதுகாண்
வாளெடுத்துநீர்தான் வளிநடவுமன்னவனே
ஓலையெழுதிவிட்ட வுருதியரிந்திருப்பீர்
சோலிசெய்யவேண்டாஞ் சுருக்காய்நடவுமென்றார்
இந்தவசன மெடுத்துரைத்தான் மாமறையோன்

அந்தவசனமெல்லாம் அபிமனுமேதான்கேட்டு
திருத்தமுள்ளமன்னன் சிந்தைதமிகமகிழ்ந்து
கருத்துள்ளவேதியர்தன் காலில்நமஸ்கரித்து
நினைத்தவயணமெல்லாம் நீரறிந்துசொன்னதினுல்
மனத்துயரந்தீர்ந்துதென்ருன் வாள்வீமனம்மானை.

## விருத்தம்.

வேதம்நாலையுமேதெரிந்துசொல் விமலனேமறைமாதவா
விந்தையான அரவிந்தபாதமது வேணுமென்னுமுடிமேலையா
நீதமென்றபொருளேயெனக்குதவி நீரெழுந்தருளிவந்ததால் [னுல்
நினைவிலெண்ணுகிறவிசனமன்றியொரு நிலையில்நின்றுன்து அருளி
வாதுசெய்ததிரி யோதனுதியர்தன் மார்பிளந்தெனது வாளினல்
மாயனஞ்சயெதிராகவந்தபடை மாரியோடமணமாலைநான்
காதல்கொண்டதிருமாலுடன்புதல்வி கன்னிதன்னைமாலைசூட்டவே
கருணையானவரமேயெனக்கருள்செய் கமலபாதமதுசரணமே.

## அம்மானை

கமலாசனத்திருக்கும் காரணனேநாரணனே
தமியேனைக்காக்கவந்த சாமிசரணமய்யா
துயராலெனதுமனஞ் சுழலுகின்றவேளைதனில்
தயவாககாக்கவந்த சாமிசரணமய்யா
வாகுடையசுந்தரியை மாலையிடவேணுமென்று
தாகத்தைத்தீர்க்கவந்த சாமிசரணமய்யா
சுந்தரியைமாலையிட்டு சுகம்பெருவீரென்றுசொல்லி
எந்தனுக்குநல்வாக்கு இப்போதுதாருமய்யா

## மறையவர் வாள்வீமனுக்கு நல்வாக்குகொடுத்தல்.

கவுரவர்கள்தன்னுடனே கனபடைகள்வந்தாலும்
அவரைச்செயிக்கவரம் ஆரணனேதாருமய்யா
குறையாதசெல்வங் கொடுத்திடவேணுமய்யா
மறையோனேயென்று வணங்கினன்வாள்வீமன்
குணங்களுடனேதான் கூறுவான்மாமறையோன்
பணங்காசுக்காசைசனந்த பல்லிசொல்தன்மையைகேள்

நிச்சயமதாக நினைத்தபடிநீர்முடிக்க
அச்சமதைபிர்தாவெனவே அபிமனுக்குத் தான்கொடுத்து
எட்டுத்திசையோர்வந் தெதிர்த்தாலும்வெல்லையென்று
தொட்டுக்கொடுத்தார் சுருர்தகுணன்கைவாளை
வாளைநமஸ்கரித்து வாங்கினன்வாஞ்சீமன்
ஆளிதுயில்மாயனுமே ஆகாசமார்க்கமதாய்
எழும்பிப்பளையபடி யில்லரத்தில்வந்திருந்தார்
வளம்பொருந்தும்பார்த்தன்மகன் மறையோனைக்காணுமல
என்னபுதுமையிது யிங்குவந்தமாமறையோன்
பின்னையொருவரில்லே பெருமாளெனநினைந்து
இனிமேலுஞ்சும்மா யிருக்கப்போகாதெனவே
தனிமையாயன்னையிடந் தான்வந்தானம்மானை

## அபிமன்னன் தாயாரிடம் விடைகேட்குதல்.

### விருத்தம்.

அன்னையேபோற்றிபோற்றி அன்புள்ளதாயேபோற்றி
முன்னமேயெனக்குப்பேசி மொழிந்தசுந்தரியாள்தன்னை
இன்னிலமரியவேதா னிச்சணமடியேன்சென்று
கன்னியைமாலைசூட்டக் கருத்துடனனுப்புவீரே.

### இதுவுமது.

அரியானயன்வந்தாலு மரவுயர்த்தவன்வந்தாலும்
பெரியவர்துரோணசாரி பின்னுமற்றெவர்வந்தாலு
முரியவன்படைகளெல்லாம் முகூர்த்தமொன்றினிலேயென்று
கரியமால்மகளைத்தாலி கட்டவும்வரஞ்செய்வீரே.

### அம்மானை.

என்னைப்பயின்றெடுத்த யின்பமுள்ளதாயாரே
உன்னைத்தொழுதேனு னுகந்தபிள்ளையாகையினல்
மாயன்மகளாரை மாலையிட்டுகொண்டுவரவும்
தாயேயெனக்குவரந் தந்தருளவேணுமம்மா
எத்தனைபேர்வந்து யெதிர்த்தாலும்வாளதனல்
அத்தனைபேர்தன்னையுமே அரைச்சணத்திலேஜெயித்து

மாப்பிள்ளையாமென்றுவுந்த மன்னனிலக்கணர்க்கு
காப்புத்தரிக்குமுன்னே கலந்துகொள்ளவேணுமம்மா
வேண்டினன்தாயை மிகப்பணிந்துதானுரைத்தான்
காண்டீபன்தேவி கருத்தயர்ந்துமெய்சோர்ந்து
பெரியதவத்தால்நான் பெற்றெடுத்தகண்மணியே
அரியவனம்போன அருச்சுனனார்தன்மகனே

## சுபத்திரை அபிமன்னுக்குப் புத்திகூறுதல்.

வஞ்சகமில்லாமலேவா வனவாசந்தான்போனார்
பஞ்சம்பிழைக்கயிந்தப் பட்டணத்தில்வந்திருந்தோம்
வயறுபிழைக்கவல்லோ வந்தோமிவ்வூர்தனிலே
கயறுதனையெடுத்துக் கழுத்தில்சுருக்கிட்டதுபோல்
எல்லோருங்கூடி யிலக்கணக்குமாரனுக்கு
கல்யாணஞ்செய்து கனபாளையத்துடனே
வந்தேயிருக்கும் மணவரையின்பந்தலிலே
எந்தவிதம்போய்வருவாய் யென்மகனேபேசாதே
உனக்கொருபெண்ணிந்த வுலகிற்கிடையாதோ
தனக்கழகுநம்முடைய ஜாதியிலேபெண்பார்த்து
செல்வக்கலியாணமதாய்ச் செய்யுகிறேனென்மகனே
மல்லுக்குநீயிணங்க வேண்டாமடாமகனே
அத்தைமகள்சுந்தரிமே லாசைவைத்துப்பேசுகிறாய்
பத்தமில்லேலெட்சுமிக்கு பவுசுரொம்பயென்மகனே
மாமன்மகளென்றுசொல்லி வாஞ்சைவைத்துப்பேசுகிறாய்
கோமணக்குண்டியவன் குடுக்கரியானென்மகனே
அனியாயஞ்செய்யு மரவக்கொடியோன்தளத்தில்
சனியன்பிடித்து தானலேவானென்மகனே
வனம்போனபஞ்சவர்கள் வருவார்பதறாதே
சினம்பாதகமெனவே தெரியாதோயென்மகனே
நன்றானகாலம் நமக்குவரும்நாளையிலே
அன்றேகலியாண மப்போமுடித்திடலாம்
வெத்திபெருமன்னன் விதர்ப்பர்கோன்பெற்றெடுத்த
பத்தினியைக்கலியாணம் பண்ணலாமென்மகனே
நாடாள்வாயென்றுமைந்தா நான்தானினைத்திருக்க

மாடாடுமேய்க்க வரச்சொல்வானுன்மாமன்
வேல்சிரக்குங்கண்ணுடன் வில்பிடித்தகையாலே
பால்கரக்கச்சொல்லியல்லோ பண்ணுவானுன்மாமன்
பாளையத்தார் தங்களுக்குப் பால்தயிர்மோர் தானெடுத்து
ஊளியத்தில்போவெனவே ஓட்டுவானுன்மாமன்
ஊத்துகிறேனுக்குஞ்சியிப்போ ஊர்க்காலிமாட்டையெல்லாம்
சேர்த்துவிட்டுமேய்த்துவரச் செப்புவானுன்மாமன்
பெண்ணானசுந்தரியைப் பெற்றெடுத்தலெட்சுமியும்
விண்ணாணம்பேசியல்லோ வீதியிலேதான்வருவாள்
பேரும்பெருமை பிரபலமும்நானேயென்பாள்
ஆருமெதிரில்லையென்பா ளத்தையுடதன்சேதி
பெருமைசொல்லிக்கொள்வார்தம் பெண்ணையெடுப்பாரோ
அருமையில்லாப்பேரிடத்தி லடுத்தடுத்துப்போவாரோ
தூரமவர்களில்லை சொந்தம்நம்க்கானாலும்
ஈரமில்லாநெஞ்சருட னிணங்கியிருப்பாரோ
சாதிசனமென்றுசொல்லி சம்பந்தம்செய்வதிலும்
ஏதுமறியாம லிருப்பதுவேநல்லதென்று

## வாள்வீமன் தாயாருக்கு ஞாயங்கூறுதல்.

சலிப்பேபெரிதாகச் சாற்றினள்தாயாரும்
ஒளிப்பானவார்த்தையெல்லாம் வுற்றவீமன்தான்கேட்டு
தேனுரைபோல்நீயுரைத்த சேதியெல்லாமுள்ளதுதான்
நானுமொருசெய்தி நவிலுகிறேன்கேட்டருள்வீர்
மாறுதிரவிகுல வம்மிசத்திலேபிறந்த
ஸ்ரீராமன்கானகத்தில் சேர்ந்தகதைதீரறிவீர்
மாதாகைகேசிசொன்ன வார்த்தைதவறாமல்
போதாதகானம் புகுந்ததுவுங்கேட்டிருப்பீர்
பிள்ளைகள்தான்பிறந்தால் பிதிர்வாக்கியங்கள்தனைத்
தள்ளிவிடப்போகாது தாரணியிலென்தாயே
மகிமையுடனிப்புவியில் மானிடராய்த்தான்பிறந்தால்
புகல்பெருமையல்லாது பொருள்பெரிதோயென்தாயே
முன்னாலுலகறிய முகூர்த்தமிட்டசுந்தரியை
இன்றைவில்விட்டுவிட்டால் பெரும்நகைப்பார்கள்

வஞ்சனையேசெய்து வாளுந்திரியோதனர்க்கு
அஞ்சிவிட்டுநாமிருந்தா லரசர்நகையாரோ
பேயாகிலும்நீதான் பெற்றபிள்ளைநானிருக்க
தாயேயுன்வாக்குத் தவறிவிடலாமோ
பச்சைமால்தன்னுடைய பாக்கியத்தைவேணுமென்று
இச்சைகொண்டுநானு மியம்பவில்லையென்தாயே
இந்துநுதலழகி யேலக்கருங்குழலாள்
சுந்தரிமேலாசைவைத்துச் சொல்லவில்லையென்தாயே
சபையரியநீயுரைத்த சத்தியம்பொய்யாகாமல்
சுபகாரியமுடிக்கத் துடங்கினேனென்தாயே
நீயுரைத்தசொல்லையும்நான் நிலைநிறுத்தேனுமாகில்
நேயமுற்றபஞ்சவரை நிந்திப்பாரென்தாயே
ஆகையினால்வேரொன் றளப்புகள்செய்யாமலும்நான்
போகவிடைதாருமென்று புதல்வன்பணிந்துநின்றான்
பணிந்துநின்றதன்மகனைப் பார்த்தேசுபத்திரையும்
துணிந்துமனமகிழ்ந்து சொல்லுவாளம்மானை
இடரானநூற்றுவர்க ளிருந்தபடைமன்னரெல்லாம்
கடல்போல்வளைந்துஉன்னைக் கலந்தெழுந்துவந்தாலும்
உந்தனுடைகைவாளா லொன்னலரைத்தாசெயித்து
சுந்தரியைமாலையிட்டுச் சுகமாகவாருமென்று
அனுப்பிவிடைகொடுத்து அரசனைமிகநினைந்து
மனுப்புகுந்தமாளிகையில் வந்திருந்தாளம்மானை

## அபிமன்னன் தாயாரிடம் விடைபெற்று துவாரகைக்குச்செல்லுதல்

### விருத்தம்.

சதிர்பெருதாயார்தன்னைத் தான்வலமாகவந்து
துதிசெய்துமலர்கள்தூவித் தொழுதுகைவாளுமேந்தி
அதிவிதரணங்கரூர னபிமனுமாக்ரமித்து
எதிரிகளெவனென்று யெழுந்துமேநடந்தானன்றே

### அம்மானை.

அன்னைதனைத்தொழுது ஐவர்தனைநெஞ்சில்வைத்து
உன்னிதமாய்மாயனையும் உள்நினைந்தேதேரணிந்து

கச்சைகட்டிவில்லெடுத்து கட்டாரிதான்சொருகி
பச்சைமுருகுடனே பதக்கமிகவணிந்து
மலைநிகர்த்ததிண்புயத்தில் வச்சிராங்கிச்சோடணிந்து
தலைமேல்முடிசூடி தங்கரத்னக்குண்டலமும்
காதிலணிந்து கண்ணாடிதான்பார்த்து
பாதிமதிசூடும் பரமன்தனைத்துதித்து
கையிலேதானெடுத்தான் கனத்தவச்சிரவாளதனை
மெய்யெல்லாந்தான்குளிர்ந்து விசையபுரத்தைவிட்டு
தர்மந்துணையெனவே தானடக்கவாள்வீமன்
கர்மமெல்லாம்நூற்றுவரைக் கலந்துகொண்டதம்மானை
திசைநோக்கியேநடந்தான் திருமால்துணையெனவே
அசையாதகுன்று மடவிகளூர்தான்கடந்து
சோலைவனமூங்கில்வனஞ் சொற்பெரியபூங்காவும்
பாலைவனந்தான்கடந்தான் பார்த்தன்மகன்வாள்வீமன்
ஆறுகடந்து அடவிகளுந்தான்கடந்து
ஊருகடந்து உயர்ந்தமலைதான்கடந்து
திருடர்நடமாடுந் திரள்வனங்கள்தான்கடந்து
கரடிபுலிவாளுங் கானகமுந்தான்கடந்து
நடந்தான்வெகுதூரம் நாராயணாவெனவே
தொடர்ந்துவரும்போது சொற்பெரியகங்கைநதி
பெருகிவரக்கண்டு பிரமைகொண்டுவாள்வீமன்
அருவிதனைக்கடக்க ஆற்றுமனதுள்ளுடைந்து
தாமோதரனேயுன் தஞ்சமல்லாலெங்களுக்கு
ஆமோஒருசெயலு மச்சுதனேஆறுதனை
கடக்கவரந்தாவெனவே கங்காபவனிதன்னை
வடக்குமுகமாகநின்று வணங்கினனம்மானை

## விருத்தம்

எல்லாவுயிர்கள்தனைக்காக்கு மின்பக்கடலேயெவர்களுக்கும்
நல்லாதரவுநின்னையன்றி நானேவறியேன்நாயடியேன்
பொல்லாதவனென்றெண்ணமல்ப் பொறுத்தேவளிநீ விடுகெனவே
வில்லார்பெரியவிசையன்மகன் மிகவும்வணங்கித்தொழுதானே

அம்மானை

தாயேபுவியைத் தளைக்கவரும்லெட்சுமியே
நாயேனுனக்குமொரு நல்லடிமையாகையினால்
மன்திரங்கியெந்தனக்கு வழிவிடவும்வேணுமம்மா
தனதுமகனெனவே தற்காக்கவேணுமம்மா
அம்மையேயென்று அடிபணிந்தான்வாள்வீமன்
செம்மையுடன்மகிழ்ந்து சிந்துகங்காதேவியுமே
தாழ்ந்துவழிவிலகத் தான்கடந்தானுறுதனை
சூழ்ந்தவனங்கடந்து துருசாய்நடக்கலுற்றான்
கட்டளகன்வாள்வீமன் கடுகிவழிநடந்து
வெட்டமொருபாறைதனில் வந்திருந்தானம்மானை

## வல்லரக்கன் வாள்வீமன் நித்திரையை எழுப்புகிறது.

விருத்தம்

சோலைசேர்பாறைதன்னிற் சுகமெனயிருந்தான்பின்னும்
பாலகன்துயரம்நீங்கப் படுத்துநித்திரைசெய்போது
சீலமாய்த்தெரிசனத்திற் சிதரன்மகளைத்தானும்
மாலையிட்டவளோடின்ப மகிழ்வுங்கனவுகண்டான்

அம்மானை.

பாறைதனில்வாள்வீமன் படுத்துவுறங்கையிலே
காரைப்பழித்தகுழல் கன்னியெனும்சுந்தரியை
மாலையிடவேணுமென வந்தவரைத்தான்செயித்து
தாலிபுனைந்தம்மாதைத் தழுவியணைவதுபோல்
பாலன்கனவுகண்டு பண்பாகக்கண்வளர்ந்தான்
மாலையிருள்பூண்ட வனத்தில்வாழ்வல்லரக்கன்

விருத்தம்.

இப்படித்தரிசனங்க ளியல்புடன்கண்டேதானும்
விற்பிடித்திலங்குகையான் விசையன்மாமகன்வாள்வீமன்
சொற்படிதுயிலும்வேளை துடித்திடக்கோபமிஞ்சி
கற்படிரெனவேதாண்டிக் காட்டுவல்லரக்கன்வந்தான்.

விருத்தம்.

அரக்கனும்பசியினாலே அனேகமாமிருகம்யானை
பறக்கிறபட்சியெல்லாம் பசிக்கிரையாகத்தின்று
குறைவயர்தனக்குமிந்தக் குழந்தையைப்பொசிப்போமென்று
உரக்கமோபயலேயென்று உதைத்தனன்காலினாலே.

அம்மானை.

பசிக்கிரையதாகுமிந்தப் பாலகனைநாமுமிப்போ
புசிக்கவென்றுபாலகனைப் புறங்காலாலேயுதைத்தான்
அரக்கனுதைத்திடவே அபீமனெழுந்திருந்து
உரக்கம்தெளிந்து ஓகெடுவாய்வல்லரக்கா
கனவுகண்டுநானுமிப்போ கண்துயிலும்வேளையிலே
நினைவுகெட்டமூதேவி நீயெழுப்பலாமோடா
வடித்தமொழியாளை மருவிவுறங்கையிலே
அடித்தெழுப்பிவிட்ட தாரடாவீண்பயலே

விருத்தம்.

காலினாலுதைத்தவேளை கண்முழித்தபீமன்பார்த்து
கேலியோ அரக்காயிந்தக் கெடுபுத்தியுனக்குமுண்டோ
தாலிதான்கட்டவந்த தம்பிலக்கணன்சொன்னானே
சோலிதான்செய்யவேண்டாஞ் சுருக்கெனநடவென்றானே.

அம்மானை.

நான்வந்துறங்கையிலே நமக்குறவு உள்ளவர்போல்
ஏன்வந்தெழுப்பிவிட்டா யெனக்கறியச்சொல்லுமென்றான்
வாடாசிறுபயலே வயறுபசிக்குன்னுடலே
தாடாவெனவேதான் சாற்றினான்வல்லரக்கன்
வல்லரக்காநீயுரைத்த வசனமெல்லாமென்னிடத்தில்
செல்லாதுசெல்லாது சீரழிந்துபோகாதே

## வாள்வீமன் வல்லரக்கனை சினந்துரைத்தல்.

அம்மானை

மலையடுத்துவாழுகின்ற வல்லரக்காவுந்தனுக்கு
தலையெழுத்துமாய்ந்துதென்றோ தவ்வுகிறாயிப்போது

விளக்கிலகப்பட்டதொரு விட்டிலைப்போல்மாளாதே
தர்மந்தனைக்குறித்துச் சாற்றினேனுந்தனுக்கு
மர்மந்தெரிந்தாக்கால் வழியிலகிநீபோடா
இந்தவசன மெடுத்துரைத்தான்வாள்வீமன்
அந்தவசனமெல்லா மரக்கனுமேதான்கேட்டு
நேரானகண்கள் நெருப்பாய்மிகச்சிவந்து
சீரானவல்லரக்கன் சினந்துவெகுகோபமதாய்
இந்தச்சிறுபயலை யின்னேரம்விட்டதினால்
கொந்தளிப்பாய்வார்த்தை கூறுகிறானென்றுயெண்ணி
கையால்பிடித்திவனை கசக்கிவிடவேணுமென்று
ஐயாயிரமுளமா யவன்கையைநீட்டலுற்றான்
நீட்டிவளைத்தான்காண் நெடிதானவல்லரக்கன்
கூட்டிப்பிடிக்கையிலே கொக்கரித்துவாள்வீமன்

## வாள்வீமன் வல்லரக்கனுடன் யுத்தஞ்செய்தல்.

கழுத்தில்மிதித்தேறியவன் காதுரெண்டும்வாளாலே
அறுத்தெரிந்துபோட்டு அவனுமெதிர்த்துநின்றான்
காதுரெண்டும்போச்சுதடா கானகத்தில்வல்லரக்கா
சேதியென்னவென்று சிரித்தானபீமனுந்தான்
கண்டுஅரக்கனுந்தான் கனகோபமாயெழுந்து
வண்டனிவனை வதைத்துவிடவேணுமென்று
மலையைப்பிடுங்கியந்த வாள்வீமன்தன்னுடைய
தலையைத்துணிக்கவென்று தானெறிந்தான்வல்லரக்கன்
வல்லரக்கன்விட்டெறிந்த மலைதனையும்வாள்வீமன்
சல்லிசல்லியாகத் தவிடுபொடியாக்கிவிட்டான்
பின்னுமந்தவல்லரக்கன் பெரியமரம்பிடுங்கி
மன்னவனைநோக்கி வாகாயெறியலுற்றான்
எறிந்தவிருக்ஷமதை யிவனுடையவாளாலே
அறுத்தெறிந்துபோட்டு அவனுமெதிர்த்துநின்றான்
அப்போதரக்கனுமே அதிகோபமாய்வெகுண்டு
தப்பாமல்நூறுமலை தான்பிடுங்கிவிட்டெறிந்தான்
வந்தமலைகள்தனை வாள்வீமன்வாளாலே

சிந்த அடித்துச் சிதறிவிட்டானம்மானை
கானகத்தில்வல்லரக்கன் கண்டுமனம்பதறி
மானிலத்தில்வாழ மனிதனிவனுகுமென்று
எண்ணியிருந்தோமே யிவனேசிறுபயல்தான்
பண்ணியதோர்சண்டையிதைப் பார்க்கமுடியாது
ஆனாலுமிப்போ தரைக்ஷணத்திலேயிவனை
நாளுேவிடுகிறவன் நன்றாயிருந்ததுகாண்
உதட்டில்துரும்பிவனை ஊதிவிடவேணுமென்று
அதட்டினுல்வல்லரக்கன் அண்டங்கிடுகிடென
நூறுமலையை நொடிக்குமுன்னேதான்பிடுங்கி
சீறியெறிந்து திரும்பியொருகையாலே
பார்மீதில்நின்ற பதினுயிரமரத்தை
வேரோடேபேர்த்துமிக விட்டெறிந்தான்வல்லரக்கன்
அரக்கனெறிந்தமர மத்தனையும்வாளாலே
நருக்கிக்குவித்துவிட்டான் நாராயணன்மருகன்
அழுத்தமுள்ளவல்லரக்கன் அபிமனையுங்கொல்லுதற்கு
கழுத்தைத்திருகிடவுங் கையால்பிடிக்கலுற்ருன்
பிடிக்குங்கரத்தைப் பெருமாளுடமருகன்
துடித்துவிழும்படியாய் துண்டுதுண்டாய்வெட்டிவிட்டான்

## வல்லரக்கன் கையிழந்து சண்டைசெய்தல்.

கைபோனவல்லரக்கன் கனகோபங்கொண்டெழுந்து
பைவாயரவமது பாய்ந்தேறிவாரதுபோல்
கொம்பில்லாமாடு குனிந்துமுட்டவாரதுபோல்
தம்பியவனைச் சரிபிடிக்கவேணுமென்று
எட்டியேபாய்ந்தான் எருமைக்கிடாப்போலே
தட்டினுன்வாளால் தான்விலகிவாள்வீமன்
முன்னுலரக்கன் முகம்பார்த்துயேதுரைப்பான்
சொன்னுல்தெரியாதோ துன்மார்க்கமுள்ளவனே
உன்னுலெனைச்செயிக்க வொண்ணுதுவல்லரக்கா
என்னுலேநீயிரக்க யிங்குவந்தாய்கண்டாயே
தப்பிப்பிழைத்துமிகத் தானேடிப்போகாட்டால்
இப்போதென்வாளுக் கிரையாய்ப்பெலிகொடுப்பேன்

உயிர்பிழைக்கவேணுமென்றால் ஓடியேபோவெனவே
தயிரியமாயிவ்வார்த்தை தான்சொன்னான்வாள்வீமன்
அபீமனுரைத்தமொழி அரக்கனுமேதான்கேட்டு
குபீரென்றெழுந்தான் குவலயமெல்லாம்நடுங்க
பல்லால்மரம்பிடுங்கிப் பார்த்தன்மகன்மேலே
வல்லரக்கன்விட்டெறிய வாள்வீமன்தான்சினந்து
துட்டனிவனைத் துணித்துவிடவேணுமென்று
வெட்டினான்வாளால் விழுந்தானேவல்லரக்கன்
அரக்கன்கடோர்க்கயனுக் கபயமபயமென்று
உரக்கம்பிடித்து உயிரிளந்தானம்மானை

## வல்லரக்கன் அபயக்குரல் கேட்டு கடோர்க்கயன் கமலக்கன்னியிடஞ் சொல்லுதல்.

### விருத்தம்

அபயமென்றரக்கன்விழ்ந்தா னவன்குரலதனைநன்றாய்
சபைதனிலிருந்ததீரன் தளபதிகடோர்க்கயன்தான்
விபரமதாகக்கேட்டு வினைவிதிமுடிவுகாலம்
நிபமதுவந்ததென்றே நினைவினில்த்துயரமுற்றான்

### இதுவுமது

அன்னையாங்கமலக்கன்னி அவளிருபாதம்போற்றி
உன்னுடதமையனான வருமையென்மாமனுக்கு
என்னமோஅவதிகால மெந்தனுக்கபயமென்று
சென்னியில் மயிர்துடிக்கச் செவியினிற்கேட்டேனென்றான்.

### அம்மானை

ஆதலால்வல்லரக்கன் அபயமிட்டுவிழ்ந்தகுரல்
காதிலேகேட்டுக் கடோர்க்கயனுந்தானடுங்கி
தாயார்கமலகன்னி தன்பாதம்போற்றிசெய்து
ஓயாமலேபுலம்பி உரைப்பான்கடோர்க்கயனும்
உனக்குத்துணையான உடற்பிரப்புஉன்தமையன்
எனக்குப்பிலமாக யிருக்கின்றவென்மாமன்

அவதிவருதேவாழு மாரணியந்தன்னிலேதான்
அவதிவந்தெதன்று அபயமிடுஞ்சொற்கேட்டு
அறிந்துவருகிறே னம்மாவனுப்புமென்ருன்
தெரிந்துகமலக்கன்னி சீக்கிரத்திற்போவெனவே
உத்தாரமிட்டா ளுடனேகடோர்க்கயனும்
வித்தாரமானதொரு வில்லுமிகவெடுத்து
பாய்ந்தேரிநிற்கும் பகழிமிகவெடுத்து
காய்ந்தோரைத்தீய்க்குகின்ற கட்டாரிதானெடுத்து
சூலமிகவெடுத்து துடிமிகுந்தவாளெடுத்து
காலன்தனைச்செயிக்குங் கனத்ததெண்டுங்கைப்பிடித்து
போர்க்கோலமாகப் புறப்பட்டான்வீமன்மகன்
ஆர்க்காகிலும்பயந்து அஞ்சான்கடோர்க்கயனும்

## கடோர்க்கயன் வல்லரக்கனிறந்துகிடப்பதை கண்டு மனவருத்தமடைதல்.

ஓடிவனமெல்லாம் ஒருநாழிகைதனிலே
தேடியேபார்த்துலர்ந்து சிரானமாமனைத்தான்
காணமல்நெஞ்சங் கலங்கியேதான்புலம்பி
கோணதமேனியெல்லாங் குலைந்துமனம்புண்ணுகி
எங்கேயினிக்காண்போ மென்னுடையமாமனைத்தான்
சங்கராவென்றுசொல்லி தான்புலம்பிப்போகையிலே
துலையாதபாதையெனுஞ் சொற்பெரியபாரையிலே
மலைபோலேதான்விழுந்து வல்லரக்கன்தான்கிடந்தான்
கண்டான்கடோர்க்கயனுங் கனத்ததொருமாமனையும்
துண்டாய்த்தலையறுத்துச் சுருண்டுகிடப்பதையும்
கண்ணாலேபார்த்துக் கதரிவிழுந்தழுதான்
எண்ணுதயெண்ணமெல்லா மெண்ணிமிகவழுதான்
மாமனரக்கனுக்கு மானிலத்திலீடுமுண்டோ
காமன்தனையெரித்த காரணனர்தன்செயலோ
கூர்கொண்டரக்கனையுங் கொன்றமகாவல்லவனை
ஆர்தானெனவறியேன் அரனேஅபயமென்ருன்
இந்தஅரக்கனையு மிப்போதுகொன்றவனும்
வந்தால்தெரியுமவன் வாள்சுறுக்குங்கைவனும்

என்றேமயங்கி யிவன்புலம்பும்வேளையிலே
நன்ருனபார்த்தனுட நல்லபிள்ளைவாள்வீமன்

## வாள்வீமன் கடோர்க்கயனைப்பார்த்து சொல்லுதல்.

முடுகிக்கடோர்க்கயனுர் முன்வந்துயேதுசொல்வான்
மடியில்கனமிருந்தால் வழியில்பயங்காணும்
பாங்குடனேவாழுகின்ற பாரிலொருவருக்கு
தீங்குநினைத்தாக்கால் திரும்பிவருந்தீங்கவர்க்கு
மண்ணுலகில்வஞ்சமன்றி வழிநடந்துபோர்வாரை
கொன்றுதின்போமென்றுவந்தாற் குத்தமல்லோர்மன்னவனே
தசையிலுணர்விருந்தும் தன்னையுமேகொல்லவந்த
பசுவைவிடுவதுண்டோ பாரிலேமன்னவனே
நம்மிடகாரியமாய் நாமேகும்வேளையிலே
வம்பாகவந்து வழிமரித்தானென்றுசொல்லி
ஏண்டாவழிமரித்தா னென்றவுடன்வல்லரக்கன்
தாண்டியேஓடிவந்து தலையைத்துணிப்பேனென்றுன்
தலையைத்துணிப்பனென்ற சண்டாளன்றன்னையுமே
மலையைஉளிசெயித்த வாரதுபோலேயவனை
காயம்பிளந்து கனத்தவுயிர்வாங்கிவிட்டேன்
ஞாயமதைநீயறிந்து நன்ருயுரையுமென்ருன்
பாலனிவையுரைக்கப் பார்த்தேகடோர்க்கயனும்

## கடோர்க்கயன் வாள்பீமனைச் சினந்துரைத்தல்

ஆலமதுபொங்குமாபோ லவன்மனதிற்கோபமுற்று
வாடாசிறுபயலே வாய்க்கொழுப்பாய்பேசுகிருய்
போடாசிறுவா புத்திகெட்டுப்பேசாதே
அரக்கன்தனைவதைத்தோ னரியயனேவென்றிருந்தேன்
பரக்குங்கொசுகுப் பயலோநீகொல்கிறவன்
கரணமதுபோடாதே கடோர்க்கயனுக்கேயெமனும்
திரணமடாநீயுஞ் சிறுபயலோநிற்கிறவன்
வீறிட்டுநிற்குகிருய் வேண்டாமென்கண்ணுலே

யேறிட்டுப்பார்த்தா லெறிந்துவிடுவாய்பயலே
வல்லரக்கன் தன்னை வதைத்தோமென்றேதுணிந்து
சொல்லவந்தாய்நீயெனக்குச் சுண்டுவிரற்கீடாமோ
பரிட்சைபண்ணவந்துநின்ருய் பயலேவுனதுயிரை
அரைச்சணத்தில்வாங்கி யனுப்புகிறேன்காலனிடம்
பம்மாத்துநாலே பகுடியோபேசவந்தாய்
எம்மாத்திரமெனக்கு யென்ருன்கடோர்க்கயனும்
வீமன்மகனுரைக்க விசையன்மகன் தான்கேட்டு
ஆமோவிதுவும் அதிசயமென்றேதுசொல்வான்

## அபிமன்னன் கடோர்க்கயனை சினந்துரைத்தல்.

உரக்கம்பிடித்துன்மாம னுயிர்தான்விடும்போது
இரக்கமுடனபய மிட்டேவிழுந்ததற்கு
வருவோனுடனெதிர்த்து வல்லமைகள்பார்ப்பமென்றே
இருந்தேன்விளையாடி யிளப்பாரியின்னேரம்
வந்துயென்ஞேடெதிர்த்து வாய்க்கொழுப்பாய்ப்பேசுகிருய்
நிந்தனையாய்ப்பேசுகிருய் நீதான்படித்தவன்போல்
நீயேதுரைத்தாலும் நில்லாதுயென்னுடனே
பேயேயுனக்குப் பிறகுதெரியுமடா
தாங்கப்படாதசொல்லைத் தானுரைத்தாயிப்போது
வேங்கைப்புலியின்முன்னே வெள்ளாடுதானிகரோ
நரியைமதியாமல் நண்டுகரணமிட்டால்
பரியாசம்பண்ணுதென்று பார்க்குமோமன்னவனே
ஆலோலமென்று அரைக்கிரைவோர்பிடுங்க
ஏலேலப்பாட்டு யேதுகாண்மன்னவனே
நெடுகப்பருத்திருந்தால் நீபலமென்றெண்ணுதே
கடுகுசிறுத்ததினுல் காரமதுபோய்விடுமோ
செத்தஅரக்கனுக்குச் செய்வாய்சடங்குகளை
மற்ருென்றுமென்னிடத்தில் வாய்விணுசொல்லாதே
மகிமைபெற்றவாள்வீமன் மதியாமல்சொன்னதெல்லாம்
துகையுடனேகேட்டான் துடிசேர்கடோர்க்கயனும்
நெருப்புயெரிவதுபோல் நீலவிழிகள்ரெண்டும்
அருப்பம்படபடென அவன்கோபங்கொண்டெழுந்து

## வாள்வீமனும் கடோர்க்கயனுஞ் சண்டையிட்டுக்கொள்ளுதல்.

துண்டரீகமாகவுமே சொன்னசிறுவனுடன்
சண்டைசெய்யலாமெனவே தன்கையில்வில்லெடுத்து
தனுவைவளைத்துமிகத் தான்பூட்டினான்கணையை
வினைபுரியவாள்வீமன் மேலேதொடுக்கலுற்றான்
தொடுத்தபகழிதனைச் சுருக்குடனேவாள்வீமன்
பிடித்தேயொடித்துவிட்டான் பிலமறியவம்மானை
அம்புதனைத்தானு மபீமன்பிடித்தொடிக்க
வெம்பிக்கடோர்க்கயனும் வேகமாய்க்கண்சிவந்து
சீரானபாலகனுந் திரலபீமன்தன்மேலே
நூறுயிரம்பகழி நொடிக்குமுன்னே தான்தொடுத்தான்.
மெய்யானகோபமுடன் விசையன்மகன்மார்புதனில்
ஐயாயிரம்பகழி அரைச்சணத்திலேதொடுத்தான்
பாலகனார்தன்கழுத்தைப் பார்த்தேகடோர்க்கயனும்
நாலாயிரங்கணையை நன்றாய்த்தொடுத்துவிட்டான்
தாரணியுமார்பன் தன்னுடையகண்பார்த்து
நூறுபகழி நொடிக்குமுன்னே தான்தொடுத்தான்
வாளாலபீமன் வலதுகையைத்தான்பார்த்து
ஏழாயிரங்கணையை யெடுத்துத்தொடுத்துவிட்டான்
இந்திராதிதேவர்முத லெவரும்பிரமைகொள்ள
சந்திராயுதமெடுத்துத் தானேதொடுத்துவிட்டான்
அக்கினிபோலேயெரிக்கும் ஐந்நூறுபாண்மதை
உக்ரமுடனேதொடுத்தா னுற்றபீமன்தன்மேலே
விரசாய்க்கடோர்க்கயனும் விட்டதொருபாணமெல்லாம்
சரமாரியாகத் தானேவருகையிலே
பூமியதிர்ந்திடவே புனல்சுவரிப்போய்விடவே
ஏமகிரிமுதலா யெட்டுங்கிடுகிடென
வானவர்களெல்லா மருண்டுபிரண்டோட
கானகமெல்லாம்நெருப்பாய்க் கனல்பிடித்துவெந்திடவுஞ்
சந்திரருஞ்சூரியருந் தத்தளித்துப்பின்வாங்க
அந்தரநட்சேத்திரங்க ளதிர்ந்துஉதிர்ந்திடவும்
கார்க்கோடன்போல கடோர்க்கயனும்வில்லெடுத்து

தீர்க்கமுடன்பொருதான் செந்தீபிடித்திடவே
கனைமாரி தன்னைக் கண்டேயபிமனுந்தான்
இனையான்வாள தனை யெடுத்தான்கரந்தனிலே
அஞ்சாமல்நின்று அதிர்ந்துவரும்பாணமதை
பஞ்சாகவேயடித்து பார்த்தன்மகனேதுசொல்வான்
கத்தைவித்தையின்னமுண்டோ கைச்சுருக்குமின்னமுண்டோ
அத்தனையும்பார்ப்போமுன் ஆணுவத்தைப்பாருமென்றான்
வில்பிடித்துநீயும் வெகுநாள்ப்பொருதாலும்
அல்ப்பமென்றேயுன்னை அரைச்சணத்தில்கொன்றிடுவேன்
வல்லரக்கன்தன்பழியை வாங்கவந்தவல்லவனே
வில்லெடுக்குங்கைவிரலை வெட்டித்துணிப்பேனின்றே
வீரமுடனிவ்வார்த்தை விசையமகன்றானுரைக்க
தீரன்கடோர்க்கயனுஞ் சிந்தைதனில்க்கோபமுற்று
கோலமுள்ளதெண்டெடுத்துக் கொக்கரித்து ஆக்கிரமித்து
பாலகன்மேல்விட்டெறிந்தான் பாரமுள்ளதெண்டதனை
தெண்டாயுதம்வருகத் திருமால்மருகனுந்தான்
துண்டாய்நருக்கிவிட்டான் துடிவீரன்வாளாலே
பாலன்துணிவறிந்து பண்பாய்க்கடோர்க்கயனும்
சூலமதைவிட்டெறிந்தான் சுசூர்தகுணன்தன்மேலே
சீறிச்சினந்துவருந் திரமுடையசூலமதை
மாறிப்பிடித்தொடித்தான் வாள்வீமனம்மானை
சிருவனுடதிரத்தால்ச் செயலானதுமரந்து
மருதனுசு தானெடுத்து வாகாகநாணேத்தி
ஓயாமல்மந்திரத்தை யுட்னேயுருச்செபித்து
மாயாவினோதன் வளர்கணையைத்தான்பூட்டி
மார்பிரளவாங்கி வலுத்தகடோர்க்கயனும்
சீர்பெருகுபாலனுட சென்னிதனைப்பார்த்து
விட்டானொருகணையும் விசையாகவேசினந்து
தொட்டபகழியது சுருக்கெனவே தானெழுந்து
ஒன்றுபத்துநூறு ஓராயிரங்கோடி
அன்றுதுகைசொல்ல வடங்காப்பிரளையமாய்
ஆனையதுபோல அதட்டும்சிலதுக்கணை
சேனையதுபோல சிலதுகணைமுன்போகும்

கரடிபுலிபோலே காணுஞ்சிலதுகளை
உரஞ்செய்யுங்கூளியைப்போ லோடுஞ்சிலதுகளை
துடியான அக்கினிபோல்ச் சொலிக்குஞ்சிலதுகளை
இடிபோல்கிடுகிடென்று பேசுஞ்சிலதுகளை
ஒளியானமின்னலைப்போல் ஓடுஞ்சிலதுகளை
பலிகுடுவாவென்று பகருஞ்சிலதுகளை
சூறுவளியதுபோல்ச் சுற்றுஞ்சிலதுகளை
கார்மேகம்போலே கவ்வுஞ்சிலதுகளை
கடல்போலலையெழும்பிக் கவியுஞ்சிலதுகளை
வடவாமுகாக்கினிபோல் வளையுஞ்சிலதுகளை
காயாஷத்திரிகள்செய்து கடோர்க்கயனும்விட்டதொரு
மாயாஷத்திரம்வெகுண்டு வரும்போதுவிண்ணவர்கள்
தேவருடனே திசைநான்முகத்தோனும்
மூவருடனேமுக் கோடிவானவரும்
சூரியனுஞ்சந்திரனுஞ் சுற்றுமுள்ளசித்தர்களும்
பாரிலுள்ளபேரும் பயந்தேமனம்நடுங்கி
தங்கள்நிலைமைவிட்டுத் தானோடிப்போவாரும்
இங்கேயிருக்கஇட மில்லையென்றுபோவாரும்
இனிமேலுகமுடிவு யின்றுசரியாச்செனவே
தனியாய்மலைதனிலே சமாதிசெய்யப்போவோரும்
சிலமிருந்தவளர் தேர்விசையன்புத்திரர்க்கு
காலஞ்சரியெனவே கணக்கெண்ணிப்பார்ப்போரும்
காணமலேயொருவர் கானகத்தில்வாள்வீமன்
வீணாகவேமடிய விதிவசமோவென்பாரும்
இந்தவிதமாய் யெவ்வரும்பயஞ்செனிக்க
அந்தக்கடோர்கயனு மமர்பொருத்தானம்மானை
மட்டுமிதமில்லாத மாயாஷத்திரங்கள்தனை
கட்டளக்ன்வாள்வீமன் கண்ணாலேதான்பார்த்து
திருமால்தனைநினைந்து சிந்தைதனிலவரையும்
குருவாகவேநினைந்து குணமுள்ளவாள்வீமன்
அண்டங்கிடுகிடென அவன்கைவில்வாளெடுத்து
கொண்டலிடித்தாப்போல்க் குழந்தையவன்கொக்கரித்து
கவடுசெய்துதான்விடுத்த கடோர்க்கயன்றன்பாணமெல்லாம்

தவிடுபொடியாகத் தானடித்தான்வாளாலே
வீசினதுபார்த்து மேலோகத்துள்ளோரும்
கூசினார்கள் குவலயத்திலுள்ளவரும்
கருத்துவந்துதான் தொடுத்த கற்பினைமாயாஸ்த்திரத்தை
அருத்தெரிந்தான்காணுமிவன் ஆண்பிள்ளையுமாமெனவே
கவனத்துடன்சினந்து கடோர்க்கயனுமன்னேரம்
இவனைச்செயிக்கும்வகை யெந்தவிதமென்றுசொல்லி
மற்போர்பொருவமென்று மனதில்நினைந்துகொண்டு
கற்பபோல்மனதுடைய கடோர்க்கயனுமப்பொழுது
சண்டைக்கிசைந்துவந்த சமர்த்தனெனும்வாள்பீமன்
அண்டைதனில்வந்து அதட்டியவனைப்பெலமாய்
போடாசிறுபயலே புஜபெலமும்நானறிவேன்
வாடாயினிநாமள் மற்போர்பொருவதற்கு
வந்தாலின்னேரம் மதியாமலுன்னுயிரை
அந்தகனூருக் கனுப்புகிறேன்பாரேனவே

## வாள்வீமனும் கடோர்க்கயனும் மல்யுத்தம் செய்தல்.

வலியச்சருவி மடிபிடித்தான்வீமன்மகன்
புலிபோல்சினந்தெளுந்து போர்விசையன்புத்திரனும்
மடிதான்பிடித்திளுத்தாய் மற்போர்பொருவதற்கு
துடியாகநீயுரைத்த சொற்படியுமாமெனவே
கைகோர்த்திருவருமாய்க் காலோடுகாலுபின்னி
மெய்யோடுமெய்யுரசி வெகுண்டுசினந்தெளுந்து
வலசாரியாகவுமே வாள்வீமன்சுற்றிடவும்
பிலமாயிடசாரி பிரட்டிக்கடோர்க்கயனும்
தூக்கியெரிந்தான்காண் சுழல்காற்றடித்தாப்போல்
தாக்கியெரியவுமே தனஞ்செயனார்புத்திரனும்
ஆகாசவீதியிலே அடைவாகவேசுழன்று
வாகானபூமியிலே வந்தேதமனந்தேரி
சிரிக்கடோர்க்கயனை சினந்துகையினாற்பிடித்து
வாரியெடுத்தெரிந்தான் வலிமையுடனந்தரத்தில்
அந்தரத்திலேசுழன்று ஐயோஅபயமென்று

வந்துவிழுந்தான்காண் மண்மேல்க்கடோர்க்கயனும்
மூர்ச்சைதெளிந்தபின்பு முன்கோபத்தோடெழுந்து
தாச்சன்யமில்லாமற் சமர்த்தன்கடோர்க்கயனும்
வெற்றிமிகச்சொல்லி விசையன்மகன்மார்பினிலே
குத்தினான்கையாலே குவலயமெல்லாம்நடுங்க
அந்தஅடிப்பட்டு அபிமன்மனங்கலங்கி
நொந்துதகையாரி னடிக்குமுன்னேதானெழுந்து
நீட்டினான்கையை நெடுவீமன்றன்மகன்மேல்
மூட்டினான்குத்து முதுகுபிளந்திடவே
குருதிவழிந்தோடக் கோபமதுமேலாகி
உருதியுடன்சினந்து உற்றகடோர்க்கயனும்
வந்துபொருதான்காண் வாள்வீமன்தன்மேலே
இந்தவிதமாக யிருவோரும்சண்டைசெய்தார்
ஆனையுடனானை அடர்ந்துபொருதாப்போல்
வானிலிடிமுழக்கம் வாரதுபோலேகுமுரி
சிங்கமுடன்சிங்கம் சினந்துபொருதாப்போல்
கங்குல்பகலுடனே கலந்துபொருதாப்போல்
வாலியுடன்சுக்கிரீபன் மற்போர்பொருதாப்போல்
வேலவனுஞ்சூரனுமாய் வெகுண்டுபொருத்தாப்போல்
குலங்கள்தழைக்கவந்த கோபாலராமனுடன்
இலங்கையரக்கனுமே யெதிர்த்துப்பொருத்தாப்போல்
எட்டுத்திசையு மீரேழுகோணங்களும்
அஷ்டகிரிமுதலா யதிர்ந்துவிழத்தான்பொருதார்
காடுமலையுங் கனல்பிடித்துவெந்திடவும்
சேடன்முடிகுலுங்கச் சேர்ந்திருவர்தான்பொருதார்
வடகடலுந்தென்கடலும் வந்துகவிந்தாப்போல்
இடமும்வலமுமதா யிருபேருஞ்சண்டைசெய்தார்
இவனையவனடிக்க யேலாமலேபொருதார்
அவ்வனையிவனடிக்க ஆற்றாமலேபொருதார்
இப்படியாய்மற்போ ரிருவருமாய்ச்செய்யயிலே
நற்புடையதீரனெனும் நல்லகடோர்க்கயனும்
சீரென்றபுத்தியினாற் சிந்தையுற்றுப்பாலகனை
ஆரென்றுகேட்டு அறிந்துவதைசெய்வமென்றே

விலகிச்சிறுவன்முன்னே வீமன்மகன்வந்துநின்று
சலுகைக்கடோர்க்கயனுந் தானேதுசெப்பலுற்றான்

## கடோர்க்கயன் அபீமனனை யார்ரென்று வினவுதல்

விருத்தம்

செந்திருமார்பனுன செல்வனேசிறியபாலா
உந்தனேடமர்கள்செய்ய உருதியென்மனமோயில்லே
தந்தையின்பேர்தானென்ன தன்னுடபேர்தானென்ன
வந்தகாரியந்தானென்ன வகையெனக்கருளுவீரோ.

அம்மானை.

வாலப்பருவமுள்ள மன்னவனேஉன்னுடனே
கோலச்சமர்பொருதக் கூடுதில்லேயென்மனது
என்னேயறிந்திருந்தா லிதுவரையுஞ்சண்டைசெய்யாய்
உன்னேப்பயின்றவரு ருன்பேருரையுமென்ருன்
கருத்துடனேயிவ்வார்த்தை கடோர்க்கயனுந்தானுரைக்க
திருத்தமுள்ளவாள்வீமன் செப்புவானம்மானே

## வாள்வீமன் கடோர்க்கயனே பார்த்து வீரபராக்கிரமஞ் சொல்லுதல்

விருத்தம்

திரமுடன்புவியின்மீது சினந்தபோர்க்களத்தில்யாரும்
உரவதுபேசுவாரோ வுயர்குலத்துதித்தோர்தங்கள்
மரவது தவருவாரோ வலுவுள்ளயெதிரிமுன்னே
சரணதுபுகுவாரோதன் தலேயதுபோய்விட்டாலும்

அம்மானே

முகத்தில்மயிர்முளேத்து முனேபடைத்தமன்னவர்கள்
அகத்துடனே தன்கையிலே ஆயுதத்தைப்பெற்றவர்கள்
தலேயில்கிரீடம்வைத்த சத்திரியகுலவங்கிஷத்தார்
நிலேயில்மனதுபெற்ற நீதியுள்ளமன்னவர்கள்
இசலிச்சமர்களத்தி லெதிர்த்துப்போர்செய்யயிலே

பிசாசயெதிரிகையால் பிராணனதுபோனாலும்
பேரூருரைத்தல் பெருமையல்லமன்னவனே
நீருமெனவிளங்க நீதியல்லமன்னவனே
நாடறியப்பெற்றெடுத்த நற்றகப்பனானாலும்
கூடப்பிறந்ததம்பி குணமுடையோனானாலும்
பெற்றுவளர்த்தெடுத்த பிள்ளையதுவானாலும்
வித்தைவருத்திவைத்த மெய்க்குருவேயானாலும்
எதிர்த்துச்சமர்களத்தி லிருந்துசண்டைசெய்யயிலே
துதித்துரவுபேசச் சுகுர்தயில்லைமன்னவனே
காலனெமன்வரினுங் கையாடவேணுமல்லால்
தூலவுடலைநம்பிச் சொந்தடுமையென்பாரோ
நம்மைப்படைத்தசிவன் நமக்கெதிராய்வந்தாலும்
தம்மாலேயானமட்டுந் தான்பார்ப்பதல்லாது
பின்வாங்கலாமோ பெருமையுள்ளமன்னவர்கள்
முன்வாங்கும்போர்க்களத்தில் மொழிந்துரவுபேசுவரோ
போதாதுநீயுரைத்த புத்திபெருசல்லவென்று
வாதாகவேயுரைத்தான் வாள்பீமனம்மானை

## கடோர்க்கயன் அபீமனைப் பார்த்து ஞாயங் கூறுதல்

காவலவன்சொல்லக் கடோர்க்கயனுந்தான்கேட்டு
சேவகனேயாகுமெனச் சிந்தைமகிழ்ந்தேதுரைப்பான்
நீயுமெனக்குரைத்த நீதிமனுவிக்கியானம்
ஞாயமரியாமலுன்னை நான்கேட்கவில்லையிப்போ
துயர்ந்துயிருவருமாய்த் துடங்கியமர்செய்யயிலே
பயந்துவுனக்காகவும்நான் பாராட்டிக்கேள்க்கவில்லை
வல்லமையுமுந்தனவடி வழகும்நான்பார்த்து
கொல்லமனதுசற்றுங் கூடுதில்லைமன்னவனே
சிறுபிள்ளாயுன்னுடைய சிரளகைநான்பார்த்து
கிருபைபெருகுதல்லால்க் கெருவம்வருகுதில்லை
காலன்முதலோரைவெட்டுங் கையாயுதத்தாலே
பாலன்தனைக்கொன்றால்ப் பலனேதுமன்னவனே
வில்லிற்பெரியவனே விந்தையுள்ளபாலகனே

சொல்லிச்சமர்கள்செய்தால் தோசமில்லைமன்னவனே
வன்பானபோர்க்களத்தில் வந்தெதிர்த்தமன்னருடன்
தன்பேருரைத்ததினால் தாட்சியுண்டோபாலகனே
என்கோபம்நீக்கி யிசைந்தனதுபேர்கேட்டால்
உன்கோபம்நீக்கி யுரையுமென்றான்வீமன்மகன்
வளமாகச்சொன்ன வசனமெல்லாந்தான்கேட்டு
விளம்புவானப்போது வில்விசையன்றன்மகனும்

## கடோர்கயனிடம் வாள்பீமன் வந்தகாரியமும் தன்மரபுமுரைத்தல்

### விருத்தம்.

ஆண்டவருனமாய னவனியையளந்தபாதன்
நீண்டவர்தமக்குமன்பாய் நிரைந்தமைத்துணர்களான
பாண்டவரைந்துபேர்களுள் பாரதமுடிக்கவந்த
காண்டீபன்பெற்றெடுத்த காளைநானபீமனென்றான்

### அம்மானை.

பகரும்மதிகுலத்துப் பாண்டுகுந்தாதேவிமனம்
அகலாதபிள்ளை ஐவர்களில்ப்பாத்தனுக்கு
இனியமகன்கானு மென்பேரபீமனென்றான்
தனிமைசுபத்திரையாள் தானீன்றபாலகன்காண்
தந்தையர்க்கும்நூற்றுவர்க்குந் தான்பகைகளானதினால்
அந்தவினையமதா லரவக்கொடியோனும்
கனத்தபுத்தியில்லாக் கபடனங்கேசூதாடி
வனத்தில்விரட்டிவிட்டான் வாகானஐவரையும்
கானகமுமைவர் கடிகியுரைந்தபின்பு
மானகரையாளும் வணங்காமுடிவேந்தன்
முன்னுளெனக்கு மொழிந்ததொருசுந்தரியை
இன்னுளவன்மகனும் லெக்கணர்க்குக்கலியாணம்
செய்யவென்றுமாயனுட சிந்ததனைத்திருத்தி
வையகமெல்லாமறிய மணமுகூர்த்தம்நிச்சயித்து
வணங்காமுடியோனும் மாப்பிளையுஞ்சேனைகளும்

ருணங்காண்நயமெனவே கூட்டமிட்டுயெல்லோரும்
வருகிறுரென்றுசொல்லி வன்மையுள்ளதூதவனும்
உருமையுடன்வந்து உரைத்தான்காணம்மிடத்தில்
அந்தவயணமெல்லா மரிந்துவருவோமெனவே
இந்தவழிமார்க்கம் யானும்வருகையிலே
வல்லரக்கன்கண்டு வழிமரித்துச்சண்டைசெய்தான்
நல்லபுத்தியானுரைக்க நன்மையெனக்கேளாமல்
ஓடியெனைப்பிடித்து வுயிர்வதைக்கவந்தான்காண்
நாடியவன்தலையை நானருத்தேன்வாளாலே
விளுந்தானபையமென்று விருடையசொற்கேட்டு
எழுந்துவந்தாயென்னுடனே யெதிர்த்தீர்காணிருமிப்போ
உம்மோடெதிர்த்து யுத்தமதுசெய்தேனுன்
இம்மாத்திரமுமல்ல லேதுமில்லைமன்னவனே
வளிதான்விலகிவிடும் வளிவிடவுமாட்டீருல்
நெளியாம்லேவாரும் நேர்ந்துசமர்செய்வதற்கு
பேச்சுப்படிப்பதென்ன பின்னுமுன்னும்பார்ப்பதென்ன
கூச்சமென்னவென்றுசொல்லிக் கூறினுன்வாள்பீமன்
வீமன்மகன்கேட்டவுடன் மெய்சோர்ந்துகைசோர்ந்து
தேம்பியளுதுகொண்டு சிறுவனைக்கையாலமர்த்தி
பாலகனேமுன்னுள்ப் பழவினையோநானரியேன்
காலமிதுவெனவே கடோர்க்கயனுங்கூரலுற்றுன்

## கடோர்க்கயன் தன்மரவும் வரலாரும் அபிமன்னனிடம் சொல்லுதல்

விருத்தம்

தயவுவாய்மைநிரைதவரிடாமல்வரு
    தர்மபுத்திரசகோதரன்
சாடைகண்டுபொருவீமராசனருள்
    சாதகத்தில்வருபுதல்வன்யான்.
கயல்சிரந்தவிழிகமலகன்னியருள்
    கடோர்க்கயனெனதுபேருமே
கானகத்திலுரைவல்லரக்கனுயிர்
    காருமென்றபையமானதால்

செயமிகுத்தவனைவெல்வதாரெனவே
தேடியானும்வரும்வேளையில்
செல்வனுன்னையெதிர்கண்டுமென்னுடைய
சிரியதம்பியெனவரிகிலேன்
பயணமென்றுதனிவழியில்வந்தசிறு
பாலனேயுனதுமேனியிற்
பாணமெய்திடவும்ஞாயமோகொடிய
பாவமேயெனவிளம்பினான்.

அம்மானை.

தம்பியுமேநீயாச்சு தமையனுமேநானாச்சு
வம்பிலிருபேரும் மாழநினைந்தோமே
வல்லரக்கன் தன்னாலே வனத்திலுனதுயிரைக்
கொல்லநினைந்தவொரு கூற்றுவனுமானேனே
கோபாலன் தன்மகளைக் குறித்துவரும்தம்பியுன்னை
மாபாவிகொல்ல மனதில்த்துணிந்தேனே
தம்பியென்றுநானுமுனைச் சற்றுகினுமறிந்தால்
அம்புதொடுப்பேனோ அடிக்கவுமென்கைவருமோ
தூக்கியெரிவேனோ துன்மார்க்கஞ்செய்வேனோ
வாக்கில்ப்பிறக்காத வசனமுரைப்பேனோ
கண்ணேமணியேயென் கருத்துகந்ததம்பியரே
அண்ணனுரைத்த ததினாலேகுற்றமுண்டோ
தமையனுரைத்ததினால் தாட்சியுண்டோதம்பியரே
நிமையில்விரல்படவே நெடுவிரலைக்கொய்வாரோ
இந்தவிதிநமக்கு யிவ்வனத்தில்வந்ததுவுந்
தந்தையர்கள்செய்தபலன் தற்காத்துக்கொண்டதுகாண்
தன்மர்க்கிளையவொரு தனஞ்செயனார்புத்திரனே
நன்மைக்கிடரில்லையென்பார் நம்மளவிற்கண்டோமே
சீரானவார்த்தைகளைச் செப்பிக்கடோர்க்கயனும்
மார்போடுமார்புரள வாள்விமனையணைத்து
மனதில்துயரமெல்லாம் மாத்திவிடும்தம்பியரே
நினைத்தபடிமுடிப்பேன் நீர்சலிக்கவேண்டாங்காண்

### விருத்தம்

குணத்தினிலதிகமான குழந்தைவாள்வீமாகேளாய்ப்
பணத்தினுக்காசைபூண்ட பச்சமால்மகனைநானே
மணத்துடன்மாலைசூட்ட வருகின்றவேந்தர் தன்னைக்
கணத்தினிற்செயிப்பேனென்று கடோர்க்கயனருளிச்செய்தான்

### உ-வது விருத்தம்

மட்டில்லாயெட்டக்குரோணி மன்னரேதிர்வந்தாலும்
வெட்டியேரணக்களத்தில் வெற்றியுமுனக்கேதந்துத்
தொட்டுவுன்விரல்கொடுத்துச் சுந்தரிதனக்குத் தாலிக்
கட்டிடச்செய்வேனென்று கடோர்க்கசனருளிச்செய்தான்

### ௩-வது விருத்தம்

அருளியதமையன்பாத மபீமனும்வணங்கிவாயை
இருகரமதனைல்பொத்தி என்னையாள்பவனேயானுஞ்
சிறுபயலரிந்திடாமல்ச் செய்திடுங்குற்றமெல்லாங்
கருதிடாமனம்பொருத்துக் கார்ப்பதுன்கடனேயென்றான்

### அம்மானை

கண்ணுரைப்பார்த்துக் கடோர்க்கயனுந்தானுரைக்க
அண்ணாவியென்று அடிதொழுதுவாள்பீமன்
அரியாமல்ச்செய்தகுற்ற மத்தனையும்நீர்பொருத்துச்
சிரியெனைக்காருமென்று தெண்டனிட்டான்வாள்பீமன்
வாள்பீமன்றன்னுடனே மகிழ்ந்துகடோர்க்கயனும்
பாள்போனவல்லரக்கன் படுகளத்தில்வந்துகண்டு
அரக்கன்றனையடக்கி அவன்சடங்கைத்தான்முடித்து
சிரக்கயிருவருமாய்த் தீர்த்தமதுதானாடி
என்னுடையதம்பியரே யென்கூடவாருமென்று
தன்மையாய்கைகோர்த்துத் தானேநடக்கலுற்றான்

## கடோர்க்கயனும் வாளபீமனும் கமலகன்னி யிடம் செல்லுதல்

இருண்டவனங்கடந்து யின்பமுள்ள ஆர்கடந்து
பெரியஅருவிப் பெருமலையுர்தான்கடந்து

மாயாவினோதன் மருகனையுந்தான்கூட்டி
தாயாங்கமலகன்னி தன்னிடத்தில்வந்துநின்று
வந்தானுனதுமகன் வாள்பீமனென்றுசொல்லி
சந்தோசமாகத் தான்பணிந்துவீமன்மகன்
தாமரையின்பாதமதில்த் தானிருவரும்வணங்கி
கோமான்கள்நிற்க கோதையரும்மெய்மகிழ்ந்து
வாள்த்தியிருவரையும் வாரியெடுத்தணைத்து
தாள்விலாநீங்கள் தான்வாள்வீரென்றுரைத்து
பெருமைக்கடோர்க்கயனை பெற்றெடுத்ததாய்பார்த்து
அருமையுள்ளபாலனிவ னார்காணுமென்றுரைத்தாள்
உரைத்தமொழிகேட்டு உரைப்பான்கடோர்க்கயனும்
மறைத்துவிடலாமோ வளர்கின்றசந்திரனை
அளகுயர்ந்ததர்ம ரவர்க்கிளையவீமருக்கு
இளையஅருச்சுனனு ரீன்றெடுத்தபாலனிவன்
வாசமுள்ளமாயன் மகளானசுந்தரிமேல்
ஆசைகொண்டுவந்தான் அபீமனிவன்பேரெனவே
வணக்கமுடன்தொழுது மாதாவின்முன்னாக
கணக்குடனேயிவ்வயணங் கடோர்க்கயனுந்தானுரைத்தான்
பிள்ளையுரைத்தமொழி பிரியமுடன்தாய்கேட்டு
உள்ளமிகமகிழ்ந்து உரைப்பாள்கமலகன்னி
காண்டீபன்பெற்றெடுத்த கண்மணியேயென்மகனே
நீண்டபுகழுடைய நெடுமால்மருமகனே
திங்கள்முகவதனு செய்யபுகழ்வாள்வீமா

## கமலகன்னியிடம் அபீமன்னன் தன்வரலாறுசொல்லுதல்

### அம்மானை

இங்குவந்தகாரியத்தை எங்களுக்குச்சொல்லுமென்றார்
அன்னையரைப்போற்றி அபிமனுமங்கேதுரைப்பான்
முன்னாளில்த்தானும் மொழிந்ததொருபூருவமும்
கானகத்திலேவர் கடிகிடந்ததுவும்
மானிலத்தில்நூற்றுவர்கள் மனாவுதப்பிச்செய்ததுவும்
சுந்தரியைக்கேள்க்க சுபத்திரையாள்போனதுவும்

சந்திரமுகலெட்சுமியாள் சண்டையிட்டுப்பேசினதும்
தாயார்சபதமிட்டுத் தானோடிவந்ததுவும்
மாயன்முகூர்த்தமிட்டு மணவோலைவிட்டதுவும்
வயணமதுவரிந்து மாப்பிளையும்நூற்றுவரும்
பயணமதுவாகப் படைகூடிவந்ததுவும்
தூதுவனுமோடிவந்து சொன்னமொழிநான்கேட்டு
ஆதரவாய்ப்பார்த்து யானுந்தனியாக
வரும்வழியிலேயரக்கன் வந்துமரித்ததுவும்
சருவியமர்செய்தவனைத் தன்வாளால்வெட்டினதும்
அரக்கன்குரல்கேட்டு அண்ணைவிவந்ததுவும்
பிரக்கினையில்லாமலிரு பேர்கள்சமர்செய்ததுவும்
தன்பேரைக்கேட்டிசைந்து சமாதானமானதுவும்
சொன்னான்படிப்படியாய்த் தோற்றவுமேவாள்வீமன்
கட்டளகன்சொன்னதெல்லாங் கமலகன்னிதான்கேட்டு
இட்டவிதியோவெனவே யேங்கிமிகவழுது
அய்யோமகனே அவதிமிகப்பட்டீரோ
மெய்யானகீர்த்திபெற்ற வில்விசையன்புத்திரனே
வகைகள்தெரியாமல் மாண்டிரந்துபோவதற்கோ
பகைகள்பண்ணிக்கொண்டீரோ பாவரக்கன்தன்னாலே
கர்மமோஉங்களுக்குக் கானகத்தில்வந்தபிழை
தர்மசெயலாலே தானேபிழைத்தீர்காண்
என்றுகமலகன்னி யிருவரையுங்கொண்டாடி
நின்றஅபீமனுக்கு நேராகக்காப்பணிந்தாள்

## விருத்தம்

மாப்பிளைநீ தானந்த மாயவன்மகளுக்கென்று
காப்பதுபுனைந்தாளந்தக் கானைவாள்பீபன்கையில்
தோப்பதுஅரவுயத்தோன் சுகம்பெற்றுஅடைவீரென்றுங்
கூப்பிடுமமூர்தவாக்குக் கொடுத்துப்பின்னுரைக்கின்றாளே

## இதுவுமது.

அன்புளகடோர்க்கயாகே ளருமையாயுனக்குவந்த
தம்பிபின்னைகச்சென்று சத்துருதனைச்செயித்து
நம்பினசுந்தரிக்கி நல்மணமாலைசூட்டி
தெம்புடன்வருவீரென்று திருவுளமருளிச்செய்தாள்

இதுவுமது

அருளினதாயார்பாத மனுக்கிரம்பெற்ருேமென்று
இருவருந்தொழுதுபோற்றி யிச்சணமங்கேசென்று
வருகிறேமென்றுசொல்லி வாளொடுதனுசுமேந்தி
சிருவர்களிரண்டுபேருந் திசைதனைநோக்கிச்சென்ருர்

## கடோர்க்கயனும் வாளபீமனும் துவாரகைக்குச்செல்லுதல்

அம்மானை

காப்பணிந்ததாயார் கமலகன்னிதன்பாதம்
வாய்ப்புடனேபோற்றிசெய்து வளமர்ய்பிருவருமே
நடந்தார்வழிகூடி நாரணனேதஞ்சமென்று
படர்ந்தநிழல்தன்னில்ப் பாங்காயிருபேரும்
இருந்திருந்துநாமு மிளப்பாரிப்போவமென்று
பொருந்தியிருவருமாய்ப் போகவென்றுசம்மதித்து
பாதைநடந்தார்களொரு பச்சைமலைமேலே
சீதளமாயிம்மலையில்த் தீர்த்தமொன்றுமுக்கியமாய்
அந்தநதிக்கரையி லாலமரநிழலில்
வந்துயிருந்தார்கள் மன்னவர்களன்னேரம்

## வல்லரக்கி தன்னை மாலைபிடச்சொல்லுதல்

அம்மானை.

கானகத்தில்வாளுங் கடியதொருவல்லரக்கி
ஆனைகுதிரை பன்றி அன்பதுநாருபிரத்தை
தினறுபசியாரியபின் சிரந்ததண்ணீர் தான்குடிக்க
அன்றுநதியினில்வந் தரக்கியுமேநீர்குடித்து
சிவந்தம்பிருடைய சென்னியுள்ளவல்லரக்கி
கவந்தமெனக்கூத்தாடிக் கருமலைபோல்வந்துநின்று
பல்லைதிரந்தாள் பதினுயிரமுளத்தில்
கொல்லத்துணிந்துவந்த கூற்றுவனேவென்றுயெண்ணி
வேகித்துவீமன்மகன் வில்லெடுத்தானப்போது
மோகித்துவந்தேன்காண் மோடியோமன்னவனே
எந்தவூர்நீங்க ளிப்போதுயிவ்வனத்தில்

வந்தவகைதனையு வளமாகச்சொல்லுமென்றாள்
அப்போதுசொல்வா னனகடோர்கயனும்
இப்போதுகேட்டருள்வாய் யெங்களுடசேதிகளை
தம்பியபீமனிவன் தமையனுமேநானாகும்
அம்புவியிலிந்த அபீமனுக்குக்கல்யாணம்
மாயன்மகள்சுந்தரியை மாலையிடப்போறோங்காண்
ஞாயமிதுவென்றான் நல்லகடோர்க்கயனும்
சொன்னமொழிகேட்டுத் தோகையருமேதுரைப்பாள்
யென்னபுத்திகாணுமக்கு யின்பமுள்ளமன்னவனே
கொச்சையிடையனெனுங் கோபாலன்தன்மகளை
இச்சைகொண்டுவந்தீரே யேதுமரியாமல்
நூற்றுவர்க்குத்தன்மகளும் நண்மையுள்ளலெக்கணர்க்கு
நேற்றேமுகூர்த்தமிட்டு நிறைவேறிப்போச்சுதுகாண்
மஞ்சள்நீராடுகிறார் மாப்பிளையும்பெண்ணுடனே
கொஞ்சிவிளையாடுகிறார் குழுந்தமணப்பந்தலிலே
நீங்களதுபார்த்து நெடுமூச்சுவிட்டெரிந்து
ஏங்கிவருவதற்கு யிப்போதுநீர்போரீர்
உம்முடையதம்பியற்கு முமக்குமொருபெண்டீராய்
செம்மையுடனென்னையிப்போ செய்யுங்கலியாணம்
பேருடையசுந்தரியாள் பிள்ளைபெருகுமுன்னே
நூறுபிள்ளையிப்போ நொடிக்குமுன்னேநான்பெருவேன்
அவளையதிசெயமா யபீமாநீநினையாதே
எவருமெனைப்போலே யில்லையிந்தப்பூமியிலே
காலழகுங்கையழகுங் கண்ணழகென்போலுமுண்டோ
மேலழகும்பல்லழகும் விரலழகுங்கண்டீரோ
சுருண்டமயிரழகுஞ் சூட்டினையும்பார்த்தீரோ
இருண்டகருப்பழகு மெங்கேயுநீர்பார்த்தீரோ
மன்னவரேயென்முலைக்கி மலையுஞ்சரியலவே
தென்னவரேயென்னிடைக்கிச் செக்குஞ்சரியலவே
உத்தமரேயென்னுதட்டுக் குரலுஞ்சரியலவே
கத்தவரேயென்வயிற்றுக் கடலுஞ்சரியலவே
என்னுடையவாய்மொழிக்கி யிடியுஞ்சரியலவே
நன்னயமாயுங்களுக்கு நானேமனைவியல்லால்

கையால்ப்பிடிக்கக் கசங்கிவிடுஞ்சுந்தரிமேல்
மெய்யானஆசைகொண்டு வீணுகப்போரீரே
பிடிக்கயிடையில்லாத பெண்ணின்மேலாசைகொண்டு
அடிச்சுடவுங்கானகத்தி லேயோநடந்துவந்தீர்
கடல்நிரைந்ததண்ணீருங் கால்வயிருமெரந்தினுக்கு
பிடியரிசிபொங்கியுண்ணும் பெண்தேடிப்போவாரோ
மாராதஆசையினல் வந்தேனுமதுஇஷ்ட்டம்
கூருமலொன்றுங் குணப்பிசகுஞ்செய்யாமல்
என்களுத்தில்தாலி யிப்போதேகட்டுமென்ருள்
ஆசைகொண்டுவல்லரக்கி அவளுரைத்தசேதியெல்லாம்
தேசம்விட்டுவந்த சிறுவர்களுந்தான்கேட்டு
ஏக்கம்பிடித்துவந்த இராட்சசியைவாளாலே
மூக்குமுலையுடனே முன்மயிருந்தானருத்து
விரட்டினனப்போ விசையனுடபுத்திரனும்
மூரட்டுவலுவரக்கி மூக்கிளந்தோமென்றுசொல்லி
இவரைவழிமரித்து யிப்போதேகொல்வனென்று
கவலைபெரிதாகிக் கானகத்திலேயோடி
தன்னைப்பயின்றெடுத்த் தகப்பனிடந்தனிலே
மின்னியிடிக்குமொரு மேகமென்வேகதரி
அழுதுபுரண்டழுதா ளப்போதுராட்சதனும்
தொளுதமகள்தனையுந் தூக்கியரவணைத்து
பாக்கியமேயென்னுடைய பாலகியேயுந்தனையும்
ஆக்கினையார்செய்தவனு மார்காணுரையுமென்ருன்

விருத்தம்.

பஞ்சவாளஞ்சுபேரில்ப் பற்குணன்வீமன்பெற்ற
தஞ்சமாம்ரெண்டுபிள்ளை சமர்த்தர்கள்வனத்தில்வந்தார்
கொஞ்சியென்மோகத்தாலே கூடிநீர்மருவுமென்றேன்
அஞ்சாமல்வாழினுலே யாக்கினைசெய்தாரென்ருள்

இதுவுமது

பொற்கொடியுரைத்ததெல்லாம் புஜபலவரக்கன்கேட்டுக்
கற்புடைமாதேயுந்தன் கணவன்வல்லரக்கனுனும்
மற்புயத்தபீமன்கையால் மாண்ட்டுமரிகிலாயோ
முற்பயவிதியால்ச்சென்ருய் முனிந்தென்னசெய்வமென்ருன்

அம்மானை

நன்றியுள்ளஉன்புருஷன் நல்லவல்லரக்கனையும்
கொன்றவர்கள்தன்னிடத்திற் கோதையரேபோவாரோ
செப்பமிலாவாக்கினைகள் செய்தாரென்றெண்ணாதே
தப்பிப்பிழைத்துயிங்கு தான்வந்ததேபோதும்
மூக்கிருந்தாலென்னபலன் முலையிரண்டும்நீசுமந்து
தூக்கித்திரிந்ததினால் சுகிர்தமென்னவென்மகளே
மதிமயங்கவேண்டாமென் மகளேயெனத்தேற்றி
சதிருடனேராக்ஷதனுந் தான்போனான்கானகத்தில்
கவலைபெரிதாகிக் கட்டரக்கிபோனபின்பு
இவர்கள்தகையாரி யிருந்தயிடம்விட்டேகி
மையானகானகத்தில் மலையுநதிகடந்து
எய்யாமலேநடந்து யிருவருமாயப்போகையிலே

## கடோர்க்கயனும் பீமனும் ராவான்படுத்திருப் பதைப் பார்த்தாச்சரியப்படுதல்

கருமுகில்போல்மேனி கனத்ததொருராவானும்
ஒருமலையில்சாய்ந்துகொண்டு ஒருமலையிற்காலநீட்டி
வானுரையுமேகமதை மன்னவனுந்தான்பிடித்து
தானேகசக்கியவன் தண்ணீர்குடிப்பதையும்
கண்டானபீமன் கடோர்க்கயனும்மந்நேரம்
விண்டார்மனதில் மிகுந்தபயமுண்டாகி
அண்ணாவேநீருமிந்த அதிசயத்தைப்பார்த்தீரோ
கண்ணாலேபார்க்கவுமென் கண்ணிரண்டுங்கூசுதுகாண்
இப்படியும்பிர்மா யிவனைப்படைத்தாரோ
எப்படிநாம்போவோ மிவனுடையகால்நுழைந்து
தாள்ந்துநடப்பதற்குச் சம்மதியோஅண்ணாவே
ஆள்ந்தவுரைசொல்லுமென்று அபிமன்னன்றானுரைத்தான்
அப்படியேசொல்லுகிறேன் அஞ்சாதேதம்பியரே
எப்படியும்நாம ளிவனைவழிவிலகி
போகவழிசெய்யுகிறேன் பொருங்காண்நொடியிலென்று
வேகமுடன்சென்றான் வெற்றியுள்ளராவான்முன்
கிட்டவனுகிநின்று கிருபையுடனேதுசொல்வான்

வட்டமலைமீதிலொரு மலையிருந்தவாரதுபோல்
மேல்முகட்டையூடுருவ வீத்திருக்குமண்ணுவி
கால்மடக்கமாட்டீரோ கடிகிவழிநாகைள்செல்ல
பாதைவழிதனிலே பருங்காலைநீட்டுவரோ
ஏதுகாணிப்பிள்ளையை யெவருஞ்சகிப்பூரோ
நாங்கள்வழிநடந்து நன்மையுடனூர்சேர
வாங்குமுமதுடைய வளர்ந்திருக்குங்காலதனை
நீட்டியிருப்பதுவும் நீதியல்லவென்றுரைத்தான்
மேட்டிமையாய்ச்சொன்னன் வீமனுடபுத்திரனும்
இவனுரைத்தசெய்தியெல்லா மிராவானுந்தான்கேட்டு
செவிபொருக்கமாட்டாமல்ச் செப்புவானம்மானை

## கடோர்க்கபனும் வாள்பீமனும் இராவானிடம் தர்க்கம்பேசுதல்

### விருத்தம்

குளந்தைப்பயலுஞ்சிறுபயலுங் கூடிவனத்தில்வந்தீரோ
இளந்தைப்பருவந்தனிலுமக்கு யிந்தக்கெருபங்கொடுத்தவரார்
வளர்ந்தமரத்தைபிடுங்கியுங்கள் மண்டைசிதரவடித்திடுவேன்
நுளைந்துபோமென்கால்வழியே நுளைந்தபோர்கள்தனைக்கேள்ப்பாய்

### அம்மானை.

செப்புகிறேனுனுமிப்போ சிறுபயல்காவுங்களுக்கு
இப்புவியையாளுகின்ற யேந்தல்திரியோதனனும்
துணையானதம்பியர்கள் தொண்ணூற்றுஒன்பதுபேர்
இணையானமகுடமுடி ராசமன்னருள்ளோரும்
வெத்திபெருங்கன்னன் விரல்வேந்தர்கால்நுளைந்தார்
சுத்தமுள்ளஆசாரி துரோணர்சிறுவிஷ்ட்டுமரும்
ஆருக்குமஞ்சாத அசுவத்தாமாதவிர
போருக்கெதிருன புவியாளும்மன்னவரும்
சமர்க்களத்திலமுன்னேருஞ் சயிந்தவனுமற்றுமுள்ள
அமர்க்களத்துக்கேத்ததொரு ஆனைகுதிரைகளும்
சிங்காரமானதொரு சேனைதளமுள்ளதெல்லாம்
எங்கால்வழியாக யேகினரிப்சோது

புத்திகெட்டுப்போனரோ பூதளத்துமன்னரெல்லாம்
சுத்தரணவிரபத்திர சூரரோங்களுந்தான்
அசுகையரியவென்று அளப்புவைத்தோபேசுகிறீர்
கொசுகுபோல்நீயிருவர் குழந்தையல்லோநீங்களுந்தான்
வந்தானேலெக்கணனு மாப்பிளைநானென்றுசொல்லி
இந்தாலோபோரான்காண் னென்கவட்டிலேதுளைந்து
அரியஉமக்குரைத்தேன் அவதிப்படவேண்டாம்
நரியினிடந்தனிலே நண்டுகொணமிட்டால்
பரியாசம்பண்ணுமென்று பார்த்திருக்குமோநரிதான்
தெரியாமல்நீங்கள் சிறுபிள்ளைபுத்தியினல்
விரியத்தினலேவிகுவு செய்துகொள்ளாமல்
காரியத்தைப்பாருங் கவட்டின்வளியேநுளைந்து
நடந்துபோமுங்களுக்கு நல்லபுத்திநாமுரைத்தோம்
திடந்தானிதுவெனவே செய்பினன்ராவாணும்
இராவாணுரைத்தமொழி யிருபேருந்தான்கேட்டு
போராமைகொண்டு புண்ணியருமேதுரைப்பார்
மலைபோல்ச்சடலமுமாய் மன்னவனேநீயிருந்தால்
தலைமேலெழுதிவைத்த சதுமுகனும்நீர்தானே
குப்பைதனில்க்கீரை கொளுத்துமுளைத்தெளுந்து
கப்புங்கவருமிட்டால்க் கதவுநிலைக்காகிடுமோ
பருத்திப்பொதினையும் பாரமென்றுபேசுகிறீர்
நெருப்புப்பொரிநாங்கள் நீர்தானரியீரோ
உயர்ந்தமலைமேலே உளுக்காந்திருந்ததினல்
பயந்துவிடுவோமோ பாதைதனைவிட்டுவிடும்
நீட்டியகால்தன்னை யிப்போநீர்மடக்குமல்லாட்டால்
தாட்டிகமாயெங்களுடன் சமர்யொருதரீர்வாரும்
பருவமுடன்கிட்டவந்து பாலர்களுந்தானுரைக்க
இருவருரைத்தமொளி இராவாணுந்தான்கேட்டு
வாரீர்சிறுபயல்கா வளர்மலையைத்தான்பார்த்து
ஓரியடுத்துநின்று வூளையிடும்வாரதுபோல்
செயல்பெருகும்பட்சிகளில் செங்கருடனுக்கெதிராய்
உயரப்பரப்பனென்று ஊர்க்குருவியைபோலும்

வல்லமைகள்பேசி வளிவிடவுஞ்சொன்னீரே
நல்லதொருவசனம் நாமுரைக்கக்கேட்டருளும்

### விருத்தம்.

தெளிவாயுரைத்தசிறுவர்களே செப்பும்வகையொன்றதுகேளீர்
ஒளிவாமெனதுகைக்கணை தானொன்றேவிடுவேனும்மாலே
சுளிவாயதனைவிலக்கிமனத் துணிவாயென்முன்வருவீரேல்
வளிதானுமக்குவிடுகின்ற வகைதான்சபதமென்றுரைத்தான்.

### அம்மானை.

இப்போதொருபாண மெய்புகமேறநீங்களுந்தான்
தப்பிமனத்திடமாய்த் தான்வருவீராமாகில்
உத்தமரேஉங்களுக்கு உபசாரமாகவுந்தான்
வெத்திசெய்வீரென்று விடுவேன்வளியதனை
சம்மதியோவென்றுஞ் சபதமிதுவெனவே
செம்மையுடன்ராவான் செப்பினனம்மானை
இபம்புமொளியதனை யிருவர்களுந்தான்கேட்டு
நயம்புகளநீருரைத்த நற்சபதமெங்களுக்கு
சம்மதியுமாச்சுதுகாண் சமகதரியவேணுமிப்போ
உம்முடையகையால் ஒருமித்துப்பாருமென்றார்

## இராவான் அபீமன் கடோர்க்கயன் பேரில் நாகாஸ்திரம்விடுதல்

இசைந்தசிறுவர்கள்மேல் இராவான்மனம்வெகுண்டு
அசைந்துபுவிநடுங்க அண்டமெல்லாந்தீய்ப்பிடிக்க
நாகாஸ்த்திரமதனால் நல்லதொருவீரப்பூட்டி
வாகாய்ப்பிரணவத்தின் மந்திரத்தையுச்சரித்து
மார்பிரளவாங்கி வலுவுடையராவானும்
சீர்பெரியபாலர் சிரம்பாத்துயெய்யலுற்றான்
கையால்த்தொடுத்தகணை காலாந்தகன்போலே
மெய்யானகானகமும் வெந்துநீறாகிடவே
திங்கள்கதிரோனுந் தெற்குவடக்காகிடவே
எங்கும்புகையெழும்ப யிவ்வுலகுமவ்வுலகும்
தேவராசுரர்முதல் ஜீவஜெந்துவுள்ளதெல்லாம்
மூவருடன்கலங்கி மூற்சைகளுண்டாகிடவே

கடல்சுவரிப்போய்விடவுங் கமர்பிளந்துபூமியெல்லாம்
வடவையனல்பரந்து மகாமேருவும்நடுங்க
சீரிச்சினந்துகொண்டு சீக்கிரத்திலேயெழும்பி
மாரிப்படமெடுத்து வாயில்விசங்கள்கக்கி
தேடிச்சரிப்படுத்தச் சிறுவரெங்கேயென்றுசொல்லி
நாடியெழுந்ததுகாண் நாகாஷத்திரந்தானும்
வருகுங்கணையினுடமகா கோபந்தான்பார்த்து
தெரிந்துமனந்துணிந்து தேர்விசையன்புத்திரனும்

## வாள்பீமன் நாகாஸ்திரத்தை வெட்டுதல்

தமையனுக்குமுன்னாகச் சணப்பொழுதில்வந்துநின்று
எமையடிமைகொண்டருளு மென்பெருமாள் தஞ்சமென்று
பண்ணுனஐவருட பாதமதைநெஞ்சில்வைத்து
கண்மூடியேயபீமன் கருட்டியான்ங்கள்செய்து
கட்டளகன்வாளெடுத்துக் கடுநாகபாணமதை
வெட்டினான்பட்டு விளுந்ததுகாண்ரெண்டுதுண்டாய்
அரவக்கணைமடிய அந்தரத்திலுள்ளவர்கள்
பொருமைஅபீமனுக்குப் பூமலர்கள்தான்சொரிந்தார்
சித்தர்முனிவர்களுந்தேவர்களுங்கொண்டாடி
வெத்திரணசுத்த வீரனிவனுக்குமென்றார்
திட்டிபடுமென்றுசொல்லித் திருநீர்தனைப்பூசி
கட்டியணைத்துக் கடோர்க்கயனுமுத்தமிட்டான்
கணையானதையருக்கக் கண்டுமிகுராவானும்
உணர்வாயகமகிழ்ந்து உயர்ந்தமலைவிட்டிறங்கி
துதித்துநலம்பேசிச் சுருக்காகஓடிவந்து
கதித்தயிருவரையுங் கையாலரவணைத்து
நான்விடுத்தபாணமெனும் நாகாஸ்த்திரந்தனக்கு
மான்பிடித்தயீஷ்பரனும் மாயவருமஞ்சிடுவார்
எட்டுத்திசையிலுள்ளோரென்னுடையகைக்கணையை
தட்டிவிடமாட்டார்கள் தம்பியரேநீங்களுந்தான்
வலுவுடையாரென்றுசொல்லி வளிதானுமக்குவிட்டேன்
சிலையில்மிகுத்தவரே செப்புமொளிகேட்டருள்வீர்

ஆரெவரென் றுஉம்மை யறிந்திருக்கவேணுமுங்கள்
பேரேதாவுங்கள் பிதாபேரைச்சொல்வதுடன்
எந்தவூர்நீங்க ளிங்குவந்தகாரணமேன்
வந்தவிபரமதை வாகாயுரையுமென்று
மனமகிழ்ந்துராவான் வகையுடனேதான்கேள்க்க
கனமிகுந்தசொல்லான் கடோர்க்கயனுமேதுரைப்பான்

## இராவானிடம் கடோர்க்கயன் தன்பிரப் புரைத்தல்

### விருத்தம்.

குருகுலத்தவரில்மிக்க கொற்றவரைவர் தன்னில்
தருமனுக்கிளையவீமன் றன்மகன்கடோர்க்கனென்பேர்
விருதுசொல்விசையன்பெற்ற விதரணனபீமனிந்த
சிருவனுமெனக்குத்தம்பி செப்புவேனின்னங்கேளீர்

### வேறு விருத்தம்.

எங்கள்தந்தையர்க ளைவரிப்புவி
யிளந்துகானகம தேகினர்
தங்கள்செல்வமு மிகுந்ததென்றுதுரி
யோதனுதியர்கள் கூடியே
எங்கள்தம்பியிவ் வபிமனுக்குமுன்
னிசைந்தசுந்தரி தன்னையும்
தங்கள்சேயெனு மிலக்கணர்க் கவர்கள்
தாலிபூட்டிடக் கருதியே

2-வது

வஞ்சமேகுடி கொண்டநெஞ்சுடைய
மன்னனான துரியோதனன்
கஞ்சமாமலர் வதனமாயவன்
கருத்திசைந்திட விவர்கள்நாள்
அஞ்சிடாமலே குறித்துவந்திடு
மரசனுண்மையு மறியவே
வஞ்சமின்றியே வழிநடந்துநாம்
வந்தவாரென வழுத்தினன்.

## இராவான் இருவரையும் தம்பிகளெனவரிதல்

அம்மானை.

ஈசனுமேதானரிய யென்னுடையதம்பியர்க்கு
பேசியிருந்தபெண்ணை பெருமாள்பிரட்டதினால்
தீமையுடைய திரியோதனன்பாவி
சேயனிலக்கணர்க்கு ஜெயசோபனமுடிக்க
நல்லமுகூர்த்தமது நாள்மூன்றெனத்துதன்
சொல்லுமொளிகேட்டோம் சோபனத்தைக்கண்ணாலே
பார்க்கலாமென்றுமிந்தப் பாதைவளிநாங்கள்வந்தோம்
மார்க்கமிதுவெனவே வகைவிபரமாயுரைத்தான்
இவ்வார்த்தைகேட்டவுட னிராவான்மனமகிழ்ந்து
செவ்வையாய்த்தானுரைத்தச் சிறுவர்களைத்தானணைத்து
காணக்கிடையாததொரு கண்ணனைதம்பியரே
வீணுக்குயிர்வாங்க வினைகள்நினைந்தேனே
கருமவிதியோமுன் கற்பினையோயீஷ்பரனே
அருமைக்குழந்தையின்மே லம்புதொடுத்தேனே
தேடக்கிடையாத தெள்ளமுதேதம்பியரே
கூடப்பிறந்தவரைக் கொல்லநினைந்தேனே
ஆவதரியாமலனியாய அம்புதொட்டேன்
பாவமெனக்குவந்து பலியாதோயீஷ்பரரே
அந்தவசனமுன்னே யறிந்தேனேயாமாகில்
இந்தவளியில்வந்த யிலக்கணகுமாரனையும்
பொய்யானநூற்றுவர்கள் போர்வேந்தர்சேனையெல்லாம்
கையால்ப்பிடித்துயெந்தன் காலால்நசுக்கிடுவேன்
ஆயனுடபேச்சை யறிந்தேனேயாமாகில்
மாயனையுமிங்கே வரவொட்டமாட்டேனே
ஆரோயிவன்று னறிந்ததில்லையென்றுமென்னை
வேறொருவராய்நினைக்க வேண்டாங்காண்தமபியரே

## இராவான் கடோர்க்கசன் வாள்பீமனிடம் தன்பிறப் புரைத்தல்

வாகுடையதீரன் வாள்விசையன்புத்திரன்காண்
நாககன்னிபெற்றெடுத்த ராவானென்பேர்தானும்

வல்லவரேநீங்கள்சொன்ன வகையாலறிந்தேனென்
நல்லவரேயுங்களுக்கு நான்மூத்தவன்காணும்
வெருப்பாகவானும் விஷம்போலச்சொன்னதெல்லாம்
பொருத்தருளவேணுமென்றன் புத்தியுள்ளதம்பியரே
என்றுபலவிதமா யிசைந்தழுதுவோடிவந்து
குன்றனையதோளான் குழந்தைபிருவரையும்
கட்டியரவணைத்து கருணையுடன்ராவானும்
முட்டிவிழுந்தழுது முகத்தில்முகத்தைவைத்து
கைகள்தனையெடுத்துக் கண்ணோடரவணைத்து
மெய்யுடையதம்பியர்மேல் மிகுந்ததயவுவைத்து
கூக்குரலும்வைத்துக் கோவென்றலையமிட்டு
ஏக்கம்பிடித்து யிருந்தானேராவானும்
ஓலமிட்டவண்ணனுட வுருமைதனைப்பார்த்தளவில்
காவில்முடியுரசக் காளையர்கள்தான்பணிந்து
பட்சமுள்ள அண்ணாவுன் பாதம்சரணமெங்கள்
அச்சந்தவிழ்த்த அண்ணாரேநின்பாதம்
துணையாகுமெங்களுக்குச் சொந்தமுள்ள அண்ணாவே
இணைபிரியாதும்முடைய யேவல்செய்துகொண்டிருப்போம்
தர்க்கமுரைத்தோமே தமையனென்றுந் தானுமல
பக்கமனிதர்கண்டால்ப் பரியாசஞ்செய்வாரே
வாலிபத்தினாலே மதமேபெரிதெனவே
கேலிபண்ணினோமேயுன் கிருபையரியாமல்
பெற்றெடுத்தபிள்ளைபது பிசகுகளைசெய்தாலும்
அத்தனையுந்தாய்பொருப்ப தவள்மேல்க்கடனாகும்
ஆகையினாலும்முண்டிப் அடைக்கலங்காணெங்களுடன்
சேகரமாய்நீயிருந்து செய்வீர்கலியாணம்
சரணஞ்சரணமென்று தான்தொழுதான்வாளபீமன்
கருத்தில்மிகவன்புவைத்துக் கடோர்க்கயனுந்தான்தொழுதான்

## நாககன்னியிடம் மூவருஞ்செல்லுதல்.

தெண்டனிட்டதம்பியரைத் திருமார்பிலேயணைத்து
வண்டுரையுங்கான மலையும்நதிகடந்து
வேகமுடன்நடந்து விந்தைநகர் தானேறுகி

நாககன்னியென்னுமொரு நல்லதொருதாயாரைக்
கண்டுவணக்கமுடன் காவலர்கள்மூவருந்தான்
தொண்டுசெய்துநின்று தொழுதுவணங்கலுற்றார்
தாயேசரணமென்ற தம்பியர்கள்மூவரையும்
சேயர்களேயென்னுடைய செல்வர்களேகண்மணியே
வந்தீரோயென்னுடைய வரிசையுள்ளமைந்தர்களே
சந்தோசமாச்சுதென்று தான்மகிழ்ந்துநாககன்னி
இன்பமுள்ளராவானே யென்மகனேயிப்போது
தம்பியர்களாரெனவே தான்கேள்க்கநாககன்னி
பாதந்தொழுது பரிவுடனேராவானும்
ஆதரவதாகவவனு மெடுத்துரைப்பான்

விருத்தம்.

பெரியதாதையெனும் விமராஜனருள்
பேர்சிறந்திடு கடோர்க்கயன்
பேதமில்லையிவ னபீமனென்னுடைய
பிதாவினுக்குரிய மைந்தனோர்
உரியதம்பியர்க ளெந்தனுக்குவெகு
உண்மையான துணையானவர்
உண்டனேகமிவர் தர்மசிந்தனைக
ளுந்தனக்குமுயர் பிள்ளையாம்
கரியமால்மகளை லக்கணர்க்கொரு
கபடமான கலியாணமுங்
கர்னனுஞ்சகுனி யரவுயர்த்தனொடு
காரியம்புரிய வேகினோர்
தெரியவேணுமிதையென்றுமென்னுடைய
சிறியதம்பிய ரிருவருஞ்
சிந்தைநொந்திவர்கள் வந்ததாமெனச்
செப்பினனினிய தென்னவே

அம்மானை

சீருலவுந்தாயார் திருவடியைப்போற்றிசெய்து
பூருவமுந்தம்பியர்கள் புலனுந்தெரிந்திடவே
ஏள்ளழவுந்தப்பாம லிராவானுரைத்திடவே

கிள்ளைமொழியுடையாள் கிருபையுடன் தான்கேட்டு
மக்கள் தனையுமங்கே வாரியெடுத் தணைத்து
பக்கமருகிருத்திப் பருவமுடனே மகிழ்ந்து
ஆணிப்பொன்முத்தே அருச்சுனனார் தன்மகனே
காணிக்கிவாய்த்த கருவலமேயென்மகனே
தேமல்வடிவழகா சிரந்ததொருவாள்வீமா
மாமன்மகள்மேலே வாஞ்சைகொண்டுதோவுமக்கு
சுத்தமுள்ளபாலா துரையேதுரைத்தனமே
அத்தைமகள்மேலே ஆசைகொண்டுதோவுனக்கு
கன்னிமணஞ்சூட்டியுன்னைக் கண்ணாலேபாராமல்
மன்னரைவர்தானும் வனவாசம்போனாரே
ஆருமற்றயேளையைப்போ லபீமாவனத்தில்வந்தாய்
பூருவத்திலிட்டவிதிப் பொரியோமதிமயக்கோ
கருணையுடன்பிரகே கடோர்க்கயனும்வந்ததினால்
தருணமதையரிந்து தானேயளைத்துவந்தான்
ஏதுமறியாதபிள்ளை யிராவானுமங்கொருமாய்
வாதுசெய்துகானகத்தில் மடிந்திடவும்போனீரே

## நாககன்னி தன்புதல்வர் மூவருக்கும் புத்திசொல்லி யனுப்புதல்

கண்ணேயபீமா கடோர்க்கயனேயென்மகனே
அண்ணனிவனுமென் றறியாமற்போனீரோ
கல்லையுருவாக்கிவைத்த கரணனார் தம்முடைய
நல்லபுதுமையென்று நாககன்னிதானழுதாள்
புலம்பியழுததொரு புத்தியுள்ள தாயாரை
வலம்புரியாய்ச்சுத்திவந்து மாதாவைத்தானமர்த்தி
பண்ணியதோர்பூசையுந்தான் பாலர்களைக்காத்ததுந்தன்
புண்ணியத்தினாலே பிழைத்துவந்தோம்மாதாவே
சித்தமயங்காமலுந்தன் சிந்தைமகிழ்ந்தெங்களுக்கு
புத்திசொல்லுமென்று புதல்வர்பணிந்துநின்றார்
தனதுபிள்ளைமூவர்களுந் தானுரைத்தசொற்கேட்டு
மனதிலுள்ளதுக்கமெல்லாம் மாரியபின்நாககன்னி
திங்கள்முகமாகிச் சிந்தைமகிழ்ந்தன்புடனே

எங்கும்புகளுடைய இராவானைத்தான்பார்த்து
வாரீர்மகனேயென் மைந்தனபிமனுக்கு
கூறியிருந்தவொரு கோபாலன்றன்மகளை
கைப்பிடித்துவைப்பதற்குக் கட்டளையுமிட்டேனான்
இப்போதுதம்பியர்க ளிருவருக்குமேதுணையாய்
போகவிடைகொடுத்தேன் புத்தியுள்ளராவானே
சேகரமாய்நீங்களுந்தான் சென்றனுகும்வேளையிலே
மாபாவியான வணங்காமுடியோனும்
தீபாவித்தனுடனே சேர்ந்தபடைமன்னவரும்
தடுத்துவளிமரித்துச் சண்டைசெய்தாராமாகில்
அடுத்ததுணையான அபிமன்கடோர்க்கயனை
போர்க்களத்தில்ச்சண்டைசெய்யப் போவென்றனுப்பாதே
அரியாதபால னபிமன்கடோர்க்கயனும்
தெரியாக்குழந்தைகளைச் செருக்களத்திலேவாதே
வந்தெதிர்த்தபேர்களுடன் மார்கொடுத்துநீபொருதி
அந்தஅரவுயத்தோனவன் தனையுமேசெயுத்து
முள்ளுமுறியாமல் முடித்தபூவாடாமல்
வெள்ளிக்கிழமையிலே வெண்மதியவேளையிலே
மாயன்மகளை வாள்விசையன்புத்திரற்கு
நீயிருந்துகல்யாணம் நிரைவேரப்பண்ணிவைத்து
வாருமென்றுசொல்லி வரங்குடுத்தாள்நாககன்னி
சேருமென்றுசொல்லி திருநீறுதான்கொடுத்தாள்
உத்தாரமானதையு முண்மையுடன்தான்கேட்டு
பெத்தாள்திருவடியைப் பிரியமுடனேபணிந்து
அன்புரைத்ததாயேயுன் னனுக்கிரகமானதினால்
தம்பியர்க்குச்சோபனமுந் தான்முடித்துநான்வாரேன்
அடியேன்கள்தன்னையிப்போ அனுப்புமென்றுராவானும்
படிமீதிலன்னையுட பாதமதுபோற்றிநின்றான்

## விருத்தம்

போத்திப்பணிந்த குமாரர்களிற் பொருமையுடையவபிமனுக்கு
சாத்தித்திருமஞ்சணமாட்டிச் சருகைத்துயில்கொண்டேயுடுத்தி
கீத்துநுதல்வெண்ணீத்தைதயிட்டுக் கிரீடஞ்சிரசில் கிரணமென்ப்
பாத்துவயிரக்கடுக்கன்முத்துப் பதைக்கமிகவுமணிந்தானே.

### விருத்தம்

வாலமதனன்போலிருந்த வாள்வீமனையும்மாப்பிளைபோலக்
கோலம்புரிந்துபெருமாள்தன் குழந்தையழுர்தசுந்தரியை
தாலிபுனைந்து வாருமெனத் தரித்தாள்காப்பு அபீமனுக்கு
சோலியினிமேலென்னயிங்கே சுருக்காய்நடவுமெனவுரைத்தாள்.

### அம்மானை

அன்புடையமைந்தருக்கு அமுதமிகவேபடைத்து
இன்பமுடனே யிசைந்துவரங்கொடுத்து
நலங்காணிதுவெனவே நல்லவபீமனுக்கு
அலங்காரஞ்செய்து யனுப்பினாள்நாககன்னி
அனுப்பிவைத்ததாயா ரடியிணையைத்தெண்டனிட்டு
தனுப்பிடித்தகையுடைய தம்பியிவர்மூவருந்தான்

## நாககன்னியிடம் மூவரும்விடைபெற்று துவாரகை செல்லுதல்

ஆயுதமும்பூண்டு யகமகிழ்ந்துகொண்டாடி
தூயவர்கள்மூவருந்தான் துருசாய்நடக்கலுற்றார்
சுதைபெருகும்பூங்காவுஞ் சோலைகளும்தான்பார்த்து
கதைகள்தனைப்பேசிக் கட்டழகன்தானடந்தார்
ஊரணியுந்தோப்பு முயர்ந்தமலைநாடும்
ஆரணியமான அருங்கானகங்கடந்து
மரவருடதேசம் மருட்டியர்கள்தன்தேசம்
குரவருடதேசங் குணமாகவேகடந்து
பருதிமதிதெரியாப் பனிக்குமலையுள்ளதையும்
மருதநிலம்பார்த்து மன்னவர்கள்தானடந்தார்
காடுஞ்செடியுங் கண்டுவழிகூடி
வேடர்திரியுமொரு விந்தைமலைகடந்தார்
இனியமலைகளிலே யிருந்துதவிப்பாரி
கனிகள்தனையருந்திக் காவலர்கள்தானடந்தார்
இந்தவிதமாகவுந்தா னிருநூற்றுக்காதவளி
வந்தார்கள்பாலர் வருகும்வளிதனிலே
வேகமுடையதொரு வில்விசையன்புத்திரர்க்கு

தாகமிகவெடுத்துத் தண்ணீர்தவித்ததினால்
நடக்கயிலயிலைகாண் நல்லதொரு அண்ணர்களே
கடக்கவகையில்லையென்றுக் கட்டுரைசெய்தானபீமன்
இவ்வசனங்கேட்டு இராவானரவணைத்து
தவ்விநடந்துவந்த தம்பியரேயிப்போது
குருந்தநிழல்தனிலே குணமாகநீங்களுந்தான்
இருந்துதவிப்பாரு மிப்போதரைச்சணத்தில்
ஜெலமெடுத்துநான்வாரேன் சிவன்செயலாலென்றுமன்னன்
நலமானவார்த்தைபுத்தி நவின்றானேராவானும்
இந்தவசன மிருவருமேதான்கேட்டு
அந்தப்படிநிழலில் யாங்களிருக்கிறோம்
நாக்கைப்பிடிக்குதுகாண் நல்லதண்ணீர்தானெடுத்து
சீக்கிரத்தில்வாருமெனச் செப்பினார்தம்பியர்கள்
கட்டுடையயென்துணைவா கடோர்க்கயனேதம்பிதனை
விட்டுப்பிரியாமல் வீற்றிருப்பீரென்றுசொல்லி

## அபீமனுக்கு தண்ணீர் கொண்டுவர இராவான் செல்லுதல்

தண்ணீரெடுத்துவரத் தானடந்தான்ராவானும்
விண்ணீரில்லாத வெங்கானகந்தனிலே
ஓடித்திரிந்தலைந்தான் ஒருநதியுங்காணாமல்
நாடித்திரிந்தலைந்தான் நல்லதண்ணீர்காணாமல்
மலையுங்குவடுகளும் வல்லரக்கர்காடுகளும்
துலைதூரமோடிச் சுத்தியுமேகாணாமல்
கைசோரமெய்சோரக் கால்கள்மிகச்சோர
ஐயாயிரங்காத மவனலைந்துங்காணாமல்
கவலைபெரிதாகிக் கலங்கிப்பரதவித்து
சிவனேசிவனேயென்று சிந்தைமிகவும்நொந்து
என்னவினைப்பயனோ வென்னுடையதம்பியர்க்கு
நன்னீரையின்னேரம் நானலைந்துங்காண்கிலனே
ஒருநாழிகைதனிலே உனக்குச்செலமெடுத்து
வருவேனெனவுரைத்தேன் வழிபார்த்திருப்பாரே
ஆவிதுதித்திடுமே ஐயோவென்தம்பியர்க்கு

பாவியெனைப்போலப் பாருலகிலாருமில்லை
என்றுமிகப்புலம்பி இராவானுமவ்வனத்தில்
அன்றுவருகையிலே யருகாகவுர்மலையும்
பச்சைநிரமாகப் பண்புடையவுன்னிதமாய்
உச்சிதனைக்கண்டோ ருலகிலொருவரில்லை
பெரியமலையதனைப் பெருமைமிகுராவானும்
உருமையுடன்கண்டவனும் ஓடிவருகையிலே
அந்தவழியிலொரு ஆலாவிருக்ஷமதில்
வந்துயிருக்குமொரு வாகாகிரணபக்ஷி
மன்னன்மனதுநொந்து வருவதையுந்தான்பார்த்து
என்னவயணமிவ னிங்குவந்தகாரியத்தை
கேள்ப்போமெனவே கிரணபக்ஷிதானினைந்து
வாள்ப்பூண்டகையுடைய மன்னவனைத்தான்பார்த்து
தனதுடையமன்னவனே தாமரைப்பூங்கையானே
மனதுநொந்துகானகத்தில் வந்தவகையேது
வீரமுள்ளதம்பியரே வெத்திக்கிசைந்தவரே
ஈரமிலாக்கானகத்தில் யேன்வந்திரித்தூரம்
பேசுவீரும்முடைய பேருருமெந்தனிடம்
கூசாமல்ச்சொல்லுமென்று குணமுடனேதான்கேள்க்க
கருணையுள்ளபட்சிதனைக் கண்டுமேராவானும்
கிரணபட்சிதன்னிடத்தில் கிருபையுடனேதுரைப்பான்

## இராவான் இருதலைப்பட்சியென்னுங் கிரணப்ட்சி யிடம்தன் வரலாரு சொல்லுதல்

பாண்டுமகராஜன் பாலரைவர்தங்களிலே
காண்டீபன்பெற்றெடுத்த காளையரில்ராவானும்
எனக்கிளையதம்பியர்களிருவரையுந்தான்கூட்டி
வனத்தின்வழியாகவுமே வந்தோமென்தம்பியர்க்கு
தண்ணீர்விடாயெடுத்துத் தயக்கமதுவுண்டாகி
அண்ணாவென்றென்னுடனே யவனுரைத்தசொற்கேட்டு
பதரிமனதுநொந்து பாலகரையங்கிருத்தி
இதமுடையதண்ணீ ரெடுத்துவரயிங்குவந்தேன்
இருளடர்ந்தகானகத்தில் யெங்குந்திரிந்தலைந்தேன்

ஒருசிரங்கைதண்ணீரை உன்மையுடன்நான்காணேன்
என்செய்வேனென்றுமனமேங்கிவருகையிலே.
உன்னையெதிர்கண்டே னுன்னுறவுமாச்சுதிப்போ
தாகமுடன்வந்தவர்க்குத் தண்ணீரிருக்குமிடம்
பாகுமொழியுடையீர் பகருவீராமாகில்
உந்தனுக்கேதர்ம முடன்பலிக்குமென்றேதான்
விமலர்பதம்பணியும் வீரமிகுராவாணும்
இனிமையுடன்சொன்னசொல்லுக் கிரங்கிக்கிரணபட்சி
கனிவாயகமகிழ்ந்து காவலனைப்பார்த்துரைக்கும்
தாகந்தெளிவதற்குத் தண்ணீரிருக்குமிடம்
வாகுடனேசொல்வேன் மகாகொடுமையிவ்வனத்தில்

## இராவாணுக்கு கிரணபட்சி தண்ணீரிருக்கு மிடஞ் சொல்லுதல்

மலைதானிருக்குதுபார் மலைமேல்ஜெலமுமுண்டு
தலையருவிதீர்த்தமதைத் தான்கீழ்விழுகாமல்
அசுரனெனுமொருவன் அவன்பேர்கடல்முழுங்கி
பசியாரவேணுமென்று பாரில்வருமீரையெல்லாம்
அணுவளவுங்கீழே யதுவிழுந்துசிந்தாமல்
உணவுகொள்ளவேணுமென்று யோசினைஇங்காதவளி
அகலமுள்ளவாயை அவனும்பிளந்துகொண்டு
பகலுமிரவுமதாய் பதினாயிரவருடம்
மண்டுகிரானந்த மலையருவித்தண்ணீரை
உண்டுபசியடங்க வோர்வருடம்செல்லுமையா
அந்தமட்டுந்தண்ணீ ரரியயர்க்குங்கிட்டாது
சிந்தவொட்டான்தண்ணீரை ஜெலமெப்படிக்கிடைக்கும்
உத்தகருமமுமக்காகவே யுரைத்தேன்
மற்றொருவற்கேட்டால் வாய்திறந்துநான்பேசேன்
ஏகமாய்நாங்கள் யெம்மலையில்வாழ்ந்தாலும்
தாகந்தெளிவதுஞ் சந்திரகரணியல்லால்
வாசமுள்ளபொய்கை வளர்நதியில்நீர்குடியோம்
தேசமுள்ளதண்ணீரைத் தீண்டோமொருநாளும்
எங்களுடசாதிக் கிசைந்தவகைபிதுகாண்

உங்களுடனானு முறவுபுரிந்ததினால்
உமக்காகவேண்டியொரு யோசனையுஞ்சொல்லுகிறேன்
தமக்கானசேதியென்று தான்கேளுமன்னவனே

## இராவாணுக்கு கிரணபட்சி அசுரனுடைய மர்மஞ்சொல்லுதல்

பெருத்தவசுரனுட பெருங்காற்பெருவிரலை
அருத்துவிடவுமக்கு ஆணுவமுமுண்டானால்
உயிரிளந்துபோவா னுடனசுரனிப்போது
தயிரியமாயிம்மலையில்த் தண்ணீர்மிகவெடுத்து
போகலாமென்று புலனையுமக்குரைத்தேன்
ஏகலாமென்றுசொல்லி யிதமாய்க்கிரணபட்சி
எளும்பிப்பரந்ததுகாண் யினத்தாரிடந்தனிலே
தளம்பியுரைத்ததெல்லாந் தான்கேட்டிராவாணும்
இவனைச்ஜெயிக்குவகை யெந்தவிதமென்றுசொல்லி
கவனத்துடன்மலையில்க் கட்டழகன்தானேறி
பார்க்கும்பொழுதிலங்கே பால்போலருவியொன்று
மார்க்கமுடனந்தரமாய் வந்துவிழுகிறதும்
அண்ணூந்துகொண்டு அசுரன்குடிக்கிறதும்
தண்ணீரனுவளவுந் தான்சிதாதுண்பதையும்
கண்டுமனதுநொந்து காவலனுமந்நேரம்
துண்டுபண்ணியேயிவனைத் துணித்துவிடுவோமெனவே
வில்லெடுத்துநாணேற்றி வீரக்கணைபூட்டி
பல்லுதனைப்பார்த்துப் பகழிதொடுத்துவிட்டான்
விட்டதொருபாணம் விசையுடனேதானோடி
மட்டிப்பயலசுரன் வாய்நாரும்பல்லுதனில்
ஊடுறுவப்பாய்ந்து உடைந்ததுகாண்னற்கணையும்
கேடுவந்ததென்று கெடிகலங்கித்தான்பார்த்து
மைமுகில்வாழும்மலையில் வந்தநம்மையிக்கணையால்
எய்தவனுமாரோவென் றேரிட்டுப்பார்க்கையிலே
தொடுத்தேயொருகணையால்த் துய்யதொருராவாணும்
கெடுத்தானசுரன் கெதியடங்கக்கண்களையும்
கண்போயசுரன் கலங்கிமனம்வாடி

வில்பார்த்துநின்று விளம்புவான்வல்லசுரன்
ஆரடாயிவ்வனத்தி லஞ்சாமல்வந்தவனும்
நீரடாயிம்மலையில் நின்றுகுடிக்கையிலே
காணாமல்நீயுங் கணைபூட்டியெய்தாயே
தோணாமல்ச்செய்தவனை சும்மாவிடுவேனோ
கண்ணைக்கெடுத்தாலென் கைவலுவும்போய்விடுமோ
இன்னைக்கேயுன்னுயிரை யெமலோகமேத்திவிப்பேன்

## இராவரன் அசுரனைக்கொல்லுதல்

கூரடாவென்று கோவென்றபையமிட்டு
பாரடாவென்றுசொல்லிப் பாருலகெலாம்நடுங்க
கலைமான்பிடித்திடவுங் கானகத்தில்வேடர்வந்து
வலைவளைந்தார்ப்போல வல்லசுரன்கைநீட்டி
மீன்பிடித்தார்போலே மிருகமுதலுள்ளதெல்லாம்
தான்பிடித்துக்கொல்லுவதைத் தானறிந்துராவானும்
கைக்குளகப்பட்டுமவன் கைகடந்தோடுதற்கு
பக்குவமில்லாமல்ப் பார்த்துமதிமயங்கி
ஒதுங்கயிடமுமில்லை ஒளித்தோடப்பாதையில்லை
பிதுங்கயிடமுமில்லைப் பெரியவனந்தனிலே
மூலைமுடுக்குகளில் முனைந்துதிரிந்தாலும்
நாலுபுரமுமிவன் நன்றாய்வளைந்துகொண்டான்
ஆகையால்நாமும் அமடுவருமுன்னாக
வேகமுடனசுரன் விரலைநறுக்கவென்று
திரமுடையவில்லிலொரு திவ்வியாஸ்திரம்பூட்டி
விரலைக்குறித்துமங்கே விட்டானொருபகழி
சுருக்குடையபாணந் துடிதுடித்துஅன்னேரம்
நருக்கியெரிந்ததுகாண் நல்லசுரன்றன்விரலை
விரல்போகவேயசுரன் விண்ணிடிபோலேயலரி
மரணவலிப்பெடுத்து மாண்டுவிட்டானம்மானை
அரக்கன்மடிந்திடவு மவ்வனத்திலேயிருக்கும்
கரடிபுலியானைமுயல் கவுதாரிதான்முதலாய்
பரக்கும்பரவைகளும் பலதிசையிலுள்ளதெல்லாம்
திரத்துடனேஅங்குவந்து தேடியேராவானை

ஓடிவந்துகண்டுபணிந் தும்மாலுயிர்பிழைத்தோம்
வாடும்பயிர்தழைய மழைவந்துபெய்ததுபோல்
வந்தீரேயெங்களுயிர் மாளாமல்காத்தீரே
இந்தமலைத்தண்ணீரிவ்வனததிலில்லாமல்
தாகந்தெளியயினித் தண்ணீரைத்தானருந்தி
தாகவிடாய்த்தீராமல்த் தயங்கிப்பரதவித்தோம்
இத்தனையும்போக்கி யிடரைத்தவிழ்த்துவைத்த
வித்தகரேயென்றுபல விதமாய்ப்புகழ்ந்துபின்னும்
எங்கள்பிராணீ ரென்றிரஞ்சிவிலங்கினங்கள்
தங்கள்தங்களிச்சையிலே தானோடிப்போனதுவே

விருத்தம்.

விரல்போயசுரனுயிர்மடிய மிகவேமகிழ்ந்துஇராவானுந்
திரமாய்மலையினரிவினன்னீர்சென்றேஎடுத்துக்கமண்டலத்தில்
ஒருநாளிகைய்வ்வனங்கடந்து வுயர்ந்தமலைகள்பலகடந்து
சிறுபாலகரையுளம்நினைந்து தேடிநடந்துசென்றானே

அம்மானை.

தம்பியர்க்குத்தண்ணீரைத் தானெடுத்துராவானும்
அம்பில்வெகுதுருசா யவனும்வருகையிலே
வருந்திவளிநடந்து வாயுலர்ந்துதாகமதாய்
குருந்தநிழலடியில்க் குமாரரிருக்கையிலே
ஆவென்றுநீர்குடித்த வசுரன்மடியயிலே
கோவென்றசத்தமெனுங் கூக்குரலாய்த்தான்கேட்டு
அபையமெனுங்குறல்க்கேட் டபிமன்கடோர்க்கயனை
உபையமுடன்பார்த் துரைப்பானொருவசனம்

## அபிமன்னன் அபையக்குரல் கேட்டு கடோர்க்கயனிடம் சொல்லுதல்

சத்தம்பிரந்ததென்ன தமையனார்சென்றபக்கம்
வெத்திமிகுஅண்ணருக்கு விக்கினங்களுண்டோதான்
ஏதோதெரியவில்லை யிவ்வனத்தில்சத்தமது
சூதோவினைப்பயனோ துன்பமோஅண்ணருக்கு
போனயிடத்திலப் பொல்லாங்குவந்ததுண்டோ

ஏனோமிதுவரைக்கு மிங்குவரக்காணோமே
குறையானகானகத்தில்க் கொற்றவரும்நம்மைவிட்டு
அரைநாழிகைநிமிசம் அண்ணாவிநில்லாரே
ஜெலமெடுக்கச்சென்றிடத்தில் தீவினைகளுண்டாச்சோ
கலகமிட்டசத்தமெந்தன் காதிலேகேட்டதிப்போ
இருண்டவனத்திலொரு யெதிரியினால்க்கைசோர்ந்து
அரண்டுபுலம்பியெந்த னண்ணாரழுதாரோ
எந்தவிதமென்றனக்கு யிப்போதெரியவில்லை
அந்தவிதம்பார்த்து அடியேன்வருகுகிறேன்
வருமளவுமிங்கே வளிபார்த்திருமெனவே
திருவுரையும்வாளபீமன் செப்பினானம்மானை
கருதியுரைத்ததெல்லாங் கடோர்க்கயனுந்தான்கேட்டு
உறுதியுரைத்ததொரு உண்மையுள்ளதம்பியரே
அண்ணாவிசென்றிடத்தி லபகேடுவாரதில்லை
விண்ணோரெதிர்த்தாலும் வில்லாற்செயித்திடுவார்
மிக்கானகானகத்தில் மிகுந்ததொருதண்ணீரும்
சிக்காமலின்னந் திரிகுறாரண்ணாவி
அதிகஜெலங்கிடைத்தா லரைச்சணத்திலேவருவார்
எதிரியவர்தனக்கு மிவ்வுலகிலுண்டோதான்
நீரேன்மயங்குகிறீர் நிமிஷமதிலேபார்த்து
வாரேனெனதுடைய வாஞ்சையுள்ளதம்பியரே
தகையுடனேகானகத்தில் தம்பிநீர்செல்லாமல்
அகலாமலிந்தநிழ லதிலேபடுத்திருங்காண்
சுந்தரியாள்வாழுந் துவாரபுரிநகரம்
அந்தாதெரியுதுபா ரஞ்சாமல்நீரிருங்காண்
என்றுகடோர்க்கயனு மெழுந்திடவுமன்னேரம்
நன்றியுள்ளவாள்பீமன் நயந்தேதுசெப்பலுற்றான்
எமக்குத்திடமுரைத்து யிவ்வனத்தில்நீர்போனால்
உமக்குத்துணையெவர்கா ணொருவருமாய்ப்போவீரே
நீடுமுயர்வனத்தில் நீர்தனியேபோகாமல்
கூடவருவேனான் கொற்றவரேயென்றுரைத்தான்

## கடோர்க்கயன் வாள்பீமனுக்கு புத்தி கூறுதல்

என்னமொழியுரைத்தா யின்பமுள்ளவாள்பீமா
நன்மையுள்ள அண்ணருரை நாந்தவரலாகாதே
அண்ணரிங்குவந்தால் யாமொருவரில்லாட்டால
கண்கலங்கியெங்குங் கதறித்திரிவாரே
உன்னைத்தனியேவைத்து உயர்கானகந்தனிலே
கருதிநடப்பதற்கு காலோவளங்குதில்லை
தருகியிருக்கவென்றால்த் தமையனையுங்காணுமே
வேத்தாளுமில்லையுன்னை விட்டுப்பிரிவதற்கு
ஆத்தாங்கரைப்பசுப்போ லலையுதேயென்மனது
ஆனாலுந்தம்பியரே அண்ணர்தனைத்தேடியிப்போ
நானேபோய்பார்த்தொரு நாளிகையிலேவாரேன்
அந்தமட்டுந்தம்பியரே அஞ்சாமல்நீர்தாமும்
இந்தநிழலைவிட்டு யெங்கையும்நீசெல்லாமல்
வளியில்வருவாரிடத்தில் வார்த்தைமிஞ்சிப்பேசாமல்
எளியவர்போல்நீரு மிங்கேயிருமெனவே
மெய்யுடையபுத்திகளு மிகவேயெடுத்துரைத்து
கையிற்றனுவெடுத்து கடோர்க்கயனுந்தானடந்தான்
புத்திசொன்ன அண்ணரேநீர் போய்வாருமென்றுசொல்லி
பத்தியுடனேதொழுது பாலகனும்வீற்றிருந்தான்

### விருத்தம்.

கண்ணருவிகொண்டுயர் கடோர்க்கயநடந்தான்
வண்ணமலரானபத மானதுசிவப்ப
அண்ணனைநினைந்திடமுன் னேருமொருகாலும்
பண்ணுமிளையோனிட மிளுக்குமொருகாலும்

### இதுவுமது.

அன்னவனடந்திரு ளடர்ந்திடும்வனத்தே
தன்னடிசிவந்துகொப் பளமதுதுலங்க
முன்னவனைநாடியொரு கண்ணுமெதிர்பாயும்
பின்னவனைநாடியொரு கண்ணுபிரகெய்தும்

### வேறு விருத்தம்

மன்னவன்கடோர்க்கனிந்த வாறுதான்மனதுநொந்து
முன்னமேமான்பின்சென்ற முதல்வனும்ராமன்றன்னை
பின்னவன்றேடிச்சென்ற பிரமைபோல்நமக்குவந்தா
லென்னனும்செய்வோமென்று யெண்ணியேநடக்கலுற்றான்

## இராவானைத்தேடி கடோர்க்கசன் செல்லுதல்

மவுனமுடன்மாயனையும் மனதில்தியானமதாய்
கவலையுடனேதான் கடோர்க்கயனுமவ்வனத்தில்
முன்பார்த்துமேநடப்பான் முதல்வன்மேலாசைகொண்டு
பின்பார்த்திளையவன்மேல் பின்னுசைகொண்டுநிற்பான்
துலையாதகானகமும் துகையாயிரங்காதம்
மலைவாசமுள்ளதெல்லாம் மன்னவனுந்தான்தேடி
பேராசைகொண்டு பிரமைமிகப்பிடித்து
சூறுவளிபோலச் சுளன்றுவருகையிலே
காறுனையொன்று கடோர்க்கசன்மேலேபாய
பேறுனைதன்னைப் பிரளமிகவடித்து
துணிந்துநடந்தான் துலைதூரமவ்வனத்தில்
தணிந்துமலையோரம் தானும்வருகையிலே
காட்டில்ஜலமெடுத்துக் கமண்டலத்திலேயேந்தி
ஓட்டம்நடையுடனே ஓடிவந்தான்ராவானும்
அண்ணனிவனென் றறிந்துகடோர்க்கயனும்
வண்ணமலர்ப்பதத்தை வந்துகண்டுதெண்டனிட்டான்
சீர்பொருந்துமவ்வனத்திற் தேடிவந்ததம்பியரை
மார்போடணைத்து மனமகிழ்ந்துராவானும

## கடோர்க்கயனைப்பார்த்து இராவான் புத்தி கூறுதல்

வித்தானதம்பியரை விட்டுத்தனிவழியே
இத்தூரமிவ்வனத்தி லிங்கேவரலாமோ
தேகமிளைத்திடுமே சிறுவனுக்குமின்னேரம்

தாகமெடுத்ததினால் தாள்வுகுறைவந்ததுண்டோ
நேருயிருபேரும் நிழலிலிருக்கையிலே
ஆருகிலுமுமக்கு அபகேடுசெய்தாரோ
தாட்சியொன்றும்வாராமல்த் தம்பியரைக்காருமென்று
ஆட்சியுரைத்தசொல்லை யயர்ந்துமரந்திரோ
கிட்டயிருந்துமனக் கிலேசமதைத்தீராமல்
விட்டுவந்தாயென்ன விதிவசமோ தம்பியரே
தீப்பிடிக்குங்கானகத்தில்ச் செல்மெடுக்கானும்வந்தால்
பேய்பிடிக்குதோயெனையும் பிரகேவரலாமோ
தேடியிந்தக்கானகமுந் திரிந்தலைந்துநீயுமிப்போ
ஓடிவந்தசெய்தி யுரையுமென்றான்ராவானும்
அழுதுபுலம்பி அரனைமிகநினைந்து
தொழுதுகடோர்க்கயனுஞ் சொல்லுவானம்மானை

## இராவானிடம் கடோர்க்கயன் தேடிவந்த விபரம் சொல்லுதல்

மெய்யான அண்ணாவி வீத்திருந்தோமன்னிழலில்
அய்யோ அபையமென்று அருங்குரலாய்க்கேட்டதுகாண்
குத்தமில்லா அண்ணரேநீர் கொடுவனத்திற்போனபின்பு
சத்தம்பிரந்ததினால்ச் சமுசியமுண்டாச்சுதுகாண்
ஆதலாலிவ்வனத்தி லண்ணரேயுந்தனுக்கு
ஏதோபிசகு இருக்குமெனவேநினைந்து
தம்பியர்க்குவேணபுத்தித் தயவுடனேநானுரைத்து
வெம்பியழுகாமல் வேற்றிடத்திற்செல்லாமல்
இருமென்றரவனைத்து யித்தூரமோடிவந்தேன்
தருமந்தலைகார்க்குந் தமையரேயும்மையிப்போ
கண்டபொழுதேயென் கவலையொழிந்ததுகாண்
தொண்டனுமக்கெனவே தொழுதான்கடோர்க்கசனும்
காலில்விழுந்த கடோர்க்கசனைத்தானெடுத்து
மேனியுரப்பூண்டு மெய்யோடரவனைத்து

## கடோர்க்கயனுக்கு இராவான் புத்திகூறுதல்

மனப்பயத்தைவிட்டுவிடும் வாகுடையதம்பியரே
வினைப்பயனையாராலும வெல்லமுடியாது

மதியின்பிலத்தாலே வாழ்வாரொருவரில்லை
விதியினெழுத்ததனை விலக்குவருமுண்டோதான்
இத்தனையும்பிர்மா வெழுத்தென்றறியாமல்
அத்தைதனினைந்ததினு லாவதுவுமொன்றுமில்லை
சிந்தையொன்றுதானினைக்கத் தெய்வமொன்றுதானினைக்கும்
அந்தமகிமைதனை யாரறியப்போறார்காண்
உரமுடையபூமியண்ட முயிர்களையுண்டாக்கிவிக்கும்
பிரமன்றலையிலொன்றைப் பிடுங்கியரன்போடலையோ
சீருலவுங்கானகத்திற் சீதைதனைமுன்னாளில்
வீரமுள்ளராமரங்கே விட்டுப்பிரியலையோ
அன்னாளீச னமைத்தபடியல்லாது
இன்னாளில்வந்ததல்ல வென்னுடையதம்பியரே
தூரவிலிருக்குகின்ற தூய்யதவத்தோரெனினும்
பிரவிமயக்கம்விட்டுப் போராது தம்பியரே
தண்டாமரைமுகத்தான் தம்பியபீமனையும்
கண்டாலெனக்குக் களைதிரும்தம்பியரே
ஆகையினாலெந்தன் அருமையுள்ளதம்பியரே
வேகமுடன்வாருமென்று மிக்கதொருராவானும்
துடிமிகுந்தஅண்ணருட சொற்கேட்டிளையவனும்
கடிகிநடந்துவந்தார் கானகத்திலம்மானை

விருத்தம்.

இணையாயிருந்தகடோர்க்கயனு மிராவான்மிகவுமனமிளகித்
துணையாயிருந்தவபீமனையுஞ் சுகமாய்க்காண்போமெனநினைந்து
கணைபோலெரும்பிமலைகள்முதற் காடுகளித்தகொருநொடியில்
உணரவாயிவர்கள்பாதைதனை யுடனேயறிந்துநடந்தாரே

## இராவான் கடோர்க்கயன் இவர்களைக் காணுமல் அபீமனன் பரதவித்தல்

அம்மானை.

இந்தவிதம்நடந்து யிவர்கள்வருகையிலே
அந்தநிழலிலிருந்த வபீமன்கதைசொல்லுவேன்
அண்ணவிதன்னையனுபீபியபின் வான்பீமன்

என்னுதஎன்னமெல்லாம் யெண்ணிமனம்புண்ணுகி
இருவரையுங்காணும லேங்கிபரதவித்து
ஒருவன்றனியனுமா யுளன்றுமனதேங்கி
அட்டதிசையும் அபிமனுமேஆராய்ந்து
எட்டிஎட்டிபார்த்து ஏங்கிபரதவித்து
பார்த்தகண்ணும்பூத்து பதரிவாய்விட்டழுது
வேர்த்துகிருகிருத்து வெம்பிமனந்தேரி

விருத்தம்

தன்னுடதமையமார்கள் தானும்வந்திடுவரென்று
அன்னிழல்தன்னில்ச்சற்றே அவனுமங்கிருந்துபார்த்து
இன்னமென்தமையமார்கள் யிங்குவந்திடவுங்காணேம்
என்னமோஅவதியென்று யேங்கியேமனதுநொந்தான்

2-வது

காவலரிருவர்சென்ற கானகப்பாதைதன்னை
ஆவலாய்ப்பார்ப்பான்பின்னு மாற்றுவான்மண்மேல்விள்வான்
பாவம்யான்செய்தேனென்று பதருவான்மனதுவாடி
ஆவதுஒன்றுந்தோணு தசந்துநித்திரைசெய்தானே

அம்மானை

போனவழிபார்த்துப் புலம்பியேமன்னவனும்
தானேயசந்து தனியேமண்மேல்விழுந்தான்
அத்தனெனுமுகுந்த னுயனுடசோதனையால்
நித்திரையுங்கொண்டான் நினைவுமதிலேபொருந்தி
சுழுத்திதனில்மனது சொக்கியொன்றுந்தோணுமல்
அழுத்தமுடன்றுயின்று னபிமனுமன்னேரமதில்

## காந்துருவி அபிமனனிடம் வருகுதல்

இந்துமுகத்தா ளிலங்குவடிவுடையாள்
கெந்துருவியென்னுங் கிருபையுள்ளமங்கையரும்
வாகானமேருவெனும் மலைதனக்குப்போகவென்று
ஆகாசமார்க்கமதா யவள்ரதத்தின்மீதேரி
செல்லுகின்றபோது சிறந்தவொருபூமியிலே

நல்லதொருசோலைகளும் நற்குறுந்தையும்பார்த்து
தெரிந்துரதமிரங்கிச் சிரந்ததொருசோலையிலே
இருந்துதவிப்பாரி யேகுவோமென்றுயெண்ணி
மங்கைரதமிரக்கி வந்தாள்குறுந்தநிழல்
அங்கேயபீம னவன்றுயின்றானன்னேரம்
புருவத்தழகும் பொன்போலமுகத்தழகும்
கருணையொழுகுமவன் கண்ணழகுங்காதழகும்
மார்பழகுந்தோளழகும் மலர்போலிருகரமும்
பார்புகளும்வில்லியெனும் பார்த்தன்மகன்காலழகும்
தலையில்கிரீடமிட்டுத் தளதளனமின்னுரதும்
மலையைநருக்குமொரு வச்சிரவாள்மின்னுரதும்
காயாம்புமேனிக் கட்டளகன்துங்கிறதும்
வாயூரிநின்றுமந்த வஞ்சியருந்தான்பார்த்து
காமனழகுமிவன் கண்ணழகுக்கொவ்வாது
தாமனழகுமிவன் தன்னழகுக்கொவ்வாது
கண்டதில்லைநாமுமிந்தக் கட்டழகனைப்போலே
மண்டலத்தில்வேதன் மகிழ்ந்துபடைத்தானோ
கெவுணம்பரந்ததினால்க் கிரிகையென்னவொன்றுமில்லை
இவனையனுபவித்தா லீடேத்தமுண்டாகும்
அரைநாளிகையிவனை யணைந்தால்ப்பரலோகம்
கரையேரலாமெனவே காந்தருவிநெஞ்சில்வைத்து

## கெந்துருவி அபீமன்னனை தூக்கிச்செல்லுதல்

மார்க்கமுடனேதான் வாள்வீமன்கிட்டவந்து
தீர்க்கமுடனின்று சிந்தைதனிலேதான்
பாக்கியவான்றன்னைப் பண்பாய்எடுப்பமென்றே
தூக்கியெடுத்தாள் துயின்றதுவுந்தப்பாமல்
விந்தையுள்ளதேரில் மிகவேபடுக்கவைத்து
அந்தரத்தில்சென்றாளவளும்ரதமேறி
பொன்னுலகந்தன்னில புகுந்துபிரியமதாய்
தன்னுடையமாளிகையில்த் தானிரக்கியேரதத்தை
நிருத்தியவளுமந்த நித்திரைசெய்மன்னவனை
வருத்தமதுதவிர வஞ்சியருமேதுசெய்வாள்

தம்பூருவீணை சரமண்டலத்துடனே
கெம்பீரமானதொரு கின்னரமுந் தானெடுத்து
மீட்டினாள்சத்த மிருதுவசனமதாய்
மூட்டினாள்ராகம் முளுதுந்தவறாமல்
சங்கீதவாத்தியமுந் தானேபடித்துநின்றாள்
அங்கேகமகமென அழகுபன்னீர் தான்சொரிந்தாள்
பாலனுடநித்திரையைப் பாங்காயெளுப்புதற்கு
காலைநெருடிமெள்ளக் கையால்ப்பிடிக்கலுற்றாள்
சீருலவுங்கெந்துருவி செய்யுஞ்சயிக்கினையால்
ஆருகாணென்று அபிமனெழுந்திருந்து

## அபிமனன் நித்திரைதெளிந்து யோசித்தல்

நாலுதிசையுமவன் நன்றாகவேபார்த்து
கோலமுள்ள அண்ணர்தனைக் குழந்தையவன்காணாமல்
இருந்தயிடமுமெங்கே யிங்குவந்ததாயமென்ன
குருந்தநிழலைவிட்டுக் கொண்டுவந்ததாருஇங்கே
ஊத்துச்செலமெடுக்க ஓடினதோரண்ணரெங்கே
பார்த்துவரப்போன பட்சமுள்ள அண்ணரெங்கே
என்னபுதுமை யிங்குவந்தோமென்றுயெண்ணி
மன்னனபிமன் மனதுகலங்கையிலே
இசைப்படுத்திநம்முடைய யிச்சையதிலேமைபக்ஷி
வசப்படுத்தவேணுமென்று மங்கைமனதிலெண்ணி

## கெந்துருவி அலங்காரஞ்செய்துகொள்ளுதல்

சரிகைத்துயிலணிந்தாள் தங்கரத்னவோலையிட்டாள்
முருகுபிருபுரமும் முகமிலங்கத்தாணணிந்தாள்
காப்புகொலுசணிந்தாள் கைவிரலின்மோதிரத்தை
மாப்பிளையுங்கண்டு மகிழவேதானணிந்தாள்
தங்கக்கடையமிட்டாள் தண்டைசிலம்பணிந்தாள்
இங்கிதமாயிரத்னம் யிலங்கபதக்கமிட்டாள்
மோகம்பெருகவென்று மூக்கிலொருதொங்கலிட்டாள்
பாகுமொழியாள் பவளப்பணிதியிட்டாள்
ஏரிட்டுப்பார்த்தோ ரெல்லோருந்தான்மயங்க
நீறிட்டாள்நெற்றியிலே நிலக்காப்புத்தானுமிட்டாள்
வந்தவர்களெல்லோரும் மயங்கிவிழும்படியாய்
செந்தூரப்பொட்டுச் திருநுதலிலேயணிந்தாள்

எல்லோருங்கண்டே யிவளோ ரதியெனவே
மல்லிகைமுல்லை மருவுபிச்சிசெண்பகமும்
சீவிமுடித்து சிறந்தஜடைபின்னலிலே
பூவைமுடித்துவைத்தாள் பூமியெல்லாம்தான்மணக்க
சல்லாவுடையணிந்தாள் சரீரமெல்லாந்தான்தெரிய
உல்லாசமான வுடைமைபலவணிந்தாள்
கற்றோர்முனிவோருங் கண்டுமயங்கிடவே
சற்றேஸ்தனந்தெரியச் சரிகைரவுக்கையிட்டாள்
பார்த்தோர்களெல்லாம் பதரிமயங்கிவிழ
கோர்த்தமுத்துத்தாவடத்தை கொத்தோடுதானணிந்தாள்
ஆடவர்களெல்லோரு மவள்பிரகேசுத்திவர
வாடைப்பொடியணிந்தாள் வாள்விழிக்குமையணிந்தாள்
எந்தவுடைமையிலேயுயிந்தமன்னன்சிக்கவென்று
மந்திரமொன்றுச்சரித்து வந்தாளேமோகினிபோல்
துங்கரணவீரன் துடிவிசையன்புத்திரன்முன்
மங்கையரும்வந்துநின்று மணவறையிற்பெண்போலெ
நாணிநாள்சற்றே நகைத்தாள்குறிஞ்சிருப்பாய்
தூணின்மறைவாகத் துலுக்கும்பிலுக்குமதாய்
புக்குமணவறையிற் புதுமாப்பிளேயிடத்தில்
வெக்கப்படுவதுபோல் மெல்லிநல்லாள்வந்துநின்று
ஆதரவினாலே அபிமானையுந்தான்பார்த்து
பேதைமொழிபோலே பேசுவாள்காந்துருவி

## கெந்துருவி காந்தர்வ விவாகஞ்செய்து கொள்ள விரும்புதல்

கண்ணுக்கிசைந்துவந்த கணவாமணவாளா
பெண்ணுக்கிரங்கும் பெரியபுத்திபுள்ளவரே
கன்னியளியாதவளைக் கன்னிமணஞ்செய்யவந்த
தென்னவரேநானுமுன்னாள் செய்புந்தவப்பயனோ
களையெடுக்கசென்றிடத்தில்க் கண்டதிரவியமே
பிளைபெர்ருக்கவேணுமல்லோ பெண்சாதிதன்மேலே
மோடிவைக்கலாமோயென் முகம்பார்த்திரங்குமய்யா
கூடியணைவதற்கு கொளுந்தியென்றுசொல்லுமய்யா
கண்டாசைப்பட்டதொரு கன்னியெனையிப்போது
பெண்டாளநீருமுன்னாள் பெற்றபலன்காணும்

விரும்பியுனையாசைகொண்ட மெல்லியரைச்சேருமையா
கரும்புதின்னக்கூலியுந்தான் கையில்க்கொடுப்பர்களோ
விரகம்பொருக்குதில்லை மேனியுருகுதுகாண்
சரசமதுசெய்துயிந்த தருவணையில்க்கூடுமையா
ஆசையுடன்வந்துநின்று ஆரணங்குஞ்சொல்லிடவே.
வாசமுள்ளசொல்லையெல்லாம் வாள்வீமன்தான்கேட்டு

## அபிமனன் கெந்துருவிக்கி தன்வரலாறு சொல்லுதல்

கருமுகில்போல்க்கூந்தலுடைக் காரிகையேநீகேளாய்
குருகுலத்திலேபிறந்த கொற்றவர்களைவரிலே
தருமர்க்கிளையதொரு தனஞ்சயனார்புத்திரனேன்
கருமமிகயபடைத்த கவுரவர்கள்சூதுசெய்து
நாட்டிலிருக்காதபடி நன்மையுள்ளபஞ்சவரை
காட்டில்துரத்திவிட்டான் கனத்ததுரியோதனனும்
ஆணுவமுமுண்டாச்சு ஐவர்வனம்போனதினால்
தோணும்படிமுடிக்கத் துடங்கிவணங்காமுடியோன்
எனக்குப்பரிசமிட்ட யெழில்மிகுந்தசுந்தரியை
தனக்குப்பிறந்தபிள்ளை சமர்த்தனிலக்கணர்க்கு
கொள்ளவென்றுபேசிக் கொடியதுரியோதனனும்
உள்ளஜனமத்தனையும் உறமுறையாரெல்லோரும்
வந்தார்களென்று மணமுகூர்த்தம்நாளையென்றும்
சுந்தரிதானோலைச் சுருளெழுதிவிட்டாள்காண்
மாதுடையவோலைதன்னை வாசித்துமன்னேரம்
சாதகமாயென்னுடைய தாயார்தனக்குரைத்து
எந்தனுடதமைய ரிருவரையுந்தான்கூட்டி
வந்தோம்வழியிலொரு வனத்தில்வரும்போது
தாகமெனக்காச்சு தமையனுமேநீரெடுக்க
ஏகினாரவ்வனத்தி லிருந்தேன்தனியனுமாய்
சோதனையாய்நித்திரைவந் துயிலுகின்றவேளையிலே
நீதியறியாமல் நீர்தானெடுத்துவந்தீர்
பூவையரேநானுமிப்போ பொன்னுலகம்நானறிந்தேன்
ஆவலெல்லாமென்னுடைய அண்ணரிடமல்லாது

வேறேயொருகருமம் விபரமறியேநான்
காப்புத்தரித்ததொரு கைதனையும்நீர்பாரும்
மாப்பிளைபோல்கோலமிட்ட வடிவழகைநீர்பாரும்
கருதியிருக்குமொரு கன்னியரைமாலையிட
விரதமிருந்தவுடல் மெலிந்ததையும்நீர்பாரும்
பெண்கட்கரசேநான் பேசக்கேளிப்போது
பெண்களுடன்கூடிப் பேசியிருந்தறியேன்
பூவையரேகேளுமினிப் பூவுலகில்யான்பிறந்து
பாவையர்கள் தன்னுடனே பாயில்ப்படுத்தறியேன்
வஞ்சியரேநானும் மாதருடனேகலந்து
கொஞ்சிவிளையாடிக் கூடிப்புணர்ந்தறியேன்
மெத்தவயதெனக்கு மிகுதியில்லையிப்போது
பத்துவயதெனக்கு பாவையர்மேல்நாட்டமில்லை
அடிக்கரும்பைத்தானுமுண்டா லதுதான்ருசியாகும்
ஒடிக்கும்னுனிக்கரும்பை யுண்டால்ருசியாமோ
பேருரைத்தசுந்தரிக்கிப் பின்னொருவனேதெனவே
வீரெனக்குவந்ததல்லால், விரகமெனக்கேதுமில்லை
எல்லாமறிந்திருப்பீ ரென்றேயபிமனுந்தான்
நல்லாதரவுடனேநயந்து மிகவுரைத்தான்
காவலவன்சொன்னதெல்லாங் கன்னியருந்தான்கேட்டு
ஏவல்செய்யுந்தொண்டர்கள்போ லெதிராகவந்துநின்று

## கெந்துருவி அபிமனனை விவாகஞ்செய்து கொள்ளசொல்லுதல்

நன்றுயிருந்ததுகாண் நமக்குரைத்தசேதியெல்லாம்
தின்றுல்ப்பசியாருங்காண் திங்கரியார்க்கென்னவுண்டு
ஏதுமறியோமென் றெடுத்துரைத்தீர்மன்னவரே
மாதருடதன்மேலே வாஞ்சையில்லையென்றுசொன்னீர்
பொருத்தியிருங்காணும் புண்ணியரேஉந்தனுக்கு
வருத்திக்கொடுக்குகிறேன் மதனநூல்சாஸ்திரத்தை
மூட்டுமதன்வித்தை முன்னேபடியால்
பாட்டுப்படிப்புகளில்ப் பலனேதுமன்னவனே
மெய்யாகச்சொல்லுகிறேன் மேதினியிலெவர்க்கும்

சய்யோகவித்தையல்லோ தானேநிசமாகும்
காமவித்தைமாத்திரம்நீர் கற்றறிந்தீராமாகில்
எமனுக்குங்கூட யெழுதிவிடலாம்சீட்டு
கள்ளுக்குடிப்பதற்கும் காமவித்தைசெய்வதற்கும்
பள்ளிக்கூடந்தனிலே படித்திடவும்வேணுமோதான்
மாதவனார்தன்மகளை மாலையிடப்போவமென்றீர்
ஏதோயிதுவரைக்கு மிருப்பர்களோபெண்ணைவைத்து
பரிசங்கொடுத்தவர்கள் பார்த்துவிட்டுப்போவாரோ
வரிசைபெற்றமாமனய்யன் மற்றிடத்திலீய்வாரோ
தாமோதரன்மகள்தான் சர்க்கரையோவுந்தனுக்கு
நாமாத்திரங்கசப்போ நன்றாயுரைத்தீரே
தழுவியணையுமென்று தானேவலியவந்தால்
கிழவியென்றுசொன்னகதை கேட்டோமுமதிடத்தில்
அண்ணமார்தம்மிடத்தில் ஆசைவைத்துச்சொன்னீரே
கண்ணீரெடுத்துவந்து தாகமதுதீர்த்தாரோ
மலையாமலென்னைப்புமநீர் மருவியிருங்காணும்
தலைமகனேன்பிள்ளை தான்பெற்றுநான்தாரேன்
தேடுந்திரவியமுஞ் சிறந்தமணிமாளிகையும்
ஆடவரேநீரும் அனுப்பிவித்துத்தானிருங்காண்
இன்பம்பெருகிடவே யேந்திழையுமந்நேரம்
அன்புடனேசொன்ன ளபிமனிடந்தனிலே
மையல்வெறிமிகுந்து மங்கையுரைத்தசொல்லை
செய்யபுகழ்மன்னன் திருச்செவியிலேகேட்டு
வாரணிந்தசுந்தரியை மருவவேதேயல்லாமல்
தாரணியிலுள்ளபெண்கள் தாய்காணுமென்றனுக்கு
தலமறியக்கைபிடித்த தாரமதுதன்னைவிட்டு
பலதுரையிலேமிதித்தால் பாவமல்லோபைங்கொடியே
கைப்பிடித்துமாலையிட்ட கணவனிருக்கையிலே
அப்புரத்திற்செல்லுவது மாகாதுபெண்ணணங்கே
ஞாயமதையறிந்து நன்றாய்நடவாமல்
மாயமயக்கமுள்ள வார்த்தைபகராதே
லீலாவினோதவித்தை ரெம்பரெம்பச்சொன்னாலும்
ஏலாதுபோமென் றெடுத்துரைத்தான்மன்னவனும்

பதபாகமில்லாமலப் பார்த்தன்மகன்சொன்னதெல்லாம்
இதமானதோகையரு மிருசெவியிற்றான்கேட்டு
தோணுமலிந்தத் துடியனையும்நம்பியல்லோ
வீணைசைகொண்டு விருதாவில்நின்றோமே
வாரும்புதுநிலவில் மருவிபெனைச்சேராட்டால்
ஆருமில்லை யுனக்கு யானேபெமன்காணும்
கட்டியெனையணைத்து கலந்திடவுமாட்டீரேல்
விட்டுவிடுவேனே பிருவபுண்ணவேண்டாங்நான்
பொறுத்தேனிதுவரைக்கும் பொருமைபெரிதெனவே
மறுத்துரைக்கவேண்டாம் மறுவியிருங்காணும்
கன்னியிவையுரைக்கக் காவலனுந்தான்கேட்டு
என்னவிதியெனவே யேந்திழையைப்பார்த்துரைப்பான்
கொள்ளாதநஞ்சைக் குடிப்பாரோபூமியிலே
துள்ளாதேயென்னிடத்தில்த் தூரநில்லுமென்றுரைத்தான்
சினந்துரைத்தசேதிதனைத் தேன்மொழியாள்தான்கேட்டு
மனந்தனிலேகோபம் மகாகொடுமையுண்டாகி
உத்தசிறுவனையு முயிர்வதைக்கவேணுமென்று
சித்தமதில்நினைந்து சேயிழையுமேதுசொல்வாள்
இளப்பமென்றுயென்னையும்நீர் யெண்ணாதேயும்முடைய
அளப்பரியச்சொன்னதல்லா லனுபோகமேதெனக்கு

## கெந்துருவி அபிமனனை அசுரனிடங் கொண்டுவந்து ஒப்பிக்குதல்

அமையுமய்யாகோபம் அரைநாளிகைதனிலே
தமையனிடந்தனிலே தான்கூட்டிநான்போரேன்
வல்லவரேவாருமென்று வணங்கிநமஸ்கரித்தாள்
நல்லதென்றுவாள்வீமன் நன்றாய்யெழுந்திருந்தான்
அஞ்சாமல்வஞ்சகமாய ரெதத்தின்மேலேத்தி
தஞ்சமுடன்கெந்துருவி தானும்ரதமேறி
நடத்தினளந்திரத்தில் நல்லதொருதேரதனை
கடத்தினள்பூமியிலே கன்னியருமம்மானை

### விருத்தம்

சிறுவனைரதத்தில்வைத்துச் சிரந்தபூவுலகில்மிக்கோர்
பருபதமதனில்ச்சென்றுப் பசாகினிபீடந்தன்னில்

அருகினில்த்தவசுசெய்யும் அசுரனைக்கண்டுபோற்றி
ஒருபயனுமக்குத்தந்தே னுமதுகாரியம்பாரென்றாள்

அம்மானை

மங்கைநல்லாள்தேரை வளர்பூமியில்நடத்தி
அங்கேயொருமலைபி லசுரனெனுமொருவன்
அவன்பேர்புலைய னவனிடத்திற்கொண்டேகி
இவனையவனிடத்தில் யெத்தாகஒப்புவித்து
கவலையைநீர்சற்றுங் கலக்கமுனையாமலேநீர்
தவசைநிரைவேற்றி தயவைநமக்கருளும்
உபசாரமென்ன உமக்குநமக்குமிப்போ
அபசாரஞ்செய்தாலும் மன்புவையுமென்றுசொல்லி
பொய்யுரையாமன்னவனைப் பிடியுமென்றுராட்சதன்றன்
கையிற்கொடுத்துவிட்டுக் கன்னியருந்தான்போனாள்
கொடுத்தசிறுவனையுங் கொண்டுவந்துவல்லசுரன்
அடைத்தகுகையதனை யவனுமிகத்திறந்து
குகையிலிருக்குமந்தக் குழந்தையர்கள்தன்னுடனே
வகைவிபரமாக வாள்வீமனையடைத்து
ஏனோயினித்தவசு யிவனுடனேயெண்ணினது
தானுபிரமுஞ் சரியாச்செனமகிழ்ந்து
பெலிகொடுக்கவேணும் பிசாசனிக்கியின்னேரம்
மலையில்புனலாடி வருவோமெனவசுரன்
திசைதெரியாக்கானகத்தில் சென்றான்மலையோரம்
குகையிலடைப்பட்டிருக்குங் குணமுடையவாள்வீமன்

## வாள்பீமன் குகையிலடைப்பட்டிருக்கும் குழந்தையர்களைக்கேட்குதல்.

வாடிமனதுநொந்து மயங்கிப்பாதவித்து
கூடஅடைத்திருக்குங் குழந்தையரைத்தான்பார்த்து
எனக்கிளையதம்பியரே யெந்தனுக்குமூத்தோரே
தனிக்குகையில்நீங்களிப்போ தடைபட்டிருப்பதென்ன
இந்தவசுரனென்ன யிங்குவொருபீடமென்ன
அந்தவசனமெனக் கரியவேசொல்லுமென்றான்

## அடைபட்டிருக்குங் குழந்தைகள்
## புலையன் விர்த்தாந்தத்தை அபிமனுக்குசொல்லுதல்

கோமானுரைத்தமொழி குழந்தையர்கள் தான்கேட்டு
சீமானேயுந்தனுக்குச் செப்புகிறோங்கேளுமினி
வன்னிமலைதனிலே வாளுமசுரனிவன்
தன்னைப்பயின்றெடுத்த தாயார்பசாசினியாள்
வெகுநாளிவளிருந்து மேனிமிகத்தளர்ந்து
பகல்போல்மயிர்வெளுத்துப் பல்லுமிகக்களன்று
நாடிநரம்பசந்து நடையுமிகத்தள்ளாடி
வாடியிரச்சியுண்ண வாய்குளரிக்கண்புகைந்து
ஞாலமதையரக்கி நமனூரிலாசைவைத்து
காலஞ்சரியாகிக் கணக்குந்துகைமுடிந்து
போகவழிதேடிப் பிராணன்தவிக்கையிலே
தாகமுடன்புலையன் தாயாரிடத்தில்வந்து
அருமையுடன்பெற்றெடுத்த அன்னையரேஆச்சியரே
பெருமையுடன்வாழ்ந்திருந்த பேயேபிசாசனியே
இருந்தேன்மலையாம லேவல்சொல்லநான்கேட்டு
வருந்திவளர்த்தெடுத்த மாதாவேயுந்தனுக்கு
சாகவும்நாள்வந்ததென்று தானேமலையாதே
போகவும்நாள்வந்ததென்றுப் புலம்பித்தவியாதே
மனதில்நினைத்ததெல்லாம் வாரிவந்துநான்தாரேன்
எனதுமுகம்பார்த்துரைப்பா யெந்தனுடதாயாரே
தாயாரிருகரத்தைத் தன்னுடையகண்ணில்வைத்து
ஆயேசரணமென்று அழுதான்புலையனுந்தான்
பொருமியழுததொரு புலையனையுந்தான்பார்த்து
அருமைமகனேநீ யழுகாதேயென்றமத்தி
மண்ணிலிருந்துகொண்டு மனிதருயிரையெல்லாம்
கொண்ணுதிண்ணுவாள்ந்திருந்தேன் கோடியுகம்வரைக்கும்
இப்போதுயெந்தனுக்கு யெழுத்துமுடிந்ததினால்
தப்பாமலேமரணந் தானெனக்குவந்ததுகாண்
கர்மந்துலைந்ததுகாண் காசினியைவிட்டகன்று
தர்மமெனும்நகரந் தான்தேடிநான்போரேன்

தனதுமகனேயுன் றன்னிடத்திற்சொல்லுகிறேன்
மனதிலொருஆசைதனை வைத்திருக்கிறேன்கேளும்
மரந்துவிருதாவிலிங்கே மாண்டுவிட்டோமாகில்
எரிந்துவிடாமலென்னை யெடுத்தடிக்கிநீயுமிந்தப்
பெரியவனத்திலொரு பீடமது தான்போட்டு
வருசமொருக்கால் வந்துஒருநாளையிலே
புவியாளும்மன்னவர்க்குப் பிறந்தபுதல்வர்களாய்
தவியாமலாயிரம்பேர் தானேயொருதுகையாய்
இட்டமுடன்கொண்டுவந்து யென்னுடையபீடமதில்
வெட்டிப்பெலிகொடுக்க வேணுமடாயென்மகனே
பத்தியுடனெனக்குப் பண்ணுகின்றபூசையினால்
பெத்துப்பெருகிப் பெரியகுடியாயிருப்பாய்
உள்ளமதிலாசை யுரைத்தேதனுனக்கெனவே
பிள்ளைதின்னும்ராட்சதையும் பிரண்டுமடிந்தாள்காண்
தாயார்பிசாசினியுந் தான்மரணமானதற்பின்
ஓயாமலேயழுது யுருண்டுபுலையனுந்தான்
மண்ணிலெடுத்தடக்கி மாதாவுரைப்படியே
திண்ணையொன்றுபோட்டுச் செய்திருக்கிறான்பீடம்
வருசமதுதப்பாமல் மன்னவர்களாயிரம்பேர்
உருசைதாயார்க்கு உகந்துபெலிகொடுப்பான்
பண்டுதனைப்போலே பலிகொடுக்கயெங்களையும்
கொண்டுவந்துயிந்தக் குகையிலடைத்துவைத்தான்
எரிபூசைக்காயிரம்பேர் யெண்ணக்குறைந்ததினால்
மரியாதையாகவுமே வாள்ந்திருந்தோமிக்குகையில்
எம்பியரேகொஞ்சநா ளிருக்கலாமென்றிருந்தோம்
தம்பியரேநீர்வரப்போய்ச் சரியாச்சுஆயிரம்பேர்
ஆருரைத்தவாக்கோ அனியாயமோநமக்கு
ஓரெழுத்தாய்வேத னுடனெழுதிவிட்டானோ
சந்தேகமேதுயினித் தலைமுழுகப்போனவனும்
வந்தால்நமதுயிரை வாங்கிவிடுவானொடியில்
நேத்திரமாயும்முடைய நீலவடிவழகை
பார்த்திருந்தோமானால் பசிபோகுமெங்களுக்கு
காப்புத்தரித்திருக்கும் காவலரேஅண்ணாவி

மாப்பிள்ளையும்பெண்ணுமின்னம் வாழ்ந்துண்டிருக்கலேயோ
எமக்குவிதிமுடிவா லின்பமனுவிக்கவில்லே
உமக்குவிதிவசமோ ஓகோகோவென்றழுதார்
பழகும்ஒருவயசுப் பாலர்சொன்னசேதியெல்லாம்
அழகுடையசெல்வ னபீமனுமேதான்கேட்டு
ஏதுக்கும்நீங்களென்மே லிரங்கியழவேண்டாம
சாதிக்கும்புத்தியொன்று சாற்றுகிறேன்கேட்டருள்வீர்

## அடையட்டிருக்குங் குழந்தைகளுக்கு அபீமனன் புத்தி கூறுதல்

### விருத்தம்.

பனிபாதகம்விடுமோசெயல் பலியாதினியுலகில்
முளுமோசமுமிவனேசெய முடியாதிவனுடலைக்
களுகோரிகள்பொசிக்கவே கைவாளால்துணிசெய்வேன்
அளுகாதையுமளுகாதையு அபீமனுரைகேளும்

### 2-வது

குளேசூடியஅரனர்பதம் மரவாதவனுரைப்பான்
பிளையானதுஉயிராம் வதையெவருகிலும்மிடரில்
விளுவாரெரிநரகானதில் வினையானதுவிடுமோ
அளுகாதையும்மளுகாதையும் அபீமனுரைகேளும்

பொல்லாஅரக்கன்வந்துநம்மைப்
பிடிக்கும்பொழுதில்நீங்களெல்லாம்
வில்லாற்பெரியோன்றனையுமுன்னே
வெட்டிப்பெலியுங்கொடுத்துவிட்டு
எல்லாரையுநீயொருமிக்க
யிரைவாவெட்டிப்பெலிகொடென்று
நல்லாயுரைத்தீராமாகில்
நருக்கிவிடுவேனவன்றனையும்

### அம்மானை

கொடுமைகடப்பட்டசெல்வங் கூடாதொருநாளும்
கடகாவினிற்பாலரீக் கவிந்துவிடுந்தம்பியரே

நன்றாயிருந்ததுகாண் நாரணனூர்சோதனையும்
கற்பமதுதின்றாலுங் காயசித்திசெய்தாலும்
நற்பெரியஆகாச நற்கெவுனம்பாய்ந்தாலும்
திரணமதைமேருவதாய்ச் செய்தாலும்ஊழியினில்
மரணம்பலிக்குமல்லால் மற்றதிலேயொன்றுமில்லை
தெளிந்துவுரைத்தாலுஞ் ஜெகத்திற்பிறந்தவர்கள்
அழிந்துவிடுவதல்லால் ஆவதுவுமொன்றுமில்லை
இனிமேல்ப்பலவிதமா யெண்ணியழவேண்டாங்காண்
கனிவாயுமக்குமொரு கருத்துரைக்கிறேன்கேளும்
புலையனெனுமசுரன் பிடிக்கவருமன்னேரம்
மலைவுகளில்லாமலொரு வார்த்தையொன்றுநீருரைப்பீர்
முன்னேயிவனை முதற்பெலியுந்தான்கொடுத்து
பின்னாலேயெங்களையும் பெலிகொடுப்பீரென்றுசொல்லும்
இந்தமட்டும்நீங்கள் எடுத்துரைத்தீராமாகில்
அந்தமட்டும்போது மவனுயிரைத்தான்வாங்கி
போக்குகிறேனீங்கள் பிழைத்திருந்தால்ப்போதுமது
பாக்கியமுமாமெனக்குப் பரலோகமுங்கிடைக்கும்
இதுகாணுமக்களப்பு யில்லையினிமேலாக
பதறாதிருங்களென்று பாலகனுந்தானுரைத்தான்
கூறும்வசனமெல்லாங் குழந்தையர்கள்தான்கேட்டு
வேறுமொழிபேசாமல் வீத்திருந்தாரம்மானை

### விருத்தம்.

இவனுரைப்படியேகேட்டு யிருந்தனர்குகையினுள்ளே
அவன்மலையருவித்தீர்த்த மாடிநன்னீரெடுத்துக்
கவனமதாகவந்து கடிகிநன்பெலிபீடத்திற்ப்
பவமதுபெருகவென்றே பருகும்நன்னீர்சொரிந்தான்

## புலையன் ஆயிரங்குழந்தைகளையும் பெலியிட அழைக்குதல்

### அம்மானை.

பெத்தபிசாகினியாள் பீடமதிலேபுலையன்
சுத்தியிடமாகவந்து தொழுதுநமஸ்க்கரித்து
தாயேயுனதுமனஞ் சந்தோசமாகிடவே

ஆயிரம்பேர்பிள்ளைகளை அருத்துக்கொடுக்குகிறேன்
தாள்வுகுறையில்லாமல்த் தாயேநீயிப்போது
காவுகொண்டுஉன்மகனை காத்தருளுமென்றுசொல்லி
வந்தான்குகைபருகில் வாளுமொன்றுகைப்பிடித்து
சந்தானமானகுகை தன்னையுமேதான்திறந்து
பாலரையெலாமசுரன் பாச்சைக்கயறுகொண்டு
காலன்பிடித்ததுபோலக் கைகள்ரெண்டுந்தானீட்டி
வளைத்துபிடித்திழுத்தான் வல்லசுரனன்னேரம்
குழந்தையர்களெல்லோருங் கோவென்றழுதிடவே
வெளியிலிழுத்துவந்தான் மிக்கபெலிபீடமுன்னே
சுளிவாய்வளைந்துகொண்டு சொல்லுவான்பாலருக்கு
பேர்பெற்றயென்தாய்தன் பெலிக்கிசைந்துவந்தீரோ
ஆர்பெற்றருங்களைப்போ லரியதவமகிமை
பூஜாபலனுமக்குப் புண்ணியரேவாச்சுதுகாண்
கூசாமல்நீங்கள்நின்று கும்பிடுங்கோபீடமதை
ஏழைப்புலையன்முத ரெல்லோருமேசுகமாய்
வாளவென்றுசொல்லி மனதில்நினைந்திடுங்கோ
தரைபார்த்திருந்துகொண்டு தலையையசைத்திடுங்கோ
கரையேத்திப்போடுகிறேன் கையறுவாள்தன்னாலே
தலையையசைங்களென்று தயவுசற்றுமில்லாமல்
புலையனுரைத்திடவே பொருமையுள்ளபாலரெல்லாம்

## ஆயிரங்குழந்தைகளும் புலையனைப் பார்த்துச்சொல்லுதல்

அசுரன்றனைப்பார்த்து அகமுருகியேதுசொல்வார்
பிசகுஅனுவழவு பேதமில்லையாகையினால்
தப்பாமல்நாங்களுமே தலையையசைக்குகிறோம்
இப்போதுநாங்க ளியம்புகின்றசொற்படிக்கு
மனுக்கொடுக்கவேணுமந்த வகையதனைநீர்கேளும்
தனுப்பிடித்தக்கையனென்றுந் தம்பியந்தம்னனவனை
அறுத்துமுதற்பெலியிட் டதன்பிரகுயெங்களையும்
நிருத்திப்பெலிகொடுங்காண் நீர்வாழ்ந்திருக்கவென்றால்
இந்தமனுக்கொடுக்க வென்றார்குமாரரெல்லாம்

அந்தவுரை தனைக்கேட் டசுரன் மனமகிழ்ந்து
அபையமிட்டபிள்ளைகளை யமர்த்தியேவல்லசுரன்
உபையமிட்டபிள்ளையைப்பார்த் தோடியிங்கேவாருமென்றான்

## அபீமனன் புலையனைப்பார்த்துச்சொல்லுதல்

கெருவமுடன்சொன்னதையும் கேட்டவுடன்வாழ்பீமன்
மருவசனந்தானுரைப்பான் வல்லசுரன் தான்கேட்க
கைப்பிடியாயெங்களையுங் களுத்தருக்கநீதுணிந்தாய்
அப்பணிந்தசுஸ்வரனார் ஆண்டவர்களுமோராதே
ஆடுகிடாய்க்கோழிகளை யருத்துப்பெலிகொடுப்பார்
மாடுபன்றியானதையும் வதைத்துப்பெலிகொடுப்பார்
இவ்வழியேயல்லாமல் யிந்தவழிகேட்டறியோம்
தெய்வமனுடரல்லால் திரும்பவுண்டோபூவுலகில்
தன்னுயிர்போல்மன்னுயிரை தானினைப்பார்நல்லவர்கள்
சின்னமனுஷரல்லோ செய்வாருயிர்வதைகள்
ஏனோகெடுவா யிதுவுனக்குதர்மமல்ல
ஆனாலும்ரெம்ப அரக்கொடுமைசெய்யுகிறாய்
பால்குடிக்கும்வாய்மரவாப் பச்சைக்குழந்தைகளை
கோல்பிடிக்கும்சின்ன குமாரர்களைக்கொண்டுவந்து
வலத்துவழக்கறிய மாட்டாதுயென்பதுபோல்
பெலிகொடுக்கவோநினைந்தாய் பேயாபுலையாபோ
செத்திரந்துபோனவர்க்கு ஜெகத்திற்பொசிப்புமுண்டோ
புத்திகெட்டுதோவுனக்கு போடாபுலைப்பயலே
உன்னுடையதாயார்க்கு வுற்றபெலியீயுமல்லால்
என்னிடத்திலுன்மகிமை யேலாதுசொல்லுகிறேன்
ஓடிப்பிளைபோடா ஓடாமலிங்குவந்தால்
பீடமதிலுன்னையிப்போ பெலிதான்கொடுத்திடுவேன்
ஆறென்றிருக்காதே அபீமனல்லோயென்பேரும்
பாரின்றுயென்னுடைய பாரமுள்ளவாள்திரத்தை
அரிந்துபிளையுமென்று அபீமனெடுத்துரைத்தான்
தெரிந்துமிகவசுரன் சிஸ்னதமிகவெகுண்டு

## புலையனுக்கும் அபீமனுக்கும் யுத்தம்

சாகுமொருசுணங்கன் தன்பனையிலேருமென்று
களுத்தருக்கவைத்திருந்த கையருவாள்தன்னைநீமே

அளுத்தமுடன்விட்டெறிந்தா னபீமனுடமேலே
பெருக்கமுடனெறிந்த பெரியதொருகத்திதனை
நருக்கியெறிந்துவிட்டான் நல்லதொருவாள்பீமன்
கண்டான்புலையனுமே கண்சிவந்துகோபமுற்று
இரண்டாயிரமலையை யெடுத்துவந்துதானெறிந்தான்
வாரமலைகள்தனை வாள்பீமன்வாளாலே
பூசைசெய்யவேலைதப்பிப் போருதென்றுதான்புலையன்
பாசமெனுங்கயிற்றை பார்த்தெறிந்தான்மன்னவன்மேல்
வருத்தப்படுத்திவிக்கும் வல்லசுரன்பாசமதை
அறுதெறிந்துபோட்டுவிட்டா னபீமனுடவாளாலே
வீமதெண்டையும்பிடிப்பான் மிக்கதொருவல்லசுரன்
யமதண்டமொன்றனை யெடுத்துமிகவெறிந்தான்
திக்குகளெல்லாம்நடுங்கச் சீறிவருந்தெண்டதனை
சக்கைசக்கையாகவுமே தானெறிந்தான்வாழ்வீமன்
வெத்திகொள்ளும்மன்னவன்மேல் மிகவசுரன்கோபமதாய்
குத்தியிவனை குடல்பிடுங்கவேணுமென்று.
குதித்தானொருகுதியும் குவலயமெல்லாம்நடுங்க
மிதித்தெறிந்தேவந்தான் விசையன்மகன்தன்மேலே
ஆர்ப்பரித்துவார வசுரனையுமன்னேரம்

## புலையனை புலையன்றாய்க்கே பலிகொடுத்தல்

வேர்ப்பறித்துத்தள்ளிவிட வேணுமெனவேநினைந்து
வாள்பீமன்தன்கையிலே வச்சிரவாள்தானெடுத்து
தாள்விலாமாயனையுந் தன்னுளத்திலேநினைந்து
மலைபோலெதிர்த்துவந்த வல்லசுரன்தன்னையங்கே
தலைவேறுடல்வேறாய் தான்துணித்தான்வாள்பீமன்
கதரியசுரனுயிர் காலனிடமேபோக
பதரியுடல்தலையும் பாரில்விழுந்ததுவே

### விருத்தம்.

புலையனானவன்மடிந்துயிர் புகுதவுஞ்சிறுவர்
மலையாயானையும்நீங்கினர் குழந்தையர்மனதில்
நலமிதாமெனவானவர் நறுமலர்சொரிந்தார்
சிலையில்ராகவன்மருமகன் திருவுளஞ்சிரந்தான்

வேறு

மடிந்தவசுரன் தன்தலையை வனத்திலிருக்கும்பிசாசனிமுன்
படியில்நிருத்திப்பெலியிதுவுன் பாலனிவனும்மிவன்குருதி
குடியும்வயருநிறையும்மட்டுங் கொள்வீர்கொள்ளாதிருக்கவுமே
இடியும்முனதுபீடமென வியம்பிவிஜையன்மகனெழுந்தான்

அம்மானை.

அசுரன்தலையையவ னன்னையர்க்கேபூசையிட்டு
விசையன்மகனுமங்கே விந்தையுள்ளபாலகரை

## ஆயிரங்குழந்தைகளுக்கும் அபிமனன் திடம் சொல்லுதல்

கூட்டிநடந்து குளத்திலேநீராடி
காட்டில்மருதநிழல் கண்டிவர்கள்தான்மகிழ்ந்து
இன்னிழலில்நாமு மிருந்துதகையாறி
தன்னுடையவூர்களுக்கு தான்போகலாமெனவே
வந்திருந்தானந்த மருதநிழல்வாள்பீமன்
அந்தமன்னன்சொற்படியே அருகிலிருந்தார்சிறுவர்
கருணையுடன்சுத்திவந்து காத்தருளும்பிள்ளைகளை
அருமையுடன்பார்த்து அபிமனுமங்கேதுரைப்பான்
வாகானதம்பியரே வடிவுடையதோழர்களே
ஆகாதவனிடத்தில் லவதிமிகப்பட்டீரோ
தங்கநிரமேனியரே தம்பியரேஅண்ணர்களே
உங்களுணர்வுகெட்டு உடல்மெலிந்துபோனீரே
கத்தத்துரோகியிவன் கைக்குளகப்பட்டுஎன்று
இத்தனைநாள்பட்டுமந்த யிருட்டறையில்வாள்ந்தீரே
பேய்ப்பிடித்தவாறதுபோல் பிரமைகொண்டுநீங்களுந்தான்
தாய்தகப்பனைமரந்து சங்கடமும்பட்டீரே
துடார்ந்தசனியனுமே துலைந்ததுகாணிப்போது
உடந்தையந்தவுங்களுட உரவுமெனக்காச்சுதுகாண்
பயமுமக்குத்தீர்ந்ததினால் பதிநகரந்தானேக்கி
தயவுசெய்துபோமெனவே தானுரைத்தான்வாள்பீமன்
செப்புகின்றவார்த்தைகளைச் சிறுவர்களுந்தான்கேட்டு
நப்புடையமன்னனிடம் நன்றாகவேயுரைப்பார்

## விருத்தம்

ஓதவும்மரியோம்நாங்க ளுரைக்கும்விண்ணப்பமொன்று
யாதனுசரீரம்போல அசுரன்கைசிக்கினோரை
சேதமானதுவராமல்ச் ஜீவரட்சகரேயுந்தன்
பாதமேகெதியல்லாது பதிநகரினிவேண்டோமே

## அம்மானை

ஐயனேவுன்பாதம் அடியேன்கள்தான்சரணம்
மெய்யனேயுன்னையல்லால் வேறுமுண்டோவெங்களுக்கு
வந்தவினைதீர்த்தருளும் மாதவனேயும்மைவிட்டு
எந்தவிதம்நாங்கள்செல்வோம் யிவ்வுலகில்நாயகமே
கானிலசுரனுட கையிலகப்பட்டுநொந்து
போனவுயிர்தனையும் மீளப்பிவித்தபுண்ணியரே
வலையிலகப்பட்டதொரு மான்போல்மருண்டிருண்டோம்
தலைபிலெழுதியுயிர் தர்க்காத்தபுண்ணியரே
சித்தரவுவாயில்சிக்கும் தேரையதுபோலிருந்தோம்
உத்தகெருடனைப்போ லுயிர்காத்தபுண்ணியரே
மேலுமொருயானைதனை வேண்டிமுதலைபிடிக்க
ஓலமென்றசொல்கேட்டு வோடிவந்துமாயவனார்
குஞ்சரத்தைதக்காத்ததுபோல்க் குழந்தையர்களெங்களையும்
வஞ்சகமில்லாமல் மன்னவனேகாத்துவிட்டாய்
பூவுலகிலாசை பொருந்தேர்முமதுடைய
ஏவல்செய்துகொண்டு யிருப்போமென்றுண்டவரே
இந்தவகையல்லாது யெங்களுக்குவேறேயொரு
சிந்தையில்லையென்று செப்பினார்பாலர்களும்
மகிழ்ந்துரைத்தபிள்ளைகள்தன் வார்த்தையெல்லாந்தான்கேட்டு
புகழ்ந்துவிசையன்மகன் புனிதமுடன்வீற்றிருந்தான்

## விருத்தம்.

நன்றிதாமென அபிமனுஞ் சிறுவரும் நயமாய்
ஒன்றுகூடி யங்கிருந்தனர் மலையடி யோரம்
அன்றுநீர்தர வேணுமென்றேகிய தமையர்
சென்றுநீரெடுத் திரும்பினர் பீமனைத்தேடி

## இராவான்கடோர்க்கயனிருவர்களும் அபீமனைத்தேடித்திரிகுதல்

### விருத்தம்.

விண்டிடாதிருனக் காண்கமலைகளும் விரைவில்ச்
சண்டமாருத மென்னவே நடந்துதானபீமன்
பண்டுதானுமே யிருந்திடும் நிழல்தனிற்பார்த்துக்
கண்டிடாமலே யிருவரு முருகினர் கரைந்து

### அம்மானை

பகைவர்களைவெல்லுகின்ற பார்த்தன்மகனிங்கிருக்க
தகையமரவேணுமென்று தண்ணீர்தனைத்தேடி
முன்னாகவேநடந்த முதல்வனெனும்ராவானும்
பின்னாலேதேடுகின்ற பெரியகடோர்க்கயனும்
சேர்ந்துயிருவருமாய்த் திரள்வனமெலாங்கடந்து
சாந்தகுணமுடைய தம்பியபீமனுந்தான்
இருந்தநிழலிலேதான் யிருவர்களும்தான்பார்த்து
குருந்தநிழலிலந்தக் கொற்றவனைக்காணமல்
கருத்தழிந்துமெய்யசந்து கண்ணீர்மிகச்சொரிந்து
வருத்தமனதிலுற்று மயங்கிப்புலம்பலுற்றார்
அட்டதிக்கெல்லாம்புகழும் அபீமாநீயெங்களையும்
விட்டுப்பிரிந்ததென்ன மெய்யுடையதம்பியரே
தாபந்தணிவதற்கு தண்ணீர்தரவில்லையென்று
கோபம்மெங்கள்பேரில்க் கொடுமைவைத்துப்போனீரோ
திங்களுதல்சுந்தரியாள் செல்வியின்மேலாசைவைத்து
எங்கள்தனைமரந்து யெவ்விடத்தில்போனீரோ
வனத்திலசுரனுட வஞ்சகத்துக்குள்ளாகி
தனித்திருக்கமாட்டாமல் சண்டைசெய்யப்போனீரோ
சாதகமாயெங்களையும் தான்பார்க்கவேணுமென்று
பாதைவழிபிசகி பருவனத்தில்ச்சென்றீரோ
அன்புசொல்லியுன்பிரகே யாங்கள்வந்தோமாமாகில்
துன்பமென்றுயெங்களையுந் தொலைத்துவிட்டுப்போனீரோ
காட்டானைசிங்கம் கரடிபுலியாளிகளை

வேட்டைசெய்யவேணுமென்று விரைந்துமிகப்போனீரோ
எங்கேயினிக்காண்போம் மென்னுடையவாள்பீமா
சங்கேந்துமாலழகன் தன்னுடையசோதினையோ
முன்னாள்வினைப்பயனோ மூதாக்கள்செய்ததுவோ
இன்னாளுனைப்பிரிந்தோம் மீஸ்பரனேயென்றழுதார்

கொச்சகம்

பிரியாதஅன்றில்களேப் பேடைமயில்த்தாராவே
வெரிசேரும்பூங்காவில் வீத்திருக்கும்—மாங்குயிலே
சரியானவில்விசையன் தன்னுடையபுத்திரனும்
அரியாச்சிறுகுழந்தைய பீமன்வரக்காணீரோ (௧)

இன்பமுள்ளசோலையிலே் யிருந்துவிளையாடுமின்ற
துன்பந்தவிர்த்தருளும் தூக்கணமே—கேட்டருள்வீர்
வம்புசெய்யுந்துற்சனரை மார்பிளக்கவல்லவனும்
அன்புடையதம்பிய பீமன்வரக்காணீரோ. (௨)

வல்லமைகளானதொரு வக்காவேகொக்கினமே
சொல்லுமொருசேதிதனைத் தோற்றமுடன்—கேட்டருள்வீர்
கல்லையுருவாக்கிவைத்த காரணனார்தன்மருகன்
நல்லஅபீமனிங்கே நாடிவரக்காணீரோ (௩)

அம்புவியிற்பஞ்சவர்ன மழகுள்ளகிள்ளைகளே
வம்புசெய்யவில்லையெங்கள் வார்த்தையொன்று—கேட்டருள்வீர்
நம்புமொருசுந்தரிக்கு நாயகனுமெங்களுக்கோர்
தம்பியபீமனிங்கே தான்வரவுங்காணீரோ (௪)

வெத்திசெய்யும்யாளிகளே வேகமுள்ளகுஞ்சரமே
பத்தியுடனாங்கள்சொல்லும் பாதரவைக்—கேட்ட்ருள்வீர்
நித்திரையிலும்மறவா நேசமுள்ளயென்துணைவன்
புத்தியுள்ளபீமனிங்கே போகவரக்காணீரோ (௫)

பூமரமேசெண்பகமே புன்னைமரமேகமுகே
மாமரமேயென்னுடைய வார்த்தையொன்று—கேட்டருள்வீர்
வீமர்க்கிளைய வில்விசையன் புத்திரனும்
தாமனபீமனிங்கே தான்வரவுங்காணீரோ (௬)

அந்திரமேமங்குலமே அம்பரநட்ஹேத்திரமே
சந்திரனேசூரியனே தானுரைக்க—கேட்டருள்வீர்
சுந்தரியைநல்முகூர்த்தஞ் சோபனமுந்தான்முடிக்க
வந்தஅபிமனிந்த வனத்தில்வரக்காணீரோ எ

ஆறுகுளமேநதியே அன்புபெருநல்மலையே
தேறும்வகையெங்களுக்கு செப்பிடவும்—மாட்டீரோ
கூறுமொருசுந்தரியை கொஞ்சிவிளையாடமையல்
ஊறுமபிமனிங்கே ஓடிவரக்காணீரோ அ

வில்வமரமேதுளசி வெள்ளைமலர்மல்லிகையே
நல்வசனமாகவுமே நானுரைக்க—கேட்டருளவீர்
கல்வியரிவிர்ப்பணனுங் கட்டளகன்பஞ்சவர்க்கு
செல்வனபிமனிங்கே தேடிவரக்காணீரோ கூ

ஆலமரமேபாசே அத்திமரமேகுருந்தே
சீலமுடனுங்களுக்கு செப்பும்வகை—கேட்டருள்வீர்
கோலமுள்ளபஞ்சவரில் கூருமொருபார்த்தனுக்கு
பாலனபிமனிங்கே பாதைவரக்காணீரோ ம

## விருத்தம்

இருநிலத்துள்ளோர்புகழ்பெருமரவானெழில்மிகுகடோற்கயனிரு
கருமமோகமக்குமிவ்விதம்வந்ததென்றுமேகாவலர்புலம்பி [வர்
வருமதானுற்றுவிருந்தனர் மண்மேல்மாயவனிது தனையறிந்து
கருணை தான்பெருகிவேதியன்போல காவலர்ரிருவர்முன்வந்தார்

## வேறு விருத்தம்

வந்தவரிந்தமன்னரையெழுப்பி
மயக்கமுந்தீர்ந்திடவுரைப்பார்
சுந்தரமுள்ள மன்னரேநாமும்
துய்யமால்மகள்மணந்தனக்கு
வந்தனமந்த வழியுமேபிசகி
வருகின்றவேளையில் மருந்த
விந்தைசேர் நிழலில் சிலகுழந்தையர்க்குள்
வேலவனென்னவேசிரந்தான் க

அந்தகற்பால வனங்கனமிருக்க
அவ்வழிசென்றிடவெதிருய்
வந்துமேநமக்கு தெண்டநிட்டேதான்
வணக்கமாயெங்கிருந்தேதான்
இந்தநல்வனத்தில் செல்கின்றீரேன்றே
யியம்பிடமாவிடம்போரேும்
விந்தைசேர்கோவே என்றுநாமுரைக்க
விளம்பினனேர்மொழியன்றே உ.

அங்குநீர்சென்றால் அரசுயர்த்தோனும்
அவன்படை தன்னுடன்வந்து
மங்களமாக மால்மகள் தன்னை
மன்றல்தான் செய்திடயிருப்பான்
துங்கனென்றெண்ணி அஞ்சிடாநீரும்
சொல்லுவீர் பீமன்வாளேந்தி
மங்கைசுந்தரியை மணமதுசெய்ய
வருகிருனென் றவர்க்குறைத்தே ௩.

உன்னுடபடைகள் தன்னையும்வதைத்து
உன்மகன்லெக்கணன்றன்னை
அன்புடனே தானுக்கினைசெய்ய
அவனுமே வருகிறதாக
உன்னுடன்சொல்லென் றுரைக்கயான்கேட்டு
ஓடிநாம்வருகையிலும்மை
அன்புடன்கண்டேன் அவதியுந்தொலைந்து
அகன்றிடுமென்றுமேநடந்தார் ௪

அம்மானை.

கானகத்திலுள்ளதெல்லாங் கண்பார்த்தபீமனையும்
போனவழிசொல்லுமென்று புலம்பித்தவித்துநிற்பார்
அழுவார்மனதுநொந்து ஐயோஅபயமென்று
விழுவார்புவிதனிலே மேனியும்புண்ணுகிடவே
பாரில்மணமாலையிட்டுப் பார்க்கலாமென்றிருந்தோம்
ஆரையினிபார்ப்போம் ஐயாகோவென்றழுதார்

கத்திப்புலம்பியபின் கடோர்க்கயனும்ராவானும்
புத்தியறுமயங்கிப் பொரிகலங்கிமூர்ச்சையதாய்
அடித்துவிளுந்தா ரருங்கானகந்தனிலே

## ஸ்ரீகிருஷ்ணன் மூவரையும் மொன்றா சேர்த்துவைத்தல்

திடத்தபுத்திபுள்ளவனுந் திருமாலிவையறிந்து
பீத்தக்கலையுடுத்தி பின்குடுமிதொங்கலிட்டு
சாத்துமொருநெத்தியிலே தயவுதிருநாமமிட்டு
காலூன்றியேநடக்க கடினமிகவானதுபோல்
கோலூன்றியேநடந்து குருவேதியர்போல
கிளவரெனமெலிந்து கிடுகிடனத்தள்ளாடி
வழிபிசகிக்கானகத்தில் வந்தவர்களைப்போலே
மாயவனும்வந்தார் மனமகிழ்ந்து அன்னேரம்
நேயமெனும்ராவான் நெடியகடோர்க்கயனும்
படுத்துக்கிடக்குமொரு பாதைவழிதனிலே
அடுத்துவந்துமாயன் னவர்கள்தனையெழுப்பி
ஆசிர்வதித்து அவர்களிடமேதுரைப்பார்
பேசிநீர்நம்மிடத்திற் பிராமணனும்நானேழை
சொல்லுகிறேன்கேளுந் துவாரகையில்மாயவனார்
நல்லமகள்சுந்தரிக்கு நாளைக்கலியாணம்
செய்குறாரென்றுசொல்லுஞ் சேதிதனைநான்கேட்டு
ஐயமில்லையென்று அம்முகூர்த்தவேளையிலே
போனால்நமக்குப் பொருளுதவுவாரெனவே
நானேவடதேசம் நகரைவிட்டுஓடிவந்தேன்
வந்தேன்வெகுதுருசாய் வழிபிசகிக்கானகத்தில்
ஐந்தாறுநாளாய் யலைந்தேன்திசைபிசகாய்
ஓடித்திரிந்தலைந்து ஒருவரையுங்காணமல்
தேடிவனத்தூடே சென்றுவருகையிலே
மலையினருகாக மருதநிழல்தனிலே
தலைமையோருவருடன் தானுயிரங்குழந்தை
சுத்தியருயிருக்க துரைமகன்போலேசிறுவன்
வெத்திமிகசொல்லி வீற்றிருந்தாரவ்விடத்தில்

கண்டேனவர்களையுங் கருத்தில்மிகமகிழ்ந்து
விண்டேனவர்களிடம் வேதியையுமேன்மையையும்
சொல்லியுபசரித்துத் தோத்திரமுஞ்சொன்னேனான்
நல்லவருமென்று நமஸ்க்கரித்துயெந்தனையும்
இருமென்றருகிருத்தி யெங்கேவந்தீரிங்கையென்றார்
வருகும்வயனமெல்லாம் வகைவகையாய்பாலருக்கு
வந்ததுவுங்கானகத்தில் வழிபிசகிப்போனதுவும்
சிந்தையுள்ளமர்மமெல்லாஞ் செப்பினேன்பாலருடன்
என்வார்த்தைகேட்டு யிருக்கின்றபிள்ளைகளில்
பொன்வார்த்தபொற்சிலைபோலப் புதல்வனெனுமோர்சிறுவன்
என்னைவரவழைத்து யிருமென்றுபசரித்து
சொன்னசொல்லையுங்களிடஞ் சொல்லுகிறேன்கேட்டருள்வீர்
நாளைமுகூர்த்தமங்கே நல்லதொருசுந்தரிக்கு
வளைமறையோனே யின்பமுடன்நீர்போனால்
அரவுயர்த்தோன்றனையும் அரிகேசவன்றனையும்
திரமாயவர்களிடம் செப்புமொருவார்த்தை
தீதுரையார்தர்மதம்பி தேர்விசையன்புத்திரனும்
மாதுநல்லசுந்தரிக்கு மாப்பிளையாம்வாழ்வீமன்
காப்புத்தரித்துமவன் கையிலொருவாளெடுத்து
நார்ப்பதுநாழிகைக்குள் நல்லதொருபட்டணத்தில்
வருவாரொருநிமிஷம் மன்னர்படையத்தனையும்
நரிநாய்களுக்கு நல்விருந்துவுண்டுபண்ணி
எட்டுத்திசையரிய யிலக்கணனைசிச்சைசெய்து
கட்டுகிறேன்தாலியந்தக் கன்னியெனுஞ்சுந்தரியை
மாலையிடவருவான் வாள்வீமனென்றுசொல்லும்
தாலிகழுத்திலிடத் தான்வருவானென்றுசொல்லும்
பெரியமறையோனே பிசகாமலிவ்வசனம்
திரியோதனனிடத்தில் செப்பினீராமாகில்
கணைதயுடனுனைக் கலியாணப்பந்தலிலே
மனதில்நினைத்ததெல்லாம் வாரியுமக்களிப்பேன்
நிச்சயமாய்நம்பியிப்போ நீர்போம்துவாரகைக்கு
இச்சணமேவாரோமென் றியம்பியடிபணிந்து
போமென்றனுப்பிவித்தான் புகழுடைய்பால்கனும்

ஆமென்றதுகேட் டவர்களையும்விட்டகன்று
நான்வந்தேனித்தூரம் நல்லவரேயுங்களையும்
தான்கண்டேன்னென்மனதில் சந்தோஷமாச்சுதுகாண்
போரேன்துவாரகைக்கி புத்தியுள்ளமன்னவரே
நீரேன்மயங்குகிறீர் நினைத்தபடியுங்களுக்கு
கூடிவருமென்றுசொல்லி கோவிந்தமாமறையோன்
நாடித்துவாரகையில் நண்ணினார்கோபாலர்
மறையோனுரைத்தமொழி மன்னவர்கள் தான்கேட்டு
குறைகள்தனையகற்றிக் குளிர்ச்சியுடனேமகிழ்ந்து
ஆதிமகாமூலம் அரிகேசவன்றானும்
வேதியர்போல்வந்துகந்து விக்கினத்தைதீர்த்தார்காண்
தாரணிபுமார்பர் தம்பிகடோர்க்கயனே
வாருமினிமேலாய் மனதில்குறைவேண்டாம்
சாதிமறையோனமக்கு தானுரைத்தசொற்படியே
காதவழிநடந்தாற் காணலாந்தம்பிதனை
ஐயமினிநமக்கு அனுவளவுவேண்டாங்காண்
மெய்யாகயென்பிரகே விரைந்துமிகவாருமென்று
எட்டிநடந்துசென்று விறுவான்வனத்தூடே
தொட்டுநடந்துசென்றான் துய்யகடோர்க்கயனும்

## விருத்தம்

மறையவனுரைத்திடும் வார்த்தையாவையும்
இறைமொழியிதுவென யிருவர்நம்பியே
குறையிலையென்மனக் குளிர்ச்சிநன்னினார்
உறையுமவ்வனங்கடந் தோடினார்களே

## அம்மானை.

சுருக்காயிருவர்களுந் துலைதூரமுள்ளதெல்லாம்
நெருக்கும்வனங்கள்தனை நிமிஷத்திலேகடந்து
தம்பியெங்கேயென்று தவித்துவருகையிலே
கும்புடனேஆரப்பேர் கூடியிருக்கையிலே
நல்லமருதநிழல் நடுவேஅரிமருகன்
வல்லமையாய்வீற்றிருந்தான் வாள்பீமனம்மானை.

கண்டார்களங்கு கடோர்க்கயனுமராவானும்
பூரித்துடம்பு புளகிதமுமுண்டாகி
வாரிப்புனல்சொரிந்த வான்பயிர்போலேயாகி
மயிர்க்குச்செரிந்து மன்னனிருவர்களும்
உயிர்க்கேத்ததம்பியிடம் ஒடிவரும்போது
வாளாளபீமன் மன்னவனுந்தான்பார்த்து
தாளாமல்வாரவர்கள் தமையனெனவேயரிந்து

## இராவான், கடோர்க்கயனை அபிமன்னன் கண்டு சந்தோசமடைகுதல்

ஆனந்தமாகி அபிமனெழுந்திருந்து
தானும்வெகுவேகமதாய் தமைய்னிடமாயோடி
அண்ணாவியென்று அவர்களிருபாதமதை
கண்ணன்மருகன் காவலனுந்தான்பணிந்தான்
வந்துநமஸ்கரித்த வாள்பீமன் தன்னையுமே
சந்தோஷமாகத் தமயரிருபேரும்
வாரிமிகவெடுத்து மார்புதனிலேயணைத்து
கண்ணீர்ததும்பிக் கமலமுகஞ்சிறந்து
பண்ணுனதம்பியரைப் பார்த்தேதுரைக்கலுற்றார்

### விருத்தம்

எரிந்தகானகத்துன்னையுந் தனியில்விட்டேதான்
பிரிந்தபாவியைத்தமையனென் றுரைப்பதும்பெரிதோ
அருந்தவேஜலமெடுத்துனக் களித்திடாதசடன்
இருந்துசாதகப்பலனில்லை யென்றனனிருவர் ௧

### வேறு

இருவர்கானகத்திடைவளி யேகினமிடறாய்
ஒருவனுகவந்தவதிகள் பட்டிடவுமக்கு
மருவிலாமலேஅயன்முன்ன மெழுதிபவசமோ
கருமமோபுயிர்த்துணைவனுக்கிதுவெனக் கரைந்தார் ௨

### அம்மானை

ஐயாவேயெந்தன் அழகுடையதம்பியரே
செய்யாதகர்மமுன்னாள் செய்தோமோயிவ்வனத்தில்

விட்டுப்பிரிந்தோமே விதியின்வசத்தாலே
தட்டழிந்துபோகாமல் தருமருடசெயலால்
கண்டோமினிமேல்க் கவலையெல்லாந்தீர்ந்ததுகாண்
பண்டேபுவியளந்த பச்சைமால்தன்னருளால்
ஆபத்துதீர்ந்ததுகா னருமையுள்ள தம்பியரே
சாபத்தால்வந்ததொரு சங்கடமுந்தீர்ந்ததுகாண்

## அபிமனிடத்தில் ராவான் போய்வந்த விர்த்தாந்தங்களை சொல்லுதல்

மன்னுஅபிமா வனத்திலுனைத்தனியே
இன்னளில்விட்டுமங்கே யேகிஞெம்நீரெடுக்க
போனயிடங்களெல்லாம் புனலுங்கிடையாமல்
கானகமெலாந்திரிந்து கண்டேன்மலைதனையும்
அம்மலையினுச்சியினி லருவியெனும்நீரெடுக்க
செம்மையுடனேகத் திரமுடையவல்லசுரன்
காவல்பெரிதாகிக் கசிந்துவரும்நீரையெல்லாம்
ஆவலுடனேபொசிக்கு மசுரனுடனேயெதிர்த்து
வெட்டியசுரனையும் மிகுந்தமலைமேலே
இட்டமுள்ளதண்ணீ ரெடுத்துவருகையிலே
கண்டேன்கடோர்க்கயனை கானகத்திலன்னேரம்
விண்டேன்மனது விதனம்பொருக்காமல்
வாடியிருவருமாய் வந்துவுனைக்காணமல்
தேடித்திரிந்து திகைத்துவந்தோமித்தூரம்
தம்பியுனைக்கண்டுயெங்கள் தாகந்தெளிந்ததுகாண்
வெம்பியெங்கள்மீதில் விசனம்வைக்கவேண்டாங்காண்
கொண்டுவந்தோம்தண்ணீர் குடியுங்குழுமையதாய்
மண்டலத்தையாளவந்த மன்னுயென்தம்பியரே
அங்கேயிருந்துநிழ லதனைவிட்டுத்தம்பியரே
இங்கேநீர்வந்தவகை யெங்களுக்குச்சொல்லுமையா
கூட்டமுடைய குழந்தையர்கள் தன்னுடனே
காட்டிலிருந்தவகை கண்மணியேசொல்லுமென்றார்
இந்தவிதமா யிவர்களுரைத்திடவே
சிந்தையுடன்கேட்டுச் செப்புவான்வாள்வீமன்

## விருத்தம்.

தனியே குருந்த நிழல்தனிலே
  தானே படுத்துத் துயின்றதுவும்
இனிதாய் கெவுன காந்தருவி
  யெடுத்தோதமிட்டெழுப்பியதும்
கனிவாய்ச் சேறென் றவளுரைக்கக்
  காத லிலையென் றுரைத்ததுவும்
விணைதான் புலையனிடத்தில் வந்த
  விபரம் முழுதும் விளம்பினனே ௧

## அம்மானை.

நடந்தவயணமெல்லாம் நன்மையுடன்வாள்வீமன்
துடர்ந்துபடிப்படியாய்ச் சொன்னனிருவரிடம்
காதாரக்கேட்டு கலங்கிமனதசந்து
சூதோயென்தம்பியர்க்குத் துன்பவரும்மோவெனவே
அழுதுபுலம்பி யரவணைத்துத்தம்பியரை
பழுதுனக்குவாறாது பட்சமாவுள்ளமட்டும்
தீங்குவருவதில்லை திருமால்தானுள்ளமட்டும்
நாங்கள்ளுனைத்தேடி நல்வனத்தில்கண்டதினால்
இனிமேல்க்கிலேசநமக் கெள்ளளவும்வாறாது
கனிவாய்முகமிலங்கும் கன்னியெனுஞ்சுந்தரியை
உனக்கேதிருப்பூட்டி உல்காளவைக்குகிறேன்
தனக்கேத்தபுத்திகளைத் தானுரைத்தான்தம்பியர்க்கு

## ஆயிரம்பிள்ளைகளையும் அவாளவாளுருக்கு அனுப்பிவிடுதல்

அருகில்வந்துநின்றதொரு ஆயிரம்பேர்பிள்ளைகளை
உருமையுடன்பார்த்து ஓதுவான்ராவாணும்
தனிமையுள்ளபாலர்களே தம்பிசிறுவர்களே
இனிமேற்பயம்வேண்டாம் மேகுமுங்களூர்தனக்கு
போய்வாருமென்று பொருமையுடனேயுரைத்தான்
தாய்போலுரைத்தசொல்லை தட்டாமல்பாலர்களும்
கார்க்குமபீமனுட கமலபதம்போற்றி

மார்க்கமுடன்ராவான் மலர்பதமுந்தான்போற்றி
தீரன்கடோர்க்கசனை தெண்டனிட்டுதான்போற்றி
ஊரும்வர்பதியும் உத்தநகர்தானோக்கி
தேனூருஞ்சோலை திரண்டவனங்கடந்து
போனாரவர்கள்பதி புதல்வர்களுமம்மானை

விருத்தம்.

சிருவர்கள் தனையனுப்பிச் சிறந்திடமூவருந்தான்
மருமலர் கமழும்பொய்கை வளர்நதிதீர்த்தமாடி
கருமமானதுவருமற் கனிபலசுவையோடுண்டு
பெருதுவாரகையைநோக்கிப் பிரியமாய்நடந்தாறன்றே.

அம்மானை

கருமவினைகளெல்லாம் கானகத்திலேபோட்டு
தருமர்துணையெனவே தானடந்துபோகலுற்றார்
சந்திரகிரி தனையும் சதுரகிரிமலையும்
இந்திரகிரிநீலகிரி யிமயகிரி தான்கடந்து
மரவருடதேசம் வனந்திர மூந்தான்கடந்து
குரவருடதேசம் குவடுபதிதான்கடந்து
கதைகள்மிகப்பேசிக் கானகமுந்தான்கடந்து
சதுர்பெருகுகஞ்சமலை தான்வந்தாரம்மானை.
கஞ்சமலையருகில் கமலநதியோரம்
பஞ்சவர்கள்புத்திரரும் பாங்காகவந்திருந்தார்

## சிவயோகமாமுனி இந்திரனிடம் வச்சிராயுதம் வாங்கிவருகுதல்

அந்தநதிக்கரையி லவர்வீற்றிருக்கையிலே
சிந்தையுடனே சிவயோகமாமுனியும்
பொன்னுலகந்தன்னில் புரந்தரனார் தன்னிடத்தில்
நன்னயமாய்ச்சென்று நாள்மூன்றுமங்கிருந்த
தெய்வநகர்மன்னன் சிவயோகமாமுனிக்கு
மெய்குளிரவேதான் வேண்டியுபசாரமிட்டு
வந்தரிஷியினுட மலர்ப்பதமுந்தான்போற்றி
எந்தனிடம்வந்தவகை யேதோவெனக்கேட்டான்
விரும்பியுபசரித்து வெத்தயுள்ளயிந்திரனை
திரும்பிமுகம்பார்த்து செப்புவார்மாமுனியும்

மன்னுயெனக்குவுந்தன் வச்சிராயுதந்தனையும்
இன்னாள்குடுத்து யெனையனுப்பும்மன்னவனே
நம்முடையதேவியெனும் நல்லதொருபத்னியாள்
உம்முடையகையா யுதம்பார்க்கவேணுமென்றால்
வாங்கிவருவேனென்று வந்தேனுமதிடத்தில்
தாங்கள்மனதுகந்து தந்தனுப்புமின்னேரம்
கொண்டுபோய்நானுமந்த கோதையர்க்குத்தான்காட்டி
வண்டுரையும்மார்பாவுன் வச்சிராயுதந்தனையும்
நல்லமுகூர்த்தமொரு நாளிகைக்குள்ளாக
வல்லவனேகாட்டி வந்துகொடுக்கிறேன்
என்றுமுனிகூற. இந்திரனும்தான்மகிழ்ந்து
நன்றெனவேஆயுதத்தை நல்லசிவயோகரிடம்
குடுத்துஉபசரித்து குணமாயனுப்பிவிட்டு
எடுத்துமணிவாளை யேகினார்மாமுனியும்
கஞ்சமலைவாளுங் கன்னிரிசிபத்தினிக்கு
நெஞ்சாரக்காட்டியவர் நேரேவருகையிலே,
கண்டார்களங்கே காவலர்கள்மூவருந்தான்
கொண்டாடிநின்று குருமுனிவன்தாள்போற்றி

## சிவயோகமாமுனியிடம் ஆயுதத்தை பிடுங்கி கொள்வதற்கு மூவருந்தர்க்கம் செய்யுதல்

அய்யனேமாமுனியே அருளும்பெரியோனே
கையில்பிடித்துவந்தீர் கனகவச்ரவாள்தனையே
தவசியாய்ப்போனவர்க்குத் தானாயுதமேது
அவசியமாயும்மிடத்தில் யார்கான்கொடுத்தார்கள்
இருடிப்பெயரைவைத்துயிராஜாக்களாயுதத்தை
திருடியிங்கேகொண்டுவந்தீர் செப்புமென்றார்மூவர்களும்
தக்கமிட்டசேதிதனை சாந்தமுனிதான்கேட்டு
அக்கினிபோற்கோபம் மவர்தனக்குமுண்டாகி
கண்ணிலேகண்ட கடும்பிள்ளைகளானாலும்
எண்ணியுரையாமல் யெள்ளளவுந்தோணாமல்
மாமுனிவனென்று மனதுபயமில்லாமல்
தாமிதமாயுங்களுட சண்டாளப்புத்தியினால்

மரியாதையெண்ணியே மார்க்கம்வைத்துப்பேசாமல்
பரியாசம்பண்ணவந்தீர் பாலர்களேயுங்களுக்கு
கேடுவரும்போது கெடுமதிகள்தோற்றுது
நாடியெனதுமுன்னே நய்யாண்டிபண்ணிடவும்
இங்கேநடந்துவந்தீ ரெவர்காணும்நீங்களுந்தான்
உங்களுடபேரை யுரையுமென்றூர்மாமுனியும்
அந்தவுரைகேட் டபீமனுமங்கேதுரைப்பான்
குந்திமக்களேவர் குழந்தையர்கள்நாங்களுந்தான்
என்பேரபீம னிவர்பேர்கடோர்க்கசன்காண்
இன்பமுள்ளராவா னெங்களுக்குமூத்தவன்காண்
மாயன்மகளாரை மாலேயிடவந்தோங்காண்
தூயவரேயும்மைச் சூழ்வனத்தில்கண்டோங்காண்
தாட்டிகமாயாயுதத்தை தான்குடுத்தீருமாகில்
கேட்டவிலேதாரோங் கிருபையுடனென்றுரைத்தான்

## சிவயோகமாமுனி மூவருக்குஞ் சாபங்கொடுக்குதல்

உரைத்தவயணமெலா முயர்முனிவன்தான்கேட்டு
கரைத்துவிடுவதுபோல் கணகோபங்கொண்டுமுனி
வாடாசிறுபயலே வாள்விமாயென்மகிமை
நாடாமல்நீயுமிப்போ நய்யாண்டிபண்ணினதால்
பஞ்சவர்க்குந்நூற்றுவர்க்கும் பாரதப்போர்செய்கையிலே
நஞ்சுபதின்மூன்றும் நாளேச்சமர்தனிலே
உன்னுயுதமும் உனக்கேஉதவாமல்
மன்னன்சயிந்தவன்கை மாலேயதினுலே
மாண்டிடுவாய்யென்றுசொல்லி மாமுனிவன்சாபமிட்டான்
வேண்டிவினைவளர்த்த விதியின்பயத்தாலே
அடுத்துநின்றராவான் னவன்தனையும்பார்த்துமுனி
கடுத்துமுகஞ்சினந்து காங்கையுடனேதுரைத்தான
அளப்புடனேபாரதப்போர்க் காரம்பஞ்செய்யயிலே
களப்பெலியாயுன்னை களுத்தருக்கசாபமென்றூர்
கஞ்சமலேமுனியுங் கடோர்க்கசனைத்தான்பார்த்து
நெஞ்சமுருகிடவே நினைத்தார்மகாமுனியும்
நல்லபனிரெண்டாநாள் நடக்கும்சமர்தனிலே

சல்லியன்கையம்பால் தான்மாண்டிடுவையென்று
மூவருக்குஞ்சாபம் மொழிந்தேமகாமுனியும்
தேவநகர்நோக்கி சென்றார்காணம்மானை

விருத்தம்.

யோகமாமுனி சாபமுயர்ந்ததால்
சோகசாகர வேளையிலேமனம்
தேகஜீவனு மேசெயல்வாடியே
தாகமோடதில் மூவர்தயங்கினர்

அம்மானை.

சாபங்கொடுத்தமுனி தான்போனதின்பிறகு
பாவம்நமக்குவந்து பலித்ததென்றுராவானும்
வெம்பிமனதுநொந்து மேனிகருகருத்து
தம்பியரைப்பார்த்துமிகத் தானேதுரைக்கலுற்றான்
அரியாமலிவ்வனத்தி லமர்ந்தமுனிதனக்கு
தெரியாமற்சொன்னபிளைத் தீங்குவந்துசூழ்ந்ததுகாண்

## சிவயோகமாமுனி போனபின் இராவான் தம்பிகளுக்கு புத்தி சொல்லுதல்

வாய்க்கொளுப்பினாலேநாம் வாய்மதங்கள்பேசினதால்
தீப்பிடிக்குஞ்சாபம்நம்மைத் தீண்டிவந்துசூழ்ந்ததுகாண்
வந்தவகையினையும் மனதில்நினையாமல்
இந்தவினைதனக்கோ யிவ்வனத்தில்நாமும்வந்தோம்
சாத்தியமான தபசிகள்தன்சாபமதை
மாத்திவிடநமக்கு வல்லமையுமுண்டாமோ
பெரியோர்திருவிளங்கள் பேதித்தாலெப்பொருளும்
சரியாய்முடியுமெனுஞ் சான்றோருரைபோமோ
குத்தம்தனைவிலக்கக் கூடாதெவராலும்
சித்தங்கலங்கியினிச் செய்வதென்னதம்பியரே
பேரின்மையின்பம் பிணிமூப்புச்சாக்காடு
ஆறுங்களுமில்லமைப் பல்லால்வேறுமுண்டோ
இடையிலொருக்காலும் மில்லையெவர்களுக்கும்

தொடரும்வினைப்போகம் சூழுங்கருவினிலே
அமைத்தபடிமுடியும் அணுவளவுந்தப்பாமல்
சமத்துரைக்கப்போமோ தாரணியில்தம்பியரே
முன்வினையைநீக்க முடியாதெவராலும்
தன்வினையேதன்னை தணலாகச்சுட்டதுகாண்
மயக்கம்இனிவேண்டாம் மாயன்கிருபையினால்
தியக்கமெல்லாந்தீர்ந்துவிடுஞ் சீருடையதம்பியரே
வாருங்கோயென்பிரகே வளரும்துவாரைகைக்கி
பாருங்கோயென்னுடைய பாணமெனுஞ்சித்திரத்தை
அருத்துக்குமிக்குகிறேன் அரவக்கொடியோன்படையை
பெருத்தஅரசரையும் பிள்ளைபோலாக்குகிறேன்
சன்னாசிசாபந் தலையளவில்வந்தாலும்
இன்னாளிலிந்த இடையன்மகள்தனையும்
மாலையிட்டுவைக்குகிரேன் வாள்வீமாயென்பிரகே
காலைவெட்டிவைத்துக் கடுகடவுமென்றான்
அஞ்சாதகண்ட னழகுபெருராவானும்
நெஞ்சாரத்தம்பியர்க்கு நிசமாகவேயுரைத்தான்
தாட்டிகமாய்சொன்ன தமயனுடபாதமதை
நாட்டமுடனே நமஸ்கரித்துத்தாண்டந்தார்
ஆடுமயில்வனமு மாரணியந்தான்கடந்து
ஓடும்நதிகடந்து உற்றமலைதான்கடந்து
வன்புரையும்பார்த்தே வனத்தூடேமூவருந்தான்
அன்பதிங்காதவளி யவர்கள்மிகடந்து
காடடின்வளிநடந்து கருமமெலாந்தான்தொலைந்து
தேட்டமுடனே சேர்ந்துவந்தார்கானகத்தில்

## மூவரும் மாம்பழம்பரித்து சாப்பிடுதல்

வருகும்வளிதனிலே மாந்தோப்புவொன்றுகண்டார்
பெருந்தோப்பிலோர்மரந்தான் பிரபலமாய்வளர்ந்து
ஒருபுரத்தில்பூவு மொருபுரத்திற்காய்களுமாய்
மருபுறத்திலிங்கிதமாய் மாம்பழமுந்தான்குலுங்க
இந்தவிதமாக யிருந்ததுகாண்மாமரமும்
அந்தமரந்தன்னை யபிமனுமேதான்பார்த்து

வண்டுறையும்பூங்கா வனமெலாம்சுற்றிவந்து
கண்டதில்லையிந்தக் கனிமாமரம்போலத்
தழைத்திருக்குமிந்தத் தனிமாமரம்போல
பழத்தைப்பிடுங்கியிப்போ பட்சணமும்பண்ணுதற்கு
ஆவல்கொள்ளுதென்று னபிமனுமேயன்னேரம்
காவலவன்சொன்ன கருத்தறிந்துராவானும்
பருத்தமரத்தினுட பழமதனைத்தான்பார்த்து
குறித்துத்தொடுத்துவிட்டான் கொடுங்கணையையன்னேரம்
கணையின்விசையாலே கனிகளுதிர்ந்திடவே
உணவுகொள்ளவாள்விம னுதிர்ந்தபழமதனையும்
எடுத்துப்பிரியமதா யிரண்டுதமையனுக்கும்
கொடுத்துபினியகனி கொள்ளுமென்றுதானுரைத்து
தானுமொருகனியைச் சாப்பிட்டினைப்பாரி
தேனுலவுமாமரத்திற் செல்வர்களும்வீற்றிருந்தார்
இருக்குந்தருவாயில் இயல்மறையோன்பிராமணியும்
உருக்கமுடன்காசி யூர்தனிலேதானிருந்து
கண்ணன்துவாரகையிற் கலியாணங்கூடுதென்று
வண்ணமுள்ளசெம்பொன் வாங்கிப்பிழைப்பமென்று

## வேதியன் மனைவியுடன் துவாரகைக்குச் செல்லுதல்

பெரியமறையோனும் பிராமணியைத்தான்கூட்டி
அரியவழிகூடியம்மரத்தில் வந்தார்காண்
வேயாபல்வேதமுரைக்கும் பிராமணனும்
ஆயாசமாக வபிமனையுந்தான்பார்த்து
யோகமுமக்குயிங்கே யுடனேவருங்காணும்
தாகம்நமக்குரெம்பத் தான்வந்திருப்பதினால்
எந்தனுடபெண்சாதிக் கெனக்குமொருகனிதான்
தந்தீரேயாமானாற் றான்பகுந்துசாப்பிடுவோம்
வழிநடந்துவந்த மயக்கமெலாந்தீர்ந்துவிடும்
தெளிவாகவேநடந்து சேர்வோந்துவாரகைக்குத்
தாமிதமுமிலாமற் றருமொருகனிதான்
மாமரத்ததில்வந்தமறையோனுந் தானுரைத்தான்

வேதியனுஞ்சொல்ல விசையன்மகன்றான்கேட்டு
சாதிமறையோர்க்குந் தாகந்தெளிந்திடவே
பரித்தகனிகளிலே பளுதுபடாமாங்கனியை

## வேதியனும் மனைவியும் மாம்பழஞ்சாப்பிட்டிறந்துபோகுதல்

அறுத்துப்பொசியுமென அவன்கொடுக்கமாங்கனியும்
ஆனகனிமுன்னாள் அருங்கொம்பிலிருக்கையிலே
மானிலத்திலேகருடன் வட்டமிட்டுநல்லரவைக்
காலாலிடிக்கிக் கனவேகமாய்ப்பரந்து
மாலானபட்சியது மாமரத்தின்மார்க்கமதாய்ப்
பரந்துவருகையிலே பாம்பதுவுமன்னேரந்
கர்ந்துவிடங்கள்தனைக் கக்கிடவுமப்போது
நஞ்சுவிழுந்ததுகாண் நல்மாங்கனிமேலே
வஞ்சமிதுவெனவே வாளபீமன்றோணுமர்ப்
பார்த்திடவும்நல்ல பழம்போலிருந்ததினால்
ஆர்த்தகனியிதுதான் அந்தணர்க்குவாகுமென்று
கையாரவேயெடுத்து கன்த்தவுபசாரமிட்டு
மெய்யாகவேகொடுத்தான் வேதியருமன்னேரம்
வாங்கிமனமகிழ்ந்து மனையாட்டியாள்தனக்கும்
பாங்குடனேபாதி பகுந்துமேதான்கொடுத்து
உண்ணுமெனவே யுபசரித்துப்பாதிதனை
திண்ணுமறையோனுஞ் செத்திரந்தான்றேவியுடன்
மாம்பழத்தையுண்டு மறையோனும்பிராமணியும்
சாம்பசிவாவென்றுசொல்லிற் றனேமடிந்துவிட்டார்
மறையோன்மடிந்திடவே வாள்வீமன்ராவானும்
கரையாதநெஞ்சன் கடோர்க்கயனுந்தான்பார்த்து
திடுக்கிட்டுடல்நடுங்கிச் சிந்தைவெகுபுண்ணாகிக்
கொடுக்குமொருகனியாற் குற்றம்வந்ததென்றேங்கி
வழிகூடியிம்மரத்தில் வந்திருந்தமாமறையோன்
பளியானதுநமக்குப் பலித்துதெனவுள்ளசந்து
மேனிதடுமாறி விழுந்தானபீமனுந்தான்
ஏனிதுவோவென்று யிருவர்மெலிந்தார்கள்.

பொல்லாதபாவ புதுமையடைந்தோமெனவே
கல்லானசிந்தை கரைந்தார்களம்மானை

விருத்தம்

வாடிவாடி மயங்கியழுதனர்
ஓடியோடி யுருண்டுபிரண்டனர்
கேடிதாமென வென்றுவபீமனுங்
கூடவேமடிவே னென்றுகூறினான் ௧

ஆழிசூழ்புவியார்கள் சகிப்பரோ
பாழிலேமறையோ னுயிர்போகவின்
றூழிலேகனியானதை யீய்ந்ததால்
மாழுவேனென வாளையுருவினான் ௨

அம்மானை

தாகித்துவந்த சதிருடையவேதியர்க்கு
ஆகத்துயிரிளக்க யான்கொடுத்தமாங்கனியை
தின்றுமறையோனுந் தேவியுடனேயிரக்கக்

## பிராமணன் இறந்துபோனததைப்பற்றி வாள்பீமன் வருத்தப்படுகுதல்

கொன்றதுரோகிக் கொடும்பாவிநானெனவே
மறையோன்றனைவதைத்து மாலைபிடநான்போனால்
இறையோன்றனக்குமங்கே யிதுசயிக்கமாட்டாது
தேடரியவொண்ணாத் தெளிவுடையவண்ணர்களே
கூடமடிந்திடுவேன் குருமறையோன்றனுடனே
நீங்கள்மனதுநொந்து நின்றுருகிவாடாமற்
போங்களுனதுநகர் புகளுடையவண்ணர்களே
வேண்டியெனைவளர்த்த மிக்கதொருதாயாருக்கு
மாண்டுவிட்டானுந்தன் மகனென்றுரையுமிப்போ
கர்மமோயென்பிரகே கானகமெலாந்திரிந்திர்
தர்மமோவென்றுசொல்லித் தானழுதான்வாள்வீமன்
சிறுவனழுதிட்டவே சிந்தைநொந்துராவாணும்
அருமையுடன்பார்த்தீ அன்புடனேயேதுரைப்பான்

கலையரிந்ததம்பியரே கட்டழகாகண்மணியே
மலையாதேநீயும் மனமயங்கிவாடாதே
மதியார்புவிதனிலே வாழ்ந்தாரொருவருண்டோ
விதிதான்விளைந்துகொண்டால் விட்டுவிலகிடுவோ
பாதைவழிவந்திருந்த பாப்பான்பிராமணிக்கும்
சூதுசெய்துகொன்றீரோ துன்பம்நினைந்தீரோ
அவர்க்குமுமக்கு மரும்பகைகளுண்டாச்சோ
அவர்க்குஞ்சரியாமோ யிந்தவகையேயுரைத்தீர்
தவிக்குதென்றுகேட்டவர்க்குத் தான்கொடுத்தீர்மாங்கனியை
புவிக்குள்மறையோன் பொசித்தானிறந்துவிட்டான்
தர்மந்தனைத்து தான்கொடுத்தீர்மாங்கனியை
கர்மம்வந்ததென்றார் கார்க்கயெவரால்முடியும்
நாமொன்றுதானினைக்க நாராயணப்பெருமாள்
தாமொன்றுதானினைத்தாற் றமபியரேயென்னசெய்வோம்
ஆபத்துவேளைக் கருளினீர்மாங்கனியை
பாபத்தொழில்மிகுந்தாற் பாருளகிலென்னசெய்வோம்
இப்பிறப்பில்வேதியர்க்கா யிறந்தவுயிர்போனாலும்
விப்ரகுலதோஷம் விடாமற்றுடருமையா
ஆதலாலிந்த வருமறையோன்றன்னையுமே
சாதகமாய்நாமுமிப்போ தானெழுப்பவேண்டுமல்லால
மயங்கியழுததினால் வருமோவுயிர்தானும்
தியங்கியழுததினால் ஜீவன்திரும்பிடுமோ
விமலருடபதத்தை வேண்டித்தவசிருந்து
எமனைவரவழைத்தா லிப்போதுயிர்கொடுப்பான்
ஆலமதையுண்ட அரனார்தனைநோக்கி
தாலமதில்நீரும் தவசிருங்காண்தம்பியரெ

## அபிமனன் பரமசிவனைவேண்டி தவசு செய்யுதல்

சித்தமதுவெனவே சிரந்தொருராவானும்
புத்தியுரைத்தான் புகழுடையதம்பியர்க்கு
சதிருடையராவான் றனுரைத்தசொற்கேட்டு
இதுதான்னிசமெனவே யிசைந்துகொண்டுவாழ்வீமன்
பூமலரும்பொய்கைப் புனலில்மிகமூள்கி

மேமதுமுடித்து நெடியதொருமாமரத்தில்
உண்மையுடனேதா னுத்தருசப்பில்விரித்து
தண்மையுடன்மனதாய்த் தானங்கதிலிருந்து
ஆராதவாசை யானுவமுந்தானருத்து
வேரானகாமவெகுளிதனைவிரட்டி
இடகலையைப்பின்கலையா யிரேசகமாய்த்தானடத்தி
சடலம்ரவிகலையாற் சந்திரனைத்தான்வாங்கி
இருகலையுமோர்கலையா யிழுத்துச்சுளிமுனைக்குள்
அருளுமொருவன்னிதனக் காகுதியுமுண்டுபண்ணி
கொழுந்துபடருமற் கும்பகத்திலேநிருத்தி
எழுந்தாதிமூலத் திறைவனிருதாழ்போற்றி
மூலக்கணைசண்டி முக்காலுமேபோற்றி
கோலப்பிறுனயக் குண்டலியின்வாசியதாய்
வன்னிதனையெழுப்பி மாய்கையெலாம்தான்பொசிக்கி
துன்னுமொருசர்க்கருமச் சொர்ப்பனமுமூடருத்து
சுழுத்திதுரியாதீதம் துவாதசமுந்தான்கடந்து
வழுத்தரியக்கூடா மவுன்வட்சரத்தடங்கி
தாயானசந்திரகலை சகஸ்திரதளமூடனுகி
பாயுமொருஞானப் பாலமுர்தபானமுண்டு
முப்பால்கடந்து முடிருனியங்கடந்து
அப்பால்நிருவிகற்பத் தருவரையும்போகவிட்டு
ஆனந்தமானயருள் வெளியிலேயொளிவாய்
தானுந்தலைவனுமாய்ச் சதாகாலம்நாட்டமதாய்
புருவச்சுளிமுனையில்ப் பொருந்திபிரமநிஷ்டை
இருளைப்பகலாக்கி யிருந்தான்பெருந்தவசு
மைந்தனபீமன் மகாதேவரைநோக்கி
சிந்தைகலங்காமற் செய்தான்பெருந்தவசு

## பரமசிவனும் பார்வதாதேவியும் பிரசன்னமாகுதல்

தவசுனுடவருமை சாம்பசிவன்றுனரிந்து
அவசரமாகவருள் ரிஷபவாகனத்தில்
மங்கையுமையவளும் வளருமிடப்பாகமதாய்
திங்கள்சடையிற்றரித்த சிவனெழுந்தருளி
குஞ்சரத்தைக்காக்கவென்றுள் கோபாலன்வந்ததுபோல்

அஞ்சலஞ்சலென்று வரனருளமகிழ்ந்து
வருந்தித்தவசிருக்கும் வாள்வீமன்முன்னம்வந்தார்
திருந்துமொருபாலன் சிவனையெதிர்கண்டிடவே
சாதனமதான தவசைவிட்டுக்கீழிறங்கி
வேதன்பெருமாளரியா விமலர்திருப்பாதமதை
பத்தியுடனே பார்பதிசமேதர்தனை
சுத்திவந்துதெண்டனிட்டுத் தோத்திரமுஞ்செய்யலுற்றான்

## வாள்பீமன் பரமசிவனைக்கண்டு தோத்திரம் செய்யுதல்

### விருத்தம்

மதிசூடிவேணியரனேமெஞ்ஞான வடிவாயிருந்தபொருளே
விதியோனுமாலுமரியாதபாதம் வெளிகாணலீவதெளிதே தா
பதிவானசிந்தையுனதாள்விரும்பிப் பலகாலும்யானுமரவேன்
எதிராகவந்துஎனையாதரித்த யிமையோர்கள்போற்றுசிவனே க

நிலையானவேதமறையாகமங்கள் நிசமானபோதமெவையுந்
தலையாகநின்றமுதலேவிண் ணோர்கள்சாரூபபாதமரவேன்
விலைமாதராசைதனிலேவிழுந்து மெலிவானபேதமனதா
யலையாமலெந்தனென்திருகவந்த வரனேமெஞ்ஞானசிவனே உ

வாடாதகொன்றையருகோடும்பை வாகாயனிந்தபொருளே
தோடாருமங்கைக்குடல்பாதியீய்ந்த சுடரேயுன்னுமமரவேன்
கூடானகர்மவினையாலெடுத்த குலைசெய்தபாவபுலையன்
தேடாமலெந்தனெதிராகவந்த் தேவாதிதேவசிவனே ௩

யோகாச்னஞ்செய்முனிவோர்கள் தேவருளமேயிருந்தபொருளே
வாகானதுந்தனிருதாளைநெஞ்ச மரவேனென்னுளுமரனே
போகாதவஞ்சயிருளேமிகுந்து பொரிமூடிநின்றபுலையன்
ஆகாதவன்றனெதிராகவந்த வரனேமெஞ்ஞானசிவனே ௪

செய்காரியத்தை யரிவீர்தென்ன சிறியேனுரைக்க யிடமோ
கைபாதகத்தி னிடராகவந்த கலைமாதவர்க்கு மினிதாய்
பைகூர்விஷத்தை யொருகாமலிட்ட பளிதானகன்று விடவே
மெய்வேதியர்க்குமுயிர்தான்கொடுத்துவிடவேணுமெங்கள்சிவனே

அம்மானை.

ஆதிபராபரனே யரனேசரணமையா
சோதியேஞானச் சுடரேயருவுருவே
அண்டம்நிரைந்துநிற்கு மழகானமந்திரமே
பிண்டம்நிறப்பிநிற்கும் பெரியதொருமூலவித்தே
பூதாதிக்குள்ளாய் புகுந்திருக்கும்பூரணமே
வேதாகமத்தில் விளையாடும்விற்பனமே
உடலுமுயிரா யுகந்திருக்குங்காரணமே
துடருமொருமாய்கைத் தொழிற்குறியபிஞ்ஞகனே
குறியாய்மவுனமுதற் குணம்பெரியமாதவனே
அறிவாய்நிரைந்திருக்கு மானந்தமுள்ளவனே
காலன்றனையுதைத்த கமலபதத்தோனே
பாலன்றனையருத்துப் பட்சணமுஞ்செய்தோனே
புரத்தையெரித்தவனே பூதப்படையோனே
சிரத்திலருகுதும்பை திங்கள்சடைவேணியனே
காமன்றனையெரித்த கண்ணுதலேமுக்கணனே
தாமனரியாத சரணமடியேனரிந்தேன்
தாளைப்பணிந்தரியா தமியேன்மிகவரிந்தேன்
எனைக்கிரங்கியென்னை ரெட்சிக்கவந்தருளும்
பாம்பாபரணமணி பரனேசரணமையா
நாம்பாவிசெய்த நடுக்கேடுதீருமையா
காசலையாய்மாயன்மகள் கற்புடையசுந்தரிமேல்
ஆசைகொண்டுவந்தே னருங்கானகந்தனிலே
எனக்குக்குறித்தபெண்ணை யிலக்கணர்க்குமாலையிட
சனக்கட்டுடன்கூடித் தான்போயிருக்கிறான்
வந்தேநானிந்த மாமரத்திநீழலிலே
இந்தமறையோனு மென்னருகில்வந்திருந்தார்

## வாள்பீமன் வேதியனையும் அவன் மனைவியையும் யெழுப்பித்தரும்படி பரமசிவனைவேண்டுதல்

இச்சையுடன்மாங்கனிதா னெடுத்துமிகவருந்தி
மிச்சமிருந்ததையும் வேணுமென்றுவைத்திருந்தேன்
பசியால்மறையோன் பழமெனக்குத்தாருமென்றார்

ருசியாமொருகனிபார்த் துதவினேன்வேதியர்க்கு
பருத்தபழமிதென்று பகுந்துயிருகூருக
அருத்ததனையங்கொருகூ ரவர்மனைவிக்கேகொடுத்து
ஒருகூறுதன்னையுமே யுண்டவுடனேமறையோன்
னிருபேருமாக யிறந்துவிட்டாரீஸ்பரமே
இவர்கள்தனையெளுப்பி யென்னையுமேகாத்தருளும்
கெவுனரிஷிகளுக்கும் கெதிகொடுக்கும்பாதமதை
கண்டபொளுதே கடத்தேரினேனெனவே
தெண்டனிட்டுவீழ்ந்தான் சிவனாதன்பாதமதில்

## வேதியனையும் அவன்மனைவியையும் பரமசிவனெழுப்பித்தருதல்

### விருத்தம்

சிருவனாகிய வபீமனுஞ் செப்பியசெய்தி
இரைவனாகிய வரனிருசெவியினிற் கேட்டு
பரிவதாயுமை பாகனுமவர்க்கருள்பரிந்து
கருணையாலுயிர் கொடுத்தனன் மரையவன்றனக்கே. ௧

இன்சொலந்தணன் றேவிதன் னுயிர்கொடுத்தெளுப்பி
அஞ்சிடாதென வபீமனுக்கருள்வரமளித்து
நஞ்சைவாரிமுன் னமுதென வருந்தியநாதன்
மிஞ்சுமாநகர் கயிலையில் மேவினர்விரைந்தே ௨

### அம்மானை.

வாசமுள்ளமாமரையோன் மனைவியவள்தனையும்
ஈசன்மனமகிழ்ந்துயிருவரைந் தானெழுப்பிப்
பாரிற்புகளுடைய பாலனபீமனுக்குத்
தாரிலுயற்செல்வந்தனைத்து மிகவாழ்ந்திருக்க
குறையாதசெல்வங் கொடுத்துவருள்புரிந்து
இரையோன்கயிலைநகர்க் கேகினாரம்மானை
ஆதியரனேக வபீமன்மனமகிழ்ந்து
வேதியனார்பாதம் வேண்டிநமஸ்கரித்து

திரமுடையவேதியரெ செல்வரேயும்மாலே
பரமசிவனுடையபாதமலர் பாத்துவந்தேன்
ஊரிலுற்றமாங்கனியை யுமக்குவளித்ததினுற்
பேருபெற்றேன்யானும் பிரபலமுமானேனுன்
அய்யரேநீரெண்ணிவந்த வாச்சிரமந்தானேக்கி
மெய்யாய்நடவுமென்று விசையன்மகன்றெண்டநிட்டான்
அந்தணருமங்கேவபீமனையுந் தானேக்கி
இந்திரன்போல்வாழ்ந்துண்டிரு மென்றுபசரித்து
போனர்துவாரகைக்கிப் பூவையுடன்வேதியருந்

## வேதியரும் மனைவியும் துவாரகைசென்றபின் அபிமனன் தமையனிடம் செல்லுதல்

தானையபீமன்றமையனிட மாகவந்து
பத்தியுடனேயவர்கள் பாதம்நமஸ்கரித்து
சுத்திவந்துதெண்டனிட்ட சொற்பெரியதம்பியரை
தாங்கியெடுத்துத் தளுவிமுகத்தோடணைத்து
தீங்குதுயரறுத்த சிவதவத்தின்வல்லவனே
செயமானரங்கமதிற் செய்ததவமுள்ளவனே
மயக்கந்தவிள்த்துவிக்க வந்தருளுஞ்சீமானே
யோகநிஷ்டைதன்னு லுயர்சிவனைநீயரிந்து
சாகுமரையவனைத் தானெழுப்பிவிட்டீரே
கண்மணியேயென்று கடோர்க்கசனும்ராவானும்
தண்மையுடன்மகிழ்ந்து தம்பியரைக்கேட்டிடவே
அப்போதபீமன் அவர்களுடனேதுரைப்பான்
தப்பாதுவுங்களுட தர்மவிசேடமதாற்
யெளியேன்றவசுக் ரகிங்கியேயீஷ்பரனுர்
பழியாகியமறையோன் பத்தினியுமேயெழுப்பி
வந்ததுவுமீசன் மலர்ப்பாதங்கண்டதுவுஞ்
சிந்தைமகிழவுடனே செப்பினுன்வாள்பீமன்
சிறுவனுரைத்தயின்சொற் செவிகேட்டிருவர்களும்

அரிதாமிதுவெனவே வானந்தமேபெருகி
இனிமேற்கருமவினை யெள்ளளவுமில்லையென்று
கனிவாயிவர்கள்மனக் களிகூர்ந்தாரம்மானை

### விருத்தம்.

அனையவர்மகிழ்ந்தார்காசி யந்தணர்போனபின்பு
சுனையதில்த்தீர்த்தமாடித் துயரமென்பதுமொழித்துக்
கனவினில்மரவாநித்திய காலசிந்தனை முடித்து
இனமுயர்துவாரகைக்கு யெழுந்துமேநடந்தார்மன்னே

### அம்மானை

அச்சமில்லாராவா னபிமன்கடோர்க்கயனும்
மச்சவடிவுடையோன் வாழுந்துவாரகையைக்
காணலாமென்று கடுகவளிநடந்தார்
வேணுகோபாலரங்கே வீற்றிருக்கும்பரிக்கை
அந்தாதெரியுதென்று வன்பாய்வளிநடந்தார்
இந்தாதெரியுதென்றுயெக்கிவளிநடந்தார்
சாலைவளிநடந்தார் சங்கடமுமில்லாமல்
சோலைவளிநடந்தார் துயர்களொன்றுமில்லாமல்
துவாரகையின்மானகரைச் சூழ்ந்தவடபாகம்
தபால்நடைக்குரேனெனவே தானடந்தார்மூவர்களும்

### மூவருஞ்சித்திரமணிச் சாவடி போய்ச்சேறுதல்

செம்பொர்சிகரவரைச்சித்திர மணிச்சாவடிதான்
பைம்பற்றிருமதிலும் பார்க்கவலங்காரமதாய்
கடைகள்வரிசையதாய் கட்டியிருக்கிறதும்
திடமுடையசோலைகளுஞ் செண்பகப்பூங்காவனமும்
செந்தாமரைசெளிக்குஞ் செங்களுநீரோடைகளும்
பந்தானமானதொரு பாங்கியர்கள்வீடுகளும்
சக்சமாய்ப்பேசியந்த சாலைவளிபோவாரும்
பகுடிகளைப்பேசியந்தப் பாதைவளிபோவாரும்
சிலமிகுந்திருக்குஞ் சித்திரபணிச்சாவடியில்
வாலிபராய்க்கூடி வந்திருந்துபோவாரும்

பெண்களுடனேபுருடர் பிரியமுடனேகூடி
தண்மையுடனே தனித்திருந்துபோவாரும்
தங்களுடகணவர் தமமோடுறவாக
வங்கணமாய்ப்பேசி மகிழ்ந்திருந்துபோவாரும்
சாதங்கறிவகைகள் சமைத்துதுரிதமதாய்
வேதப்பிராமணர்க்கு விருந்துகளைச்செய்வாரும்
அகுதிபரதேசிகட்கு அன்னம்படைக்கிறதும்
தகையுடனேவந்தவர்க்குத் தண்ணீர்குடிப்பதுவும்
இத்தகைமையாக விருக்குமந்தச்சாலையிலே
சித்திரமணிச்சாவடியிற் சேர்ந்தார்கள்மூவருந்தான்

## விருத்தம்.

படமானதைவிரிசேடனின் முடிமேல்வளர்பளையோன்
குடியாகியதுவரூபதி நகரானதினருகே
வடபாரிசமொருசாவடி வளம்ாய்வருவோர்கட்
கிடமாமிதுநலம்ாமெனயிவர் போயிருந்தாரே

## அம்மானை.

பூவனமுந்தோப்பும் பொருந்துமணிச்சாவடியும்
தாவளமாமென்றுவதிற் றுனிருந்தார்மூவர்களும்
யிருக்கும்பொழுதிலங்கே யியல்சேர்மலர்மடந்தை
பெருக்குமலர்மல்லிகையும் பிச்சிமுலர்சண்பகமும்
முல்லையிருவாச்சி முகிழ்சேர்மகிழமலர்
நல்லசிவந்தியுடன் நறுமலர்கள்தானெடுத்து
அன்னநடைபோல அவளும்வருகையிலே
மன்னவர்கள்மூவருந்தான் மடந்தையைத்தான்பார்த்து
வாருமிருமெனவே மரியாதையாபளைத்து
பேருமுமதுடையபிரபலமுஞ்.சொல்லுமென்றார்
செல்வறுரைத்தமொழி திருமடந்தையாள்கேட்டு
கல்வியுடையவரே கருணையுள்ளமன்னவரே
தேவர்சகாயன் திருவேங்கிடப்பெருமான்
மூவர்தனிலொருவன் முராரிதிருமார்பன்
தாமோதரப்பெருமான் றனின்றசுந்தரிக்கு

பூவால்மலர்தொடுக்கும் புகழ்சேர்மடந்தையென்பேர்
தினக்கட்டலையாகச் சிரந்தமலர்நான்கொடுப்பேன்
எனக்குத்தொழிலிதுகா ணென்றாள்மலர்மடந்தை
பாங்கியிவையுரைக்கப் பாலர்களுந்தான்கேட்டு
தாங்கிநடந்துவந்தோர் தாதியரைப்பார்த்துரைப்பார்

## சுந்தரிக்குப்பூமலர் கொடுக்கும் பூமடந்தை வீட்டில் மூவருஞ் சேறுதல்

தூரவழிநடந்த சோபமதுதீர்வதற்கு
தாரும்முமதுகரிதந்தால் விலைகொடுப்போம்
உண்டுபசியாறி யொருநாளிங்கேயிருந்து
மண்டலத்தில்மிக்க மதுரைநகர்நாம்போரோம்
அழைத்தவயணமிது வம்மையரேயென்றுரைத்தார்
இழைத்தவர்கள் தங்களுக்கு யேதாகிலுங்கொடுத்து
பசித்தவயரமத்தப் பலனலவோபாலர்களே
பொசித்தமுதுநீரருந்திப் போகலாமூர்தனக்கு
ஏழைமனைதனக்கு எழுந்தருளுமென்றுரைத்தாள்
வேளையிதுவெனவே விரைந்தெழுந்துமூவர்களும்
போனார்கள்சுந்தரிதன் பூமடந்தைவீட்டினிலே
தேனார்மொழியழகி செல்வியெனும்பூமடந்தை
தும்பிமலர்தொடுக்குஞ் சுபகாரியம்நிறுத்தித்
தம்பியரைவேண்டிச் சமையல்செயவேபுகுந்தாள்
அம்மையரேநீருமெங்கட்க் கமுதுகரிதான்சமைத்தால்
தம்முடையகாரியத்திற் றுள்வுகுறைவாறேதோ
பார்த்தனுடதேவியெனும் பதிவிரதையாள்தனக்கு
பூத்தொடுக்குந்தாதியுட பிள்ளைகாண்நான்றானும்
தங்களுடபூமிவிட்டுத் தான்போனார்பஞ்சவர்கள்
எங்களுக்குமங்கே யிருப்பிடமுமில்லாமல்
போறோம்மதுரைதனிற் பிளைக்கலாமென்றுசொல்லி
நீறேன்மயங்குகிறீர் நிசமாய்மலர்தொடுத்து
வைக்குகிறேன்நான்றொடுத்த மாலையதுகொண்டேகி
இக்கணமேயுங்க ளிசமானிடந்தனிலே
கொடுங்காண்வரிசை கொடுத்தாலதிற்பாதி

எடுங்காண்வரிசையெனக் கேய்ந்திடுங்காணென்றுசொல்லி
மானபரன்விசைய வாளபீமன்றானுரைக்க
கூனமுதகுடைய கோதையருந்தான்கேட்டு
நிசங்காணிதுவெனவே நிமிசமதிலன்னேரம்

## அபீமன்சுந்தரிக்கு பூமலரால்தன்போ லுருவஞ் செய்தனுப்புதல்

கசங்காமலர்மாலைக் கட்டுமென்றுதானுரைத்தாள்
தாழைமலரதனைத் தானெடுத்துவாள்வீமன்
நீளமுதுகெனவே நீட்டியதைமுடிந்து
செந்தாமறைமலராற் றிருமுகமுமுண்டுபண்ணி
மந்தாரையாலே வயர்தனையுமுண்டுபண்ணி
பன்னீர்மலராலே பாதங்களுண்டுபண்ணி
சின்னயிருவாச்சியினாற் சிறுவிரல்களுண்டுபண்ணி
செங்கழுநீர்ப்பூவாற் சிரசுதனைவகுத்து
அங்கமுள்ளநாசிக் கழுகுகுமிழமலரில்
சிவந்திமலராலே திருச்செவியுமுண்டுபண்ணி
குவிந்தமலர்களினாற் குடுமியொன்றுதான்முடித்து
முல்லைமலராலே முத்துப்போற்பல்வகுத்து
நல்லபுருவமதை காகமல்லியால்வகுத்து
மறுக்கொழுந்தினாலே மயிரொழுங்குமுண்டுபண்ணி
நீலோர்ப்பனமலரால் நீலவிளியுண்டுபண்ணி
மாலார்ப்புதமெனவே மகிழமலருந்தியதாய்
செண்பகத்தினாலிரண்டு செங்கரமுமுண்டுபண்ணி
பண்புபெருந்தும்பையினாற் பத்தாகமுண்டுபண்ணி
பூவாலுருவகுத்துப் பூமலராடையிட்டு
தேவாபரணமெனச் சிவந்தமலராற்சூடி
வாடாதபூவை வாளெனவேகையில்விட்டு
தாடாளன்பூமலராற் சமைத்தாதிருவுருவை
கணையாழிமோதிரத்தைக் கண்மலருக்குள்ளெபதித்து
துணையோரிருவருடன் றுய்யமணிச்சாவடியில்
வந்தோமெனவே வயணமெலாங்கண்டெழுதி
அந்தச்சுருளதனை வமைத்தவுருக்குள்ளடக்கி

காமாதிமோகக் கலையையதிலேயிருத்தி
மாமன்னர்மோகனமென் மந்திரத்தையுச்சரித்து
கைப்பிடிக்குஞ்செண்டுமலர் கட்டழகன்றான்தொடுத்து
மைப்படியுங்கன்னி மாலுடையசுந்தரிமேல்
காதல்பெரிதெனவே கட்டிவைத்தான்செண்டுமலர்
சாதிமலர்மடந்தை சமையல்மிகவுண்டுபண்ணி
தூரத்திருந்துவந்த சொற்பெரியதம்பியரே
நீரித்தனைநேரம் நெடும்பசியாய்த்தானிருந்தீர்

## பூமடந்தை வீட்டில் மூவருஞ் சாப்பிட்டிளைப்பாறுதல்

சமையல்முடிந்ததுகாண் சாப்பிடவும்வாருமெனக்
கமலமுகஞ்சிறந்து காரிகையுந்தானுரைத்தாள்
மடந்தையுரைத்தமொழி மன்னவருந்தான்கேட்டு
இடந்தானமுதருந்த யிப்போதுசெய்யுமென்றார்
சாதுரியமான தலைவாளிலைவிரித்து
போதுமெனவேசமைத்த புளிக்கறியும்பச்சடியும்
கூட்டுக்கறிவகையும் குணமாம்பொரிக்கறியும்
வாட்டந்தவிரவைக்கும் மாங்கனியுந்தான்படைத்தாள்
குலத்தாலொருகனியாய்க் கொண்டுவந்துதான்படைத்தாள்
நலத்தாலதிரசமும் நாக்குருசியானபண்டம்
பாகமதாய்ச்செய்த பாயாசஞ்சர்க்கரைதேன்
தாகந்தணிக்கும் தயிரமுதுதான்படைத்தாள்
பாசிப்பயறும் பருப்புடனேதான்படைத்தாள்
நேசமுடன்புத்துருக்கு நெய்யானதும்வார்த்து
சம்பாவரிசிபொங்கல் சாதமிகப்படைத்தாள்
உம்பர்தனக்கு முகந்தகரிதான்படைத்தாள்
அதிருசியதான வறுசுவையுந்தான்படைத்தாள்
எதுபிரியமுங்களுக்கு யேதென்றெனக்கேட்டாள்
பாலும்பழமும் படைத்தேமலர்மடந்தை
மேலுமுபசாரம் வேண்டியதுதானுரைத்தாள்
அம்மையார்தான்படைத்த வமுதுகறியானதெல்லாம்
செம்மையிதுவெனவே சிறந்ததொருமூவர்களும்

உண்டார்மனமகிழ்ந்தா ருடனேமடந்தையரைக்
கொண்டாடிக்கொண்டு குடுத்தார்பணிதியொன்று
இட்டபணிதியது எனக்குச்சரியெனவே
கட்டுமலர்மாலையெங்கே காவலரேயென்றுரைத்தாள்
கொத்துமலர்ச்சரமுங் குணமானசெண்டதையும்
மற்றுமுள்ளபூமலரும் வாள்பீமன்றனெடுத்
இந்தாருமம்மையரே யெஜமனி தான்மகிழ
கொந்தாறும்பூவைக் கொடுமென்றுதானுரைத்தான்
வாங்கிமலர்மடந்தை மாலையுடசீர்பார்த்து
ஆங்கானுமாலை யழகாயிருக்குதுகாண்
நரைத்தகிழவிதனை நையாண்டிசெய்யுதுகாண்
இரத்தினமணிச்சுந்தரியை யென்னபண்ணுமோவரியேன்
வாகானமாலை மனமகிழ்ந்துவாங்குவளோ
தாகிதுபண்ணியெனைத் தண்டிக்கச்சொல்லுவளோ
என்னபலன்வருமோ வென்றுசொல்லித்தாதியரும்
மன்னவரேபோய்வாரேன் வருமளவுநீர்தாமும்
வீட்டிலிருங்காணும் வெளியேதிரியாமல்
கோட்டுமுலைமாதர் குடிகேடுசெய்வார்கள்
விருந்திட்டழைக்குகிற மெல்லியர்கள் தானுமுண்டு
மருந்திட்டுத்தான்மயக்கி வாங்குவார்கைப்பொருளை
சொள்ளைமுகமினுக்கிச் சொகுசாய்வருவார்கள்
உள்ளிருக்கும்பூருய முங்களுக்குத்தோணுது
வலியவுரவுசெய்து வருவார்சிலபேர்கள்
புலியிருக்குங்காட்டிற் போவாரோதம்பியரே
தாள்வுவருமளிங்கே தானிருங்கோவென்றுசொல்லி

## பூமடந்தை சுந்தரிக்கு பூக்கொண்டுபோகுதல்

வாள்விழியாள்செண்டுமலர் வாங்கிநடக்கலுற்றாள்
ஓமென்றிருவரிருந்தா றுற்றதொருதாதியரும்
ஆமென்றிவள்நடந்தாள் ஆயனுடபட்டணத்தில்
வந்தாளரண்மனையின் வாசல்வழியாய்நடந்து
செந்தாமரைமுகத்தாள் செல்வியெனுஞ்சுந்தரியைப்
போத்திப்பணிந்து பூவார்செய்செண்டதனை

தோத்திரமுஞ்சொல்லியங்கே சுந்தரியின்கைக்கொடுத்தாள்
பெண்களுக்குநாயகமாம் பேருனசுந்தரியுங்
கண்ருளிரப்பார்த்துமலர் கையால்மிகவாங்கி
ஆலோசனைக்காரி ஆயன்மகள்சுந்தரியும்

## சுந்தரியாளிடம் பூமலரைக் கொடுக்குதல்

மேலாகியமலரை விந்தையுடன்தான்பார்த்து
காணுமிதுவரையுங் கட்டிவந்தபூமலர்தான்
ஆணுேதிருவுருவோ வருந்தர்திசெய்ததுவோ
தானேசமைந்ததுவோ தாதிசெய்யும்வேலையிதோ
தேனூர்மொழியாள்தன் சிந்தையிலேதானினைந்து
கட்டுமலர்செண்டதனைக் கண்ணுருவத்தான்பார்த்தாள்
வட்டமொருசுருளும் வலக்கரத்தின்மோதிரமும்
உள்ளேயடக்கிவைத்த வொப்பனையுந்தான்பார்த்து
கிள்ளைமொழியாள் கிருபையுடனேபார்த்து
வடித்தமொழிபகரும் வாள்பீமன்வந்ததும்
தடித்ததமையருமே தான்வந்திருப்பதுவும்
நாள்மூன்றுகானகத்தில் நடந்துவந்தசேதியெல்லாம்
வாள்போன்றகன்னிதனை மாலையிடவந்ததுவும்
பூமடந்தைவீட்டில் புதியமுதுகொண்டதுவும்
தாமிதமில்லாமற் றனக்கெழுதிவிட்டதுவும்
வம்புபகருமல் மலர்த்தாதிவீட்டினிலே
இன்பமுடனேவந்திரங்கி யிருப்பதுவும்
தெரியும்படியாய்ச் சிருவிரலின்மோதிரத்தை
அரியும்படிக்கே யனுப்பியிருக்கிறதும்
மெய்பான சுந்தரியுன்மே லிருக்குமாசையினல்
கையால்மலர்தொடுத்துக் கட்டிவிட்டமாலையொன்றும்
எழுதியிருந்ததெலா யின்பமுடன்ருன்பார்த்து
பொழுதுதனையரிந்த புஷ்பமதுபோலாகி
திட்டமுள்ளசுந்தரியுஞ் சிந்தையெலாந்தான்குளிர்ந்து
கட்டுமலர்தாதியின்மேல் கனபிரியமாய்மகிழ்ந்து
செம்பொன்நிதிகோடி சிவிகைதியிலாபரணம்
உம்பளமதாகவுமே ஊருமதுகொடுத்து

அளகுமலர்தொடுக்கு மாயிரம்பேர்தாதியற்கும்
பிள்ளைகள்விசாரித்திடவே பெரியதனமும்கொடுத்து
சித்தமலர்தொடுத்து நீயிங்கேவாருமென்று
உத்தமியாள்சுந்தரியு முடனேவிடைகொடுத்து
வசந்தமணிமேடையிலே மாதுநல்லாள்சுந்தரியும
இசைந்துமவள்தனியா யிருந்துகொண்டுமேதுசெய்வாள்

## சுந்தரி பூமலரைப்பார்த்து இச்சைகொள்ளுதல்

பூமலரின்செண்டை புருஷனென்று தான்பணிவாள்
சாமியெனதுமுகந் தான்பாருமென்றுசொல்வாள்
தேடியழுதவும்மைத் திகைத்திருந்தேனித்தனைநாள்
மோடிசெய்யலாமோ முகம்பாருமென்றுசொல்வாள்
கலைசிரக்குஞ்செண்டுமலர் கட்டழகாயென்கணவா
இலைசுருட்டிநான்றருவே னிப்போதருந்துமென்பாள்
வேல்பிடிக்குங்கையழகா வேண்டிவளிநடந்த
கால்பிடிக்கிறேனெனவே கையாலெடுத்தணைப்பாள்
சற்றுவுமக்குயென்மேற் றயவில்லையோவென்றுசொல்வாள்
முத்தந்தனையிடுவாள் முகத்தைமுகத்தோடணைப்பாள்
ஆரிட்டருகோடு மளுதகண்ணீர்தான்மறைய
எரிட்டெனைப்பாரு மென்சாமியென்றுசொல்வாள்
பித்தாய்க்கொள்ளாமற் பெண்ணேநீவாடியென்று
முத்தானவாய்திறந்தோ ருத்தாரஞ்சொல்லுமென்பாள்
பஞ்சணைமெத்தையின்மேல் பாங்கியர்கள்தாருட்ட
கொஞ்சிவிளையாடவுநீர் குணமாகவாருமென்பாள்
கணையாளிமோதிரத்தைக் களற்றியெந்தன்கைக்கொடுத்து
துணையாளரைத்தேடத் துணிந்தீரோவென்றுசொல்வாள்
வாசமுள்ளசெண்டுமலர் மங்கைமுகந்தானோக்கிப்
பேசவில்லையென்றுசொல்லி பேய்போல்புலம்பலுற்றாள்
தன்முகத்தைபார்த்துமலர் தான்பேசவில்லையென்பாள்
வன்மம்பிடித்து மங்கையருமேதுசெய்வாள்
சீவிமுடித்தகுழல் சிக்காய்பிரட்டிவைப்பாள்
பூவுலகுமேனிதனிற் புளுதிபடவேபிரள்வாள்

செங்கைவளையல் தனைச் சேராமலேயுடைப்பாள்
தங்கப்பணிதிகளைத் தவிடுபொடியாக்கிடுவாள்
ஏற்றமுள்ளபொற்றுகிலை யின்பமுடன்கட்டாமல்
பீற்றப்புடைவைகளைப் பின்னுமுன்னும்சுத்திடுவாள்
மஞ்சள்குளிக்கரியாள் வாடையது தள்ளிடுவாள்
பஞ்சணைமெத்தையிலே படுத்துவுரங்கரியாள்
பாலனமுந்தேனும் பளியென்று தள்ளிடுவாள்
வேலனையகண்ணாள் விழிதன்க்குமையணியாள்
வெள்ளிலையும்பாக்கும் விரும்பியொருபோதருந்தாள்
துள்ளிவருமோகத் துயர்க்கடலிலேயழுந்தி
பகலுமொருராவாய் பரதவித்துமையல்கொள்வாள்
திகழுமொருபிரவிற் றிங்கள்சுடுதென்றுசொல்வாள்
பாலொழுகுஞ்சந்திரனைப் பளிகாரனென்றுசொல்வாள்
சீலமுருமாங்குயிலைத் திங்க்சினந்திடுவாள்
பன்னீர்செலங்கொடுத்த பாங்கியர்கள்மேற்சினந்து
வென்னீரிதாமெனவே விட்டெறிந்துகண்சிவப்பாள்
மற்றுமொருநித்திரையில் வாள்பீமன்வாரதுபோல்
உற்றகினைக்கண்டு வுதரியெழுந்திருப்பாள்
அஞ்சார்மலருருவை யினுதினமுந்தான்பார்த்து
என்சாமியென்றுசொல்லி யெதிருக்வந்துநிற்பாள்
உருக்கமுடனுசைவைத்த வுத்தமரேயிப்போது
முருகமருந்திட்டவரே முக்காலுஞ்சொல்லுமென்பாள்
காதல்வெறிபித்து கண்துக்கமில்லாமல்
மாதரசிசுந்தரியும் மயங்கினளம்மானை

## விருத்தம்.

இவ்வகைமால்மங்களின்பம் வேண்டியே
ஒவ்வியகாமனோய் யுற்றுவாடினாள்
பவ்வியமாய்வரும் பார்த்தன்மாமகன்
திவ்வியமாதின்மேற் றியக்கமாகினான்

## அம்மானை

அந்தப்புறந்தனிலே யவளும்மயலானாள்
இந்தச்சிருகுடிசி லிருந்ததொருபாலர்களும்

கனத்தகடோர்க்கசனும் காவலவன்ராவாணும்
வனத்திற்றிரிந்தலைந்து வந்தவர்களானதினால்
உத்தமலர்மடந்தை ஒளுங்குமணியானதினால்
நித்திரையுங்கொண்டார்கள் நீதியுடனம்மானை
தமையரிருபேருந் தான்சார்ந்தார்நித்திரையால்

## வாள்பீமன் சுந்தரியை நினைந்து இச்சைகொள்ளுதல்

நிலைபொருந்தமாட்டாமல் நேசமுள்ளவாள்பீமன்
மலர்மடந்தையின்னமட்டும் வரவில்லையென்றேபார்ப்பான்
இலகுமொருசுந்தரியா ளிருக்குமிடமெங்கேயென்பான்
போவார்வருவாரைப் போய்மரித்துச்சுந்தரிபேர்
நாவாற்பலதரம்நீர் நவிலுமெனவேயுரைப்பான்
கண்ணாடிவாழுகின்ற கனகமணிமேடைதனை
அண்ணாந்துபார்த்துமற் காலோசனைநினைப்பான்
துவளுமரங்களையுஞ் சுத்தமுள்ளமாந்திரை
அவளாமெனநினைந்து வங்குமிங்குமாய்த்திரிவாள்
வாலப்பருவமுள்ள வஞ்சியெனுஞ்சுந்தரிபாற்
சோலைக்கிளியினமே தூதுபோய்வாருமென்பான்
கந்தமலர்வாவியினிற் கண்டதொருபூவையெல்லாம
சுந்தரிதானுமெனவே தொட்டுமுகத்தோடணைப்பான்
காப்பிட்டகையழகி கட்டிவைத்தபொற்கொடிதான்
கூப்பிட்டதென்றுசொல்லிக் குதித்தோடியேநடப்பான்
ஓடும்நதிகளிலே வுலாவுகின்றமீன்கள்தனை
தேடுகின்றசுந்தரியாள் திருக்கண்ணெனப்பிடிப்பான்
கதலியிளங்கமுகைக் கண்டாசைகொண்டுருகி
பதுமினியாள்தோள்துடைபோய்ப் பாருமென்வேதொடுவான்
ஆலமரங்களிலே யமர்ந்தயிலைதான்பார்த்து
மாதுடையசுந்தரியாள் வயரொன்றதைத்தொடுவான்
திட்டமுடன்பார்த்து சிரந்தகருமேகமெல்லாம்
கட்டழகிகூந்தலெனக் கண்டேனெனமொழிவான்
போதமுள்ளசெவ்விளநீர்ப் பூங்காவிற்கண்டவுடன்
மாதுதனமெனவே வாரிமுகத்தோடணைப்பான்

முல்லையரும்புகளை மோகமுருசுந்தரியாள்
பல்லாமிதுவெனவே பாவித்துருகிடுவான்
கஞ்சமலர்க்கொடியை காவிலிழங்கொடியாள்
வஞ்சியிடையெனவே வந்துகையாற்றூன்றூடுவான்
பொய்கைதனிலேவன்சப் பூமலரைமாதினுட
கைபிதாமென்றுயிரு கண்ணாலணைத்திடுவான்
காவில்மயில்கூவ கண்டெய்தினபிரகே
ஆவலுடனே யவளாமெனத்திரிவான்
தேசமுருக்கமலர்ச் செவ்விதளாமென்றுசொல்லி
ஆசையுடன்சுவைத்து அமுர்தமிரக்கிடுவான்
தாருரும்புல்லைத் தழுவணையாமென்றுசொல்லி
பாருமலோடிப் படுப்பானெழுந்திருப்பான்
மோகவெறிபிடித்து முளுதுமனமேமயங்கி
ஆகம்மெலிந்துருகி யவன்புலம்பும்வேளையிலே

## சுந்தரியிடம்போன பூமடந்தை தான்பெற்ற சன்மானத்தை மூவரிடம் சொல்லுதல்

### விருத்தம்

கூனமுதுகம்மைமவர வேமனையில்மூவர்
போனவகைசொல்லுமென வேயுரைசெய்போது
தேனெழுகுசெண்டுமலர் தெரிவைகரமீய்ந்தேன்
தானுளமகிழ்ந்துநிதி தந்தவகைசொல்வேன் ௧

ஆனைபனிரெண்டுபரி யன்பதுகொடுத்தாள்
மானகரமானபதி மூன்றதுவளித்தாள்
மேனைகைகள்கோடிபணி யாடைகளுமீய்ந்தாள்
தானமெனக்கோடிநிதி தானுமிகவீய்ந்தாள் ௨

தந்தமதினாற்சமைத்த தண்டிகையளித்தாள்
விந்தைமலர்மங்கையரில் மேலனவமைத்தாள்
இந்தவிதமானதெலா முங்களனுகூலம்
எந்தன்மகவாகவிரு மென்றவளிசைத்தாள் (௩)

பின்னுமவள்மன்னவரைப் பேதமரவியந்து
யென்னுடையசெல்வமதை யேற்றபடிகொண்டு
என்புலனொடுங்கியபி னீமவிதிசெய்து
அன்பொடுபுரிந்திதனை யாண்டருளுவீரே (௪)

## அம்மானை.

வரிசைதனைவாங்கி மலர்மடந்தையன்னேரம்
விரசுகொண்டுதன்மனையில் மேவினளம்மானை
மங்கையிடந்தனிலே மலர்தான்கொடுத்ததவுஞ்
சங்கையிலாப்பாக்கியத்தைத் தானீய்ந்தனுப்பினதும்
வந்ததுகாண்நீங்கள் மனையில்வந்துசேர்ந்தபலன்
சுந்தரிக்கிமாலைகட்டுந்.தோகையர்களாயிரத்தில்
நானுமொருயேனை நரைத்தகிளவியற்குத்
தானுமொருவுதவி. தான்குழந்தையில்லாமல்
ஏங்கித்திரிந்தே னெனக்குவருஞ்சம்பளத்தை
வாங்கியுபாயமதாய் வயர்பிளைத்துக்கொண்டிருந்தேன்
வந்தீர்மனைதனிலே மலர்தொடுத்துநீர்கொடுத்தீர்
அந்தவிசேடமதா லதிகபலனுண்டாச்சு
தாய்க்கிளவினாளொருத்தி தம்பியரோயுங்களுக்கு
பாக்கியமுமிந்தப் பவுசுகளுமும்மிதுகாண்
இருந்துஅனுபவியு மென்காலமுமுடிந்தால்
பொருந்துமொருநன்மைதின்மை புண்ணியரேசெய்துவிடும்
பதிவாயெனக்குவந்த பாலர்களேயிப்போது
இதுதான்குறிப்பெனவே யியம்பினள்பூமடந்தை
தயவாய்மலர்மடந்தை தானுரைத்தசேதியெல்லாம்
நயமாமிதுவெனவே நல்லதென்றுமூவர்களும்
அன்னமதுவருந்தி ஆயிளையாள்தன்மனையில்
மன்னவர்கள்தானு மகிழ்ந்திருந்தாரம்பானை

## விருத்தம்

சூரியனுமேற்றிசை தொடுத்தனன்விரைந்தே
காரிருளடைந்தநெறிக் ககனமதியுற்றான்
சீருயருபோர்விசையன் சேயனுமபீமன்
வாரணியுமால்மகளை நாடுவென்மனத்தே (௧)

காமனுடபேரிகை கடற்றொனிமுழங்கக்
மாமரமதானகுயில் வாத்தியமிசைக்கத்
தாமயல்விளைக்கவொரு தாயெனவெழுந்த
சோமனைவிலக்கியொரு சூரியனுதித்தான் (௨)

அம்மானை.

மனத்தினிருள தனை மாற்றுமரிவதுபோல்
கனத்தயிருள்விலக்கிக் கதிரவனும்வந்துதித்தான்
பாரிற்புகழுடைய பஞ்சவர்கள் தன்புதல்வர்
நீரிற்றலைமுழுகி நேமநிஷ்டை தான்முடித்து
போஜனமுஞ்செய்து பொருந்தியொருமனதாய்
யோசனையும்பண்ணி யுரைப்பானிடும்பிமகன்

## அரவான் கடோர்க்கயனும் வாள்பீமனுக்கு தைரியங்கூறி துவாரகைக்குச் செல்லுதல்.

திங்கள்முகவதனு சிரந்ததொருவாள்பீமா
மங்கைதனைமாலையிட வந்தோமுமக்காக
வண்ணமலர்மடந்தை வந்துசொன்னாள்சுந்தரிக்கு
இன்னையமுகூர்த்தமென வியம்பினதுங்கேட்டிருப்பீர்
சும்மாயிருகாமற் சோபனமுஞ்செய்வதற்கு
அம்மானிடத்தினிற்போய் யளப்பரிந்துநான்வாறேன்
ஆளுந்துரியோ னவன்படைகள்வந்ததுவும்
பாளையத்திலுள்ள பலன்றிந்துநான்வாறேன்
தம்பியிங்கேநீருந் தாவந்தமில்லாமல்
எம்பியரேயிங்கே யிருங்காண்மலையாமல்
அருமையுடன்மாது அம்மையார்வீட்டினிலே
வருமளவும்நீரும் வளிபார்த்திருமெனவே
சிந்தையுள்ளபுத்திகளைத் திடமாயெடுத்துரைக்க
அந்தவசனமதுக் காமென்றுவாள்பீமன்
பணிந்துநமஸ்கரித்து பயணமனுப்பிவிட்டான்
துணிந்துகடோர்க்கசனுஞ் சொற்பெரியராவானும்
மன்னனரவக்கொடியோன் வாழுகின்றபாளையத்தில்
என்னவடிவெடுத்து யேகுவோமென்றுசொல்லி
கருத்திலொருநினைவு கவனமதுவுண்டாகி
விருத்தரெனுங்கோபால வேசமதுதானெடுத்தார்

### விருத்தம்

பாலிருகலசந்தூக்கிப்பருங் கலையிடையிற்சுத்தி
மேலெனுமார்புதன்னில் வெண்திருநாமஞ்சாத்திக்
கோலதுகையிலூன்றிக் கொங்கணிதரித்துக்கொண்டு
சாலவுந்துவாரகைக்குத் தாநடந்திட்டார்மன்னே

### அம்மானை.

ஆயர்வடிவெடுத்து ஆனதொருபாலர்களுந்
தூயவரிவாளுகின்ற துவாரகையின்பட்டணத்தில்
வந்தார்களென்பெருமாள் வாளுமணிவாசலிலே
சந்தேகமில்லாமற் றமோதரனிட்டத்தில்
அரசர்நிரைந்திருக்கு மாசாரவாசலிலே
நிரைந்தமுகமாயிருக்கு நெடியமால்பொற்பதத்தைக்
கண்டார்கள்பாற்குடமும் கண்ணெனதிராகவைத்து

## கிருஷ்ணனிடம் பாற்குடம் கொண்டுவந்த இருவ வரும் மர்மமாய்ப் பெண்கேட்டு தர்க்கித்தல்

தொண்டுபண்ணும்பேர்களென்று தொழுதுநமஸ்கரித்தார்
இடையரெனப்பணிந்த இருவரையுந்தான்பார்த்து
அடையலரைப்பார்க்கவந்த வாண்பிளையாளாமெனவே
போர்முகூர்த்தம்செய்யவந்த புத்திரர்களாமெனவே
கார்நிறத்தமேனிக் கண்ணர்மனதிலெண்ணி
வாரீர்பசுமேய்க்கும் வாகுடையகோனுகளே
பேரேதுசொல்லுமிங்கே பீதாம்பரங்கொடுக்கச்
செவ்விதழின்வாய்திரந்து திருமாலுரைக்கலுற்றார்
அவ்வசனங்கேட்டு அரவானெடுத்துரைப்பான்
நாங்களிருக்குமிடம் நல்லகருவூர்காணும்
தாங்கள்தனதுபசு தான்மேய்க்கும்மாயர்கள்நாம்
என்பேருடல்முழுங்கி யிவன்பேர்கடல்முழுங்கி
அன்பாயுமதுபசு யாங்கள்மேய்க்குமந்நாளில்
கண்னல்போலும்முடைய கமலமரைப்பசுத்தான்
அன்னாளிலோர்கன்றதுவின்றிருந்ததுகாண்
அக்கென்றைநாங்க ளனேகபிரியமதாய்

தக்கபடிகேட்டு தான்வந்தோமுன்னாளில்
பால்குடிக்கும்பச்சைப் பசுவின்கன்றெங்களுக்கு
கோல்பிடிக்கும்மாயவரே கொடுத்தீரன்னாள்தனிலே
அந்தயிளம்பசுங்கன் றது தானுமெங்களையே
சிந்தையுடநத்தித் திரிந்ததுகாணப்போது
உம்முடையவீட்டிலது உண்மையுடநின்றதுகாண்
தம்முடையமாளிகையில் தானேவளர்ந்துவர
வாளுமிளம்பசுங்கண் வளரட்டுமென்றிருந்தோம்
ஏழையுடபசுவென் றெண்ணுமலிப்போது
ஆரோவொருவருக்கு அப்பசுவைத்தானமிடப்
போரீரெனக்கேட்டுப் புண்ணியரேநாங்கள்வந்தோம்
கொடுத்தபொருளதனைக் குவலயத்திலுள்ளவர்கள்
எடுத்துவொருவருக்கு யீய்ந்திடவுங்கண்டீரோ
நாருயணரேநீர் ஞாயம்மறந்துவிட்டால்
ஆருகிலுந்தா னடுத்துபிளைப்பார்களோ
தந்தபசுங்கன்றிப்போ தான்கொடுத்தீரனுப்பும்
வந்தவகையிதென்றுமன்ன ரிடையோருரைத்தார்

## பாற்குடம் கொண்டுவந்த இருவரிடம்கிருஷ்ணன் பெண்கொடுக்கமாட்டேனென்று மர்மமாய் தர்க்கித்தல்

சங்குசக்கரபாணியெனும் தாமோதரன்கேட்டு
மங்களமாமென்று மனதில்மிகமகிழ்ந்து
பஞ்சவர்கள்பெற்றெடுத்த பாலரிவருமெனவே
இஞ்சொல்நமக்கு யிவர்மருகனுகுமென்று
கலியாணவார்த்தைதனைக் காதாரவேகேட்டு
வலிமையாய்வாள்வீமன் வந்திருக்கிருனெனவே
உள்ளமிகமகிழ்ந்து வுரைப்பாரிடையருக்கே
வெள்ளைமனதுடைய வேகமிகுகோனுகளே
நாட்டிலுமக்குமுன்னாள் நற்பசுவின்கன்றீய்ந்தோம்
தாட்டிகரேநீருமதைத் தான்வளர்த்துக்கொள்ளாமல்
இளங்கண்பயமரியா தென்றசொல்லுமெய்யாக
களங்கமரவென்வீட்டில் கன்றைவிட்டேன்போனீர்

பார்த்துயிரைகள்வைத்துப் பரிபாலனமாக்கிக்
நேர்த்தியுடன்வளர்த்த நீலநிறக்கண்பசுவை
நம்மிடேதன் றுநீங்கள்வந்தால் நான்கொடுக்கமாட்டேன்காண்
உம்முடையசாதிவளக் குங்களுக்கேதோற்றவில்லை
என்மருகன்லெக்கணர்க்கு இப்போதுசீதனமாய்
நன்மையுடன்கொடுக்க நான்வைத்திருக்குகிறேன்
பிளைக்கமதியுமக்குப் பெரியபுத்தியுண்டானல்
வளக்கிட்டவர்களிடம் வாங்குமென்றார்மாயவரும்

## இடையராய் சென்றவர்கள் கிருஷ்ணனல் கொடுத்த ஆபரணங்களை பெற்று தூரியனுடைய பாளையத்திற் செல்லுதல்

ஐயனிவையுரைக்க ஆயர்களுந்தான்கேட்டு
பொய்யையுரையாமல்நல்ல புத்திசொன்னீர்கோபாலா
இதுபோதுமெங்களுக்கு யெந்தவிதமானலும்
மதிசேர்குலப்பசுவை வாங்குவமேயல்லாது
விட்டுவிடுவதில்லை வில்வேந்தர்வந்தாலும்
இட்டப்படியல்லாது ஏராசைப்பட்டதினல்
ஆர்க்குங்கிடையாது அரிகேசவாமுகுந்தா
ஊர்க்குநடக்குகிரோ முத்தாரஞ்செய்யுமென்றார்
கூர்மாவதாரன் கோவுகளைத்தான்மேய்த்தோன்
பார்தனிலுள்ளோர்கள் பரிதாபந்தீர்த்திடுவோன்
வளக்காய்விபகரித்த மன்னரிடையோர்தமக்கு
இளைகூடியதலப்பா இரட்டைமஞ்சச்சாலுவையும்
கொத்துச்சரப்பளியுங் கோர்த்தமுத்துதாவடமும்
இரத்தினமணிபன்தக்க மிரண்டுகையில்மோதிரமும்
காதுக்கிசைந்தவச்சிரக் கடுக்கனிருசோடும்
சாதிக்குவல்லவர்க்குத் தானீய்ந்தார்மாயவரும்
மாமனுடமைக்கு மருமகனே சொந்தமென்று
தாமோதரனிடத்திற் றன்வாங்கிநல்லிடையர்
அச்சுதனர்தன்பதத்தை அன்புடனேதான்பணிந்து
எச்சரிக்கையாக யிருமென்றுவார்த்தைசொல்லி

தேனையொற்றசொல்லான் றிரியோதனனிருக்கும்
பாளையத்தைவந்துகண்டார் பாலர்களுமம்மானை

### விருத்தம்.

யானைகோடிகள்வீரரும் ஒருபுரம்ரதங்கள்
சேனைகோடிகள்துரகத மொருநிறைகொழிக்கும்
வானமோடதிற்பேரிகை முளங்கிடும்வளமாய்க்
கானவாய்விடுமவர் படைநடந்திடக்கடலே க

அளவிலாததேர் துரகதங்கரிபரியாவும்
வளையுமோரெழுகடலென நிறைந்திடும்வளமை
இளைஞருனவ ரதையொருமசகமாயெண்ணி
பளையகோனெனனுனைவர்கள் பாளயப்பதியில் உ

### அம்மானை

படையினுடபெருக்கம் பாலர்களுந்தான்பார்த்து
இடையரெனநடுவே யேகினாரம்மானை
ஊடேயிருவர்நுளைந் திட்புலனுந்தான்பார்த்து
சாடையதுபேசித் தான்வருகும்வேளையிலே

## பாளையத்திற்சென்ற இடையர்களை சகுனிகூட்டி வரச்சொல்லி யாரென்று வினவுதல்

தப்புமொழிபகருஞ் சகுனியுமேதானறிந்து
துப்புவிளங்கவந்த துன்மார்க்கரென்றுசொல்லி
ஆரடாமால்தாரி யரிக்காராவாருமிங்கே
நீரடாபாளையத்துள் நிற்கின்றகோன்களையும்
கூட்டியரட்சணத்திற் கொடுவாருமென்றுசொன்னன்
தாட்டிகனார்சொன்னமொழி தானறிந்துசேவகரும்
துடியாய்நடந்துசென்று சுத்திவருமாயர்களை
மடியைப்பிடித்திழுத்து வந்தார்சகுனியிடம்
வந்தயிடையர்களின் மதிமுகம்பார்த்தேசகுனி
எந்தவூர்காணுமக்கு யிங்குவந்தகாரியமும்
சொல்லுமென்றுகேட்டான் துடிசகுனியப்போது

நல்லவரேகேளுமினி நாங்கள்வந்தகாரியந்தான்
மன்னர்புகழ்வணங்கா மன்னனிடஞ்சொல்வதல்லாற்
றின்னொருவர்தங்களிடம் பேசுவதுமில்லையென்றார்
இருமென்றெனவுரைத்த யிடையர்களேயிப்போது
வருவீரெனவே, மன்னனிடமேயழைத்துக்
கொலுப்பெருக்கித்தானிருக்குங் கோத்தவனார்முன்னிலையில்
எளிப்புலியரென்றுசொல்லி யிடையரையுந்தான்விடுத்தான்
கண்டுயிடையர்தனைக் காவலனுமேதுரைப்பான்
தண்டில்வரக்காரியமேன் சாற்றுமடையரென்றான்
மடையரெனவுரைத்த மன்னவனைத்தான்பார்த்து

## இடையருய் வந்தவர்கள் துரியனிடம் மாறு பாடாய்ச் சமாச்சாரம் சொல்லுதல்

படையரியவர்தசிறுபாலர்களு மேதுரைப்பார்
ஆரென்றுகேட்டருளு மரவக்கொடியோனே
சீருடையகருவூர் சென்றுவளர்கோன்களும்நாம்
வனத்திற்பசுமேய்த்து வருகின்றவேளையிலே
கனத்தபுகளுடைய காண்டீபன்புத்திரனும்
சின்னஞ்சிறுமதலை செங்கையிலேவாளெடுத்து
என்னதுணிவுகொண்டோ யெங்களிடம்வந்தனுகி
துதிபெருகுமாயனுட துவாரகையின்பட்டணத்தில்
அதிசெயமுமேதெனவென் றவர்கேட்கநாங்களுமே
காளமுகில்மேனியனார் கண்ணர்மகள்தனக்கு
நாளைமுகூர்த்தமென்று நாங்களந்தபாலரிடம்
பகர்ந்தோமதைக்கேட்டு பாலகருமேதுசொன்னார்
ஜெகமுழுதுமாளுகின்ற திருமால்மகள்தனையும்
சிறைபிடிக்கவந்திருக்கும் திரியோதனன்படையை
அரைநொடிக்குளென்னுடைய வாயுதத்தினலறுத்து
மால்மகளைநாளைமணம்புரிய வாரனென்றும்
பாலினியசுந்தரிக்குப் பண்டுமணவாளனென்றும்
நல்முகூர்த்தவேளையிலே நான்மணமுஞ்செய்யாட்டால்
வில்வளைக்கும்வல்ல விசையன்மகனல்லவென்றும்
கோலமிட்டபந்தலிலே கோபாலன்றன்மகளை

மாலையிட்டுக்கொள்ளாட்டால் வாளெடுப்பதில்லையென்றும்
ஆரணியந்தன்னிலிங்கே யானுரைக்கும்சேதியெல்லாம்.
பாரளந்தமாயனிடம் பரைபோட்டுரையுமென்றும்
சொன்னொருசிறுவன் சொன்னதெல்லாம்மாயனிடம்
மன்னு அவரிடத்தில் வந்துமிகச்சொன்னேங்காண்
சேதானுங்கேட்டவுடன் றேர்வேந்தேயுன்னிடத்தில்
காதில்ரகசியமாய்க் கண்டுரைக்கச்சொன்னார்காண்
தங்களுக்குயிவ்வசனந் தானுரைக்கவந்ததல்லால்
எங்களுக்குயென்னயிங்கே யிருக்குதுகாண்பாளையத்தில்
எப்படியும்புங்களுட யேந்திழைமார் தன்னிடத்தில்
தப்பியுயிர்பிழைத்துத் தலைகொண்டுபோயிடுங்கோ
பெண்ணாலேகெட்டவர்கள் பேருலகில்மெத்தவுண்டு
மண்ணாலேகெட்டவர்கள் மானிலத்தில்ரெம்பவுண்டு
இந்தரெண்டுகேடு மிருக்குதுகாணுங்களுக்கு
அந்தரங்கம்சொன்னேம் அரவக்கொடியோனே
போய்வாரோமென்றுசொல்லிப் போனாரிடையர்களும்

## உழவரியவந்த யிடையர்கள் சொன்னதை துரியன் கேட்டு திகிலடைந்து சகுனியிடம்யோசித்தல்

வாய்சோர்ந்துகைசோர்ந்து வணங்காமுடியோனும்
பெருமூச்சுவிட்டெறிந்து பிரளமுளித்துடைந்து
எரிபூச்சிபோலுருகி யிருந்தசகுனிதனை
கண்ணாரப்பார்த்துக் கமலமுகமீயுடிக்க
தொன்னூந்துகொண்டுமன்னன் சொல்லுவானம்மானை

### விருத்தம்.

காதலன்நமதுபிள்ளை கலைதெரியிலக்கணர்க்கு
மாதவன்மகளைநாமு மாலைசெய்திடவும்வந்தோம்
பூதலமிளந்தபார்த்தன் பிள்ளைவந்திடவுங்கேட்டோம்
ஆதலாலினிமேற்செய்யு மளப்பென்னசொல்லுமென்றான்

அம்மானை

வையகமெலாம்புகழும் மாமாயினிமேலே
செய்யும்வகையினிமேற் செப்புமென்றுமன்னர்மன்னன்
திரியோதனனுரைத்த சேதியெல்லாந்தான்கேட்டு

## சகுனி துரியனுக்கு திடஞ்சொல்லுதல்

பெரியோனெனுஞ்சகுனி பேசுவான்மன்னனிடம்
தூழிப்பயல்பீமன் துஷ்டனும்வந்தானெனவே
ஏழைக்குரலினிமே லேதுக்குப்பேசுகிறீர்
எண்ணவொண்ணுச்சேனையே எக்ரோணிதானிருக்க
கண்ணனுடவுரவு கைவசமதாயிருக்க
தளபதிகள்கைக்காரர் சகலருமேதானிருக்க
துளபமணிமாயன் துவாரகையில்த்தானிருக்க
அரியாச்சிறுவனொரு ஆண்பிள்ளையோநமக்கு
குறியாமலித்தனையுங் கோளைமொழிபேசுவரோ
மனத்திரமுங்கைத்திரமும் வாய்த்திரமுமுண்டானால்
நினைத்தபடிமுடியு நிமிசமதில்மன்னவனே
ஆமையுருவெடுத்த வரிகேசவனிடம்போய்
சாமத்திற்கல்யாணந் தான்முடிக்கவேணுமென்று
சீக்கிரத்திற்காரியங்கள் செய்துமுடிப்பதற்கு
மார்க்கமுடன்பரிசம் வாங்கியவர்கொண்டபின்பு
என்னமாய்ச்சொல்லவந்தீ ரெவருகிலுநமக்கு
கன்னியாதானமதுங் கைகொடுப்பதுண்டோதான்
பணமாத்திரமிருந்தால் பாருலகில்நூறுபெண்கள்
சணமாத்திரந்தனிலே தருகாமல்த்தந்திடுவார்
கனமாய்த்திரவியத்தைக் கையினிலேதான்குடுத்தால்
உனக்குயெனக்கெனவே வோடிவருவார்கள்
தருகாமல்நீருமந்தத் தாமோதரனிடத்தில்
ஒருகாமற்பேசுமென்று வுரைத்தான்சகுனியுந்தான்
ஆங்காணுமும்முடைய ஆலோசனைவளியாய்
நாங்காணுமிப்போ நடக்கிறேனென்றுசொல்லி
திரமுடையகையான் றிரியோதனனுரைக்க
அரியதுரோணருமங் கவனுக்கெடுத்துரைப்பார்

## துரோணர் துரியனுக்கு புத்திசொல்லுதல்

பாராளுமன்னவனே பார்த்திபர்க்கெல்லாமரசே
பேராசையேயுனக்கு பெரியபுத்தியில்லாமற்
அடுத்துக்குடிகெடுக்கும் அனல்சகுனிபேச்சைநம்பி

எடுத்துக்கவிள்க்குகிறாய் யின்பமுள்ளபாக்கியத்தை
எத்தனைபேர்கூடி யிருந்தாலுமுன்னிடத்தில்
அத்தனையுங்கொல்வா னபிமனரைட்சணத்தில்
குடிகெடுக்கும்மாயனெனுங் குண்டணிதன்பேச்சைநம்பி
சுடரில்விழும்விட்டிலைப்போற் சுருண்டுவெந்துபோகாதே
வானோர்புகழ்விசையன் மைந்தனையுமிப்போது
தானேயழைத்துவந்து சகலருமேதானறிய
செய்வீர்கலியாணந் திருமால்மகள்தனையும்
மெய்தானிதுவெனவே வேதியருந்தானுரைத்தார்
பொருத்தமிட்டுச்சொன்னதெல்லாம் பூபாலன்றான்கேட்டு
அருத்தமுமைக்கேட்கவில்லை யாசாரியென்னுடைய
வருதிப்படிநடக்க மாட்டீரேயாமாகில்
விருதுக்குஉம்மையிப்போ விரட்டுவேன்கண்டீரே
பார்த்தன்மகன்றனக்கும் பஞ்சவர்கள்தங்களுக்கும்
ஆத்தாமற்சொல்லுகிறீர் ஆசாரிநீர்தாமும்
நழுவியுரைத்ததினால் நன்மையில்லையென்சபையில்
அழுதுபுலம்பாதீ ரகன்றுபிளையுமென்றான்
துஷ்டனுரைத்தமொழி துரோணருமேதான்கேட்டு
மட்டியிவனிடத்தில் வார்த்தைசொல்வதல்லவென்று
வீரம்பொருக்காமல் விற்றிருந்தார்பூசுரரும்
சாரமறியாதமன்னன் சபைவிட்டெழுந்திருந்து
வீதிவளிநடந்தான் வெஞ்சாமரைவீச
ஆதிதிருமா லவரிருக்கும்மாளிகையில்
சென்றுதிருமாலுடைய சீர்பாதம்பூண்டுகொள்ள
நன்றுகாணென்றுசொல்லி நாறயணர்தாமும்
இருமென்றுபசரித்து யிருவர்களும்தான்பேசி
திருமங்கலந்தரிக்கத் திருட்டளப்புத்தான்பேசி

## கிருஷ்ணன் ரகசியமாய் மாப்பிளையை அலங்கரித்து கூட்டிவரும்படி துரியனிடம் சொல்லுதல்

சுபலெக்கணமதிலே சுந்தரிக்கும்லெக்கணர்க்கும்
சபையறியக்கல்யாணம் தான்முடிக்கவேணுமென்றால்
வாள்வீமன்வந்து வளிபார்த்திருக்குகிறான்

கோளேதுமில்லாமற்..கொற்றவரேயும்முடைய
தளத்தையணிவகுத்து சட்டதிட்டமாய்நிருத்தி
விளைத்தகருமமுனை வேண்டிவந்துசூளாமல்
எச்சரிக்கையாக யிலக்கணகுமாரனையும்
உச்சிதமதாக வுடனேயலங்கரித்து
பட்டணப்பிரவேசம் பவுனிவலமாகவந்து
இஷ்டமுடன்பகலி லிருபதரைநாழிகைக்குள்
மாப்பிளையைக்கூட்டியிங்கே வந்தீரேயாமாகில்
காப்புத்தரிக்குகிறோம் கலியாணம்பண்ணுகிறோம்
காரியத்தைநீர்பாரும் காவலனேயென்றுசொல்லி
தாரிலுற்றயெம்பெருமான் தாமோதரனுரைத்தார்

## சூரியன் பராக்கிரமங்கூறி சகுனியிடம் போய் யோசனைகேட்குதல்

தேவகியாள்பெற்றெடுத்த திருமால்தன்சொற்கேட்டு
ஆவலுடனேமகிழ்ந்து அரவக்கொடியோனும்
உன்பாலுதவிநமக் குண்டாயிருப்பதினால்
என்பாளையந்தனைப்பார்த் தெமனும்பயப்படுவான்
ஆரொருவர்வந்தாலு மஞ்சாதெனதுகைவாள்
நீரொருத்தர்நம்மிடத்தில் நிசமிருக்குமாமாகில்
பாருமெனதுகைபிற் பட்டாவின்சித்திரத்தை
மேருவும்பொடிப்பொடியாய் வெட்டுவதும்நீரறிவீர்
ஆனதினாலும்முடைய ஆலோசனைப்படிக்கு
நானுமிலக்கணனை நன்றாயலங்கரித்து
வாறேனெனவுரைத்து மன்னவனுந்தானெழுந்து
வீறுனபாளையத்தில் மேவினனம்மானை

### விருத்தம்.

மண்டலீகர்மகுடாதிவர்த்தனரு மன்னனாகியதேர்கர்னனும்.
துண்டரீகசதுரங்கசேனைதள துரோணராதிபர்கள்சூழவே
ரெண்டுகோடிபடைநூறுதம்பியரு மிராசராசர்களிருந்திட
கொண்டலானதிரியோதனநிருபதிகொலுவிருந்துமொழிகூறுவான்

அம்மானை.

தனுசுக்கதிபதியாம் சாதிமறையோர்துரோணர்
மனசுத்தவாரியவான் வாள்பெரியகர்னனுடன்
சுத்தரணவீரன் சுகுர்தஅசுவத்தாமா
வெத்திதனில்மிகுந்த விதுரனெனுமன்னவனும்
அடுத்துக்குடிகெடுக்கு மனியாய்வான்சகுனி
எடுத்துக்கணைதொடுக்கு மியல்பெரியசல்லியனும்
தான்சேவகனெனவே சாற்றுஞ்சயிந்தவனும்
நான்சேவகனெனவே நாட்டுமொருவிஷ்ட்டுமரும்
காரியங்கள் தானுரைக்குங் காங்கயருமாங்கவரும்
வீரியங்கள் தானுரைக்கும் வில்வேந்தர் நூற்றுவரும்
சிரிக்கும்புகளுடைய தேசத்துமன்னவரும்
பரக்குமொருகுதிரைப் பட்டாணிமார்களுமே
சுத்தியிவர்களெல்லாஞ் சூழ்ந்துகொண்டு தானிருக்க
கர்த்தனிவனெனவே கட்டியங்கள் தான்கூற
சாமரசங்கள்போட்டத் தனிவிருதுமேபிடிக்க
கொடியதிரியோதனனுங் கொலுவிலிருந்துகொண்டு
கெடுதிவினையேயெடுத்து கிளர்த்துஞ்சகுனியைப்பார்த்
தாலோசனைமிகுந்த வம்மான்சகுனியரே
நாலாவகையுமக்கு நன்றாய்த்தெரிவதனல்
சொல்லுகிறேனும்மிடத்திற் சூசனையைநீர்கேளும்
கல்லையுருவாக்கிவைத்த கண்ணருட்ன்பேசின்தில்
மணவறையின்பார்தலுக்கு மாப்பிளையைமின்னேரம்
குணமாய்ப்பவுனிசெய்து கூட்டிவரச்சொன்னார்காண்
துச்சணஞ்செய்வாள்வீமன் சுருக்கில்வருவானெனவே
எச்சரிக்கையாகநம்மை யிசைந்துவரச்சொன்னார்காண்
மாப்பிளையைக்கூட்டி யங்கேமாலையிடப்போவதற்கு
தாப்பரியம்நீரறிந்து தானுரையுமென்றுரைத்தான்
புவிபுரக்குமன்னன் பொருந்தியுரைத்ததெல்லாம்
செவிகொடுத்துக்கேட்டுச் செப்புவான்துற்சகுனி

## சகுனி வாள்பீமனையிகழ்ந்து துரியனுக்கு திட்டமும் யோசனையுங் கூறுதல்

வாள்வீமனைப்பெரிய மலையென்றிருக்காதே
ஆள்நெருங்கித்தானிருந்தா லவன்வரவுமாட்டான்காண்

காவலனே ஆபுதத்தின் கைப்பளக்கமின்னமில்லே
சேவகனுமாகவில்லேச் சிறுவனவன்காணும்
கடினச்சமர்க்களத்திற் கையாடிபார்த்தரியான்
வடிக்கின்றரத்த வாடையதுகண்டரியான்
பச்சைப்பயலேயொரு பாரமென்றுயெண்ணுவரோ
அச்சம்வைத்தேநாம ளாலோசனைசெயினும்
முண்டனுக்குரெண்டதல்லால் மூன்றுபேரேன்காணும்
கொண்டல்வண்ணன்சொன்னபடி குற்றமொன்றும்வாறமல்
நாலுதிக்குஞ்சேனைகளை நன்றய்ப்பிரித்துவைத்து
மேலுந்தளபதிகள் வெவ்வேறுபுண்டுபண்ணி
எல்லாந்தளபதிக்கு மெஜமானதிகாரம்
செல்லுமொருகர்னனுக்குச் சேனைபதிசூட்டி
திசையெட்டுங்காவல் சேனைபதிதனக்கு
வசைகளணுவளவும் வாறமலேநிறுத்தி
குருக்கள்தலையசைப்பும் கும்பிடையும்தானிருத்தி
இருக்குமவரையெல்லா மிலக்கணர்க்குப்பின்னனுப்பி
அவர்களுடநாமு மாயனுடபட்டணத்தை
பவுனிவலமாகவந்து பாலனிலக்கணற்கு
இன்றுமணக்காப்புமிட்டு யியல்சோபனமுடிக்க
நன்றெனவேதோணுதுகாண் நம்முடையயோசனைக்கு
அரிந்தமட்டும்சொன்னேனீ ரரிந்ததையுந்தான்சேர்த்து
தெரிந்தமட்டும்பாருமென்று செப்பினன்துர்ச்சகுனி
அப்போதுரிய னகமகிழுந்துதான்கேட்டு
இப்படியும்புத்திமக் கெவர்களுரைப்பாரெனவே
அந்தரங்கமாக அகமகிழ்ந்துகொண்டாடி
இந்தவகைசெய்வதற்கு எண்ணினர்கானம்மானை

## துரியன் துரோணரிடம் பவுனிவர உபாயம் கேள்குதல்

### விருத்தம்

மனமதிற்கபடமான வஞ்சகன்கொடியபாவிக்
கனவினுந்தருமந்தேடாக் கண்ணிலான்பெற்றபாலன்
நினைவிலேபெருமையெண்ணி நிசதனுகுருவைப்பார்த்து
வினைசமர்புரியும்யூகம்விளைப்பதுமெவறலென்றன்

அம்மானே.

திராணியிருந்தோன்சிலைகை சிறந்தபுகழ்வல்லவனுந்
துரோணர்தனைப்பார்த்து சொல்லுவான்காவலனும்
பவுனிவரநாமும் பண்ணுகின்றயோசனைக்கு
புவனமதிலொருவர் பொல்லாங்குவாருமற்
கார்க்கும்வகைகள்தனைக் கண்டுசொல்லுமென்றுரைத்தான்
மூர்க்கன்மொழிந்தவகை முதுமறையோன்தான்கேட்டு

## துரோணர் துரியனுக்கு புத்திகூறுதல்

கனகமுடிபொறுத்த காவலனேயிப்போது
பனகசயனத்தனுட பாசாங்குதோணுமற்
துள்ளிவிழுகாதே சூள்சகுனிபேச்சைநம்பி
வெள்ளியுதிக்குமுன்னே வினைவளர்த்துக்கொள்ளாதே
அய்யாவேயென்னிடத்தி லழப்புகளுங்கேளாதே
செய்யமனதிருந்தால் செய்திடுவாயுன்பிரியம்
நீரொருவர்செய்புகின்ற நேர்மையுள்ளயோசனைக்கு
வேறொருவர்யோசனையும் வேணுமோமன்னவனே
யூகம்வளர்க்குகின்ற யுத்தியெல்லாங்கர்னனுக்கு
வாகுபெரவருங்காண் மற்றொருவர்வேண்டாங்காண்
பொருத்தமுடன்லெக்கணர்க்கு புகழ்பவுனிசெய்வதற்கு
விருத்தரென்றபேரையெல்லாம் விடுவிரவன்பிரகே
அப்படியும்பாராமல் ஆலோசனையிருந்தால்
எப்படிநீர்கலியாண மிசைந்துபண்ணப்போரீர்காண்
மலையாமலேநடந்து வந்ததெல்லாம்தான்வரட்டும்
பலனேதுமில்லையென்று பகர்ந்தார்துரோணருமே
அவ்வார்த்தையெல்லா மரவுயர்த்தோன்தான்கேட்டு
செவ்வையுள்ளகாரியத்தைச் செப்பிடவுமாட்டீரே
பதினேழுஅக்ரோணி படையில்வருமண்டலீகர்
அதிபலமாயுள்ளோ ரனைவோரையுமழைத்து
மன்னர்மகுடமுடி வர்த்தனர்களெல்லோரும்
கன்னனுடவுத்தாரக் கட்டளையில்நில்லுமென்று

## லெக்கணகுமாரன் பவுனிவருவதற்கு யூகம்வகுக்குதல்

தானேவருதிசொல்லித் தானனுப்பகர்னனுக்கு
சேனுபதிமகுடந் திரியோதனன்றரித்தான்

### விருத்தம்

மத்தகெஜமானதொருகோடிபரிகோடி
யுத்தமிடுசேனையிருகோடிதிரளெல்லாம்
உத்தவர்களாகவர உண்மையுடனேதான்
வெத்திபுரியுருசகுனி மேல்திசையில்நின்றான் ௧

வேகமிடுபாய்பரி யனேகமதுலட்சம்
வாகுபெருசேனைரதக் காரரெழுகோடி
ஏகமனதாகயியல் சல்லியனிசைந்து
சேகரமதாகியொரு தென்திசையில்வந்தான் ௨

அட்டதிசையானைகள் பதாதிகளனேகம்
திட்டமொருசேனையெழு கோடிரதவீரர்
சட்டமொடுசூரதள கர்த்தனெனவேதான்
கெட்டியாய்வீஷ்டுமருங் கீழ்திசையில்வந்தான் ௩

தேசரதிகாள்விஜய சூரரெழுகோடி
பூசலிடுசேனபனி ரெண்டுயெழுகோடி
வீசுசதுரங்கபல தூளியதுமேவ
வாசமிகுகர்னனும் வடதிசையில்வந்தான் ௪

இந்தவிதமாகயிரு நால்திசையிலேதான்
வந்துயெழுமேகமு மிருண்டவிதம்போல
பந்தனமதானபடை யானதுபகுத்தார்
அந்தவகைவானவ ரரிந்துபிரமித்தார் ௫

நாலுதளநாயகரும் நாலுதிசைநின்றார்
காலனதுகண்டிருகை தட்டியேசிரித்தான்
கோலமிடுபேய்கள்பல கூளிகளரிந்து
மாலவனைபோற்றிமன மானதுகளிக்கும் ௬

தீதுகுடியானதிரி யோதனனுமங்கே
ஆதிகுருதுரோணர்முத லானவர்களெல்லாம்
சாதுரியலெக்கணனை தன்பதிகள்மெய்க்க
வீதிதனிலேபவனி விரைவினிலேவந்தார்

அம்மானை.

சேனைதளகர்த்தர்களைத் திசையெங்கணும்நிறுத்தி
தானுமனதிலொரு சஞ்சலங்களில்லாமல்

## இலக்கணகுமாரன் பவனிவருவதற்கு அலங்காரஞ் செய்தல்

பாலனிலக்கணனைப் பரிவாய்வரவளைத்து
சீலவபிஷேகத் திருமஞ்சனமாட்டி
கொஞ்சுங்கனகரத்தினக் குண்டலமுங்காதிலிட்டு
செஞ்சுடர்கள்போலிலங்கச் சிரசில்கிரீடம்வைத்து
கண்டசரமணிந்து கைக்கொலுசு தான்புனைந்து
வெண்டயமுங்காலில் விருதுகளுந்தான்பூட்டி
அங்கிமிகத்தரித்து அதின்மேற்பதக்கமிட்டு
திங்களெனும்நெத்தியிலே செந்தூரப்பொட்டுமிட்டு
அரைஞாணிடையிலிட்டு அன்புடையலெக்கணனை
திருமால்மருகனெனத் திருஷ்டியொன்றுந்தான்களித்து
ஆனையலங்கரித்து அதின்மேலவனைவைத்து
சேனைதளபதிகள் திரளாகமுன்னடக்க

## இலக்கண்குமாரன் பவனி வருகுதல்

காங்கையர்துரோணரையுங் கர்னனுக்குபின்னாக
ஆங்கவர்கள்தன்னையெல்லா மளகாய்ரதமேற்றி
பெருமையிலக்கணன்றன் பின்னாலேபோங்களென்று
உருமையுடனுரைத்து வுயர்பவனிக்கானதெல்லாம்
பரிகளொருகோடிதன்மேற் பட்டாணிமார்நடக்க
கரிகளொருகோடியின்மேற் காவலர்கள்முன்னடக்க
தங்கரதக்காரர் சதிருடனேதானடக்க
வெண்கலத்தேர்க்காரர் விரைவாய்நடந்துவர
மந்திரிகள்கோடி வளமாயொருபுறமும்
தந்திரிகள்கோடி தானேயொருபுறமும்

வேல்பிடிக்குமன்னவர்கள் வில்லணிகளோர்புறமும்
மால்பிருத்தமண்டலிகர் வளமாயொருபுறமும்
முத்துக்குடைகோடி முன்னாகத்தானிலங்க
பத்தரைமாற்றுப் பசுங்குடைகள்தானிலங்க
அருணனொளிபோலே ஆலவட்டந்தானிலங்க
சருகைச்சுருட்டிகளுந் தானோர்புரமிலங்க
அரவக்கொடிதுலங்க அனுமக்கொடிதுலங்க
வரிசைவரிசையதாய் மகுடக்கொடிதுலங்க
பாவாடைவீசப் பன்னீர்பலுமார
பாவாணர்சங்கீதம் பண்பாய்ப்படித்துவர
தாரைதவில்முரசு தம்பட்டம்முன்னதிர
பேரிகையுடம்மாணம் பிரகேயதிர்ந்துவர
மத்தளமும்வீணை மல்லாரிதான்முழங்க
தித்தியுடன்கைத்தாளம் சேர்ந்துயிசைமுழங்க
கொம்புடனேடங்கா குழுறிமிகமுழங்க
தம்பூருவீணை சரமண்டலமுழங்க
மங்கையர்களிங்கிதமாய் வந்துநடனம்புரிய
நாவாற்றுதிக்கும் நட்டுவர்பண்பாடிவர
பூவாணர்மெச்சுபொரிவாணமும்பரக்க
மத்தாப்புக்கோடியதில் வானம்பலகோடி
வித்தாரமாகவெங்கும் விளங்குபகல்வத்திகளும்
தங்கத்தீவட்டிகளும் தானேயிருகோடி
இங்கிதமதாக யிருபக்கம்நின்றிலங்க
அண்டங்கிடுகிடென வகிலமெலாந்தானதிர
கண்டவருங்கேட்டவருங் கதையோவெனமொழிய
மவுலிதரித்த வணங்கானரவுயர்த்தோன்
பவுனிதனக்குண்டான பவுசுகளெலாமனுப்பி
சாதுரியமானதொரு தன்மகனும்லெக்கணனை
வீதிவரச்செய்துவிட்டு வேந்தனுமேதேரேறி
முன்னாகவேநடந்தான் முகூர்த்தமணப்பந்தலுக்கு
பின்னாகலெக்கணனும் புறப்பட்டான்வீதிவலம்
மாப்பிளையும்வீதிசுத்தி வாரானெனவேதான்
மூப்புடையதாதி முறைபிடவேமாயவரும்

## கிருஷ்ணன் தோழிப்பெண்களைக் கொண்டு சுந்தரியை மணக்கோலஞ் செய்தல்

செங்கமலத்தாதிகளைச் சிறப்பாய்வரவழைத்து
மங்கையெனுஞ்சுந்தரிக்கு மணக்கோலம்செய்யுமென்று
உறுதியுடன்தாதியர்க்கு வுத்தாரமிட்டார்காண்
வருதிதனைப்பெற்று மகிழ்ச்சியுடன்தாதியரும்
அந்தப்புரந்தனிலே ஆயிரம்பேர்தாதிகளை
இந்தச்சணமே எல்லோரும்போவமென்று
போனாளரண்மனைக்குள் பொற்கமலத்தாதியரும்
தானேயிருந்துகொண்டு தவிக்கின்றசுந்தரியை
பார்த்துமொருசெங்கமலப் பாங்கியருமேதுரைப்பாள்
கீத்துனுதலாளே கிளிமொழியின்வாயாளே
கணையின்விழியாளே கரும்பினியசொல்லாளே
இணையுமொருசந்திரன்போ விலங்குமுகத்தாளே
பதுமமலர்த்திருவே பத்தினியேயுத்தமியே
சதுர்பெருகும்லட்சுமியே தாமோதரன்மகளே
ஆயனரும்மையிப்போ அலங்கரிக்கச்சொன்னார்காண்
மாயனரும்மையிப்போ மணமிடவுஞ்சொன்னார்காண்
விரதஞ்செயுமுகூர்த்த வேளையுமேதானுச்சு
திருமஞ்சனமாடத் தெள்ளமுதேவாருமென்றாள்
சிவிமயிர்முடிக்கச் செல்வியரேவாருமென்றாள்
காவினிளங்குயிலே கன்னியரேயிப்போது
திட்டமுடனே சிறப்பாகவேதானும்
கட்டளகன்லெக்கணருங் கனபவுனிதான்வாரூர்
மாப்பிளையும்பெண்ணுமதாய் மணவரையிலேயிருந்து
காப்புத்தரிக்கயெந்தன் கன்னியரேவாருமென்றாள்
பெண்கட்கரசியரே பெருமாளுடமகளே
வண்ணக்கறத்திலங்க வளைசரிகையிட்டிடவும்
நீலவிழிக்கஞ்சனமும் நெத்தியினிற்குங்குமமும்
கோலத்திருச்செவியிற் கொப்பிடவும்வாருமென்றார்
ஆதரவுசெய்யுமெங்கள் ஆண்டவனார்தன்மகளே
பாதசரந்தண்டையிடப் பைங்கிளியேவாருமென்றாள்

பாங்கியர்களிவ்விதமாய்ப் பகர்ந்தமொழிகளெல்லாம்
காங்கையுடன்சுந்தரியுங் காதுகளிலேகேட்டு

## சுந்தரி அலங்கரிக்கவந்த தோழிப் பெண்களை தூசித்தல்

திடுக்கிட்டெழுந்திருந்து செங்கமலத்தாதியரை
துடுக்கானவார்த்தைபல தூற்றிடுவாளம்மானை
தாதியரேமூப்பியரே தனியடப்பக்காரிகளே
காதுகளும்மூக்குகளும் கையறுக்கச்சொல்வேனுன்.
கத்துகீர்புத்தியற்ற கன்னியரேயென்னுடைய
நித்திரையைத்தானெழுப்ப நினைவுகெட்டுப்போனீரோ
பஞ்சையிந்தலெக்கணர்க்குப் பத்தினியைப்பெண்சாட்டி
மஞ்சள்குளியென்றுசொன்ன வாயைக்கிளித்திடுவேன்
தீய்ப்பிடிக்கும்லெக்கணனைச் சிரந்தமணவாளனென்று
காப்புத்தரிக்கவந்த கையைநருக்கிடுவேன்
பொய்யுரைக்கும்லெக்கணனைப் புருடனென்றுசொல்லியிங்கே
மையிடவுவந்தவர்தன் மார்பையருத்திடுவேன்
மட்டரியாலெக்கணனை மாப்பிளையாமென்றுசொல்லி
பட்டுடுத்தவந்தவரைப் பருங்கழுவிற்போட்டிடுவேன்
கண்டரியாலெக்கணனை கணவனென்றுசொல்லியிப்போ
தண்டையிடவந்தவரை தாளப்புதைத்திடுவேன்
பிணிபெருகும்லெக்கணனைப் பேசுமணவாளனென்று
பணிதியிடவந்தவர்தம் பல்லைத்தகர்த்திடுவேன்
பாமரநாம்லெக்கணனைப் பகர்ந்துமணவாளனென்று
பூமுடிக்கவந்தவரைப் போட்டிடுவேன்தூண்டியிலே
ஆதிநாட்பேச்சுகளை யரியீரோயென்னுடைய
சேதியரிந்திருந்தும் செப்புவதோதாதியரே

## சுந்தரி வாள்பீமனுக்கு மணக்கோலமாவேனென்று தாதியர்களிடம் சொல்லுதல்

அஞ்சலெனைக்காக்கு மபீமரெனுமன்னருக்கு
மஞ்சள்குளித்திடுவேன் மையிடுவேன்பொட்டிடுவேன்
பூசிமுடித்திடுவேன் பொற்றுகிலும்தானுடுப்பேன்

வாசமலராபரணம் மனமகிழ்ந்துபூண்டிடுவேன்
கண்டுமகிழ்ந்திடுவேன் கண்ணாலேபார்த்திடுவேன்
கொண்டலபீமரிடம் கொஞ்சிவிளையாடிடுவேன்
ஆசைமணவாள ரபீமனென்றுஞ்சொல்லாமல்
தோசியிலக்கணனைச் சொன்னீர்பிழைபொருத்தேன்
எல்லாருமென்னிடத்தி லிருக்கோசணனேரம்
வல்லாளரென்கணவர் வாள்வீமர்தான்வருவார்
அப்போதுவாருமெந்த னழகுமணக்கோலம்
இப்போதுபேசா திருங்களென்றாளம்மானை

## விருத்தம்

காதலன்வரும்வகை காணலாமென
மாதவனருள்மகள் வாய்மைகூறிட
தாதியரறியலாமென்று தானவர்
மாதிடத்திருந்தனர் மகிழ்வதாகியே க

வேறு

இந்தவகையாலிவ ரிருந்தனர்களிங்கே
அந்தரதிகாள்திசை யடங்கலுமிருந்தார்
விந்தைதிரியோதனர்கள் வீதிவரும்வேளை
வந்தசிருபாலருட் வண்மையதுசொல்வாம் உ

## இராவான் கடோர்கயனும் துவாரகையில் நடந்த சங்கதிகளை அபீமனிடம் வந்துசொல்லுதல்

இவடத்ததிசயங்க ளிப்படியேதானிருக்க
அவடத்திருந்துவந்த ஆனசிருபாலகரும்
இராவான்கடோர்க்கசனும் யிடையரெனவேசமிட்டு
பிராணதிபன்வாழும் பெரியதுவாரகையில்
மேவியரிகேசவன்றன் மேலழப்புத்தான்பாத்து
பாவிதிரியோதனன்றன் பாளையமுந்தான்பார்த்து
வந்தகடோர்க்கசனும் வாசமுள்ளராவானும்
சொந்தமுள்ளதம்பியெனும் துரைதானிருக்குமிடம்
மணிச்சாவடிதனிலே மலர்மடந்தைவீட்டினிலே
கணப்பொழுதுதன்னில்வந்து கண்டார்களம்மானை

### விருத்தம்

தாரணிதமையர்சென்று தான்வரபீமன்கண்டு
காரணரிருவர்பாதம் கையினாற்கவிந்துபோற்றி
நாரணரிடத்திற்போன நன்மையுமரவுயர்த்தோன்
தோரணவகையுமங்கே சொல்லுமென்றுரைக்கலுற்றான் ௧

வண்டணிமலர்சேர்மார்பன் வகைமிகபீமன்கேட்டு
அண்டர்கள்பரவும்வேத வருட்கடலரியோன்றன்னைக்
கண்டதுமவர்தான்சொன்ன காரியமரவுயர்த்தோன
சண்டையிற்றெரியுமென்றான் தலந்தனையுண்டமாயோன் ௨

அரவுயர்த்தவனைக்கண்ட வதிசயமெல்லாஞ்சொல்லி
திரமுடனங்குசேனை சிறந்திருப்பதையுஞ்சொல்லி
இருபதுகடிகைக்குள்ளே யிசைபகல்முகூர்த்தமென்றும்
உரிமையினுடனே தம்பிக் குரைத்துயோசனைசெய்வாரே ௩

### அம்மானை.

நல்லதுவாரகையில் நடந்ததொருசேதியெல்லாஞ்
சொல்லியொருவர்க்கொருவர் சுகமாய்மனமகிழ்ந்து
இனிமேல்நடக்கும்வகை யென்னவென்றுவாள்வீமன்
கனிவாய்த்தமையரிடங் கைகுவித்துத்தான்கேட்டான்
மொழிந்தசிறுவனையும் முகத்தில்முகத்தோடணைத்து
குளிர்ந்துமனமகிழ்ந்து கூர்வானிடும்பிமகன்

### விருத்தம்.

நூற்றுவர் தனையுந்தங்கள் சேனையும்நொடிக்குமுன்னே
காற்றினிலிலவம்பஞ்சாய்க் கவுரவர்பரந்துபோகத்
தூற்றினம்பெருமானீன்ற சுந்தரிதனையுனக்கு
ஏற்றநன்மாலைசூட்ட யிசைந்தனன்கடோற்கனென்றான்

### வேறு

அன்னவர்கள் தங்களைதிராகவுமேசென்று
பொன்னுலகில்வானவர் புரந்தரனுமாகப்

பின்னுமுலகங்களுள பேர்வரினுமிப்போ
மின்னுமரைநாழிகையில் வெல்வநிசமென்றான் உ

அம்மானை

மார்க்கமுள்ள தம்பியரே வாழ்விமாயிப்போது
தீர்க்கமுடனுங்கள் செப்புமொழிகேட்டருள்வாய்
இணங்காதரவுயர்த்தோ யெண்ணரியசேனையையும்
வணங்காமுடியன்முதற் வாய்த்ததம்பிநூற்றுவரும்
கன்னன்சகுனியையும் காக்குமரதிகாள்த்தனையும்
மன்னன்சயிந்தனையும் வாள்பெரியவீஷ்மரையும்
சொற்பெரியமாமறையோன் துரோணரசுவத்தாமன்
மற்பொருதுமண்டலிகர் வாகுபெருசல்லியனும்
இன்னிலத்திலுள்ளவரு மிராசர்மருமன்னியரும்
பொன்னுலகந்தன்னிற் புரந்தரனும்வானவரும்
குறையாதிவர்களெல்லாம் கூடியெதிர்வந்தாலும்
அரைநாழிகைதனிலே யவர்களையும்வென்றிடுவேன்
குன்றைக்குடைபிடித்த கோபாலன்றன்மகளை
இன்றைக்கேமாலையுனக் கிட்டிடுவேன்தப்பாமல்
திரியோதனன்படையைச் ஜெபித்துவருமளவும்
அரியோன்மடத்தருகி லம்மையார்வீட்டினிலே
புத்தியுடனிருங்காண் போர்க்குவரவேண்டாம்நீ
வெத்திரணசுத்த வீரன்கடோற்கசனும்
சென்றுசமர்க்களத்திற் றிரியோதனன்படையை
கொன்றுதுயஸ்தம்பங் கொடிவிருதுநாட்டுகிறோம
பாரும்மகிமையென்றும் பகர்ந்தானிராவானும்
கூறும்வசனமெலாங் குழந்தையுமேதான்கேட்டு
சரணம்சரணமென்று தமையரிடமேதுரைப்பான்
திரமையுளனெனவே செப்புகின்றஅண்ணன்வீ
சர்ப்பக்கொடியுடையோன் றானும்மக்கெதிரோர்
அற்பத்தனத்தையங்கே யரைநாழிகைதனிலே
திருமால்செயலாலே ஜெயித்துமேநான்வாரேன்
சிறுவனிவனெனவே சிந்தைகுன்றவேண்டாங்காண்
திறமாயிதுவசனஞ் செப்பினான்வாள்வீமன்

இந்தவசனமதை இராவானுந்தான்கேட்டு
சிந்தைகலங்கிச் செப்புவான்ராவானும்
என்னமொழியுரைத்தாய் யினிதான தம்பியரே
அன்னையுனக்குமுன்னே ளதிபிரியமாய்மகிழ்ந்து
கையில்மணமுகூர்த்தக் காப்புத்தரித்திருக்க
எய்யும்சமர்க்களத்தி லெந்தவிதம்போவதுகாண்
மாலையிடுமளவும் வாளெடுக்கலாகாதே
மேலுமொருகாரியத்தை வேண்டிடவுமாகாதே
அந்தவகைநீரும் அரிந்திலேயோ தம்பியரே
இந்தவகைதானும் யேனுரைத்தீர் தம்பியரே
வாருமென்றுசொல்லி மலர்மடந்தைவீட்டினிலே
சிறுவருமூவர்களும் சேர்ந்தார்களம்மானை.

விருத்தம்.

சிறுவர்கள்வந்தபோது சிரந்துல்லம்மைபாரும்
அருசுவையுடனேதுய்ய அன்னமூவர்க்குநல்கி
கருமுகில்மகள்கல்யாணக் காரியம்பார்க்கப்போறேன்
உருமையுள்ளவரேநீங்க ளுபர்மனையிருமென்றாளே    க

அம்மானை

தாகமுடன்வந்தசிறுத் தம்பியர்கள்மூவருக்கும்
பாகமுடனேருசியாய்ப் பாலன்னந்தான்படைத்து
சீரேருஞ்சுந்தரிக்குத் திருமணமுமானதினல்
போரேன்துவாரகைக்குப் போய்நான்வருமளவும்
சுத்தமுள்ளஎன்மனையில் சுகமாயிருங்களென்று
புத்திமிகவுரைத்துப்போனாள் மலர்மடந்தை
போமென்றுபசரித்துப் போர்பெரியராவானும்

## துரியோதனனிடம் யுத்தத்திற்கு போவதாய் அபீமனிடம் இராவான் கடோர்க்கயன் சொல்லுதல்

ஆமென்றருகிருந்த வபீமனையுந்தான்பார்த்து
புவனமதிற்கீர்த்திபெற்ற புண்ணியரேநாங்களிப்போ
கவுரவர்கள்சேனையிலே கைபாடிவெத்திகொண்டு

ஒருநாழிகைதனிலே யுத்தமனையும்மிடத்தில்
வருவோமதுவரையு மாயன்மணிச்சாவடியும்
பூங்காவனமுமிந்தப் பூமடந்தையார்வீடும்
நீங்காதிருமெனவே நிகழ்த்தினன்ராவானும்
மன்னனுரைத்தமொழி வாள்வீமன்றான்கேட்டு
சொன்னபடிகேட்டுமக்குத் தொண்டுசெயும்நானடியேன்
தேவர்சொன்னபுத்தி சிந்தைமுடிமீதுவைத்து
ஏவல்செய்துகொண்டிருப்பேன் யென்றானபீமனுமே
மகிழ்ந்துகடோர்க்கசனும் வன்மைமிகுராவானும்
புகழ்ந்துசமர்புரியப் போர்க்கோலம்செய்யலுற்றார்

## வாள்பீமனை பூமடந்தையின்வீட்டில் நிருத்திவிட்டு ராவான் கடோர்க்கஸனும் போர்க்கோலங்கொண்டு துரியனுடைய பாளையத்தில் செல்லுதல்

### விருத்தம்.

கச்சையிடைகட்டினர் கதித்தயிடைமீது
உச்சிதமதானவுடை வாளதுபுனைந்தார்
இச்சையுடனேகெதை யெடுத்தனர்கையில்லும்
அச்சமிலையென்றுவெகுவாயுதமெடுத்தார் க

ஐவர்துணையென்றுமன தன்பதுபுனைந்தார்
கையிலொருமேல்விருது கங்கணமிசைத்தார்
சைவநிறைமாய்னிரு தாள்சரணமென்றே
தெய்வபலமாகவமர் செய்திடநடந்தார் உ

### அம்மானை

கார்மேகமேனிக் கடோர்க்கசனும்ராவானும்
போர்புரியவேணுமென்று போர்க்கோலமும்புரிந்து
கையிற்றனுவெடுத்துக் கடும்பகழிதானெடுத்து
செய்யகெதையுடனே தெண்டாயுதமெடுத்து
கூடவரும்தம்பியரைக் குணமாகவேநிருத்தி
காடுறைந்தபஞ்சவரைக் கருத்தில்மிகநினைந்து
சீரானதர்மஞ் ஜெயமாகுமென்றுசொல்லி

நாராயணனெனவே நடந்தாரிருபேரும்
வந்தார்துவாரகையில் வடகோட்டைவாசலிலே
செந்தூள்கிளம்பத் திரியோதனன்படைகள்
முன்னணியும்பின்னணியும் முப்பதைதங்காதவழி
கன்னன்ரதமேரிக் கடுகவந்துநிற்கிறதும்
கடல்போல்வளைந்துகொண்டு கவுரவர்கள்சேனையெல்லாம்
திடமாயிருப்பதையும் சென்றிருவர்தான்பார்த்து
கட்டழகன்ராவான் கடோர்க்கசனைத்தான்பார்த்து
பட்டணத்தைச்சுற்றியிந்தப் பாளையமுண்டானதினால்
தென்கோட்டைவாசல்முகம் செல்லுமென்றுதானனுப்பி
மன்னனரவான் வடகோட்டைவாசல்சென்றான்
வில்வளைத்துவார விருவுதனைப்பார்த்து
மல்யுத்தஞ்செய்யுமொரு வக்ரதந்தனென்றொருவன்

## இராவான் கடோர்க்கயன் ஆயுதத்துடன் வரக்கண்ட வக்கிரதந்தன் துரியனிடஞ்சொல்லுதல்

திரியோதனனிடத்திற் சேதிதனைச்சொல்லிடவே
எரிபூச்சிபோலவிழுந் தேங்கியேமன்னவனும்
ஏதினிமேல்நாமு மெடுத்ததொருகாரியமும்
தோதாய்நடக்குமென்று தோணவில்லையென்றுமன்னன்
ஆசாரிபாதமதை யன்பாகவேதொழுது
லேசாயிருவரையும் நிமிசம்விரட்டுமென்றான்

## உத்தத்திற்குவந்த இருவரையும் விரட்டும்படி சொன்ன துரியன்வார்த்தையை துரோணர் கேட்டு வக்கிரதந்தனை யுத்தத்திற்கனுப்புதல்

துரோணரிதுவரிந்து துருசாயெழுந்திருந்து
குரோதவக்கிரதந்தனையுங் கொடியசமர்செய்யுமென்றார்
தந்தவக்கிரன்றானும் தளபதிகளைக்கூட்டி
வந்தோரிருவருடன் வாகாய்சமர்க்கெழுந்தான்
ஆயுதமுந்தானெடுத்து அரவானிடமேயி
பாயும்புலிபோலே பாய்ந்துயெதிர்வந்துநின்று

## வக்கிரதந்தன் ராவான் கடோர்க்கயனுடன் எதிர்த்து யுத்தஞ்செய்யுதல்

ஆரடாநீயுமிங்கே அஞ்சாமல்வாரதுவும்
பாரடாவுன்னையிந்தப் பாணத்திலறுத்து
சரிபிடிக்கிறேனெனவே தளங்களுடன்வந்தெதிர்த்தான்
அரிமருகனான அதிகபெலராவானும்
வாடாமுதற்பெலிக்கு வக்கிரதந்தாவுன்னுயிரை
தாடாயினியெனது சமர்த்தறியுமென்றுசொல்லி
கோலத்தனுவளைத்துக் குணத்தொணியுஞ்செய்யலுற்றான்
ஞாலத்தவர்களெல்லாம் நடுங்கினர்காணம்மானை
குருவேசரணமென்று குணமுடையராவானும்
தருகாமலோர்கணையைத் தானெடுத்துவிற்பூட்டி
வலுவாயிழுத்துவிட்டான் வக்ரதந்தன்றன்மேலே
நிலையாதொருகணை தானிமிஷமதிலேயெழும்பி
வாதாடும்வக்ரதந்தன் வருமரத்முந்தானறுத்து
மீதானவன்பிடித்த வில்லையுமேதானறுத்து
எரியுமணல்போல யிருந்திடவும்வக்கிரதந்தன்
கருகிமனதுநொந்து கண்சிவந்துவில்லதனை
எடுத்துச்சரந்தொடுத்தா னிராவானுடல்மேலே
அடுத்துத்தளங்களெல்லாம் அஸ்திரமயமாய்த்தொடுத்தார்
சூழ்ந்தகணையையெல்லாஞ் சொல்லரியராவானும்
தாழ்ந்துவிழும்படியாய்த் தாக்கினனோர்பகழி
தாவிவந்தசேனையெல்லாந் தவிடுபொடியாகி
பாவியெனும்வக்கிரதந்தன் பற்களுமேதானுடைந்து
ஓடினன்தேரையும்விட் டோகோகோவென்றுசொல்லி
ஓடிவையோவென்று ஒருகணையிற்பூசலிட்டான்

## வக்கிரதந்தன் சண்டை செய்யமாட்டாமலோடியபின் கர்னன் ராவானுடன் யுத்தஞ்செய்தல்

தீர்க்கமுள்ளகர்னனுமே தேரேறிவில்வளைத்து
மார்க்கமுள்ளராவான் மார்புதனில்நூறுகணை
பேசரியநெத்தியிலும் பிடரியிலும்நூறுகணை

மாசிலாவில்வளைக்கும் மன்னன்கரந்தனிலே
கொடிதானபாணங் குறையாமலேநூறு
கூடிதாகவேதொடுத்தான் கர்னனுமேயம்மானை
எரிந்துவருங்கணையை இராவணனொருகணையால்
முரிந்துவிழும்படியாய் முடிகிச்சமர்புரிந்தான்
அங்கர்கோன்சினந்து ஐந்நூறுபாணமதை
திங்கள்முகத்தழகன் சிறுவன்மேலேதொடுத்தான்
வாரகணைகளெல்லா மாரிவிழும்படியாய்
சூரனொருபகழி தொடுத்தேயறுத்துவிட்டான்
கண்டுமனதுநொந்து கர்னனுமேதான்சினந்து
தண்டாளமார்பன் தனுவளைத்துவேகமதாய்
ஐந்துமுகக்கணையு மாறுமுகநற்கணையும்
சந்திராயுதக்கணையும் தருகாமலேதொடுத்தான்
கொடியபகழிதன்னைக் கோலமுள்ளராவணனும்
பொடியாயறுத்துவிட்டான் போர்க்களத்திலம்மானை
அறுக்குமொருசக்கரத்தை யங்கர்கோன்றனறுத்து
நெருக்கிரதம்நடத்தி நிமைமுளித்திடும்முன்னே
சிறுவனெனும்ராவான் சிரசுதனைப்பார்த்து
உருவிவிடும்படியாய் யோராயிரங்கணையும்
இடிபோற்சிலதுகணையேழாயிரந்தொடுத்தான்
கொடியவடவாக்கினிபோற் கோடிகணை தான்தொடுத்தான்
பூவுலகமெங்கும் பொரிந்துபுகைகிடவும்
மேவுமொருஅஷ்டகரி மேதில்கெலாம்சைய
வானவர்களெல்லா மதிமயங்கியோடிடவும்
தானவர்கள்கெந்திருவர் தத்தளித்துப்போய்விடவும்
கடல்கள்சுவரிடவுங் கீர்கம்நீந்தியப்பிடிக்க
திடமுடனேபார்சுமக்குஞ் சேடன்முடிதானசைய
காடாக்கினியெனவே கர்னன்தொடுத்தகணை
தாடாவுயிரெனவே தான்வளைந்துராவான்றன்
மார்பிலொருகணைதான் வந்துமிகவேபிடிக்கும்
சேருமிருகரத்திற் சிலதுகணைதான்பாயும்
முதுகிலொருகணைதான் மூர்க்கமுடன்றான்பாயும்
பதுமமுகந்தனிலே பாயுஞ்சிலதுகணை

சிலையருப்பனென்று சிலதுகணைசீறிவரும்
தலையருப்பனென்று தாவிவருமஸ்திரங்கள்
சுத்திவளைந்துகொண்டு சுடர்போலெரிக்குதுகாண்
வெத்திமிகுராவாணும் வேடிக்கையாய்ப்பார்த்து
மனதிலதிசயித்து மன்னவனுமன்னேரம்
கனதையுள்ளபொற்சிலையிற் கதிரோன்கணைபூட்டி
மார்புரளவாங்கி வலுவாயிளுத்துவிட்டான்
கூர்பெரியபாணங் கொடுங்கோபமாயெழுந்து
வெய்யோன்மகன்கணையை வென்சாம்பலாயெரித்து
கையாடவொட்டாமற் கர்னன்ரதங்குதிரை
கட்டுங்கொடிதனையுங் காத்திருந்தசேனையையும்
சுட்டுப்பொடிப்பொடியாய்த் தூள்சாம்பலாக்கியபின்
செய்யபுகழ்கர்னன் சிலைநாணையுமறுத்து
துய்யகணைபாலனிடஞ் சுருக்கில்வந்துசேர்ந்ததுவே

## விருத்தம்.

பாலோன்விடுவெங்கணைபாயவுமே
ஆலோசனை யாகியவங்கர்பிரான்
மேலாகியதேரினில் மேவியபின்
சூலாயுதமொன்றுதொடுத்தனனே

## அம்மானை.

விர்மையுள்ளராவான் விடும்பகளிதன்னாலே
சிர்மையதுகலங்கித் திரமானகர்னனுந்தான்
வேறேசிலையெடுத்து மிக்கதொருநாணேத்தி
தேரையுங்கூடிகிவிட்டு சிறுவனெனும்ராவான்மேல்
காலவிஷமெனவே கனகோபமாயெழுந்து
சூலாயுதமெடுத்துத் தொடுத்துவலுவாய்விடுத்தான்
பொல்லாதசூலமது பொங்கிவடவாக்கினியாய்
செல்லாதவானந் திசைகளெங்குந்தீப்பிடிக்க
மின்னலிடியுமதாய் மேதினியெல்லாம்நடுங்க
மன்னனெனும்ராவான் மார்புதனைக்கீரவென்று
கோபித்துவந்ததுகாண் கொடுஞ்சூலமான்துவும்
சாபமிடவாரதுபோல்த் தாண்டிவருஞ்சூலமந்த

காட்டானைக்கூட்டமதில் கடியசிங்கம்பாய்ந்தாப்போல்
போட்டானேசத்தி பூசைசெய்தூராவானும்
வேலாயுதம்விடவே வெகுண்டுவிரைவாயேகி
சூலாயுதந்தனையே துண்டுதுண்டாய்ச்செய்ததுவே
பருதிமகன்கர்னன் பார்த்துமனதிலெண்ணி
இருதிமுடிவென்றிருந்தோ மிவனுமிந்தச்சூலமதை
துண்டுபண்ணிப்போட்டுவிட்டான் சூரனொருசத்தியினால்
வண்டனிவனெனவே மனதில்வெகுகோபமுற்று
வாய்வாஸ்திரந்தொடுத்து மார்புக்குநேராக
தீய்போலெரிக்குமொரு திவ்வியாஸ்திரந்தொடுத்தான்
சோமாஸ்திரந்தொடுத்தான் சுருண்டுவிழுந்திடவே
ஏமாஸ்திரந்தொடுத்தான் இராவானிரந்திடவே
கடலானதுபிரண்டு காசினியில்வந்தாப்போல்
விடமானதுபரந்து மீளுகின்றவாரதுபோல்
எனக்குவுடலெனவே யெழுந்துசிலபாணம்வரும்
உனக்குவுயிரெனவே ஓடிவெகுபாணம்வரும்
ஏய்த்தால்விடுவதில்லை யென்றுசிலபாணம்வரும்
தேய்த்துவிடுவேனென்று சிலதுகணையோடிவரும்
கொண்டல்கவிந்ததுபோல்க்கோலமுள்ளராவானை
அண்டிப்படபடத்து அதட்டிவரும்வேளையிலே
மாத்தலர்கள்சிங்கம் வலுவுடையராவானும்
எத்துமொருசிலையி லிரண்டுகணை தான்பூட்டி
நாருயணாவெனவே நமஸ்கரித்துயெய்யலுற்றான்
சூறுவளிபோலச் சுளன்றுகணைதானோடி
துடிக்குமொருஅங்கரர்கோன் றய்யதொருஅஸ்திரத்தை
நொடிக்குட்பொடிப்பொடியாய் நொருக்கிவிட்டதம்மானை

## விருத்தம்

விட்டகணையாவையும் விழும்படியறுத்தான்
துட்டனிவனென்றுமிக துன்பமதையுற்றான்
அட்டதிசையோர்புகழு மானதொருகர்னன்
திட்டமுடன்சேனையெதிர் தீரமுடனின்றான்

அம்மானை.

சேனைபதித்தலைவன் திரமுடையகர்னனுந்தான்
தானையிரங்கோடி சரமாரியாகவிட்டு
பாலன்றனைச்செயிக்க பக்குவமுமில்லாமல்
காலனிவனெனவே கருத்தில்மிகநினைந்து
தாண்டுமொருராவான் றனைச்செயிக்கவேணுமென்று
நீண்டசிலைவளைத்து நீலமுளிக்கண்சிவந்து
தளத்தைமிகநடத்தித் தானுமொருதேரேறி
வளைத்தசிலையிலொரு வாய்வாஸ்திரம்பூட்டி
தோள்புரளவாங்கிவிட்டான் சூரன்மகன்ராவான்மேல்
கோள்பெரியசோலையெலாங் கோடையிடிபோல்முழங்க
வெத்திகளும்பேசி விருதுமிகவேகூறி
சுத்திவெகுதிரளாய்ச் சூழ்ந்துசமர்செய்யலுற்றார்
விளங்கும்பகலவனை மேகம்வந்துசூழ்ந்தாற்போல்
தளங்கள்கவிந்துகொண்டு சமர்புரியுமன்னேரம்
பூமியதிர்ந்திடவும் புனல்சுவறிப்போய்விடவும்
ஏமகிரிமுதலா யெட்டுங்கிடுகிடென
நாடாதவானமதில் நட்சேத்திரமதிர
காடாய்வனங்களெல்லாங் கனல்பிடித்துத்தானெரிய
சந்திரனுஞ்சூரியனுந் தத்தளித்துத்தான்மறைய
இந்திரரும்வானவரும் ஏங்கிப்பயந்துநிற்கக்
சிறுவனெனும்ராவான் றிகைத்துப்பிரமைகொள்ள
அரவுயர்த்தோன்சேனதனை அங்கரகோன்முனடத்தி
பாணம்வருசையதாய்ப் பாலகனார்தன்மேலே
வேணுமொருமுகூர்த்த வேளையுமேசண்டைசெய்தார்
அவர்கள்கவிந்துகொண்டு அமர்புரியராவானும்
இவர்கள்விடும்பகழிக் கெவ்வளவுமஞ்சாமல்
பருத்திப்பொதியிலொரு படுதீவிழுந்தாப்போல்
எரித்துக்குமித்துவிட்டா னிராவானொருகணையால்
பெருகுமுகிலையொரு பெருங்காற்றடித்தாற்போல்
சிறுவனடித்தவருஞ் செயலரிந்துவங்கரர்கோன்
தேரையெதிர்நடத்திச் சிலைவளைத்துகர்னனுந்தான்

ஆறுயிருகோடி அஸ்திரங்கள் தான்விடுத்தான்
எக்கணைகள்விட்டாலும் யெல்லாமிவனரிந்து
கைக்கணையொன்றேதொடுத்து கண்டதுண்டமாக்கிவிட்டான்
கனத்தபுகளுடைய கா்னன்மனம்வெகுண்டு
சினத்துச்சிலைவளைத்துச் சிருநாணொலியுமிட்டு
இடிபோலொருகணையை யெடுத்துமிகவிற்பூட்டி
நெடியதொருராவான் நெற்றிதனிலெய்யலுற்றான்
எய்யுமொருகணைதா னிராவான்திருநுதலில்
நையவடித்ததுகாண் நடுங்கிமனம்நொந்திடவும்
குருதிமிகவடிய கோபமுற்றுராவானும்
பருதிமகன்கா்னனையும் பார்த்தேதுரைக்கலுற்றான்

## விருத்தம்

துடங்கிநீயுமமா்செய்குற்றுபுனது சுத்தவீரமுமரிவன்யான்
இடங்கொளாமல்வருசேனையானைரத மியாவும்ஓடியேஒளிந்திட
அடங்கலாகவொருகடிகைதன்னி லுடலாவிபோகும்வகையாகவே
விடங்கலானகணையேவுவேனெனவும் வில்வளைத்துவமா்மேவினான்

## அம்மானை

வாரும்இனிமேலாய் வந்தரவியோன்மகனே
பாருமினியெனது பராக்கிரமமுள்ளதெல்லாந்
தெரியப்படுத்துகிறேன் திரமாகநில்லுமென்று
எரிபோலுரைத்து யிராவான்மிகச்சினந்து
பாரச்சிலையதனைப் பாங்காகவேவளைத்து
கூர்மையெனுஞ்சூலக் கொடுங்கணையில்விற்பூட்டி
அங்கரா்கோன்றன்மேலே அழுத்தமுடனெய்யலுற்றான்
சிங்கம்மதகரியைச் சினந்தெழுந்துபாய்ந்தாற்போல்
சூலக்கொடுங்கணையுந் துடியாகவேயெழும்பி
கோலப்பருதிமகன் கொடிரதமுந்தானறுத்து
தேரூறுஞ்சாரதியைத் தியக்கமதுவுண்டுபண்ணி
பாரேழ்புகழ்கா்னன் பணிமகுடந்தானெருக்கி
கையிற்பிடித்தவில்லைக் கண்டதுண்டமாயொடித்து
துய்யதிருமார்பிற் சூலமதுபாய்ந்திடவே
கன்னன்மதிமயங்கிக் கணமூர்ச்சையாய்விழுந்தான்

தென்னன்மெலிவுகண்டு சேனையெலாந்தத்தளித்து
சகுனிக்கபயமென்று தளமுரிந்துவோடுவதை
பகைவைத்திடங்கிவைத்த பயல்சகுனி தான்பார்த்து

## இராவானுடன் சகுனி யுத்தஞ் செய்யுதல்

தம்முடையதேருந் தளங்களையுந்தானடத்தி
நம்முடையகீர்த்திகளை நாட்டுகிறேமென்றுசொல்லி
ஆரடாநீயெனவே யதட்டியந்தராவானை
பாரடாவென்றுசொல்லிப் பாணமதைவிற்பூட்டி
கரவேகமாகியதோர் கைப்பழக்கம்வந்தவர்போல்
சரமாரியாகவுமே சகுனியுமேதான்தொடுத்தான்
நிரைந்ததளங்களெல்லாம் நிறைநிறையாய்த்தான்பொருதார்
இரைந்துவரும்பகழி யிடிபோலவேமுளங்க
நாலுதிசைகளையு நன்றாகவேகவிந்து
பாலனெனும்ராவானை படைகூடியேபொருதார்
அங்கரர்கோன்மூர்ச்சை யவனுமிகவேதெளிந்து
பங்கமதைநினைந்து பரிவுடையதேரேறி
வில்லெடுத்துநாணில் விசையாய்க்கணைபூட்டி
சொல்லுரைத்தராவானைத் துணித்துவிடவேணுமென்று
எதிராகவந்துநின்று பெய்தான்கணைமாரி
சதிராகப்பாலருடன் சமர்பொருதானம்மானை

### விருத்தம்

வடதிசைத்தளமும் நல்வாய்ந்தகர்னனும்
தடவரைச்கீள்திசை சகுனிசேனையும்
படவமர்சூழ்ந்துகொண் டிவர்களோங்கினார்
குடதிசைச்சமரினைக் கூறுவாமரோ

அம்மானை

வாகாய்வடதிசையில் வந்ததொருசேனைகளும்
தாகமுடன்கிழக்குச் சகுனியுடபாளையமும்
நன்றாயிருதிசையில் நாட்டிநின்றமன்னவரும்
ஒன்றாகவேகூடி யுக்ரந்தபிரளையம்போல்
வந்துகவிந்ததொரு மன்னவர்கள்தன்னுடனே

சிந்தையுள்ளராவான் திடமாய்சமர்பொருதான்
மால்கிருபையாலே வ்யணங்தெரிந்திடவே
மேல்திசையிற்சண்டை விளம்புவன்கேளம்மானை

விருத்தம்.

கத்தியம்செய்திடுங் கடோர்க்கயனுமங்கே
வெத்திசெயவேணுமென மேல்திசையில்வந்தான்
சத்தமுகிலென்னவே சயிந்தவனெதிர்த்தான்
அத்தனையும்வெல்வனென ஆண்மையுடன்சொன்ன

## மேல்திசையில் கடோர்க்கயனுடன் சயிந்தவன் யுத்தஞ்செய்யுதல்

அம்மானை

கையிற்கெதையெடுத்துக் கடோர்க்கயனுமன்னேரம்
எய்யாமல்மேல்திசையில் ஏகினனம்மானை
தளத்துக்கதிபதியாஞ் சயிந்தவனைத்தான்பார்த்து
உளத்தில்மிகநினைந்து யோசனையுமுண்டாகி
ஆர்காணுமிங்கொருவ னஞ்சாமல்வாரதுவும்
ஊரேதுபேரேதுரைமென்று வந்தெதிர்த்தான்
வந்தசயிந்தவனை மன்னன்கடோர்க்கயனும்
சிந்தைகலங்காமற் றிரமாயெதிராடி
அடித்தானொருகெதையா லவன்றேருடைபடவே
துடித்தான்சயிந்தவனுந் துயரமதுவுண்டாகி
பொல்லாதகோபமதாற் பொங்கிமனம்வெகுண்டு
வில்லானதுவெடுத்து விந்தையுள்ளதேரேறி
முக்கோடிசேனைதளம் முன்னாகவேநடத்தி
தொக்காகவேயிவனைத் துணித்துவிடவேணுமென்று
பெரியசிலைவளைத்து பிசகாமல்நாணேத்தி
சொரியும்மழையெனவே தொடுத்தான்சயிந்தவனும்
பூமியதிர்ந்திடவே பூட்டினான்கோடிகணை
ஏமசரங்களிலே எண்ணாயிரம்தொடுத்தான்
இடிபோர்சிலதுகணை ஏழாயிரந்தொடுத்தான்
கொடியவிஷக்கணையிர்க் கோடானகோடியெய்தான்
வருணாஸ்திரந்தன்னையு மழைமாரிபோற்றொடுத்தான்

ஒருநாளிகைதனிலே வுலகமெலாந்தீப்பிடிக்க
நெருப்புக்கணை தனிலே ரெண்டுலட்சம்தான்தொடுத்தான்
குரிப்பான அஸ்திரங்கள் கோடானகோடிதொட்டான்
பிரவாய்க்கணைகோடி பிரளயம்போலேதொடுத்தான்
குரையாதசேனை தளங் கூட்டமுடனேகவிந்து
எய்தார்கொடுங்கணைகள் இவனொருவன்றன்மேலே
செய்தார்கள்யுத்தஞ் சிறுவன்கடோர்க்கசன்மேல்
விரிட்டமர்புரிய வீமன்மகனன்னேரம்
ஏரிட்டவன்பார்த்து யெரியெனவேகண்சிவந்து
தண்டாயுதமெடுத்து சாடினான்வீமன்மகன்
அண்டமல்நின்றவர்க ளாயுதமெலாம்நொறுக்கி
தேரிழந்துவில்லிழந்து சிந்தைகளுந்தானுடைந்து
தூரிழந்தபொந்துமரம் சுழண்டலைந்துவீழ்ந்தாற்போல்
கூவிவரும்படைகள் குறும்படங்கியேவீழ்ந்தார்
தாவியெதிராகவந்த சயிந்தவனுநேரிழந்து
பற்கடித்துவந்த பராக்கிரமந்தானிழந்து
விற்பிடித்தகையுமிக நடுங்கிமெய்சோர்ந்து
சபையோர்புகளுஞ் சயிந்தவனுமன்னேரம்
அபையமபையமென்று மவன்றிரும்பியோடலுற்றான்

## விருத்தம்

தானுயெதிர்வந்த சயிந்தவனும்
நானேதென வோடினனுகையினுற்
சேனுபதிசல்லி யனுந்திறமாய்
மேனுரதமேவி நடந்தனனே

பூணும்படிசேனைகள் போதரவாய்
காணும்படிவந்து கடோர்க்கஜன்முன்
தோணும்படி வெஞ்சிலைதோள்புரள
ஊணும்படியோர்கணை விட்டனனே

## அம்மானை

தாளாமலங்கே சயிந்தவனுந்தானேடி
கோளானதையரிந்து கூர்மையுள்ளசல்லியனும்

## சல்லியன் கடோர்க்கயனுடன் யுத்தஞ் செய்யுதல்

தென்புரத்தில்நின்றதொரு சேனைகளைத்தானடத்தி
என்புரத்தில்வந்தவனா ரென்றுசொல்லிவாக்கிரமித்து
கனகமணித்தேரைக் காவலனும்முன்னடத்தி
பனகமணிமகுடன் பாரவில்லுந்தான்வளைத்து
வந்துவளைந்துகொண்டு வாகானபாலகனை
முந்தியடியெடுத்து முன்னேக்கிவைக்காமல்
ஐயாயிரம்பகழி யவன்மேற்றெடுக்கலுற்றான்
கையாடவொட்டாமல் கணைமாரியாய்ப்பொழிந்தான்
தூண்டுமொருசேனைகளும சொற்பெரியமன்னர்களும்
தாண்டியெதிர்நடந்து சமர்பொருதாரம்மானை
கடுகிவருஞ்சல்லியனைக் கண்டுகடோர்க்கசனும்
முடுகியொருகதையால் மூட்டினன்கோபமுடன்
பஞ்சாய்ப்பரந்ததுகாண் பாரமுள்ளசேனையெல்லாம்
அஞ்சாமல்வந்தெதிர்த்த ஆண்மைமிகுசல்லியனும்
செங்கரத்திலேபிடித்த சிலைநாணதுமுரிந்து
தங்கள்ரதமும்முரிந்து தவிடுபொடியாகி
காலோடுகால்கள்பின்னிக் காதுஞ்செவிடுபட்டு
கோலூனுமந்தகன்போல் கோவென்றபயமென்று
இவனைச்ஜெயிப்பதற்கு யேலாதுயென்றுசொல்லி
புவனத்தரவுயாத்தோன் பொல்லாங்குசொன்னாலும்
நமக்கேன்விதியெனவே நாணித்தலைகவிழ்ந்து
தமக்குள்மனதுநொந்து சல்லியனுமோடலுற்றான்
மேல்திசையும்தென்திசையும் வேந்தர்படைசேனையெல்லாம்
காலனுடபட்டணத்தைக்கைகொண்டாரம்மானை

### விருத்தம்.

தளபதிசயிந்தவன் தவரியோடினன்
அளகுயர்சல்லிய னவனுமோடினன்
பிளையிதுயெனவரும் பெரியசேனைகள்
மளையினிற்கொசுகென மயங்கினார்களே

தென்திசைமேல்திசை சேனையாவையும்
வென்றனன்விருதுசொல் வீமனார்மகன்

சென்றனன்துவாரகைத் தெருவுலாவினன்
அன்றவர்பவுனிவிட்டவனைநாடினர் உ

வேறு

மேவுநகர்வீதிதனில வீமன்மகன்வந்தான்
தாவுவடகீழ்திசை தளத்தையும்நொருக்கி
காவலெனுமோர்சகுனி கர்னனைவிரட்டி
பூவுலகையாள்விசைய புத்திரனும்வந்தான் ௩

துய்யசிறுபாலகர் த்வாரகையில்வந்தார்
பையரவுயத்திடு பதாகையுடையோனும்
உய்யும்வகையேதென வுயர்ந்திடுதுரோண
னய்யனிருபாதமல ரருச்சினைபுரிந்தான் ௪

ஆதிதனிலேயருளு மய்யன்மொழிகேளாத்
தீதுவினைசெய்த துரியோதனனுரைப்பான்
ஏதுபிழைசெய்யினு மெனக்கதுபொருத்து
வாதுபுரிவோர்களை வதைத்திடுதியென்றான் ௫

அம்மானை.

சட்டமுடன்மேல்திசையில் சயிந்தவனும்சல்லியனும்
திட்டமுள்ளதென்றிசையில் சேனைதளமத்தனையும்
கதையாயுதத்தாலே கடோர்க்கயனுந்தான்விரட்டி
சுதையாய்த்துவாரகையிற் தோன்றினார்காணம்மானை
வடதிசையிற்கர்கனனையும் மற்றுமுள்ளசேனையையும்
நெடியதொருகீழ்திசையில் நீண்டசகுனியையும்
துலையார்தமன்னரையுந் துறத்திமிகவடித்து
சிலையானதைவளைத்து சிலைராகவன்போல
பாரித்துவாரகையில்ப் பட்டணத்தின்வீதியிலே
சூரத்துடன்ராவான் தோன்றினன்காணம்மானை
தம்பிகடோர்க்கஜனும் தமையனெனும்ராவானும்
இன்பமுடனேதா னிருவர்களுஞ்சேர்ந்துகொண்டு
பவுனிவரும்லெக்கணனுர் பாதைவழிதான்மார்த்து
சிவனுந்திரிபுரத்தை செந்தளராற்றீய்த்ததுபோல்
துள்ளியிவர்நடந்து சுருக்காய்வருகையிலே

கள்ளமனதன் கபடனரவக்கொடியோன்
பாலரிருவரையும் பதைபதைத்துத்தான்பார்த்து
காலனிவனெனவே கருத்தில்மிகநினைந்து

## துரியோதனன் மனவருத்தத்தை துரோணரிடஞ்சொல்லுதல்

சொரணைதெரியாமற் துரோணரிடமாயோடி
சரணஞ்சரணமென்று தான்பணிந்துயேதுசொல்வான்
ஏர்க்கையுடனெனக்கு மென்றம்பிநூற்றுவர்க்கும்
நீர்க்கடனும்நீர்க்கடனும் செய்துமுடிப்பதற்கு
பெத்தேன்தவசிருந்து பேரிட்டேன்லெக்கணனை
இத்தேசமெல்லாம் யிவனுளவேணுமென்று
மங்களமுஞ்செய்து மகுடமுடிதான்சூட்டி
இங்கிதமாய்வைப்பதற்கு யெண்ணினேன்சிந்தையிலே
மனதின்படியாக வாளலாமென்றிருந்தேன்
எனதுவிதிப்பயனோ யீஸ்பரனூர்கற்பினையோ
பெண்ணைக்கொடுப்பனென்று பெருமாள்வரவழைத்து
மண்ணையள்ளிக்கொண்டுயெந்தன் வாயிலடித்துவிட்டார்
உள்ளபரிச மொருமிக்கத்தாருமென்று
கொள்ளையடித்துவிட்டார் கோபாலரென்பொருளை
பணத்தைப்பணமெனவே பாருமலெக்கணர்க்கு
குணத்துடனேகலியாணங் கூடுமென்றுதானிருந்தேன்
ஆற்றில்கரைத்தபுளி யாச்சுதுகாணென்பவரும்
வார்த்தைஅபகீர்த்தி வந்ததுகாணென்பவரும்
இலவுதனைக்காக்கும் யின்யகிளிபோலானேன்
வலையிலகப்பட்டதொரு மான்போலுமானேனே
வாரியெடுக்கவந்த மகிமையதுதான்போதும்
போரிலுயிர்பிழைத்துப் போகும்வகைசொல்லுமையா
எண்ணப்படாததொரு எக்ரோணிசேனையெல்லாம்
கண்ணனுடபிரட்டால்க் கரைசேர்ந்துபோனார்கள்
தம்பியரும்நானும் தலைமகனும்லெக்கணனும்
வம்பிலுயிர்தனையே மாண்டிரந்துபோகாமல்
காத்தருளுமென்றுசொல்லிக் காவலனுமன்னேரம்

தோத்திரமுஞ்சொல்லித் தொழுதுரைத்தானம்மானை
பொல்லாதநெஞ்சன் பொருந்தியுரைத்ததெல்லாம்
சொல்லாற்பெரிய துரோணருமேதான்கேட்டு

## துரோணர் துரியனுக்கு புத்திகூறி தைரியஞ்சொல்லுதல்

பின்னல்வரும்பிளைய பிரபலமாயுந்தனுக்கு
சொன்னாற்தெரிந்துகொண்டு சும்மாயிருகாமல்
குரளியுடபேச்சைநம்பி கொற்றவனேநீயுமிப்போ
வெருண்டுமுளித்தாக்கால் விடுவானோவுன்பாட்டன்
அணைகடந்துபோனவெள்ளம் அடைக்கயெவரால்முடியும்
துணைக்கிவந்தபேர்களெல்லாம் சொந்தடிமையாவாரோ
தாலிகட்டவேணுமென்று தான்வந்தனக்காக
கூலிக்கிவந்தவர்கள் கூடநின்றுசாவாரோ
நரிகள்திருவணையை நன்றுயடைத்திடுமோ
அரியோனுடமனதை யாரரியவல்லவர்காண்
சனியன்பிடித்தலைத்தாற் றப்பயெவரால்முடியும்
இனிமேல்மதிமயக்க மேன்காணும்மன்னவனே
நானுமிருக்க நல்லசிறுவிஷ்டுமரும்
தானுமிருக்க தளபதிகள்தாமிருக்க
மயக்கமினிவேண்டாம் மன்னாயினிமேலே
தியக்கமதைவிட்டுவிடு சிறப்புடையலெக்கணர்க்கு
பொருத்தமிட்டசுந்தரியை பூவுலகோர்தானரிய
திருத்தமுடன்கல்யாணஞ் செய்துமுடித்திடலாம்
ஆனாலிவனுக் கயன்விதியுமுண்டானால்
தானேகலியாணந் தான்முடியுமன்னவனே
விசையன்மகனான வீரமிகுமாவானும்
அசையாதகண்டனவனோபலாட்டிகவான்
வீமன்மகனோ வில்லிற்பெரியவன்காண்
ஏமனிவனெனவே எல்லோருமஞ்சிடுவார்
பார்த்தன்மகன்வாள்பீமன் படைக்குஎமன்காணும்
நேர்த்தியுடன்சண்டைசெய்தால் நீரும்பயப்படுவீர்
சண்டைக்கவனுந் தான்வருகவுங்காணோம்

ரெண்டுபேர் தங்களுக்கே ரெம்பவுமேஓடிவிட்டார்
மூவருமாய்வந்தால் முடியுமாசண்டைசெய்ய
கேவலமாயெண்ணினதால் கேடுமக்குவந்ததுகாண்
வந்ததெல்லாங்கண்டறிவோம் மன்னுமயங்காதே
இந்தவிதமாசாரி யெடுத்துரைத்துமப்போது

## இராவான் கடோற்கயனுடன் துரோணர் யுத்தஞ்செய்யுதல்

படையையணிவகுத்துப் பாலர்களைத்தானோக்கி
தடையரவேதேரைத் தானடத்தியப்போது
இராவான்கடோர்க்கயன்மே லீராபிரங்களையை
சூராவளிபோலே தூக்கியவன்மேலெறிந்தான்
எமாஸ்திரத்தை யெடுத்துமிகப்பூசைசெய்து
சாமானியமாகத் தானெடுத்தேவிவிட்டார்
அண்டங்குலுங்க அதிர்ச்சிமிகவுண்டாகி
சண்டனெனும்ராவானைத் தான்தேடிவந்ததுவே
வந்தவொருஅஸ்திரத்தை மாபெலவான்ராவானும்
தந்தைகுருவிட்டதையுந் தடுக்கலாகாதெனவே
என்றுமனதி லெண்ணியிருந்துவிட்டான்
சென்றுவந்தஅஸ்திரமுந் தீபாக்கினியுடனே
விசையன்மகன்வைத்திருந்த மிக்கவொருதெண்டகனை
திசைகளெட்டுந்தாமரிய சிராப்புரிக்கதுவே
அப்போதுராவா னதிகோபமாயெழுந்து
செப்பரியஅஸ்திரத்தை செங்கரத்திலெடுத்து
பூசைபுரிந்து புகளொணுமந்திரத்தை
ஆசையுடன்ஜெபித்தங் கார்ப்பரித்துவிட்டனனே
விட்டவொருஅஸ்திரமும் வேகமுடன்விற்குருவின்
மட்டவிரும்பாத மலர்தொளுதுசென்றதுவே
அன்னதைக்கண்ணுர்க்கண் டரியகடோர்க்கயனும்
என்னவதிசெயமென் றேங்கிமிகச்சினந்து
நாகக்கணையெடுத்து நற்குருவைச்சின்னபின்ன
மாகக்கலக்கி யசுவங்தேரைத்தகர்த்தான்

## இராவூனுடன் வீஷ்டுமர் யுத்தஞ்செய்யுதல்

அந்தச்சமையத்தை யறிந்தந்தவீஷ்டுமரும்
சிந்தைநொந்துராவான்முன் தேரைச்செலுத்திநின்று
அறியாச்சிறுபிள்ளைக ளானதினாலெங்களுடன்
குறியாதுபோரிற் குருகிநீரஞ்சாமல்
வேண்டாநின்னூர்க்கு விரும்பியேசென்றுவிடிற்
தாண்டாபிழைப்பீர் தகாதுசெய்தாயின்னமுங்கேள்
பாரிலொருகருமம் பண்ணினாலுமவர்க்கு
சேரும்பொருளையன்றிச் சேருமோசேராது
ஆகையால்நீங்க ளயராதிவடம்விட்டு
வேகமாய்வந்தவளி விட்டிடுவாய்தேரையென்றான்
அம்மொளியைக்கேட்டவுடன் ஆக்கிரமித்துப்பாட்டாநீ
செம்மொழியாய்செய்யவந்த தென்னவிதுபோரலவோ
வாயறியாய்மன்னர் வலியறியாய்வன்செருவிற்
போயறியாயுன்சொல் புதுமையேயுன்றேரை
திருப்பிநீர்செல்லுமென சீறியேகங்கைமகன்
நெருப்புப்பொறிசிதற நின்விழியைத்தானுருட்டி
வில்லெடுத்துநாணின் விசையிழுத்தங்கம்புகளை
பல்லாயிரந்தொடுத்து பண்பாய்விடுத்தனனே
விட்டவந்தபாணம் விரைவாய்க்கடோர்க்கஜன்மேற்
பட்டுமயங்கிபரதவித்து பின்னெழுந்தே
எதடாசும்மா விருந்தால்மதிமோசம்
வாதுசெய்துதானிவரை வளைக்கவென்றுஓர்கணையை
தொடுத்துவிடுத்தான் துய்யதொருதோள்தனிலே
விடுத்ததொருபாணம் விசையாகப்பட்டிடவே
கங்கைமகனும்மயங்கி காலமெனவேதான்
அங்கவன்றன்றேர்தனிலே யப்போதுசாய்ந்திடவே

## இராவான் கடோர்க்கயனுடன் விதுர்னன் யுத்தஞ்செய்யுதல்

கண்டுவிதுரன் கடுங்கோபமுண்டாகி
துண்டுபண்ணியீதோ தொலைப்பேனெனப்புகன்று
சென்றக்கினிக்கணையைச் சீக்கிறமதாயெடுத்து

ஒன்றுபத்துநூறா யோரயிரந்தொடுத்தான்
சென்றந்தப்பாணஞ் சிரங்கரந்தோளிற்படவே
கன்றிக்கடோர்க்யனும் காஸாஸ்திரமெடுத்து
வில்லிற்றொடுத்து விடுத்தானதுவெகுண்டே
அல்லிற்கரியதொரு அந்தகனைப்போற்சீறி
வந்ததைக்கண்டச்சமுற்று மாவிதுரனோர்கணையாற்
சிந்தவருத்துத் திகைத்துநின்றங்கோர்கணையை
மெல்லவெடுத்து விடுத்தான்கடோர்க்கயன்மேல்
வல்லதொருகணையால் வாட்டிவிட்டானம்மானை
அப்பால்விதுர னதிசயித்து மெய்சோர்ந்து
செப்பரியதேரைத் திருப்பிவந்தாரப்போது

## துரியோதனனுக்கு அவன் தம்பிமார்கள் தைரிஞ்சொல்லுதல்

சூதுசெய்புமன்னனுக்குத் துணைவரெனும்நூற்றுவர்கள்
ஆதரவாய்வந்து அரவக்கொடியோன்றனையும்
தொழுதுநமஸ்கரித்துச் சொல்லுவார்தம்பியர்கள்
பழுதுசெய்யவந்தசிறு பாலர்களைநாங்களுந்தான்
அரைநாழிகைதனிலே அவர்களுயிர்தான்மாய்த்து
குறைதீர்க்குரோமெனவே கூறினன்மன்னனிடம்
தனக்குத்துணைவரெனுந் தம்பியர்கள்சொற்கேட்டு
எனக்குப்பயமினிமே லெவ்வளவுமில்லையென்றான்
ஆனலினிமே லறியுமென்றுதானவர்கள்
சேனுபதியெனவே திரண்டுவெகுசேனையுடன்
அவர்கள்ரதமேறி ஆயுதமும்பூண்டுகொண்டு
எவர்களினிநமக்கு யெதிராறுமில்லையென்று

## இராவான் கடோர்க்கயனிருவர்கள்மேல் திரியோதனன் தம்பிமார்களும் யுத்தம்செய்குதல்

ஓடிவந்தசேனைகளை ஒருதிரளாய்த்தான்சேர்த்து
கூடவந்தபாலர்தன்மேல்க் கொக்கரித்துச்சண்டைசெய்தார்
விருதுபலபேசி வில்வளைத்துச்சண்டைசெய்தார்

பொருதிவரும்நூற்றுவர்மேற் பூசைசெப்பவேணுமென்று
தோராதராவான் துடிசேர்கடோர்க்கசனும்
நேராகவந்துநின்று நிமிஷமதில்வில்வளைத்து
முப்புரத்தையீசன் முன்னெரித்ததுபோற்
செப்பரியவக்கினியின் றிவ்வியாஸ்திரமெடுத்து
தனுவெடுத்துமந்திரத்தைத் தானேயுருச்செபித்து
அனல்போற்றொடுத்துவிட்டா னாக்கிரமித்துராவானும்
வீமனன்றுபெற்றெடுத்த வீரன்கடோர்க்கஜனும்
ஏமதண்டந்தனை யெடுத்தேசுழற்றிவிட்டான்
அப்போதிவர்கள்விடும் ஆயுதங்கள்தன்னாலே
தப்பாதுலகமெலாந் தானேயசைந்திடவே
தாங்கமுடியாமற் றலைமாறினான்சேடன்
ஓங்கும்பெருவழியி லுருக்கினமெல்லாமுதிர
ஆதித்தன்சந்திரனும் அஸ்டதிக்குப்பாலர்களும்
பேதித்தவர்கள்நிலை போந்துதடுமாறிவிட
சத்தமுகில்களெல்லாஞ் சருகாயுலர்ந்துவிட
அஸ்தகிரிமேருகிரி அட்டகிரிதானடுங்க
இந்திரனும்பொன்னகர் விட்டேகிப்பயந்தோட
அந்தகனார்சற்றே அருண்டுபயந்தோடிவர
ஆழிகொதிகிளம்பி அனல்பரந்துநீறாக
ஏழுலகும்வானுலகு மெங்குங்கிடுகிடென
கங்குல்பகல்தோனாத கதிர்மாதவத்தோனும்
தங்கள்தவசைவிட்டுத் தானேமுளித்துநிற்க
ஒன்றுபத்துநூறா யோராயிரங்கோடி
அன்றுபிரளயமா யாயுதங்கள்தானெழும்பி
தீயாயெரித்ததுகாண் திரியோதனன்றளத்தை
பேயாகநூற்றுவர்கள் பிரஞ்சாய்ந்தாரம்மானை

விருத்தம்.

மாற்றலர்களாகிய வலுத்தசிலையாளர்
நூற்றுவர்களோடினர் நொருங்கினர்கள்சேனை
ஆற்றமுடியாதிவ ரமர்த்திறமையம்மா
சாற்றிடுகளப்பெலிமை சாற்றவசமாமோ

அம்மானை.

பார்த்தன்பயின்றெடுத்த பாலகனும்ராவானும்
நீற்றிசைபுங்கீர்த்திகொண்ட நல்லகடோர்க்கசனும்
விட்டதொருபாணமதால் மெலிந்துதுரியனுடன்
தட்டழிந்துவோடிவிட்டார் தம்பியர்கள்நூற்றுவரும்
சேனபதிகள்முதல் சேரவேயோடியபின்
தானபதிசகுனி தான்விளைத்தவல்வினையால்
சாகும்விதிசூழ்ந்துகொண்டு சதுரங்கசேனையெல்லாம்
வேகமுடன்சிருவர் விட்டகணைதன்னாலே
கரிகளொருகோடி கண்டதுண்டமாய்விழுக
பரிகளொருகோடி பதைபதைத்துத்தானுருள
தேர்களொருகோடி சிதறிப்பரந்தோட
பார்க்கவந்தபேர்களெல்லாம் பல்லுடைந்துநிற்பாரும்
கால்களருபட்டுக் களத்திற்கிடப்பாரும்
மேல்களருபட்டு விதனமுற்றுச்சாவாரும்
அய்யோஅபயமென்று அலறிவிழுவாரும்
கையானதுமுரிந்து கவிழ்ந்துகிடப்பாரும்
மூக்கிலொருஅம்புபட்டு முணங்கியழுவாரும்
நாக்குரெண்டுதுண்டாக நடுங்கிவிழுவாரும்
கண்ணிழந்து காதிழந்து கதறிவிழுவாரும்
மண்ணும்விண்ணும்பார்த்து வாய்குளறிநிற்பாரும்
சென்னியருபட்டுச் சிதரிவிழுவாரும்
கன்னமறுபட்டுக் கதறிவிழுவாரும்
தோள்களருபட்டு துடித்துவிழுவாரும்
கால்களருபட்டு கதரிவிழுவாரும்
நெஞ்சொடிந்துவீழ்ந்து நெடுமூச்செரிவாரும்
பஞ்சுபஞ்சாய்த்தேகம் பதறிவிழுவாரும்
கண்டமருபட்டுக் கதறிவிழுவாரும்
மண்டையதுசிதறி வாயுளரிவீழ்வாரும்
ஈரலறுபட்டு யிறந்துகிடப்பாரும்
ஊருங்குடல்சரிந்து உருண்டுவிழுவாரும்
அம்புபட்டவேதனையி லாத்தாமல்மெய்சோர்ந்து
தம்பியெங்கேயென்று தயங்கிதிரிவாரும்

புண்ணனகாயம் பொருக்கமுடியாமல்
அண்ணனெங்கேயென்று அலரித்திரிவாரும்
கொள்ளிக்குறிய குழந்தைதனைக்காணமல்
பிள்ளைதனைத்தேடிப் பிரமைகொண்டுநிற்பாரும்
மங்கையர்மேலாசைவைத்து மயங்கிவிழுவாரும்
தங்களுடதாயாரை தானினைந்துவீழ்வாரும்
தேடுந்திரவியத்திற் சிந்தைகொண்டுவீழ்வாரும்
வீடுநமக்கில்லையென்று வீழ்ந்துமடிவாரும்
பெண்டிரும்நானும் பிரியமுடன்தூங்கையிலே
கண்டேன்கனவெனவே கதரிவிழுவாரும்
வாகாய்ப்படையெடுத்து வருகுமந்தப்பாதையிலே
ஆகாச்சகுனமெனக் காச்சுதென்றுவீழ்வாரும்
அகிலமதையாளு மரவுயர்த்தோன்சேனையெல்லாம்
சகுனிசகுனியென்று தான்புலம்பிவீழ்வாரும்
சுட்டியிலக்கணர்க்குச் சோபனமுஞ்செய்யயிலே
அட்டமத்திலேசனிய ஞச்சுதென்றுவீழ்வாரும்
தோசியிலக்கணர்க்கு சோபனமுஞ்செய்யயிலே
ராசியில்லையென்றுசொல்லி நடுங்கிவிழுவாரும்
அடுத்துக்குடிகெடுக்கு மாதிநாருயணரும்
தொடுத்தவினையெனவே சொல்லிவிழுவாரும்
பெரியோருரைத்தமொழி பேணியதுகேளாமல்
திரியோதனுடைய தீங்கென்றுவீழ்வாரும்
பாலன்கடோர்க்கயனும் பாரமுள்ளராவானும்
காலன்நமக்கெனவே கதரிவிழுவாரும்
கௌரவர்களெல்லோரும் காடுரைந்துபோவார்கள்
இவர்கள்முடிபெருவா ரென்றுசொல்லிவீல்வாரும்
இந்தவிதமாக வெக்குரோணிசேனைதளம்
அந்தரணக்களத்தி லவர்களுயிர்தானிழந்து
மலைபோற்பெருஞ்சேனை மடிந்துபிணக்காடாய்
அலைபோல்க்குதித்து வெள்ளமாரதுபோற்றோடை
உதிரப்புனல்பெருகி யோடுஞ்சமுத்திரத்தில்
விதமுடையதேர்கள் மிதந்துகவிந்திடவும்
பாம்பதுபோலானைப் பருங்கைகள்தான்மிதக்க

மீன்போலஅஸ்திரங்கள் மிதந்து அதிலேவோடிவர
கூருமொருதாமரையின் கொடிபோற்குடல்மிதக்க
ஆறுதனில்மண்டைகளு மாமையதுபோல்மிதக்க
இரத்தநதிபெருகி யேராளமாயோட
குரத்தலைபேய்களெலாங் கூத்தாடிக்கொண்டுநிற்க
பூதப்பிசாசுகளும் புகழ்ந்துநின்றுகூத்தாட
காதவழியிருந்து கருநாய்களோடிவர
வாச்சுதென்றுதான்கழுகு வட்டமிட்டுத்தான்பரக்க
தாச்சியில்லையென்றுநரி தான்கூடிவூளையிட
ஆனைப்பிணங்கள்தின்று ஆடுஞ்சிலபேய்கள்
ஊனைக்குடிப்பேனென்று வோடுஞ்சிலபேய்கள்
எனக்குத்தலையெனவே யெடுக்குஞ்சிலபேய்கள்
உனக்குக்குடலெனவே உரைக்குஞ்சிலபேய்கள்
கால்கள்தனையெடுத்து களிக்குஞ்சிலபேய்கள்
தோல்கள்தனையெடுத்துச் சுவைக்குஞ்சிலபேய்கள்
குருதிப்புனல்தனிலே குளிக்குஞ்சிலபேய்கள்
கருதிமணமருந்திக் களிக்குஞ்சிலபேய்கள்
நல்லவிருந்தாக நமக்களித்தாரென்றுசொல்லி
வல்லமையாய்ப்பாலர்களை வாழ்த்துஞ்சிலபேய்கள்
நன்ருய்பெருங்குருதி நல்லதசையுள்ளதெல்லாம்
தின்றேப்பமிட்டுச் சிரிக்குஞ்சிலபேய்கள்
போர்க்களத்திலேபிணங்கள் பொருப்பென்றெனக்குறிய
தீர்க்கமுள்ளயானைபரி செத்துக்கிடப்பதுவும்
ஊழிப்பிரளயத்தி லுகாந்தமுடிந்ததுபோல்
ஆழியதுபொங்கியுமே வகிலமழிந்தாப்போற்
கரியோனுடமருகன் கடோர்க்கயனும்ராவானும்
திரியோதனன்படையைச் சேர்த்தேதவிரட்டிவர

விருத்தம்.

தீதுமணத்துடையாளரவக் கொடியோன்தளமத்தனையும்
மோதியமற்றொருநாளிகையிற் சிறுபாலகர்மிகுத்துவர
வேதனையுற்றவர்போல்மனம் வெட்கிமுன்வேதனையீன்றருளும்
மாதவன்முற்றுயிலாளியினிற் குடிவாழமதித்தனனே

## கிருஷ்ணன் பாற்கடலில் பள்ளிகொள்ளுதல்

திருமாலிதுவரிக்கு திரியோதன்றானும்
வருவானெனவே மதித்துமனந்தனிலே
நாமிங்கேதாமிருந்தால் நல்லதொருராவானும்
தாமிங்கேவந்து தான்விரட்டுவானெனவே
என்றுநினைந்து இயல்பாகவேயெழுந்து
அன்றுதம்பிமார்களை வருக்குஞ்சொல்லிவிட்டு
பாரளந்தமாயன் பரசுராமன்றனக்கும்
சீருடையலெட்சுமிக்குஞ் சேதிதனைசொல்லிவிட்டு
துவராபுரிகடந்து சூழும்வனங்கள்தனை
தவராதுதான்கடந்து சயனிக்கபார்க்கடலில்
காலாலுலகளந்த காயாம்புமேனியனார்
பாலானபாற்கடலிற் பள்ளிகொண்டாரம்மானை

## துரியோதனன் முதலானவர்களும் சேனைசயினியங்க ளெல்லாமிழந்து சித்திரமணிச்சாவடியில் வந்து ஒளியுதல்

### விருத்தம்

மாதவனுங்கடலாழியிலேபுக வாள்திரியோதனர்கள்
கால்கள்பிணைந்தவரோடினர்சோபுன காரியவேதனையாய்
சோலைமடங்களிலேயிவர்கூடிய சோரர்கள்போலொழிய
பாலனெனும்ஜெயபீமனெதிர்த்திட பாதையில்வந்தனரோ

### அம்மானை.

சாற்றுமிருபாலருடன் சமர்புரியமாட்டாமல்
நூற்றுவர்களோடி நுளைந்தார்மடந்தனிலே
ஆடெடுத்தகள்ளரைப்போ லரவக்கொடியோனும்
ஈடுநமக்கில்லையென்ற இயல்சகுனிகர்னனுடன்
மையல்வெறிபிடித்த மாப்பிளையாம்லெக்கணனும்
நொய்யமனவேதனையால் நோகுஞ்சயிந்தவனும்
என்னசெய்வோமென்று யிவர்களொருசேகரமாய்
கன்னமிடுஞ்சோரரைப்போற் கைகால்தடுமாறி
கொம்பிளந்தமந்தியைப்போற் கூடியொருமுகமாய்

வெம்பிமனதுநொந்து வெத்திசொன்னவாயிழந்து
சித்ரமணிச்சாவடிக்குள் திரளாகவே நுழைந்து
த்தொருவர்காணும லொழித்தார்களம்மானை

## போர்க்கஞ்சியோடின திரியோதனனதிகளை இராவான்கடோர்க்கயன் தேடித்திரியுதல்

இவர்களிங்கேதானொளிய யிராவான்கடோர்க்கயனும்
தவரியிருந்தவரைத் தாருமாராயடித்து
துரத்திவிட்டுபின்பு துவாரகைக்குள்ளேநுழைந்து
திரமானநூற்றுவரைத் தேடியங்குதான்திரிந்தார்
இந்தவகைதுரோண ரியல்பாகவேயறிந்து
சிந்தைமயங்கித் திருமாலேதஞ்சமென்று
ஓடிவொளியவென்று வுடனேவிதுரனையும்
தேடிப்பிடித்து சிறுவிஷ்டுமருடனே
மூவருமாய்சேர்ந்து முன்புஅல்திருபுரிக்கி
போவமெனவே புந்திதனிலேநினைந்து
சிங்காரதோப்புவழி சேர்ந்துவந்தாரம்மானை

## வாள்வீமன் அண்ணர்களைத் தேடிவருகுதல்

மலர்மடந்தைவிட்டினிலே வந்திருக்கும்வாள்பீமன்
கலகமிகுந்தவகை காரியமெலாங்கேட்டு
மனதுபதரி மலர்மடந்தைவீடுவிட்டு
தன்னுடையஅண்ணர்களைத் தான்தேடியப்போது
என்னதுமெண்ணி யேங்கிமுகம்வாடி
தன்னுலமுழுது தவித்துமேவாள்பீமன்
போர்முகத்திற்சென்ற புண்ணியராமண்ணருக்கு
தேர்பரியுமில்லை சேர்ந்தோர்துணையுமில்லை
தமையனார்தங்களுக்குத் தானுதவிசெய்யவென்று
சமர்புரியும்பாளையதனை தான்போயறியவென்று
வந்தான்வெகுவிரைவாய் மணிச்சாவடிவழியாய்
அந்தமடந்தனிலே அழகுமிகுசாவடிக்குள்
ஆந்தைமுளிப்பதுபோ லரவக்கொடியோனும்

சேர்ந்ததளபதிகள் திரமானநூற்றுவரும்
வெக்கித்தலைகவிழ்ந்து மெள்ளமெள்ளத்தானவர்கள்
பக்கமறியாமற் பதுங்கியிருப்பதுவை

## வாள்வீமன் திரியோதனுதியர்களை சித்திரமணிச் சாவடிக்குள் அடைத்துவைக்குதல்

### விருத்தம்

இட்டுண்டுபுகழ்மேவிய யிடைமாதர்கள்மனையில்
தொட்டுண்டுதிருமாலவர் தொழில்சோதனையதனுல்
கட்டுண்டுதுரியோதனன் றம்பியுடனடைதான்
பட்டுண்டனரபீமன்கையில் பாராயிதுமெய்யே

### அம்மானை

கண்டுமிகவாள்பீமன் கனகோபமுண்டாகி
திண்டுமுண்டாய்வைது சித்திரமணிச்சாவடியில்
உள்ளேயிருந்தபடி புட்கதவைத்தான்மூடி
சள்ளையொழிந்ததென்று தாப்பாலுந்தான்போட்டு
பூட்டிவிட்டுத்தானும் போனுன்விசையன்மகன்
தாட்டிகமாயுள்ளிருந்த தளபதிகளெல்லோரும்
கோணிமனதுகொதிப் புமிகவுண்டாகி
நாணித்தலைகவிழ்ந்து நாமென்னசெய்வமென்று
நிலைபிரிந்துபோனவகை நிந்தனையாமென்றுசொல்லி
தலைவின்விதியெனவே தானிருந்தார்நூற்றுவர்கள்

## துரோணுச்சாரிமுதலானோர்கள் துரியோதனனைத் தேடிவருகையில் அபிமனன் கண்டுகொள்ளுதல்

ஆசாரியாந்துரோண ரசுவத்தாமாவுடனே
தேசாதிபன்றனையுந் தேடியேகாணவென்று
சாத்துகின்றசித்திரமணிச் சாவடியைத்தானேக்கி
பார்த்துவருகையிலே பாலனெனுபம்வாள்வீமன்
கண்டுதுரோணருட கமலபதமேதுணையாய்
தெண்டனிட்டுபோற்றிச் செப்புவானம்மானை

## விருத்தம்

தனுவித்தையிலருளாகிய தாளேகுருசரணம்
தாள்வாகியவடியார்களை யாள்வாய்குருசரணம்
வினைபெற்றிடுசிறியேனொரு பொருளோகுருசரணம்
மேலாகியகிருபாநிதி வாள்வேகுருசரணம்
நினைவிற்றுயில்மரவேனுனை நெடுநாளடியேனும்
நேருகியசிவனிவனென்றே யருள்புரிவாய்
தினைபத்தனையரமாகினு மரியார்கவுரவரைத்
தீதாகியகரபந்தனஞ் செய்தேனுனதருளே

## அம்மானை

கொடியவினைமாத்துங் குருவேசரணமப்பா
அடியார்க்கெளியதொரு ஆதிசரணமையா
கொள்ளாதகுற்றங் குழந்தையர்கள்செய்தாலும்
தள்ளாமற்காக்கவந்த சாமிசரணமையா
படைப்பெருக்கமில்லாத பஞ்சவர்களென்றறிந்து
அடைக்கலத்தைக்காக்கவந்த அரனேசரணமையா
ஏனைமதிஐவர்களை இரக்ஷிக்கவேணுமென்று
கோளையகற்றிவைக்குங் குருவேசரணமையா
மதித்துனதுபாதம் வணங்குஞ்சிறியோர்கள்
எதுத்துச்சமர்புரிந்தா ரென்றுமனதெண்ணமற்
காத்தருளவேணுமுந்தன் கால்பிடிக்குஞ்சேஷர்களை
பாத்துமனதிரங்கிப் பச்சம்வைக்கவேணுமையா
சமரின்முகமறியாச் சண்டாளர்நூற்றுவர்கள்
மமதைபெரிதேதனவே வளக்களிவுசெய்தார்கள்
மாயன்மகளாரே என்மாமன்மகளாயிருக்க
ஞாயமதுதவிள்த்து நடுக்கேடுசெய்தார்கள்
சலுகைவளக்கரிந்து தானுரையாரென்பதுபோல்
வலியயிந்தச்சாவடியில் வந்திருந்தார்நூற்றுவர்கள்
உள்ளேயவர்களையும் ஒருமிக்கவேயிருத்தி
தள்ளிக்கதவடைத்து தாப்பாலும்போட்டுவைத்தேன்
இனிமேல்நடக்கும்வகை யெளியேனுக்கேயுரைத்தால்
கனிவாயுமதுடைய கட்டளையைத்தள்ளாமல

குறித்துநடக்குகிறேன் குருவேசரணமென்று
தெரிந்து அபீமனுமே செபபினனம்மானை
அன்பாய்வணங்கி யபீமனுரைத்ததெல்லாம்
தென்பாய்த்துரோணர் சிந்தைமகிழ்ந்தேகேட்டு

## அடைபட்டிருக்குந் துரியோதனுதிகளை துரோணர்பார்த்து சொல்லுதல்

சன்னல்வழிபார்த்துத் தானுமதிமயங்கி
மன்னவர்கள் நூற்றுவரும் மயங்கியேயிற்பதுவும்
கண்டுமனதுநொந்து கர்னன்சகுனியெனும்
குண்டனிகளைப்பார்த்துக் கூறுவாராசாரி
பண்டுநான்சொன்னசொல்லை பழுதுரைத்துவேந்தனையும்
கொண்டுவந்துயிந்தக் கோலமதுசெய்துவைத்தீர்
நற்புத்திகேளாத நாகக்கொடியோனும்
நூற்புத்திகேட்டுமல்லோ துன்பத்திற்குள்ளானுன்
பாவிகளேநீங்களந்தப் பாலருடனேபொருதிச்
சேவகமுஞ்செய்தீரோ திராணிபடைத்தீரோ
காரியமும்பார்த்தீரோ கலியாணஞ்செய்தீரோ
பாரினுனைவல்லவனைப் பார்த்திபனுமேபகர்ந்தான்
ஆறுலுங்கூடாதே அரவான்கடோர்க்கசனை
சீறுய்ச்செயிக்கச் சிவனுலுங்கூடாதே
பஞ்சையெனவுரைத்த பாவிகளேயிப்போது
வெஞ்சமரிலோடிவந்தால் விடுவானோவாள்வீமன்
கட்டடத்திலேயடைத்து கைவாள்தனைத்தீட்டி
வெட்டிடவுஞ்செய்வான் விவேகமில்லாமன்னவரே
என்றுயிவருரைக்க யிதுதானிசமெனவே
ஒன்றுமுறையாம லூமைபோலேயிருந்தார்
அந்தத்தருவாயி லாசாரிவீஷ்டுமரும்
இந்தச்சிறுவனுட னெவர்வந்தெதிர்த்தாலும்
வெல்வதரிதாகும் வேந்தர்களைக்கைவாளால்
கொல்லுவானென்றுங் குறித்தேயிருவர்களும்
மதிபோல்முகமிலங்கும் வாள்வீமனைநோக்கி
துதிசேர்புகழுடைய துரோணருமங்கேதுரைப்பார்

## துரோணரபீமனுக்குப் புத்திகூறி திரியோதன திகளைத் திரந்துவிடும்படி சொல்லுதல்

திரியோதனன்முதலோர் சேனுபதிதனையும்
பெரியதகப்பனென்று பிரிதிகளைச்செய்யாமல்
ஓடிவந்தபேர்களுக்கு வுபசாரஞ்செய்யாமல்
தேடிபுனைவந்தவர்க்கு தீங்குகளைச்செய்வர்களோ
செப்பரியசாவடியில் சேர்த்தேயடைத்துவைக்க
இப்படியும்புத்தியுமக் கேதுகாண் தம்பியரே
சட்டமுடன் நூற்றுவர்கள் தங்களையுமிப்போது
திட்டமுடனேகதவைத் திரந்துவிடுமென்றுரைத்தார்
சொன்னாதுரோணருமே சொற்கேட்டபீமனுந்தான்
அன்னுளிலோடி யபீமனுமேநல்லதென்று
வணங்காமுடியனையும் மகிமையுள்ளகர்னனையும்
இணங்காச்சகுனியையும் இலக்கணகுமாரனையும்
அரவக்கொடியுடையோ னவன்தம்பிமார்களையும்
விரைவில்க்கதவை வேகமுடனே திரந்து
வலுப்பிலனுமற்றவராய் மாறுநிராயுதராய்
உலுப்பையெடுக்கவந்த வூளியத்துஆள்களைப்போல்
வீட்டறைக்குள்ளேயிருந்த வில்வேந்தர் நூற்றுவரை
கூட்டிவந்துவிட்டான் குருவானவரிடத்தில்
வண்டனெனுங்கபட மனதுடையமன்னனையும்
கண்டுமனதுநொந்து கருமவிதியோவெனவே
சீரிட்டுயர்புகழான் திரியோதனன்முகத்தை
ஏரிட்டுப்பார்க்கமன தெள்ளளவுமில்லாமல்
தேருதலாய்த்துரோணர் திரியோதனன்றனையும்
வாருமிருமென்றுசொல்லி மகிழ்ந்தனர்காணம்மானை

### விருத்தம்.

வாரும்வாருமென்றுரைத்தனர் துரோணருமனதாய்க்
கூருவாரதுநீள்செவியுணர்ந் திடுங்கொடியோன்
தாரிலோர்தரமரிந்து தன்னிரமலந்தணிந்து
ஆரும்நீரெனஉளமும் வெந்திருந்தனரசங்கே

விருத்தம்.

திடங்கொள்மந்திரத்தியான முன்னிலைபினில்மனது
ஒடுங்குவாரெனவிருந் திடும்மகிபனையுவந்து
அடங்கவேவினைபாவைபு மகற்றுதற்கரிவாய்
துடங்குமோர்நலமானவ்வ துரோணநற்தொகுப்பாற்

துரியோதனனிடத்தில் துரோனர் வாள்பீனுக்கு கலியாணஞ்செய்து வைக்கும்படி சொல்லுதல்

அம்மானை

நொந்துமனதுடைந்து நூற்றுவர்களெல்லோரும்
வந்துமிருந்தார்களங்கே வணங்காமுடியோனும்
வாருமென்றுசொல்லி மகிழ்வுடனேயாசாரி
தேரும்படியவர்க்குச் செய்தியெல்லாந்தானுரைத்து
அரியாச்சிறுகுழந்தை யபீமன்றான்செய்ததெல்லாம்
திரியோதனமகீபா சிந்தைவைக்கவேண்டாங்காண்
மன்னரெனும்பஞ்சவர்கள் வனவாசம்போனதினால்
தன்னுடையபிள்ளையெனத் தானினைந்துயிப்போது
குழந்தையபீமனுக்குக் கூரியதோர்சுந்தரியை
வளந்தமதியெனவே மணமாலைதான்சூட்டி
உரவுதவராம லுலகமெல்லாங்கொண்டாட
மரவுபெரிதெனவே வாழ்ந்திருக்கவும்முடைய
சித்தமகிழ்ந்துமிகச் செய்வீர்கலியாணம்
உத்தகுலங்களிலே வுன்மகனும்லெக்கணர்க்கு
செல்லக்கலியாணமது செய்திடலாம்பின்னாலே
சொல்லும்வசனமெல்லாம் சொன்னார்துரோணருமே
மறையோனுரைத்தமொழி வணங்காமுடியோனும்
கரையாமலேகரைந்து காதுதனிலேகேட்டு
நாமென்றுபேசுதற்கு நாவெழும்பமாட்டாமல்
ஆமென்றுசொல்லி யவனுரைப்பானம்மானை

விருத்தம்

முன்னளொருகாரிய முந்தவதற்க்
கென்னலதுவந்தினி யெய்தினதா
அன்னளபீமற்க் கரியோன்மகளைச்
சொன்னனிசமென் றதுசோபனமே

ஷை விருத்தம்.

அரியோனபீமற் கதசோபணமும்
குரியோமெனவுங்குளிரப் பெருமாள்
விரிவாகியசொல்லினவும் படியே
தெரியாவகைசெய்து தெளிந்தனமெ

## ஆதியில்கிருஷ்ணன் சொன்னசேதிகளை துரியோதனன் துரோணரிடம் சொல்லுதல்

அம்மானை

செய்யகுருவிடத்திற் றிரியோதனனுரைப்பான்
ஐயனேகேட்டருளும் ஆயனுடமாய்கைதனை
நந்தன்மகளார்க்கும் நல்விஜயன்புத்திரர்க்கும்
அந்தநாட்சொன்னபடி யாகுமென்று நானிருந்தேன்
ஊரைக்குடிகெடுக்க வுடலெடுத்தமாயவனும்
மாறுயஞ்சொல்லிவிட்ட வகையதனைக்கேட்டருளும்
வனம்போனபஞ்சவர்கள் மாண்டுவிட்டாரென்றுசொல்லி
அனல்போல்சுபத்திரையா ளபீமனையுந்தான்கூட்டி
வேறேநினைவுகொண்டு விதற்பகோன்றன்னிடத்தில்
பேறுயபீமனையும் பிடித்தவன்றன்கைக்கொடுத்து
என்மகனையுண்டுபண்ணி யிவ்வுலகெலாமரிய
உன்மகளைமாலையிட்டு உருப்படுத்துமென்றுசொல்லி
தேனுள்சுபத்திரையுஞ் சேர்ந்தாளவடமென்றும்
தானுமவர்களுடன் சம்மந்தமில்லையென்றும்
மண்ணுக்குரியஐவர் மாண்டிறந்துபோனதினால்
பெண்ணுக்குமாப்பிளை யுன்பிள்ளைசுகியமென்றும்
அன்னியத்திற்சுந்தரியை யான்கொடுப்பதில்லையென்றும்
தன்மையாய்லெக்கணர்க்குத் தானேகொடுப்பனென்றும்
இந்தவசனமெலா மெழுதியேமாயவனும்
அந்தரங்கமாகயெனக் காளனுப்பிவைத்ததினால்
தம்பியபீமனுக்குச் சம்மதியில்லாதபெண்ணை
இன்பமுள்ளலெக்கணர்க்கு யிசைந்துதிருக்கல்யாணம்
கூட்டிமுடித்ததினாற் குற்றமில்லையென்றுசொல்லி
நாட்டிலிந்தயோசனையை நாமுடிந்ததல்லாது

## துரியோதனன் துரோணரிடம் அபீமனனுக்கு கல்யாணஞ் செய்துவைப்பதாகசொல்லுதல்

அருமையபீமனெனக் கன்னியமோவாசாரி
உருமையுள்ளபாத்தியங்க ளுமக்குத்தெரியாதோ
மாயன்மகளாரை மாலையிடவேணுமென்று
சேயனிவன்வந்துசொன்னாற் செய்திடவுமாட்டேனே
தம்பிவிஜயன்மகன் றன்வேறுநாள்வேறே
வம்புசெய்தாரென்றுசொல்லி மனதில்நினைப்பேனே
புவனமதிலெக்கணனும் பொருந்தியதோர்பிள்ளையல்லோ
இவனெனக்குசொந்தமக னில்லையோவாசாரி
வல்லமையாய்வாள்பீமன் வந்தானதுபோதும்
நல்லதொருகல்யாணம் நான்முடித்துவைக்குகிறேன்
பகைகளினிவேண்டாம் பாலனபீமனுக்கு
வகைதெரியச்சொல்லுமென்று வணங்காமுடியோனும்
ஏட்டாதகாரியத்துக் கென்செய்வோமென்றுசொல்லி
கொட்டாவிகொண்டுமெள்ளக் கூறினனம்மானை

### விருத்தம்

நல்லகாலமுநமக்கிலையென்றரவுயர்த்தோன்
சொல்லுவாளபீமனுக்கொருசுகம்புரிவதுபோல்
வல்லனாகியதுரோணர்தன்றிருவுளமகிழ்ந்து
சொல்லும்வார்த்தையைச் சிருவனுங்கேட்டனன்சுகமாய்

### அம்மானை.

அரவுயர்த்தோன்சொன்னதெல்லாம் மாசாரிதான்கேட்டு
திரமாய்மனமகிழ்ந்து செப்புவாரம்மானை
தென்பானபுத்தியுள்ள திரியோதனவரசே
உன்போலபீமனுக்கு வுண்டோவுதவியிங்கே
பச்சைக்குழந்தையிங்கே பாலனபீமனுக்கே
கொச்சையிடக்குலத்துக் கோபாலன்றன்மகளை
திருப்பூட்டுவேனெனவும் செப்பினீர்மன்னவனே
உருப்போட்டுனையளித்த வூதாரிமாயனுக்கு
சம்மதித்தபோதலவோ தான்முடியுங்கல்யாணம்

உம்முடைய தந்திரத்தா லுண்டுபண்ணவேணுமல்லால்
மற்றவர்கள்சொன்னதினல் மாயவனுஞ்சம்மதியான்
கொற்றவனேயென்று கூறினர்துரோணருமே
ஆசாரிகூறினதற் கரவுயர்த்தோனேதுசொல்வான்
பேசாதிருங்களிப்போ பெருமாளுடமகளை
எந்தவிதமானு லுயமியல்சேரபீமனுக்கு
தந்திரமாய்க்கல்யாணம் தான்முடித்துவைக்குகிறேன்
வாருந்துவாரகைக்கு மாயவனூர் தன்னிடத்தில்
சேரும்படியெனவே திரியோதனனுரைத்தான்
வஞ்சனுரைத்ததெல்லாம் மாமறையோன் தான்கேட்டு
நெஞ்சிலடக்கி நெடியதொருஆசாரி
அருகிலிருந்ததொரு வபீமன்றனைப்பார்த்து
பெரியதகப்பனுட பேச்சையெல்லாங்கண்டீரோ

## துரியோதனனை அபீமன்வணங்கும்படி துரோணர் புத்திகூறுதல்

ஆலோசனையினிமே லணுவளவும்வேண்டாங்காண்
மேலாகியதகப்பன் விந்தைமலர்ப்பாதமதை
பேணிநமஸ்கரித்து பெரியபிதாசொன்னபடி
காணிபிசகாமற் காரியத்தைப்பாருமென்றார்
ஆதிகுருமொழியை யபீமனுமேதான்கேட்டு
நீதியிதுவாகும் நேசமுள்ளஆசாரி
பாவிமுன்னொளென்தாயைப் பற்றித்துகிலுரிந்தும்
ஆவிபதைபதைக்க அனியாயவார்த்தைசொல்லி
பஞ்சவரையும்வனத்திற் பரக்கவிட்டபாதகனை
நெஞ்சைப்பிளக்காதிருந்தேன் நேயமுள்ளயென்தகப்பன்
வந்தபின்புசெய்வமென மகிழ்ந்திருந்தேன்நீரும்வந்தீர்
சொந்தக்குருவெனவுன் சொற்கேட்டுநானிருந்தேன்
நெஞ்சுமஞ்சாமலந்த நெட்டூரனைப்பணிய
வஞ்சமன்றிச்சொன்னதென்ன மாமறைநூல்வல்லவரோ
பெரியதகப்பனெனப் பேசுவரோவாசாரி
சிறியபயலிவனுற் செய்வதென்னயொன்றுமில்லை
என்தமையர்வந்து யிசைக்குமொழிதப்பாது

உன்வார்த்தையுந்தவருதோநான்செய்யவென்றும்
ஆனலுமென்பாட்டனரி பீஷ்டுமர்தனையும்
மேனளென்ருய்க்கி விளங்கும்படிநீதி
கூறும்விகர்னனையுங் கொண்டாடிநான்பணிவேன்
சிறுயர்ந்தோங்கும்விதுரன் திருவடியுநான்பணிவேன்
அல்லாதுமற்றிவர்க ளடிபணியேனென்றுரைத்த
வல்லாளனைப்பார்த்து வகுத்துவார்பீஷ்மருமே
சகலகலையுணர்ந்த தனஞ்சயன்றன்புத்திரனே
இகலேபெரிதெனவு மெண்ணர்கள்நல்லோர்கள்
சகுனிப்பயலாலுன்றந் தையர்க்கும்நூற்றுவர்க்கும்
விகுவுவந்ததல்லாது மிகக்கர்னன்சொற்கேட்டு
சதிருடையமன்னவனுந் தவ்விஞன்மண்ணும்விண்ணும்
இதுவரிந்துநாங்க ளெல்லோருந்தான்சேர்ந்து
ஏசாதுமேசிவிட்டோம் யினிநீயுங்கோபமதாய்
பேசாதுநீயுமுந்தன் பெரியபிதாவைப்பணிந்து
காரியத்தைப்பாருமெனக் கழரவபீமன்கேட்டு
பாரிற்பெரியோர்கள் பகருமொழிமருத்தல்
நன்றலவென்றேவேதம் நவில்வதால்நாமும்வஞ்சன்
றன்னைப்பணிந்திடவுந் தான்வேண்டுமென்றெழுந்து.
தென்னவர்க்குத்தென்னன் திரியோதனன்றனையும்
கன்னன்விதுரன் காங்கையர்க்கும்வீஷ்டுமர்க்கும்
மரியாதையாகவுமே வணஙகிநமஸ்கரித்து
திரியோதனனிடத்திற் செப்புவானம்மானை

அம்மானை.

செய்யாதகுற்றம் செய்தாலும்பிள்ளையின்மேல்
ஐயாகிருபைவைத்து ஆதரிக்கவேணுமல்லால்
பின்னேயொருகருமம் பெற்ருர்நினைப்பாரோ
உன்னுதவியெங்களுக்கு யுண்டென்றிருக்கிரோம்
காத்தருளுமென்றுசொல்லிக் கட்டழகன்வால்வீமன்
தோத்திரமுஞ்சொல்லித் தொழுதான்காணம்மானை
பணிந்தசிறுவனையும் பார்த்துஅரவக்கொடியோன்
தணிந்தசிறுவனுக்குத் தானேதுரைக்கலுற்றான்

## துரியோதனன் அபிமனனுக்கு கலியாணஞ்செய்து வைப்பேனென்று புத்திகூறுதல்

ஒன்றுக்குமென்மகனே யொசனையும்பண்ணாதே
இன்றைக்கேகல்யாண மியல்பாய்முடித்துவைப்பேன்
வாஞ்சையுடனென்பிறகே வாருமென்றுமன்னவனும்
காஞ்சமனதுடைய கபடனெடுத்துரைப்பான்
சொன்னமொழிப்படியே துரோணர்முதலெல்லோரும்
மன்னவனோர்தன்பிறகே வந்தார்துவாரகையில்
ஆதிநாருயணர்தன் னரண்மனையின்வாசலிலே
தீதுகுடிகொண்ட திரியோதனராசன்
வெத்திகொண்டுவந்தவர்போல் வீற்றிருந்தாரம்மானை
சுத்தியவனருகிற் றுரோணருமேதானிருக்க
அங்கரர்கோன்சல்லியனு மசுவத்தாமாவிருக்க
சங்கையுள்ளகாங்கையரும் சயிந்தவனுமேயிருக்க
செவ்வையுள்ளமன்னனுட சேனைதளமத்தனையும்
இவ்வேசமாக்கவந்த வியல்சகுனிதானிருக்க
தப்பிவுயிர்பிழைத்த தளங்களுமேதானிருக்க
இப்படியோகாலமென்று யிலக்கணனும்வீற்றிருக்க
நொந்துமனமுருகி நூற்றுவர்கள்சூழ்ந்திருக்க
அந்தஅளப்பரிந்து வபிமனுமேவீற்றிருக்க
கொலுப்பெருக்கிவீற்றிருந்தான் கொடியதிரியோதனனும்
வலுப்பெரியராவானும் மன்னன்கடோர்க்கஜனும்

## துரியோதனன் முதலானவர்களும் அபிமனனும் துவாரகையிலிருக்கும்போது இராவான் கடோர்க்கசனுந்தேடி வருகுதல்

திரியோதனனைத்தேடி யெங்குங்காணுமல்
அரியோனரண்மனையை யவர்களங்குதேடிவர
வள்ளல்திரியோதனனு மிருக்குமால்பார்த்து
கள்ளநரிசந்தைகொள்ள கடைவழியேவந்ததுபோல்
ஏதுகானென்றுசொல்லி யெண்ணியேராவானும்
ஆதரவுமாரென்வே யடுத்துவந்துபார்ப்பதுவில்

அரவற்கொடியோனிடத்தி லபீமனிருப்பதுவும்
குருகுலத்துமன்னரெல்லாங் கூடியிருப்பதுவும்
கண்டபொழுதினிலே கடோர்க்கசனும்ராவானும்
வண்டனிவனிந்த வணங்காமுடியோனும்
கற்பனையாய்த்தம்பியரைக் கைப்பிடியாகப்பிடித்து
சற்பனைகள்செய்வதற்கோ தானினைந்தாரென்றுசொல்லி
பதரிமனங்கலங்கிப் பாரமுள்ளவில்வளைத்து
எதிரிதிரியோதனன்மே லேகிவரும்வேளையிலே
தாங்கமுடியாதிவரைத் தானரிந்துநூற்றுவரும்
வேங்கைதனைக்கண்டதொரு வெள்ளாடுபோல்நடுங்கி
அபயமபயமென்று பபீமனிடந்தனிலே
சபையிலிருந்தமன்னன் தான்புலம்பிநின்றிடவே
அஞ்சாதிருங்களென்று வபீமனருகிருத்தி
வஞ்சகனையாதரவாய் மனதுதிடப்படுத்தி
மார்க்கமுடனிருந்த வாள்விசையன்புத்திரனும்
காருக்குகின்றராவான் கடோர்க்கசன்றன்பாதமதில்

## இராவான் கடோர்க்கயனை வாள்பீமன்வணங்கி நடந்தசங்கதிகளை சொல்லுதல்

வந்துநமஸ்கரித்து வணங்கியுபசாரமிட்டு
அந்தரங்கமெல்லா மவர்களுக்குத்தானுரைத்து
ஆதிமுதலாக அந்தமவரைதானடந்த
சேதிமுழுவதையுந் தினையளவுகுன்றுது
நடந்தவயனமெல்லாம் நல்லதொருவாள்வீமன்
திடமாகஅண்ணருக்கு செப்பியபினின்றுதினம்
சுகசோபனமுடிக்கத் துரோணருடசொற்படிக்கு
சகலவயணமெல்லாம் தமையரிடமாயுரைத்து
குருவினனுபூதி கொள்ளும்படியதுவாய்
பெரியமனசுபண்ணி பேதையெனக்காருமென்று
சீரானதம்பிசொன்ன செய்தியெல்லாந்தான்கேட்டு
மார்போடணைத்து மனமகிழ்ந்துராவானும்
வாள்வீமாவுன்னுடைய மனதுக்குகந்தபடி
தாள்வேதுமில்லாமற் றூனடப்போமென்றுசொல்லி

போர்முகத்திற்செய்தகுற்றம் பொருத்தருளவேணுமென்று
பார்புகழபாட்டன்மார் பாதந்தனைத்தொழுது
தோணும்படியாக துரோணருடபாதமதில்
காணும்படியவர்கள் கண்டுநமஸ்கரித்து
பாங்காய்த்தொழுதுநின்ற பாலர்களைத்தான்பார்த்து
நீங்காதசெல்வம் நிறைந்திருப்பீரென்றுசொல்லி
பேசுமரவக்கொடியோன் பெரியபிதாவாகையினல்
பாசமுடனவர்தன் பாதமலர்பணிந்து
வாருமென்றுவேத மறையோன்பகர்ந்திடவே
கார்படிந்தமெய்யோன் கடோர்க்கசனும்ராவானும்
வணங்காமுடியருக்கும் வளர்கர்னன்பீஷ்மருக்கும்
குணங்காண்பெரிதெனவே கும்பிட்டடிபணிந்து
மாருவிஷக்கொடியின் மன்னவனைத்தான்பார்த்து
சீராகராவான் செப்புவானம்மானை

## இராவான் துரியனுக்குபுத்தி கூறுதல்

### விருத்தம்.

தலைவிதிமுடிவுகாலம் சரியுனக்குறைத்தேனின்னம்
சிலதுநாளிருப்பதாலே சிறுவனுக்கபயமென்றாய்
கலைதெரிவீமராசன் கைக்கதைக்கிறைநீயென்று
விலகினான்விரட்டிவிட்டேன் மெய்யிதுவறிந்துகொள்ளே

### அம்மானை.

வஞ்சகத்தைநெஞ்சில்வைத்த வணங்காமுடியோனே
அஞ்சிப்பணிந்தனென்று அளப்புகளைச்செய்யாதே
தலையெழுத்துமூயவின்னஞ் சற்றேயிருந்ததினல்
விலகியுயிர்பிழைக்க விட்டுவிட்டேன்றம்பியர்க்காய்
மரணமடையாமல் வாள்வீமன்றன்னிடத்தில்
சரணமடைந்ததினற் சயித்தேனென்றம்பியர்க்காய்
வெல்வேந்தர்போற்றிசெய்யும் வீமருடகைக்கெதையால்
கொல்வனென்றுஉன்னைக் கூறியிருப்பதினல்
எடுத்தசிலைதன்னையிப்போ யிரக்கினேன்நீபிழைத்தாய்
அடுத்தவர்களும்பிழைத்தா ருகையினலிப்போது

துற்புத்தியானதெல்லாந் தூரமதிலேபோட்டு
நற்புத்தியானதெல்லாம் நன்றாய்மனவமைத்து
செப்புந்துரோணர்மொழி சிரசுமுடிமீதுவைத்து
தப்பிதங்களில்லாமற் தம்பியபீமனுக்கு
சங்குசக்ரபாணியெனுஞ் தாமோதரன்மகளை
மங்களமுஞ்செய்து வாள்த்தியனுப்பிவைபும்
தாமதமாய்நீயுந் தானிருந்தாயாமாகில்
எமனுடபட்டணத்துக் கியல்பாயனுப்பிடுவேன்
அபசாரமானதொழி லாகிவருமென்றுசொல்லி
உபசாரமாகவுமக் கோதினேன்கண்டறிந்து
பாருமதனாலே பலனுமக்குஆகுமென்று
தேருதலாய்வார்த்தைதனைச் செப்பினான்ராவானும்
சபையறியாறுவான் றானுரைத்தவார்த்தையெல்லாம்
கபடனரவக்கொடியோன் காதுதனிலேகேட்டு
புண்ணாய்மனதுநொந்து பொரிகலங்கிமெய்யசந்து
எண்ணாதவெண்ணமெல்லாம் மெண்ணிமனதுள்ளடக்கி
தப்பியுயிர்பிழைக்குஞ் சாதகத்தையேநினைந்து
செப்புங்கடோர்க்கசன்றன் றிருமுகம்பார்த்தேதுரைப்பான்
அருமைக்குழந்தையரே அருச்சுனனார்தன்மகனே
தெரியப்படுத்துகிறேன் சேதிதனைக்கேட்டருளும்
சாந்தகுணமுடையோன் தம்பியபீமனுக்கு
ஏந்திழையைக்கல்யாண மிப்போதேசெய்திடலாம்
ஆயனுடகருத்தை யாமறியவேணுமிப்போ
மாயனையுமிங்கே வரவழையுமென்றுரைத்தான்
இதமானவார்த்தையிது வென்றுகடோர்க்கசனும்
பதபாகமானகுரு பாதமதிலேபணிந்து
வல்லவரேயும்முடைய வாக்கால்நடக்கும்வகை
சொல்லுமையாவென்று தொழுதான்கடோர்க்கசனும்
அப்போதுரோண ரகமகிழ்ந்துயேதுசொல்வார்
இப்போதுமாயவரு மிங்குவரவேணுமென்றால்
நெடுமாலிருக்குமிடம் நிசமறியக்கூடாது
கடல்மேற்றுயின்றிருப்பார் காயாம்புமேகவண்ணர்

## பாற்கடலில் பள்ளிகொண்ட கிருஷ்ணனை கடோர்க்கயன் போய்கூட்டிவருகுதல்

கோதண்டராமனையுங் கூட்டிவரவேணுமென்றால்
வாதென்றதாற்றுவர்க்கு வல்லமையும்போறாது
கெவுனசித்திபுள்ளவனுங் கிருபைகடோர்க்கசனை
அவனையனுப்பிவையு மாயன்வரவேணுமென்றால்
மற்றொருவர்கண்டறிய மாட்டார்கள்மாயனையும்
புத்தியிதுவெனவே புகன்றார்துரோணருமே
இவ்வசனங்கேட்டவுட னிராவான்கடோர்க்கசனை
பவ்வியமாய்த்தானழைத்துப் பகர்ந்தான்பரிவுடனே
கோவிநிரைகாத்தவனைக் கூட்டிவரவேணுமென்று
ஏவுகின்றராவா னிருதாளையும்பணிந்து
வாரேனொருநொடியில் மயங்காதிருங்களென்று
கார்மேகமேனியனைக் காணவென்றுசிந்தைய தாய்
நடந்தான்கடோர்க்கசனும் நாரணரைத்தான்தேடி
அடர்ந்ததுவாரகைபி னரண்மனையெலாம்பார்த்து
மலைகள்நதிமுதலாய் வனந்திரமெலாம்பார்த்து
அலைகடலுந்தாண்டியவ னாய்ந்துபார்கையிலே
பாற்கடலின்மேலேயொரு பாம்பணையின்மெத்தையிலே
தீர்க்கமுடன்மகிழ்ந்து செங்கண்மால்கண்வளர்ந்தார்
பணிமுடியின்மேலாகப் பள்ளிகொண்டமாயவனை
கணிதமுடனறிந்து கண்டேகடோர்க்கயனும்
எவருமறியாதபொரு ளெம்பெருமாளச்சுதனை
தவமாய்த்துயிலுகின்ற தாமோதரமுகிலை
எந்தவிதம்நாமு மெழுப்புவோமென்றுசொல்லி
சுந்தரனேயென்றுசொல்லித் தோத்திரமுஞ்செய்யலுற்றான்

## கடோர்க்கயன் கிருஷ்ணனை தோத்திரஞ்செய்புதல்

### விருத்தம்

வானோர்புகழ்விரிவேதிரு மார்பாமறைமுடிவே
தானுயிகபரம்யாவையும் நீயாகியதனுவே

ஊனோடுயிருருவாகிய வுரகாமுடிநடனா
ஞானோதயவெளியே யரிநாராயணகுருவே க

வேதாகமபொருளே யதின்மேலாகியவருள்தான்
ஓதாதவர்பிரவிக்கட லுளல்வாரவருடனே
நீதானவனரியாமையை விடவேயடியேன்முன்
நாதாயெதிர்வரவேணுமென் னாராயணகுருவே உ

குன்றாகியகோவர்த்தன கிரியானதுகுடையாய்
அன்றாவினுக் கிடர்தீர்த்திடு மாதியருவுருவே
ஒன்றாய்வெகு விதமாகியு மொழிவாகியமணியில்
நன்றாகியபொருளே யரிநாராயணகுருவே ௩

வேயூதியவாயாய்ஜெக வினைவாகியசரணா
ஓயாதெழுவுலகாவையு முண்டாயரநொடியில்
நீயேபெரிதெனவோதுவர் நினைவேமதிசுடரே
நாயேனொருபொருளோவரி நாராயணகுருவே ௪

ஆகாசமுன்னிலையில்வரு மாதாரமுமதிலே
யேகாச்னகிருபாநிதி யிமையோர்பணிமுதல்வா
யோகாசனமேலாகிய யொளியேபரவெளியே
நாகாசனவாள்வேயரி நாராயணகுருவே ரு

மந்தாகினிகிரியாலலை மதுவானதைமெதுவாய்
சிந்தாமலேயமுற்தங்கடை தேவேயருள்வாள்வே
தந்தாள்வதினாலேயொரு தாள்வானதுவருமோ
நந்தாவரவிந்தாவரி நாராயணகுருவே சு

பால்வாரியினடுவேதுயில் பரமேதனிமுதலே
மால்வேதினையதிலேமன மாளாவகையருள்வாய்
மேல்வேதியன்முனிவோர்முதல் விண்ணோர்பெருமானே
நால்வேதமும்நீயேயரி நாராயணகுருவே எ

காமாகரவினைமாதர்செய் கபடானதிலுருகி
ஏமாரியேவிளுமோடனை யினியாள்வதுன்கடனே
தாமோதரகிருபாநிதி சரணாகெதியருள்வாய்
நாமாதவரூமா அரி நாராயணகுருவே அ

கெவுனதிபமுனிவோர்தொழு கிருபாகரகுணனே
புவனதிபவரசேவரு புனிதாவுனைமரவேன்
தவமாதர்களிடையர்மனை தனிலேதயிர்திருடும்
நவநீதனகிருஷ்ணாவரி நாராயணகுருவே ௯

பேராயிரமுடையாய்வரு பிரமாதிகள்முதலாய்
ஆராகிலுமுனையோதின ரவரேபிரவாதார்
கூராதவர்துயர்வேதினைக் குடியேருவர்முளுதும்
நாராயணநாராயணநாராயண குருவே ௰

அம்மானை.

ஐயனே அச்சுதனே ஆதிமகாமூலம்
கையாற்றயிர்திருடும் கண்ணாதிருமார்பா
காலால்ப்புவியளந்த காயாம்புமேகவர்ணா
பாலாளிதன்னைப் பகுந்துகடைந்தோனே
காமன்தனைப்பயின்ற கருணாதிபவருளே
பூமன்றுயிர்முதலாய்ப் பூத்தருளும்புண்ணியனே
சாரங்கபாணியனே த்ாமோதரப்பொருளே
சீரங்கம்வாளுந் திருவெங்கிடமாலே
மண்ணையள்ளியுண்டதொரு வாயாவசுதேவா
வெண்ணைகளவாண்ட வினோதாசெகனாதா
வேதனையும்பெற்றெடுத்த விண்ணோர்பெருமானே
ஆதியானாதி யரிகேசவாமுகுந்தா
சோலைமலைவாளுஞ் சுந்தரனேமந்திரனே
நாலுமறைதனக்கு நடுவாயிருந்தவனே
ஐவர்சகாயா ஆதிபராபரனே
பையரவிற்பள்ளிகொண்ட பச்சைநெடுமாலே
சீஷன்வருந்துவதுன் திருச்செவியில்கேட்கலையோ
ஆசையுடனுமது அனந்தல்தெளியலையோ
நீதியுடனடியேன் நினைவரியவேணுமென்று
சோதனையும்பார்க்கத் துயின்றால்விடுவேனோ
பாண்டவர்கள்தங்களுக்கு பச்சமுள்ளமைத்துனனே
ஆண்டவரும்நீராச்சு அடிமையுமேநானாச்சு
திருக்கண்மலர்ந்துவுங்கன் சீஷனையும்பாருமையா

மருக்கொண்ட நெஞ்சகனே மனதிரங்கிக்காருமையா
சமையமெழுந்தருளும் சாமிசரணமென்று
கமலமலர்முகத்தான் கடோர்க்கசனுந்தோத்திரமாய்
நேசமுடன்தொழுது நின்றானுருமையதாய்
வாசமுள்ளமாயன் மனதிலதையறிந்து

## கிருஷ்ணன் நித்திரை தெளிந்து யெழுந்திருக்குதல்

காரணனார்செங்கமலக் கண்முளித்து அன்னேரம்
பூரணமாய்வந்தசிறு புதல்வனையுந்தான்பார்த்து
கிருபைக்கடலான கேசவனார்தன்பதத்தில்
அருமைக்கடோர்க்கசனு மன்பாகவேதொழுதான்
வேண்டிவணங்கிநின்ற வீமன்மகனுக்குன்றப்பார்
தாண்டியெழுகடலுஞ் சதிராகயென்னிடத்தில்
வந்தவகையேது மன்னகடோர்க்கசனே
அந்தவகைசொல்லுமென்று ஆயனுமேதானுரைத்தார்
கண்ணனுரைத்திடவே கடோர்க்கசனுந்தான்கேட்டு
அண்ணலெனுமென்பெருமாள் அடியிணையைப்பூண்டுகொண்டு
தேவர்பணியுமெங்கள் தெய்வச்சிலையானே
மூவருக்குமூத்த முகுந்தாயினிக்கேளும்

## வாள்பீமன் கலியாணத்திற்குகிருஷ்ணனை வரச் சொல்லுதல்

காண்டீபன்பெற்றெடுத்த காளையபீமனுக்கு
ஆண்டவரேயும்முடைய அழகுபெருஞ்சுந்தரியை
சொல்லியிருந்தபடி சோபனமுஞ்செய்வதற்கு
நல்லமுகூர்த்தமது நாளிகையுமானதினால்
உத்தமரேமங்கிலிய முடனேதரிப்பதற்கு
சித்தமிரங்கியங்கே சீக்கிறத்தில்வாருமையா
நூற்றுவருமற்றுமுள்ள நுவலரியசேனைகளும்
காத்திருக்கிறார்களங்கே கண்ணாயெழுந்தருளும்
அய்யனேயுங்களுக்கு ஆளடிமைநாங்களுந்தான்
செய்யும்பணிவிடையிற் றீதுகுறைவந்ததுண்டோ

ஆழியதுகொதித்தா லாற்றுவாராருமுண்டோ
ஏழைப்பயனுமக்கு யெதிரோபெருமானே
கருணைகூர்கிருபைக் கடலேயெளுந்தருளும்
தருணைதருணமதிற் சாமியெளுந்தருளும்
வைகுண்டம்வீற்றிருக்கு மாலேசரணமென்று
கைகொண்டுகூப்பிக் கடோர்க்கயனுந்தான்றொழுதான்
வளமாய்புரைத்ததெல்லா மாயவனுந்தான்கேட்டு
உளமானதுமகிழ்ந்து வுற்றசிறுபாலகன்மேல்
சந்தோசமாகியவர் தானேயெழுந்திருந்து
கந்தமலர்மார்பன் கடோர்க்கசனூர்தன்னுடனே
கன்றாற்கனியெரிந்த காகுத்தனும்மனதாய்
சென்றார்துவாரகைக்கு சீதரனுமம்மானை

## கிருஷ்ணன் துவாரகைக்கு வந்தபின் எல்லோரும் வணங்குதல்

### விருத்தம்

ஐயனுங்கடலாழி யகன்றுதான்
வெய்யவன்னிருள்தன்னை விலக்கல்போல்
செய்யமானகரான துவாரகை
வையமுண்டனர் வந்தமகிழ்ச்சியே

### அம்மானை

செங்கன்நெடுமாலும் சிறுவன்கடோர்க்கசனும்
வங்கணமதாகவுமே வந்தார்துவாரகையில்
மாயாவுதாரணிங்கே வந்தாரெனவறிந்து
தீயானநூற்றுவர்கள் திரியோதனன்முதலாய்
சாற்றும்புகழ்மறையோன் சகுனிசயிந்தவனும்
ஏற்றமுள்ளகர்ன னிலக்கணகுமாரன்முதல்
பெரியகுருமகனும் பிலமானகாங்கையரும்
அரியோனடியிணையை யன்பாய்வணங்கிநின்றார்
மார்க்கமுடன்விதுரன் வந்துவணங்கிநின்றான்
ஆர்க்கும்நிகரொவ்வாத பீமனெடுராவானும்
கேசவனார்தாளிணையைக் கிருபையுடன்வந்துசுற்றி
பூசனையதாய்மிகுந்து போற்றிப்பணிந்துநின்றார்
ஆசையுள்ளதன்மருக னபிமனையுந்தான்பார்த்து

ராசகோபாலரெனும் நாராயணர்மகிழ்ந்து
கருத்தில்மிகவடக்கி கண்ணனுமங்கேதுரைப்பார்
பொருத்தமிட்டலெக்கணர்க்குப் பொருந்துகின்றசுந்தரியை

## இராவான் கடோர்க்கயனை கிருஷ்ணன் கோபித்து சொல்லுதல்

நல்லமணமுடிக்க நாம்நினைத்தகாரியத்தை
அல்லவென்றுபண்ணவுமக் காமோசிறுவர்களே
கொள்ளஅவன்றுணிநதான் குடுக்கவுமேநாம்துணிந்தோம்
தள்ளிவிடநீங்கள் சாதித்தலைவர்களோ
படித்தமணவரையின் பந்தலிலேவந்தவரை
அடித்துவிரட்டவுமக் கதிகாரமார்கொடுத்தார்
இன்னிலத்தில்நூற்றுவரை யிசைகேடுசெய்திடவும்
தன்னரசுநாடிதுவோ தான்சேவகனீரோ
என்னபுத்திகாணுமக்கு யிராவான்கடோர்க்கசனே
தன்னுடையகாலபலன் தானரிந்துபாராமல்
பாண்டவர்கள்காடுரைந்த பாவனையுந்தோன்றமல்
தாண்டிவிழுந்து தலைசிதரிப்போவாரோ
வேண்டாமினிமேலாய் விட்டுவிடுந்தம்பியரே
தீண்டாமலேயிருங்கள் திரியோதனப்பெருமாள்
நேமித்துவந்தபடி நிறைவேறவேணுமென்று
நாமித்தனைவயணம் நன்றுயுமக்குறைத்தோம்
கூசாமற்கல்யாணங் கூடுகின்றநாள்வரைக்கும்
பேசாதிருங்களென்று பெருமாளுந்தானுரைத்தார்

## இராவான் கிருஷ்ணனைபார்த்து சொல்லுதல்

இராகவனூர்சொன்னமொழி ராவானும்தான்கேட்டு
அராகிருதமாயவரும் சொன்னூரெனவரிந்து
வண்ணமுள்ளமாயவனூர் மலர்முகமுந்தானோக்கி
எண்ணமுள்ளராவான் எடுத்துரைப்பானம்மானை
தயிர்திருடுங்கோமானே சவுமியநாராயணனே
மயிர்பிளந்துநீரும் வழக்குறைத்தீர்நேர்த்தியதாய்
தட்டிபுலமைப்பேசிடவும் தாரெருவரில்லாட்டால்

கெட்டியென்றபேருமக்கு கிடைக்குமென்றேசொல்லுகிரீர்
வார்த்தைபடித்தமென்று மாயவறேபேசுகிரீர்
ஆர்க்குஞ்சரியாமோ அளிவளக்குநீருரைத்தீர்
சொல்லிச்சிரியாரோ தொல்லுலகமன்னரெல்லாம்
நல்லாயிருக்குதையா நடந்துநில்லும்பார்க்கடலில்
அந்தமுருக்குமக்கு ஆய்ப்பாடியாரிடத்தில்
இந்தப்பிரளியிங்கே யேலாதெளுந்தருளும்
உள்ளவளக்கிருக்க ஒருவருடபட்சமதாய்
கள்ளவழக்குரைக்கும் கண்ணாநடந்துநில்லும்
எடுப்பாரொருவனுண்டோ யெங்கட்கிசைந்தபெண்ணை
கொடுப்பாரொருவருண்டோ கோலமயில்சுந்தரியை
நானென்றுமாலையிட நாங்களேசொந்தமல்லால்
தானென்றொருவர்சொல்லத் தலைமேல்தலையுமுண்டோ
மரியாதைக்காகவும்மை வரவழைத்தோமாமாகில்
பிரியமாய்ப்பேசுகின்ற பேச்சேன்மெருமாளே
தேவரெதிர்வரினும் தேவேந்திரன்வரினும்
மூவரெதிர்வரினும் முனிவோரெவர்வரினும்
காலனெதிர்வரினும் காசினியோர்தான்வரினும்
மேலுமொருநிமிச வேளையிலேகைக்கணையால்
வெத்திசெய்துகாரியங்கள் வேண்டிமுடிப்பனென்றும்
உத்தபெலவானெனவும் உமக்குத்தெரியாதோ
மாமாலவித்தைகளை மறந்துவிடும்மாயவரே
நீமாமனென்றுசொல்லி நின்றோமிதுவரையும்
கட்டபனைமரத்தில் காலால்நடப்பவரை
எட்டமட்டும்தாங்கிடலாம் யெட்டாட்டாலென்னசெய்வோம்
குருக்களென்றுநூறுவிசை கும்பிடுவதல்லாது
சருக்கரைதானென்றுசொன்னாற் சம்மதிப்பாராருமுண்டோ
ஆனதினால்மாயவரே அபகேடுசெய்ததெல்லாம்
போனதெல்லாம்விட்டுவிட்டோம் பொருமைபெரிதெனவே
சோபனமும்நல்வேளை துடங்கியிருப்பதினால்
ஆபரணமாகவுமே அபிமனிந்தமன்னனுக்கு
கன்னியெனுஞ்சுந்தரியைக் கைப்பிடித்துத்தாருமையா
என்னபணிவிடைநீ ரிட்டாலுங்கேட்குகிரோம்

நல்முகூர்த்தவேளையிலே நாரணரேசுந்தரியை
செல்வனபீமனுக்குச் செய்விர்கலியாணம்
குத்தமதுசெயினுங் கொண்டருளியேனையின்மேற்
சித்தந்திரும்புமென்று செப்புவான்ராவானும்
சமத்துரைத்ததெல்லாம் தா்மோதரன்கேட்டு
அமைத்தபடிமுடியு மல்லாதுவேறுமுண்டோ
என்றுசொல்லிமாயவரு மிராவானைத்தான்மகிழ்ந்து
அன்றுவருகிருந்த வரவக்கொடியனையும்
வரிட்டுப்பார்த்து யெம்பெருமானேதுசொல்வார்
வாரணிந்தபெண்கள் கசிழுமுடியோனே

## கிருஷ்ணன் துரியனை பார்த்து சொல்லுதல்

இருவருடயோசனைக்கு யிடர்வருமோவென்றிருந்தேன்
சிறுவனுரைத்ததொரு செய்தியெல்லாங்கேட்டீரோ
எனக்குமனது அந்த யிலக்கணன்மேலல்லாது
உனக்குமனதினிமே லோதுமென்றார்மாயவரும்
செந்திருமால்சொன்னதொரு செய்தியெல்லாந்தான்கேட்டு
வெந்துருகிநின்றதொரு வேந்தனெடுத்துரைப்பான்

### விருத்தம்.

முன்னமுங்கெடுத்தது முளுதுமில்லையென்
றின்னமுங்கெடுப்பதற் கெண்ணிநீரய்யா
தன்னிலென்னுயிருடன் தப்பவேணுமென்
றன்னையுந்தொளுதன னுய்யவேண்டியே க

திட்டமாய்சொலும் சிறுவர்கையிலே
பட்டயாடையினிப் பகரவேண்டுமோ
அட்டமச்சனிபிடித் தாட்டியென்றனை
விட்டதேயினிநிசம் மேகவண்ணனே உ

### வேறு

மாதவனேகேளுமபி மன்னவன்றனக்கு
மாதளகிசுந்தரியை மாலையிடுமையா
ஏதுமரியாதவ னிலக்கணனுக்கேற்ற
சாதிதனிலோர்வனிதை தான்மனமுஞ்செய்வோம் ௩

அம்மானை.

காதில்முருகிடுங்கோ கணையாளிதானிடுங்கோ
எண்ணுமரியா தென்னழகைநான்பார்க்க
கண்ணாடிகொண்டுவந்து காட்டிடுங்கோமுன்னாலே
கண்ணிரைந்தமாப்பிளைக்கிக் காதல்மிகவுண்டாக
வண்ணச்சுருள்மடித்து வளமாகத்தாருமென்றாள்
ஏலம்கிராம்புமுத விப்போகொடுத்திடுங்கோ
மாலாகியகளப வாடைதனைப்பூசிடுங்கோ
மருவிலாதென்னழகும் வாள்வீமன்தன்னழகும்
சரியோசரியிலையோ தாதியரேசொல்லிடுங்கோ
கணவனபீமற்வந்து காத்திருப்பாரின்னேரம்
மணவரைக்குக்கூட்டியென்னை மங்கையரேசொல்லுமென்று
நாரணனார்புத்திரியும் நயந்துரைத்தவார்த்தையெல்லாம்
காரணமோவென்றுசொல்லிக் காத்திருக்குந்தாதியரும்
மாறுதயின்பம் மனதில்மிகவுண்டாகி
சீறுனசுந்தரியைச் சிரப்பித்தாரம்மானை
திருமால்மகளார்க்குத் திருமஞ்சனமாட்டி
பெரிதானசந்திரவற்னப் பிடவையது தானுடுத்தி
பொன்னாற்சமைத்தரற்றினப் பூசணமுந்தான்றரித்து
மின்னனசுந்தரிக்கி விக்கினங்கள்வாறாமல்
திட்டிமிகச்சுத்தி திருநீற்றுக்காப்பணிந்து
கட்டழகியாமெனவே கமலமுகத்தாதியர்கள்
பாரளந்தமாயவனும் பச்சைமால்தன்னிடத்தில்
சீர்மிகுந்தசுந்தரிக்குத் திருக்கோலஞ்செய்ததெல்லாம்
சொன்னார்கள்தாதியர்கள் சுந்தரமால்தான்கேட்டு
அன்பானமாய னகமகிழ்ந்துசம்மதித்து
வந்தார்மனமகிழ்ந்து மணவரையின்பந்தலிலே
சந்தோஷமென்றுசொல்லித் தானிருக்கும்வேளையிலே

## வாள்பீமன் பவனிவந்தபின் கொலுப் பெருக்கி வீற்றிருக்குதல்

பார்த்தன்மகன்வாள்வீமன் பவனிவலமாகவந்து
சாத்தரியராசர் தளங்களூரமுறையும்
திரியோதனன்முதலாய்ச் சேனைதளமத்தனையும்

அரியோனிருசரண மடிவணங்கித்தெண்டமிட்டு
சதிர்ப்பெருக்கிவீற்றிருந்தார் தாமோதரனிடத்தில்
விதிப்பயனோம்மைவிட்டு விலக்கவிலலையென்றுசொல்லி
மருபேச்சுரைக்க வாயுலர்ந்து நூற்றுவர்கள்
பெருமூச்சதிகமிட்டுப் பின்னாலேவீற்றிருந்தார்
பழுதொன்றுமில்லாமல் பாத்தீபன்றன்மகர்க்கு
அழகாய்முகூர்த்தமதுக் காரம்பஞ்செய்யுமென்றார்

## கலியாணத்திற்குப் பஞ்சபாண்டவர்க ளில்லையே யென்று யோசிக்குதல்

மாதவனுருத்தாரம் வாள்பீமன்றான்கேட்டு
நீதமுள்ளசிந்தை நினைவிலோரெண்ணமதாய்
மாதாபிதாவுமிங்கே வாருதகல்யாணம்
போதாதுயென்றுமனம் புண்ணாகிவாள்வீமன்
அண்ணரிடத்தி லன்பாகவேயுரைக்க
கண்ணனிடத்தில் கடோர்க்கயனும்ராவானும்
சொன்னார்களப்போது தூயதிருமால்கேட்டு
நன்னயமாய்ப்பஞ்சவர்கள் நாடுவிட்டுக்காடுதனில்
காய்கிழங்குதின்று காடேகெதியெனவும்
வாய்த்தஐவர்கானகத்தில் வாகாயிருக்கையிலே
மன்னன்னபீமனுக்கும் வாகானசுந்தரிக்கும்
என்னகலியாணம் யாம்செய்யப்போரோமென்று
தேட்டமுடனே திருமால்நினைக்கயிலே
காட்டிலிருந்தஐவர் கதையையினிச்சொலவேனே

## பஞ்சபாண்டவர்கள் வனத்திலிருக்கும் போது நிமித்தங் காணுதல்

பஞ்சவர்களைவருந்தான் பாரவனந்தோறும்
வஞ்சமாவேதிரிந்து வள்ளிக்கிழங்குகிள்ளி
காயுங்கிழங்குங் கனத்தபலாப்பழமும்
நேயமுடனேபரித்து நீள்விசையனுந்தானும்
மானாள்துரோபதையாள் மங்கையிடந்தான்கொடுக்க
தானுகவாங்கி கூஷணத்தில்சமையல்செய்தால்
ஐவர்சுனைதனிலே அட்டவாய்குளித்துவந்து

செய்யதிருநாமமிட்டுத் திருமாலைப்போற்றியபின்
திங்கிலாஜவருக்குஞ் சிறந்தயிலைபோட்டு
பாங்காயவர்களுக்கு பழவர்க்கமுள்ளதுவும்
காப்பிட்டகைபழகி கனிகிழங்குந்தான்படைத்தாள்
சாப்பிட்டிளைப்பாரி தானிருக்கும்போதினிலே
செப்பமுள்ளமாயன் திருவருளாலப்போது
தப்பாமற்றர்மன் சாரும்வலப்புறத்திற்
பல்லிபலபலெனப் பாரேழ்புகழ்தருமன்
நல்லமுகூர்த்தமென்றும் நமக்குநல்லகாலமென்றும்
வல்லசகாதேவனையும் வாகாகவேயழைத்து
சொல்லுவாயிக்கெவுளி சொல்லியதோர்சாஸ்திரத்தை

## தருமருக்கு சகாதேவன் கெவுளி சொல்லிய சாஸ்திரத்தை சொல்லுதல்

என்றேதரும ரியம்பச்சகாதேவன்
நன்றாய்நிலங்கீறி நாலுதிசையுமடைத்து
ஈரேழுலகமுட னெட்டுத்திசையதிர
சீராகவூடருத்துச் செப்புவான்சாஸ்திரத்தை
அண்ணாவியிப்போது அரையுகிறேன்கேட்டருள்வீர்
மண்ணாசைகொண்ட வணங்காமுடிவேந்தன்
தன்மகளும்லெக்கணர்க்குத் தான்மணமுஞ்செய்யவென்று
மன்னவனுஞ்சென்றான் மாயவனார்தம்மிடத்தில்
இந்தச்சமாச்சாரம் யெப்படியோவாழ்பீமன்
சிந்தைதனில்கேட்டு திருமணமுஞ்செய்யவென்று
சுற்றமுள்ளராவான் றணைசேர்க்கடோர்க்கயனும்
உற்றவர்களாகி உடனேதுவாரகைக்கு
சென்றுதிருமால் திருப்பாதம்போற்றிசெய்து
இன்றுதிருக்கல்யாண மிப்போமுடிப்பமென்று
பாவிதுரியோன் படைகளையுந்தானொருக்கி
த்தாவியவர்களையுந் தான்பிடித்துக்கூட்டிவைத்து
மால்மகளைக்கல்யாணம் வாளபீமன்செய்வதற்கு
பால்போல்மனதுடைய பாலர்களுந்தானினைந்து
திருமாலிடந்தனிலே செப்பினன்ராவானும்
உருமையுடன்மாயவரும் உடனேவரநினைத்தார்

இன்றுதினம்கல்யாணம் இனிவாய்நடக்குமென்று
நன்றியுள்ளதர்மரிடம் நவின்ருன்சகாதேவன்
அப்போதரும ராலோசனையாகி
செப்பமுடனென்சேய்க்குச் செய்யுங்கலியாணம்
பார்க்கயெனக்குப் படைத்திலனோநான்முகத்தோன்
ஆர்காணுமென்போ லனியாயஞ்செய்தார்கள்
செல்லக்குழந்தையர்க்குச் செய்யுங்கலியாணம்
வல்லவரோநான்பார்க்க வாய்க்கலேயேயென்றழுதார்
இந்தவிதமாக யேங்கிப்பரதவித்து
சிந்தைமிகத்தேரி சிறந்ததருமருந்தான்
காத்தருள்வார்மாய னெனக்கருதியேயப்பொழுது
பார்த்தன்றனையழைத்துப் பகருவாரம்மானை

விருத்தம்.

எத்திசைபுகழவேதா னெழில்மிகுவிஜயாவுந்தன்
புத்திரன்றனக்கும்கிருஷ்ணன் புதல்விக்கும்விபாகமென்று
வெத்தியாய்நிமித்தஞ்சொன்ன விபரத்தைக்கேட்டாயல்லோ
உத்தமியாளைக்கூட்டி உறுதியாய்ச்செல்மினென்ருன்

அம்மானை

எத்திசையெலாம்புகழும் யெழில்சேர்விஜயாவுன்
புத்திரர்க்குக்கல்யாணம் பொருந்திநடப்பதினல்
சந்தோசமாகத் தம்பியரேயிப்போது
உந்தன்மனதிலொன்றும் யோசனைகள்செய்யாமல்
நேயமுள்ளதுரோபதையு நீயுமெழுந்தருளி
போய்வாருமென்றுசொல்லிப் பொருந்திவிடைகொடுத்தார்

## அருச்சுனனுந் துரோபதையும் ரிஷிவேடமெடுத்து அபிமனன் கலியாணத்திற்கு வருகுதல்

உத்தாரமிட்டஅண்ணருறுதியுள்ளபாதமதை
பத்தியுடனே பணிந்துநமஸ்கரித்து
நடந்தார்துரோபதையு நல்லதொருபார்த்தனுமாய்
கடந்தார்மலைநதிகள் காடுநகருள்ளதெல்லாம்
தூரவளிதூலைத்துத் துவாரகையைவந்தடுத்து
வேரேயுருமாற வேண்டிமனதிலெண்ணி

பார்த்தன்ரிஷிவடிவாய்ப் பத்தினியுந்துரோபதையாய்
நாற்றிசையோர்கொண்டாட நல்கினார்மண்டபத்தில்
வந்தரிசிதனையும் மாயவனார்தான்பார்த்து
இந்தவடிவாக இம்முகூர்த்தமண்டபத்தில்
காணுகின்றமாமுனியைக் காண்டீபனென்றறிந்து
தோணும்ரிஷிபத்தினியே துரோபதையாமென்றறிந்து
உத்தமுனிதனக்கு வுபசாரவார்த்தைசொல்லி
மெத்தமனமகிழ்ந்து வீற்றிருந்தார்மாயவரும்
உரைக்கும்பெருமானை யுள்ளமதிலேபோற்றி
நிரைக்குமணப்பந்தலிலே நிசமுனிவன்வீற்றிருந்தான்
இவர்கள்மனமகிழ்ந்து யிருக்குமந்தவேளையிலே

## அபிமனன் சுந்தரி கலியாணத்திற்கு மற்றரசர்களும் தேவகணங்களும் வருகுதல்

கவனமிகவுண்டாகிக் கன்னிசுபத்திரையும்
மகனையுந்தான்தேடி வந்தாள்துவாரகையில்
ஆகமிகமகிழ்ந்து வபிமனையும்வந்துகண்டு
பூரித்துடம்பு புளகிதமாய்வீற்றிருந்தாள்
காருத்தகூந்தலுடை கமலகன்னிநாககன்னி
கட்டழகன்வாள்பீமன் கலியாணம்பார்க்கவென்று
திட்டமுடன்வந்து சேர்ந்தார்களம்மானை
சுத்தமுள்ளபந்துஜனம் துரைமக்களெல்லோரும்
சித்தமுடன்மகிழ்ந்து சிரப்பாயிருக்கையிலே
அப்போதுஈஸ்பரனும் ஆயன்மகள்தனக்கு
இப்போதுகல்யாண மென்றறிந்துதேவியுடன்
எருதுதனிலேறி ஈஸ்பரனும்வந்தனர்காண்
குரமாதுடன்கூடிக் குமரக்கடவுளரும்
மயில்மீதிலேறி வந்தனர்காணம்மானை
கயமுகத்தோன்வல்லபையும் கடுகிவந்தாரம்மானை
அன்னமதிலேரி யயனுஞ்சரஸ்பதியும்
நன்னயமதாக நல்கினார்மண்டபத்தில்
வாசவனிந்திராணிமுதல் வந்தார்முனிவர்களும்
நேசமுள்ளவானவரும் நிரைந்திருந்தார்மண்டபத்தில்

## கிருஷ்ணன் துரோணரிடம் முகூர்த்தத்தை ஆரம்பஞ்செய்ய சொல்லுதல்

ஐவர்சகாயனெனு மாதிமகாமூலம்
பையரவினிற்றுயிலும் பச்சைமாலப்போது
மணவரையிற்றானும் வாள்பீமனையும்வைத்து
இணையானசுந்தரியை யிடப்பாகமாகவைத்து
குருகுலத்தார்க்குள்ள குணமாம்சடங்குதனை
தெரிந்துதுரோணரேநீர் செய்யுமென்றுசொல்லிவிட்டு
சிந்தைமகிழ்ந்தப்போ செப்புவார்மாயவரும்
தந்தைதாயில்லாத தர்மர்புதல்வனுக்கு
ஆருமொருவரில்லை ஐவருமேசெத்துவிட்டார்
பேரும்சிறப்பும் பெற்றவரேசன்னுசி
பார்த்தனுக்குநேர்சரியாய்ப் பைந்தொடியாள்சுந்தரியை
சேர்த்துமணவரையிற் சிரப்பாகவையுமென்றார்
பச்சைமால்சொல்லப் பரதேசியேதுரைப்பார்
அச்சுதரேயிப்போது அப்படியேசெய்யுகிறேன்
என்றுசொல்லித்தானெழுந்து யிருகையாற்றான்பிடித்து
சென்றுமணவரையிற் சிறப்பாயிருக்கவைத்து
துரோணருகிருந்து தூய்யசடங்குகளை
சிரோன்மணியாள்சுந்தரிக்குஞ் சிறந்தஅபிமனுக்கும்
செய்வதற்குஆரம்பம் செய்யயிலேராவானும்
தூய்யபுகழ்வாள்வீமன் சொல்லுஞ்சபதமுடிக்க

## அபிமனன் சபதத்தை இராவான் முடிக்குதல்

திரியோதனன்முதலோர் சேர்ந்திருந்தவிடத்தில்
ஒருவருக்குந்தோற்றாமல் உல்நுழைந்துலெக்கணனை
பிடித்துயொருயிடதில் பின்னொருவர்காணாமல்
தேசுமரையசெம்புள்ளி கரும்புள்ளியிட்டு
நாசுவனைத்தானழைத்து நன்றாகவேதானும்
ஐந்துகுடுமிவைத்து அழகாய்த்தலைசிறைத்து
பஞ்சைகளைப்போலே பக்கத்திருநாமமிட்டு
சாணிதனையெடுத்து தலையிலேதான்வழைந்து
கோணிநில்லாதேயென்று கொண்டுவந்துயெண்ணையிட்டு

பெரியதிரிப்போட்டு பெற்றோர்கள் தங்களுக்கு
அரியாமல்க்கொண்டுவந்து அந்தமணவரையில்
முன்னுகவைத்து முகூர்த்தம்நடத்துமென்று
சொன்னுனேராவான் துரோணரிடமம்மானை
இந்தச்சமாசாரம் யெள்ளளவும்நூற்றுவர்க்கு
சிந்தையிற்றேனுமல் செய்துவிட்டான்ராவானும்
காப்புத்தரித்துக் கனமாகயெல்லோரும்
மாப்பிள்ளையைக்கூட்டி வந்தேநகர்வலமாய்
வந்துவினுயகர்க்கு மாப்பிள்ளையின்கையாலே
சிந்தைமகிழ்ந்து தேங்காய்மிகவுடைத்து
வந்துமணவ்வரையில் வாள்வீமன்ருனிருக்க
சிந்தைமகிழ்வுடனே சிரப்பாகசுந்தரியும்
மணவரையிலேதான் மாப்பிள்ளையும்பெண்ணுமதாய்
குணமாயிருக்கையிலே கோபாலரப்போது

## சாதிவழக்கம்போல் பெண்பேசுதல்

வழக்கம்போல்பெண்பேச வாருங்கோவென்றுசொல்ல
முழக்கமுடன்சாதி யுரைமுரையாருந்தானெழுந்தார்
அன்றுரிசிபாத்தனையும் அன்பாகவாருமென
குன்றைகுடிபிடித்த கோபாலன்சொல்லிடவே
ரிஷியுமரிஷிபத்தினியும் நேராகக்கூட்டிவைத்து.
உசிதமுடன்பரிச மொன்பதரைக்கால்பொன்னும்
மஞ்சள்துணிமுடிந்து வாள்வீமன்கைக்கொடுத்து
பஞ்சவர்களுக்கு பாரளந்தோன்சொந்தமதால்
வாள்பீமனுக்கு மால்மகளுஞ்சொந்தமென்றும்
தாள்வில்லாமற்பேசித் தான்கொடுத்தார்நற்பரிசம்
இடுபொன்காரைகொடுத்து யிடுமென்றார்சுந்தரிக்கி
கொடுவென்றுசொல்லிக் கொடுத்தார்கள்காரைதனை
வாங்கியேசுந்தரிக்கி வாள்பீமன்சொந்தமென்று
பாங்காய்கழுத்தில் பவுருசமாய்போட்டவுடன்
சந்தனந்தாம்பூலந் தவராதுதான்கொடுத்து
வந்தார்மணவரைக்கி மாப்பிள்ளையைத்தான்கூட்டி
அப்போதுதுரோண ரபிமனையுந்தானழைத்து

இப்புவியோர் கொண்டாட யிவனைமணவரையில்
ஒக்காரவைத்துயுய ரபிமன்சுந்தரிக்கும்
திக்குள்ளோர் தானறிய சீராயிருவருக்கும்
மாமன்மயிலேந்தி மணவரையினற்சடங்கை
சேமமுமுண்டாக செய்யமஞ்சள்காப்புகட்டி
அரசாணிநட்டு அம்முகூர்த்தக்கால்கள்நட்டு
விரசாய்மணவரைக்கி வேகமதாய்பொங்கலிட்டு
மணவரையிற்றுன்படைத்து மங்கிலியஸ்ரீகளுந்தான்
குணமாய்முளைப்பாரி கூடியெல்லோருந்தெளித்தார்

## அருச்சுனனாகிய ரிஷிக்கும் பத்தினிக்கும் கிருஷ்ணனும் லெட்சுமியுந் தாரைவார்த்து கொடுக்குதல்

பார்த்தன்ரிசியும் பத்தினியும்மோர்புரமாய்
நேர்த்தியுள்ள்லெட்சுமியும் நெடுமாலுமோர்புரமாய்
மணவரையிற்கெண்டியில்நீர் வைத்துயிருவருமாய்
பணமொன்றுவைத்து பார்த்திபர்கள் தாமறிய
நேரேதுரோபதையும் லெட்சுமியுந்தானிருக்க
தாரைதனைவார்த்தார் தவமுனிக்கிகிருஷ்ணனுந்தான்
தேங்காயுடைத்துத் திருமங்கிலியமதை
குருகுலத்தார்க்குள்ள குணமாஞ்சடங்குகளை
தெரிந்தவரேசெய்யுமெனச் செப்பினார்மாயவரும்
அப்போதுரோண ரன்பாய்மணவரையில்
செப்பமுடன்வந்திருந்து சிரப்பாய்ச்சடங்குகளை
செய்துமகிழ்ந்து திசையிலுள்ளோர்கொண்டாடி
உய்யும்படியாக உற்றஅபிமனுக்கு
ஓமம்வளர்த்தா ஞோதியேவேதமெலாம்
நேமமுடன்பாண்டுவழி நீடூழிவாழ்கவென்று
வலங்கொண்டுவோமம் வளர்ந்தெழுந்ததம்மானை
பெலமுள்ளதுரோணர் பிரியமுடனேவளர்த்தார்
மார்க்கமுடன்பார்த்தோர்கள் மனமகிழ்வாய்த்தானிருந்தார்
ஆர்க்கும்பெரிய ஆயருமவ்வேளை
பாங்காகமாயன் பண்பாய்த்தொட்டுக்கொடுத்து

## துரியோதனன் கிருஷ்ணனிடத்தில், தன் துயரத்தைச் சொல்லுதல்

அம்மானை

குஞ்சரத்தைக்காத்தருளுங் கோபாலாவுன்னுடைய
வஞ்சகத்தைக்கண்டறிய வல்லவனுமுண்டோதான்
காட்டிக்கொடுத்திடுவாய் கள்ளனென்றுஞ்சொல்லாமல்
மீட்டிவிலக்கிவிப்பாய் வேண்டியதெல்லாமுடிப்பாய்
கட்டியழுதிடுவாய் கண்டவரெலாமகிழ
தொட்டிலையுமாட்டித் தொடைதனையுங்கிள்ளிடுவாய்
ஊரைவிட்டோடி யொளிப்பாயுபாயமதாய்
ஏரவிட்டுயேணி யெடுப்பாயிரங்காமல்
சாடைசொல்லவேதுணிவாய் தன்மனுசர்தன்னுடனே
கூடிவிளையாடுங் கேர்மானும்நீரலவோ
முரிஞ்சபடையதனை முளுதுங்கெடுப்பதற்கு
குரிஞ்சிமருந்தலவோ கோபாலரேநீரும்
பணமுமக்குநான்துகையாய்ப் பரிசங்கொடுத்ததுவும்
மணமுடிக்கவந்ததுவும் வாரியெடுத்ததுவும்
ஒருகாமல்ராவான்வந் துற்றுயுத்தமசெய்யயிலே
நிருபாகஞ்செய்துயென்னை நிறுத்தினதும்போதுமையா
மன்னனபீமனுக்கு மங்களமுந்தான்முடித்து
என்னைவிரட்டுமையா யிருந்தயிடம்போய்ச்சேர
வாலிபனும்வாள்பீம மன்னனுக்குச்சுந்தரியை
தாலிகட்டவேணுமல்லால் சந்தேகஞ்செய்வாரோ
இனிமேலொருஅளப்பும் யென்னிடத்தில்கேளாமல்
கனிவானசோபனமாங் காரியத்தைப்பாருமென்றான்
திரியோதனனுரைத்த சேதியெல்லாந்தான்கேட்டு
பெரியோனெவர்களுக்கும் பெருமாளுமேதுரைப்பார்

## கிருஷ்ணன் துரியனிடத்தில் நடந்த வரலாரைச் சொல்லுதல்

அவனிதனையாளு மரவக்கொடியோனே
கவனமதாநீயுரைத்த கருத்தின்படியாக
முடிக்கவெனப்பஞ்சவர்கள் முன்மொழிந்ததுள்ளதுதான்

வடிப்பமுள்ள பஞ்சவர்கள் வனம்போனபிற்பாடு
சும்மாயிருகாமற் சோபனமுஞ்செய்யவென்று
அம்மானெனுஞ்சகுனி ஆலோசனைப்படியாய்
பஞ்சவர்கள்நஞ்சுநீர் பருகியவர்கானகத்திற்
துஞ்சினுரென்றுஞ் சுந்தரியைலெக்கனர்க்கு
கொடுத்திடவும்வேணுமல்லால் கொடுக்கோமெனவுரைத்தால்
தடுத்துவமர்செய்திடவுந் தனஞ்சயன்மற்றோருமில்லை
இதுசமையமணமு மிப்போமுடித்திடுவேன்
எதுசம்மதமெனவு மெனவினவிவாருமென
சகுனிதனைவிட்டீர் தான்பயந்துசம்மதித்தேன்
திருதிகுவென்று செம்பொன்பரிசமிட்டு
வந்தீர்முகூர்த்தமிட்டு மன்னுபடையுடனே
அந்தத்தருணமதி லபீமன்வந்தானெனவே
இடையர்வந்துசொன்னதையு மேந்தலேநீர்கேட்டு
தடையரவேயப்போது தான்முடிக்கவேணுமென்றீர்
அதற்குநான்சம்மதித்தேன் அப்பாலவர்கள்வந்து
எதுத்துச்சமர்பொருதார் யித்தனைபேருங்கூடி
இருவர்தனைச்செயிக்க யேலாமல்நீங்ளுந்தான்
குருகுருவென்றேமுளித்தீர் கோமானேநானிடையன்
என்னசெய்யலாகுமென்மேற் பளிசுமத்திச்
சொன்னதினுலென்னபயன் றுறையேநீரிப்போது
பேசியபீமனுக்குப் பெண்கொடுக்கவேணுமென்று
ராசிபண்ணிநீரானுல் நாமொன்றுரைக்குகிரோம்
வாள்பீமன்றன்னுடைய மாதாபிதாக்களெல்லாம்
தாள்வானகானகத்திற் றூனேகுடிபோனுர்
இருக்கயிடமுமில்லை யிந்தவபீமனுக்கு
உருக்கமுடனேவாழ்ந்து வுண்டிருக்கச்சோருமில்லை
காறுவின்பாலேக் கடலில்க்கவிழ்ப்பாரோ
ஊரானவர்களெல்லா முற்றசனமாவாரோ
உமக்காகவேண்டியெந்த னுற்றபெண்ணையான்கொடுத்தால்
எமக்கார்பருசமிங்கே யீய்ந்திடுவாருருமுண்டோ
வரிசைமகள்தனையும் வாள்பீமனுக்கீய்ந்தால்
பரிசங்கொடுப்பவருர் பார்த்திபனேசொல்லுமென்றூர்

## கிருஷ்ணனிடத்தில் துரியோதனன் தான்கொடுத்த பரிசம் வாள்பீமனுக்கு வைத்துக் கொள்ளும்படி சொல்லுதல்

மேகவண்ணன்சொன்னதையும் வேந்தனுமேதான்கேட்டு
ஆகமிகவுருகி அரவுயர்த்தோனேதுசொல்வான்
வாள்பீமனென்னுடைய மைந்தனல்லால்வேறுமுண்டோ
தாள்வேதுநானுமிங்கே தான்வந்திருக்கையிலே
துரமனுஷரெல்லாஞ் சொந்தமுண்டோமாயவரே
குரளிப்பயல்களினாற் குடிகேடுவந்ததல்லால்
பிரளியனுவளவும் பேதமுண்டோஐவருக்கு
பிரந்தானபீமனவன் பிள்ளையல்லவோவெனக்கு
இரந்தாற்பொதிபிடித்து யேகினபேறாநுமுண்டோ
பரிசங்கொடுப்பதற்கு பாத்திபமுநானேயல்லால்
வரிசையுள்ளபூவுலகில் மற்றொருவருருமுண்டோ
சொந்தமத்தாயுந்தனுக்கு சொல்லுகிறேனிப்போது
எந்தன்மகன்லெக்கணர்க்கு யியந்தொருநற்பரிசம்
வாள்பீமன்பேருமேலே வரவெழுதியின்றுதினம்
நாளானலெக்கணத்தில் நல்லமனஞ்செய்யுமய்யா
பந்தற்சிலவுமுதற் பலசிலவுக்கானதெல்லாம்
இந்தாருங்கோடிசெம்பொன் னெடுத்துச்சிலவுபண்ணும்
மங்களமுஞ்செய்து மாயவரேயிப்போது
எங்களையுந்தானுமிப்போ விரட்டுமையா
குணங்காணிதுவெனவே கோபாலன்றன்னிடத்தில்
வணங்காமுடியோனும் வகுத்துரைத்தானம்மானை

## கிருஷ்ணன் அபிமனனை மணக்கோலத்திற் கலங்காரஞ்செய்யச்சொல்லுதல்

அனியாயன்சொன்னமொழி ஆபனுமேதான்கேட்டு
இனிமேல்வளக்குநமக் கில்லையென்றுகோபாலர்
வெற்றியுள்ளமன்னவனும் விதுரனையுந்தான்பார்த்து
மற்றுமுள்ளதுரோணருடன் மன்னரையுந்தான்பார்த்து
சங்கீதலோலனெனுந் தம்பியபிமனையுஞ்
சிங்காரமாப்பிள்ளைபோற் செய்யுமென்றாரம்மானை

விருத்தம்.

மன்னவனரவுயர்த்தோன் மனதுசம்மதித்தேயின்னாள்
சொன்னசொற்படியேபார்த்தன் சுதனெனுமபீமனுக்கு
இன்னிலமரியநாமுமிசைந்து சோபனமுஞ்செய்ய
தென்னவனபீமன்றன்னைச் செய்யுமிப்பவுனியென்றூற்

அம்மானை.

மாப்பிளைக்குச்சொந்தமுள்ள மன்னவரேயிப்பொது
காப்புத்தரித்துமுதற் கலியாணஞ்செய்வதற்கு
வாள்பீமன்றன்னையிப்போ மணக்கோலஞ்செய்துநகர்
சூழப்பவுனிவலஞ் சுற்றியேவாறுமென்று
உத்தாரமிட்டா ருலகலந்தமாயவரும்
விஸ்த்தாரமானதொரு விதுரனையுமேதான்கேட்டு
சிந்தையதுமகிழ்ந்து செல்வனபீமனுக்கு

## அபீமனை மணக்கோலஞ் செய்யுதல்

சந்தோஷமாகத் தயிலஅபிஷேகமிட்டு
சூரியகாந்திப்புனித சுன்னிகையாலங்கியிட்டு
சிருலவும்நெத்தியிலே திருநாமக்கோலமிட்டு
கீர்த்திபெருகும்ரற்தினக் கிரீடஞ்சிரசில்வைத்து
சாத்துமிருகாதினுக்குத் தங்கக்கடுக்கனிட்டு
வச்சிரமுருகணிந்து மார்பில்பதக்கனிட்டு
இச்சையுள்ளபொன் னரைஞாளிடையில்மிகவணிந்து
கையிற்கணையாளியிட்டுக் கட்டாரிதான்சொருகி
மெய்குளிரச்சந்தனங்கள் விந்தையுடனேபூசி
துளபமணிமாயனுட சொந்தமருமகனை
அளகுயரும்நல்மதன்போ லலங்காரமுண்டுபண்ணி

## வாள்பீமன் பவனிவருகுதல்

ஆனையலங்கரித்து அவுதாவின்மீதுவைத்து
சேனைதனைநடத்திச் சென்றூற்பவுனிவலம்
பேரிகைடம்மானம் பிரகேயதிர்ந்துவர
வீரசின்னமும்முரசு விருதுபலகூர
குஞ்சங்கவரி குடைகள்மிகச்சூழ.

பஞ்சவர்னப்பாவாடை பக்கமிலங்கிவர
ததிங்கிணத்தோமென் றுசொல்லித் தாதியர்களாடிவர
பதிங்காதகலவளி பகவத்திநின்றிலங்க
திசையிலிருகோடி தீவெட்டிநின்றிலங்க
இசைபெரியபூவாண ரெங்குந்துலங்கிவர
ஆகாசவாண மதின்கீழ்பொரிவாணம்
வாகானநட்சேத்திர வானமிலங்கிவர
சங்கீதம்பாடித் தமிழ்வாணர்தானடக்க
சிங்காரமாகத் திருச்சங்குமூதிவர
கச்சையிடைவிட்டுக் கட்டியக்காரரெல்லாம்
எச்சரிக்கையென்று யிருப்புரமுங்கூறிவர
யாதவர்கள்சேனையெல்லாமணிமணியாய்த்தானடக்க
சாதுரியமானதொரு சாத்தகியாள்வாரும்
உல்லாசமானதொரு உக்கிரசேனனுடன்
வல்லமையதான வசுதேவர்தன்னுடனே
திரமானஅங்குவற்னன் சிகண்டிதன்னுடனே
பராசர்மற்றுமுள்ள பானையத்தார்தன்னுடனே
ஆர்க்கும்பெரிய அசுவத்தாமாவுடனே
மார்க்கமுள்ளகாங்கையரும் மன்னவர்கள்தன்னுடனே
வேதந்தெரிந்துரைக்கும் மெய்யன்துரோணருடன்
நீதிதெரிந்துரைக்கும் நீண்டவிதுரனுடன்
இந்திரனூர்பேரணியில் இயல்பெரியராவாணும்
கந்தமலர்மார்பன் கடோர்க்கசனூர்தன்னுடனே
இசைந்தரதமீதேரி யெல்லோரும்மங்களமாய்
பசுந்தாயிருபுரமும் பார்த்திபர்கள்சூழ்ந்துவர
வானோர்களெல்லா மலர்மாரித்தான்சொரிய
கோனுமபீமன் குணமாய்ப்பவுனிவர

## வாள்பீமன் பவனிவருவதை பட்டணத்து சனங்கள் பார்த்து சந்தோஷங் கொள்ளுதல்

பட்டணத்திலுள்ள பதுமமுகமங்கையர்கள்
எட்டிவந்துபார்த்து யிச்சைகொண்டுநிற்பாரும்
காமனோசெங்கமலக் கண்ணனோவென்பாரும்

வீமன்றனக்கிளைய விஜையன்மகனென்பாரும்
அஷ்டதிசைபுகளு மழகேசனென்பாரும்
சட்டமுள்ளபூவுலகிற் சண்முகனோவென்பாரும்
இந்திரனோவென்று யிச்சைகொண்டுநிற்பாரும்
சந்திரனோசூரியனோ தானவனோவென்பாரும்
மன்னவன்மேலாசைகொண்டு மதிலேறிநிற்பாரும்
சின்னஞ்சிறுதனங்கள் தெரியயெதிர்நிற்பாரும்
கையிலிடும்பூஷணத்தைக் காலிலிடுவாரும்
மெய்யிற்பணிதிகளை வேண்டித்தரிப்பாரும்
கட்டும்ரவுக்கைதனைக் கழட்டியெரிவாரும்
வட்டமதிமுகத்தில் மஞ்சள்க்குளிப்பாரும்
பவளயிதள்திரந்து பார்த்துச்சிரிப்பாரும்
எவள்மேலேஆசைகொள்வா ரென்றுயெண்ணிநிற்பாரும்
ஒயிலாய்நடந்து ஓடிவந்துபார்ப்பாரும்
பயில்பேசிக்கொண்டுமெள்ளப் பக்கத்தில்நிற்பாரும்
இச்சைகொண்டுதங்களுட யின்பமதுக்குள்ளாக்க
பச்சிலைகள்தேடிப் பறித்துத்திரிவாரும்
மூலிகையினாலே முகமினுக்கிநிற்பாரும்
வேல்விழிக்குஅஞ்சனத்தை வேண்டியிடுவாரும்
கண்ணால்சபிக்கினையால் காட்டியெதிர்நிற்பாரும்
அண்ணாந்துபார்த்து ஆவல்கொண்டுநிற்பாரும்
காமவெறிபிடித்துக் கலைசோர்ந்துநிற்பாரும்
தேமல்தனம்பிதுங்க திரள்மோகங்கொள்வாரும்
மருவியணையயிங்கே வாராரோவென்பாரும்
சருவிவலியவுமே தழுவுவோமென்பாரும்
பார்த்தன்மகனெனையும் பார்க்குறானென்பாரும்
பீத்தச்சிரிக்கிசும்மா பிதற்றுகிறாளென்பாரும்
என்மாப்பிளையிவர்கா ணென்றுசொல்லிநிற்பாரும்
உன்மாப்பிளையோவென் றுடன்வாதுசெய்வாரும்
பேசாரோவென்று பெருமூச்சிடுவாரும்
கூசாமலேமயிரைக் கோதிமுடிப்பாரும்
ஆயன்மகள்சுந்தரிதன் னதிஷ்டக்காணென்பாரும்
தாயவிலக்கணனுங் கோசிகாணென்பாரும்

மாதவனூர்பட்டணத்தில் மங்கையர்களெல்லோரும்
காதல்கொண்டுநிற்கவுமே கட்டழகன்வீதிவந்தான்

## சுந்தரியை மணக்கோலத்திற் கலங்காரஞ் செய்ப சொல்லுதல்

பதிவாயபீமன் பவுனிவலமாகவர
விதியோன்றனைப்பயின்ற மேகவண்ணனெம்பெருமாள்
தாதியரைத்தானழைத்துத் தானேதுரைககலுற்றார்
மாதுநல்லாள்சுந்தரியை மணக்கோலஞ்செய்யுமென்றார்
திருமாலுரைத்தமொழி செங்கமலத்தாதியரும்
தருகாமலேகேட்டுத் தான்போனாள்சுந்தரியாள்.
பார்த்தனமகனுசைகொண்டு படுத்திருக்குஞ்சுந்தரியை
தேத்தியரவணைத்துச் செப்புவாள்தாதியரும்
மானேமரகதமே மயிலேகுயிலாளே
தேனேநவரசமே தெகுட்டாததெள்ளமுதே
கண்ணேமணியேயென் கற்பகமேவிற்பனமே
பெண்ணேயெவர்களுக்கும் பெரியகுலமணியே
விஜயன்மருமகளே மேகவண்ணன்றன்மகளே.
திசையாளும்வாள்பீமன் தேவியெனுஞ்சுந்தரியே.
மங்கையேயுந்தன் மனதில்நினைத்தபடி
செங்கமலகண்ணன் திருவுளமுந்தான்மகிழ்ந்து
வாள்வீமனுக்குவுன்னை மாலையிடவேணுமென்று
நாள்முகூர்த்தவேளையிலே நன்றாய்மணமுடிக்க
நூற்றுவர்கள்தங்கள்மனம்நொந்துதலைசாய
பார்த்தன்மகன்றனையும் பவுனிவரச்சொன்னார்காண்
வாரான்பவுனியதோ வாள்பீமனின்னேரம்
காருயனாருமும்மை நன்றாயலங்கரித்து
கூட்டிவரச்சொன்னார்காண் கோபாலரிப்போது
கேட்டவுடனிங்குவந்தேன் கிருபையுள்ளசுந்தரியை
அலங்காரஞ்செய்வதற்கு அன்பாகவாருமென்றான்
கலங்காமலேயுரைத்தாள் கமலமுகத்தாதியரும்
தாதியுரைத்தவகை தான்கேட்டுச்சுந்தரியும்
ஆதவனைக்கண்ட வருள்தாமரைபோல
பெற்றாள்மனதிலுற்ற பீடையெல்லாம்தான்போக்கி

வைத்தாள்கருணை மதிபோலவேவளர்ந்தாள்
பூரித்துடம்பு புளகிதமுமுண்டாகி
காருற்றமேகசெலங் கண்டப்யிர்போல
இன்பம்பெருகி யெழுந்திருந்துசுந்தரியும்
அன்புமிக்ப்பெருகி யவளுமங்கேதுரைப்பாள்
சந்தோசவார்த்தைசொன்ன தாதியரேயுந்தனக்கு
தந்தேனேயாடைநிதி சகலபணியாபரணம்
இந்தாருமென்று யெடுத்துமிகவேகொடுத்தாள்
கருத்தாகசெய்ததவங்கைமேற்பலித்துதென்றாள்
உருத்தாகசெய்னோம்பு உடனேபலித்துதென்றாள்
கும்பிட்டதெய்வமிப்போ கூலிகொடுத்ததென்றாள்
தெம்பிட்டுமுன்னாளிற் செய்ததவம்வாய்த்ததென்றாள்

## சுந்தரிக்கு அலங்காரஞ் செய்யுதல்

தேனேமரகதமே செங்கமலத்தாதியரே
தானேயொருநிமிசம் தாமிதங்களில்லாமல்
திருமஞ்சணமாடச் செலமெடுத்துக்கொண்டாரும்
அருமையுள்ளமஞ்சள்ரொம்ப வரைத்துமிகக்கொண்டாரும்
கோலமுள்ளபொற்றுகிலேக் கொய்துமிகக்கொண்டாரும்
வேல்விழியினஞ்சனத்தை விளக்கிமிகக்கொண்டாரும்
செய்யதிருநுதலிற் செந்தூரப்பொட்டிடுங்கோ
கையிற்சரியிடுங்கோ கடையமுதற்காப்பிடுங்கோ
கொந்தளப்பொன்னோலைதனை கொண்டாருங்காதிலிட
சந்திரப்பிரவைதனை ஜடையாயணிந்திடுங்கோ
முகத்துக்கிலங்கவொரு மூக்குத்திதானிடுங்கோ
நகத்தில்மருதோணி நிரைநிரையாய்ப்பூசிடுங்கோ
கழுத்துக்கிசைந்ததொரு கண்டசரங்கொண்டாரும்
முழுத்தரமாய்செய்த ரற்றினமுத்தாரங்கொண்டாரும்
அட்டியலைக்கொண்டாரும் அழகுமிகுத்திடவே
கட்டும்ரவுக்கைதனைக் கன்னியரேகொண்டாரும்
இடைக்கிசைந்தபொன்னரைஞா ணிடுங்கோசுருக்காக
சடைக்கிமலர்முடிங்கோ தாமிசங்களில்லாமல்
பாதசரந்தண்டை பதருமற்றுனிடுங்கோ

தேர்த்திபங்கள்செல்வி சயமங்கலமாக
சேர்த்திடவே கூடிநின்று வாழ்வென்று
எல்லாருங்கொண்டாட பியல்புடையதாலிதனை
வல்லமையாய்த்துரோணர் வலக்கரத்திலெடுத்து
அரசரொடுபெருஞ்ஜனமனைவோருந்தொட்டிய
விரைவாகவாங்கிமன்னன் மேலாய்த்துரோணரிடம்

## அபிமன்னன் சுந்தரிக்கு மங்கிலியந்தரிக்குதல்

கொடுக்கவவர்வாங்கிக் கொற்றவர்கள்தானறிய
எடுத்துக்கொடுக்கபியல்சேரபிமனுந்தான்
செங்கண்நெடுமால் செல்விபெனுஞ்சுந்தரிக்கி
மங்கிலியந்தான்தரித்தான் வாள்பிமன்கையாலே
அணிந்தபின்பு தேவர்களும் அந்தரமதாயிருந்து
துணிந்துமலர்மாரி சொரிந்துமிகவாழ்த்திடவே
அப்போதுவாளபிமன்னுமுகுமிகுசுந்தரியை
செய்பமுன்கைபிடித்து சேர்ந்துயிருவருமாய்
காதலுடனம்மிகல்லின்மேல்காலைவைத்து
ஆதரவாய்முக்காலு மருந்ததியைத்தான்காட்டி
அரசாணிப்பானையையும் அபிமனுஞ்சுந்தரியும்
விரசாயெடுத்துவைத்து விண்ணோரைப்போற்றிசெய்து
ஆசாரிமார்களுக்கும் அரிகேவன்றனக்கும்
நேசமுடன்தெண்டனிட்டு நெடுமால்மனைதனிலே
சேர்ந்திவர்கள்பாலும்பழம் திரமாகவேயருந்தி
கார்குழலாள்சுந்தரியும் கண்ணன்மருமகனும்
இதமாயரமனையி லிவர்களுஞ்சந்தோடமதாய்
மதனும்ரதிபோல வாழ்ந்திருந்தாரம்மானை
அந்தரத்தில்வந்திருந்த அரன்முதலாய்தேவர்களும்
சந்தோசமாய்வாழ்த்தித் தன்பதிகட்கேகினர்காண்
அப்பாலிராவான் அரியதொருசந்தனமும்
தப்பாமலெல்லவர்க்கு தாம்பூலந்தான்கொடுத்தான்
துரியோதனன்முதலாய் சேர்ந்ததொருநூற்றுவரும்
பெரியோர்களான பீஷ்மர்முதலானவரும்
தாம்பூலம்சந்தனமும் தான்வாங்கிகொண்டபின்பு
சோம்பிமுகம்வாடி துரோணரையுந்தான்கூட்டி

## திரிபாதனன் முதலானவர்கள் அஸ்தின புரஞ்செல்லுதல்

கலியாணவீட்டில் கௌரவர்களெல்லோரும்
சலிப்பாயெழுந்திருந்து தன்மகனுமெல்க்கணனை
காணாது தேடிக் கலங்கிப்பரிதவித்து
வீணிலேந்து வெகுநேரங்காணாமல்
மணவறையின்முன்னாக வந்துபார்க்கும்பொழுது
மணமிலாலெக்கணனை மாறுதலாய்த்தான்சிரைத்து
தலையிலேசாணிதனைத் தான்வளைந்துபெண்ணையிட்டு
நிலையாகவேதான் நெடுந்திரியைத்தான்போட்டு
பருவமுடன்விளக்குப் பார்க்கவேதானேற்றி
உருவேதெரியாமல் உட்கார்ந்திருப்பதையும்
கண்ணாலேகண்டு கடுங்கோபமுண்டாகி
எண்ணாதமெண்ணி யிவர்களொருசேகரமாய்
கூடியிவனுக்கு கொடுப்பேனோராச்சியத்தை
தேடிவனத்திற் றிரியும்படிசெய்குவேன்
என்றுசபதமிட்டு யிலக்கணனைத்தான்கூட்டி
அன்றுமொருவரிடம் அவர்களுந்தான்சொல்லாமல்
வந்தாரஸ்தினபுரிக்கு மன்னவர்களெல்லோரும்
செந்திருமால்தானும் சிறப்பாகவெல்லோர்க்கும்
சாப்பாடுசெய்து தாம்பூலமுங்கொடுத்து
மாப்பிளையும்பெண்ணும் மகிழ்வாயிருந்தார்கள்

## கிருஷ்ணன் அனைவருக்கும் விருந்து செய்யுதல்

மறுநாள்தினத்தில் மாயவருமப்போது
பெரியதாய்விருந்து பிரபலமாய்த்தான்சமைத்து
உற்றசனத்திற்கும் உறமுறையார்தங்களுக்கும்
மற்றுமந்தஊரிலுள்ள மகாஜனங்கள்தங்களுக்கும்
பத்துவகைக்கறியும் பாயசமுப்பளமும்
புத்துருக்குநெய்யுடனே பொருந்துவடைமுதலாய்
சாப்பாடுசெய்து சந்தோஷமாயிருந்து
மூப்பாபிராக்கழித்து மூன்றுநாள்காலையிலே
மறையோர்கள்வந்து மணவறையிலேயிருந்து

## அபிமனுக்குஞ் சுந்தரிக்குங் காப்பவிழ்த்து நலுங்கிடுதல்

பிறைநுதலாள்சுந்தரிக்கும் பெலவானபிமனுக்கும்
காப்பவிழ்க்கவேண்டி களிப்பாயிருக்கவைத்து
மந்திரங்கள்சொல்லி மறையோருங்காப்பவிழ்த்தார்
விந்தையுடனே மிகவே நலுங்குகளும்
சந்தோடமாகத் தான்முடித்தபிறபாடு
தொட்டிலொன்றுகட்டிச் சுகமாயதிலேதான்
மட்டற்றஆசைய்தரியமரப்பிள்ளைதான்போட்டு
தாலாட்டினார்கள் சமமதம்போலேயிருவர்
மாலின்மகள்கையிலே மலர்ச்செண்டுதான்கொடுத்து
மன்னனபிமன் மடியில்விழச்செண்டாடி
அன்னவன்கைபாலே அழகானதேங்காயை
சுந்தரிமேலேபுருட்டச் சுந்தரியாளப்போது
விந்தையதாய்வாள்பிமன் மேலேபுருட்டிவிட
இப்படியாக இவர்கள்விளையாட்டிலே
செப்பமுடன்மங்கையர்கள்சிரித்துவிளையாடி.

## சுந்தரி அபிமனுக்கு சட்டுவம் பரிமாறுதல்

மன்னனபிமன் மணவறையில்வீற்றிருக்க
பொன்னனையசுந்தரியும் போந்துமணமீதேறி
முக்காலிதன்கணவன் முன்னாலேபோட்டதன்மேல்
தக்காவர்த்தினதாறுணிநீத்தவட்டிலதை
வைத்ததிலேமுல்லைமுகை மாறுமுதோதாமலைபோல்
சுத்தியேகுன்று தொடாந்திருக்கும்பாவனைபோல்
பொரிக்கறிகள்வைத்ததன்மேல் பொன்போல்பருப்பதனை
விரிக்குஞ்சிகரமென வேய்ந்தருவிபின்னெய்யை
விட்டுத்தன்நாயகற்கு வேணமட்டுஞ்செய்பவள்போல்
சட்டுவத்தினாலேமுன் முன்படைத்தாளம்மானை
வள்ளூன்கொடுத்ததொருமாறுதனைமாப்பிளையும்
பெண்ணுமுண்டுத்தி பிரியமுடனார்சிகங்கை
தனுக்கோடித்தீர்த்தமுகறு சாரணர்கள்கொண்டுவர
மனுக்கோடிவாழ்த்தெடுக்க விருந்தாடியபின்.

## அபிமனுக்கு மற்றரசர்கள் மரியாதை செய்யுதல்

அப்பாலேயைம்பத்தி யைந்துதேசத்திலுள்ள
எப்பாரும்போற்று மெழிலரசர்சூழ்ந்திருந்து
மாப்பிள்ளையைமட்டு மணவறையிற்றனிருத்தி
காப்பிலுஞ்செய்யகரங் கண்டமட்டுமள்ளியள்ளி
பொன்னுமணியும் பொருளுடனுடைகளும்
மன்னனபிமற்கு வழங்கிமரியாதைசெய்தார்
மஞ்சள்நீராட்டி மகிழ்வாகவன்றிரவில்
மஞ்சுகுழல்சுந்தரியும் வாள்பிமமன்னனையும்

## ஊர்கோலத்திற்கு சுந்தரியை அலங்காரஞ் செய்யு

ஊர்கோலஞ்செய்வதற்கங் குகந்தாரேமாயவரும்
சீர்சேர்ந்ததாதியர்கள் தெரிந்தந்தச்சுந்தரிபால்
வந்தார்சம்பங்கி வார்த்தார்குழல்தனக்கு
கொந்தாருங்கூந்தல் குணப்படுத்திபின்னல்செய்து
மாலையணிந்தார் மதிநுதலில்சுட்டியிட்டார்
ஓலையணிந்தா ருயர்வயிரரத்தினத்தால்
சந்தனக்கோலமிட்டார் சவ்வாதுப்பொட்டணிந்தார்
கந்தபொடியணிந்தார் கைக்கிக்கணையாழியிட்டார்
தண்டைசிலம்பணிந்தார் சதங்கைபலவணிந்தார்
கனத்ததனங்களுக்குக் கச்சணிந்து நூலிடையில்
வனத்தகலையணிந்து மகிழ்வுடையசுந்தரியை
சிங்காரஞ்செய்த செயலறிந்துமின்னார்கள்
மங்காதமாரன் மனைவியிவளெனவே
தாதியர்கள்சுந்தரியைத் தானழைத்துக்கூட்டிவந்து
மீதுயர்ந்தமண்டபத்தில் விட்டனர்காணம்மானை

## அபிமனுக்கு அலங்காரஞ் செய்யுதல்

திசைகடோறும்புகுந்து செருச்செய்துகீர்த்திபெற்ற
விசையன்மகன்றனையும் வேந்தர்பலசேர்ந்து
அணியாலலங்கரித்து அம்பொன்னுடைபுனைந்து
மணிமகுடகுண்டலங்கள் வாய்ப்பாகவேயணிந்து
நவரத்தினமகுடம் நாயகம்போலேயணிந்து
பவளமுத்துமாலை பதக்கமுடன்புனைந்து

டையி லுடைவா ளிட்டுப்புரந்தான் றுலங்க
டையரமன்னவனுந் தானே யலங்கரித்து
ரசாபல் திரண்டு அபிமன்றனையழைத்து
விரசுகோல்த்துடனே விட்டாரே மண்டபத்தில்

## யானையை அலங்காரஞ் செய்யுதல்

மணமக்கள் வந்த வுடன் மன்னரெல்லாந் தான்கூடி
ஙக்கரியராஜ மத யானைப் பிடித்தார்ந்து
ற்றிதனிற் சிந்தூரந் தனிலிளம் பிறைபோ லெழுதி
ற்றுகின்ற கால்களுக்கு இருங்கெர்ச்சு தானணிந்து
ரசிலே போற்காதுகளில் அலங்காரமாயணிந்து
சை முகங்களிலே பொன்பட்டந் தானணிந்து
மம்பிடையிற் தோரணங்கள் குறிப்பாகத் தானணிந்து
பவொலிவிர கண்டாமணியணிந்து
ற்பட்டாம்போற்றி புகர்முகமுன் தொங்கவிட்டு
ற்புதமாய் முதுகில் அம்பாரி தானமைத்து
திருகுல் துலங்க தாரணியிற் கோலிலங்க
தைய தாய்ப்பூச்சகர வெண்குடையு மேலிலங்க

## அபிமனுஞ் சுந்தரியும் யானைமீதேறி ஊர்கோலம் வருகுதல்

ங்காரஞ்செய்ததொரு யானையின்மேல் சுந்தரியை
ங்கும் அபிமனையும் யேற்றினார் மங்களமாய்
திரனுஞ்சசிபு மிருந்ததொரு பாவனைபோல்
ந்திருவுமாலுஞ் சேர்ந்திருந்த லெட்சணம்போல்
னும் ரதியும்போல் வந்திருந்தார் யானையின்மேல்
மாயிருபுறமும் இருங்கவரி தானிரட்ட
சுரந்தனிலும் நாடிபெருபால் முழங்க
கமுழக்கமென விரசின்னந்தான் முழங்க
தாப்புச் சூரியன்போல் மாதிரமெலாந் துலங்க
தாகப்பாணந் திசைகளெல்லாம் பறக்க
ரண்வொண்ணுதிவட்டி எழுநூற்றுக்கா தவழி
னாயிருமருங்கும் நற்பகலைப்போற்றுலங்க
னர்புடைசூழ மானிலத்தோர் கொண்டாட

கன்னல்விற்கலையர்கள் களித்துமுன்னேநடக்க
விருதுபலகூற விசையன்மகனார் கோலம்
வரும்போதுகண்டு மங்கையர்களாசைகொண்டார்

## அபிமன்னன் சுந்தரியினார்கோலத்தைப்பார்த்த பெண்கள் சந்தோஷமடைதல்

மாலைதனைக்கண்டமின்னார் மாலாகித்தாமணிந்த
சேலைபிடையகன்று சித்திறவதை நோக்கினார்கள்
மன்னன்றனைப்பார்க்க மகிழ்வடைந்தமின்னார்கள்
உன்னிதமாய்ப்பூஷணங்கள் உயர்வாகவேயணிந்து
வந்தார்தெருவீதி மன்னன்முகங்கண்டவர்கள்
சிந்தாகுலமடைந்து சிற்றிடைமங்கையர்கள்
திண்புயத்தைக்கண்டவர்கள் திண்புயத்தே நோக்கிநின்றார்
கண்மலரைக்கண்டவர்கள் கண்மலரே நோக்கிநின்றார்
முன்னழகைக்கண்டவர்கள் முற்றும்மயங்கிடுவார்
பின்னழகைக்கண்டவர்கள் பெட்பின்மைப்பற்றிடுவார்
மார்பழகைக்கண்டவர்கள் மையல்மிகவுண்டாகி
சேர்வோமெனக்கருதில் சிந்தியாரென்றுசொன்னார்
அன்றுபலவீதி ஆலாத்திதானெடுக்க
சென்றாரணியணியாய்த் தேவேந்திரன்போலே
வந்தாரனைவோரும் மாயன்மனைதனிலே
சந்தானமாயெவ்வருந் தான்களிக்கப்போய்ப்புகுந்தார்
வண்ணமெல்லச்சமங்கையர்கள் மாப்பிள்ளைக்கும்பெண்ணினுக்கும்
கண்ணொச்சிலைக்களிக்க கனகத்தாலாலாத்தி
எடுத்தார்மனமகிழ இட்டார்திரவியத்தை
விடுத்தார்புரந்தனிலே விற்றிருந்தாரம்மானை

## கிருஷ்ணன் சுந்தரிக்கு சீதனங்கொடுக்குதல்

தன்புதல்விசுந்தரிக்கு தான்சீதனமாக
பொன்மணிப்பூஷணமும் பொருந்துவஸ்திரமும்
வெள்ளிப்பணிதிகளும் வெண்கலப்பாத்திரமும்
அள்ளிப்பொதிபிடித்து அனுப்பினாரானைபின்மேல்
தங்கப்பணிதிகளும் சரப்பளிக்கொத்துகளும்
பொங்குமுடன்மற்ற பூஷணமுஞ்சேகரித்து

பிடித்துக்கப்கரியிற் பிரபலமாய்த்தானனுப்பி
வடிப்பமுடனேகோடிசெம்பொன் வளமாகவுங்கொடுத்து
மாதிமாருங்கொடுத்துத் தண்டிகையுந்தான்கொடுத்து
நீதியுள்ளசுந்தரி தன் நினைவிலநினைந்ததெல்லாம்
வாரிக்கொடுத்தார்காண் மணமதத்தோதாமறிய
கோரிக்கையாக கொண்டாளேசுந்தரியும்

## பார்த்தனுந் துரோபதையும் கல்யாண முடித்து விட்டு வனத்திற்குச்செல்லுதல்

சீருகொடுத்ததையும் தோவிசையன்துரோபதைக்கு
பாருமென்றுசொல்லி பார்த்தபன்முன்காட்டி
செங்கண்ணெடுமால்பதத்திற் றோவிசையன்துரோபதையும்
மங்களமதாய்ப்பணிந்து வாகாயிருபேரும்
தருமரிருக்குமிடம் தான்சேர்ந்துசங்கதியை
சரிவரவேசொல்லித் தானிருந்தாரம்மானை

## அபிமன்னன் சுந்தரி முதலானவர்களுங் கிருஷ்ணனிடம் விடைபெற்று இந்திரப்ரஸ்தஞ் செல்லுதல்

பார்த்தனும்துரோபதையும் பரிவாகப்போனபின்பு
நேர்த்தியுடனங்கிருந்த நிருபனெனும்வாள்பீமன்
செப்பமுடன்வந்து செங்கணெடுமால்பதத்தில்
அப்போதுசுந்தரியும் அபிமனுந்தான்வணங்க
வாழ்த்தியனுப்பினார்காண் மாயவனாரப்போது
தாழ்வில்லாமாயனையுந் தானவணங்கியெல்லோரும்
போரால்ப்பெரியப் பெலவான்கடோற்கசனும்
நேராகவந்துநின்று நெடுமாலைத்தான்பணிந்து
தாய்மார்கள்மூவரையும் தண்டிகையில்த்தானேற்றி
வாய்வேகமாக வழிநடந்தாரம்மானை
ஆறுங்குளமும் அடவிகளுந்தான்கடந்து
கூறும்பலவனமுங் குவடுகளுந்தான்கடந்து
க்ஷேத்திரமுஞ்சோலைகளுந் தாவளமுந்தான்கடந்து
ப[illegible]முங்கொய்புகின்ற பாரவனங்கடந்து
இந்திரப்பிரஸ்த மெனுமாநகரதனில்

வந்தாரேசேனையுடன் வாள்பீமராஜாவும்
அந்தவூர்மங்கைபரு மாடவரும்வேர்டிவந்தி
சந்தோடமாகத் சகலரையுந்தான்கூட்டி
கட்டியங்கள்கூற கற்புள்ளசுந்தரியும்
மட்டில்லாவாள்பீமன் வந்துமனைபுகுந்தான்
மரியாதைசெய்தார் வந்தவர்களெல்லோர்க்கும்
அரியோனைதஞ்சமென் அனைவோருமவிற்றிருந்தார்
வாள்பீமன்சுந்தரியும் மதனும்ரதிபோலிரு
தோள்பூரித்தென்றும் சுகமாகவாழ்ந்திருந்தார்
கமலகன்னிநாக கன்னிகடோக்கயனும்
விமலனடியை மேவுகின்றராவானும்
சுபத்திரைவாள்பீமன் சுந்தரியையும்பார்த்து
சுபமங்களமாக சுந்தரமாய்வாழவென்று
நல்லவாக்குத்தான்கொடுத்து நடந்தாரவர்பதிக்கு
வல்லதொருவாள்பீமன் வாழ்ந்திருந்தாரம்மானை
இக்கதையைத்தானு பிதமாய்ப்படித்தோர்க்கு
தக்கபடிகலியாணந் தவறுதுதானடக்கும்
சுந்தரியைவாள்பீமன் சுகமாய்மணம்புரிந்த
இந்தக்கதையை யெழுதிப்படித்தோரும்
சாற்றவேகேட்டுச் சந்தோஷமானவரும்
ஏற்றப்புவியி லெல்லோருமவாழியவே

சுந்தரி கலியாண அம்மானை,
முற்றுப் பெற்றது.